வெளியீடு 15-3-1999

Issued 15-3-1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயல்க வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 15, 1998-தொகுதி 44-எண் 2

**Wednesday the 15th April, 1998-Volume 44-No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D
V24, 3/1998
N98
219396

[Price Rs, 3.00

15-4-1998

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| 1. | **இரங்கற் குறிப்பு—** | |
| | *முன்னாள் உறுப்பினர் மறைவு* | 305-306 |
| 2. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 306-348 |
| 3. | **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| | *பால் விற்பனை விலை உயர்வு* | 348-354 |
| 4. | **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| | *தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1998* | 354-458 |
| 5. | **அரசினர் தீர்மானங்கள்—** | |
| | *(அ) மதிப்பீட்டுக் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்* | 355 |
| | *(ஆ) பொதுக் கணக்குக் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்* | 355-356 |
| | *(இ) பொது நிறுவனங்கள் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்* | 356 |
| | *(ஈ) உரிமைக் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்* | 357 |

6. அறிவிப்பு— பக்கங்கள்

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை 357-358

7. தகவல் கோரல்—

காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தேசிய நதிநீர்க் கொள்கை மூலம் தீர்ப்பது 358-362

8. மானியக் கோரிக்கைகள், 1998 99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 17 — கல்வி 362-433

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 363, 368, 369, 374, 385, 388, 389-390, 391, 393, 394, 395, 397, 407-408, 425-426, 430-432

*திரு. வி. கே. லட்சுமணன் 369-377

*திரு. அ. லெ. சுப்பிரமணியன் 377-387

திரு. ஜி. கே. மணி 391-398

திரு. சி. கோபு 398-402

*டாக்டர் பத்மா 402-406

திரு. தி. ப. ஆறுமுகம் 406-410

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 410-419

*திரு. வெ. கோவிந்தன் 419-422

*திரு. லா. சந்தானம் 422-427

திரு. பி. வெங்கடசாமி 427-433

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 433-434


219396

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 2, வெகுதான்ய — திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 ஏப்ரல் 15, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆ. துரையரசன் அவர்கள் 11-4-1998 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. துரையரசன் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை மற்றும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 15

இயற்கை எய்திய இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**181—**

**கருணை ஓய்வூதியத்தில் அகவிலைப்படியையும் சேர்த்தல்**

***7817—திரு. ஐ. கணேசன்:**

**திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால், கருணை அடிப்படையில் நியமனம் செய்யும் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டு வந்த கருணை ஓய்வூதியத்தில், அடிப்படை சம்பளம் மட்டும் தற்போது ஓய்வூதியமாக வழங்குவதை, அரசு மறுபரிசிலனை செய்து முன்போலவே அகவிலைப்படியையும் சேர்த்து வழங்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருமான வரி கணக்கீட்டிற்கும், போனஸ் வழங்குவதற்கும், சம்பளத்துடன் அகவிலைப்படி சேர்த்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே,



1998 ஏப்ரல் 15]

ஓய்வூதியம் பெறுவதற்கு அகவிலைப்படியைச் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு எவ்வாறு அரசு அலுவலர்களுக்கு இந்த ஓய்வூதியம் போன்றவற்றை வழங்குகிறதோ, அதையேதான் மாநில அரசும் பின்பற்றி வருகிறது. எனவே அதைப் பரிசீலிப்பதற்கு இடமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர் கணேசன் குறிப்பிட்ட அதே கருத்தை நானும் கேட்பதாக இருந்தேன். இந்த அடிப்படைச் சம்பளம் மட்டுமே வழங்குவதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டதை மீண்டும் மறுபரிசிலனை செய்வதற்கான ஒரு ஏற்பாடு செய்து அகவிலைப்படியையும் சேர்த்து வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, முன்னதாக மாநில அரசு அல்லது மாநில அரசு தொழில் நிறுவனம் அல்லது மாநகராட்சி அல்லது தன்னாட்சி நிறுவனம் அல்லது உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றிய ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு அவர்களுடைய குடும்ப ஓய்வூதியத்துடன் அகவிலைப்படியும் அளிக்கப்பட்டு வந்தது. 30-6-1988 ஆம் தேதிய அரசாணையின்படி, மாநில அரசின் குடும்ப ஓய்வூதியதாரர்களும் அனுபவித்து வந்தார்கள். இந்த அரசு ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி வழங்குவதில் மத்திய அரசின் நடைமுறையையே பின்பற்றி வருகின்றது என்பதை நான் முதலிலேயே குறிப்பிட்டேன். உயர்நீதிமன்றத்தில் 1990 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றில் சிவில் மேல்முறையீடு எண் 3542-46-ல் உச்சநீதிமன்றம் 8-12-1994 அன்று அளித்த தீர்ப்பின் அடிப்படையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அரசுப் பணியில் அமர்த்தப்பட்டால் . அவர்களுக்குக் குடும்ப ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் அகவிலைப்படி Dearness Allowance நிறுத்தப்படும் என மத்திய அரசு ஆணை வெளியிட்டது. இது 1995 ஆம் ஆண்டு மைய அரசின் ஆணையின் அடிப்படையில் மாநில அரசின் குடும்ப ஓய்வூதியதாரர்கள், மாநில மற்றும் மைய அரசுகளிலோ அல்லது அரசு பொதுத்துறை நிறுவனங்களிலோ, அல்லது தன்னாட்சி நிறுவனங்களிலோ, அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ

[1998 ஏப்ரல் 15

பணியமர்த்தப்பட்டால், அவர்களுடைய குடும்ப ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் அகவிலைப்படியை நிறுத்தி, ஆணைகள் வெளியிடப்பட்டன. பொதுவாக, அகவிலைப்படி வழங்கும் நடைமுறையில் மத்திய அரசின் நடைமுறையே மாநில அரசாலும் பின்பற்றப்பட்டு வருவதால் மேற்கண்ட நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *182*, டாக்டர் இ. எஸ். எஸ். இராமன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**182—**

**நவீன தீயணைப்புக் கருவிகள் வழங்குதல்**

***7935—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பலமாடிக் கட்டடங்களில் தீப்பிடிக்கும்பொழுது பயன்படுத்தப்படும் "ஸ்நோர்கெல்" போன்ற நவீன தீயணைப்புக் கருவிகள் கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாநகரங்களுக்கும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு** கலைஞர் **மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள தீயணைப்பு நிலையங்களில் பல்வேறு இடங்களில் போதிய ஊழியர்கள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதற்குரிய நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி ஊர்தியைப் பற்றியது; ஊழியரைப் பற்றியது அல்ல.



1998 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் இடம்பெறக் கூடாது என்பது அவையினுடைய விதிமுறைகளில் இருக்கின்றது. விதிமுறையைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றவர்கள் அவ்வாறு கேள்வி கேட்கின்றார்கள். இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலே இடம் பெறலாமா என்பதைத் தங்கள் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்வி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி உட்காருங்கள். நீங்கள் மூத்த உறுப்பினர். கேள்வி நேரத்தில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுச் சொல்லக்கூடாது என்பது மரபு; அவையின் விதியும்கூட. அந்த விதியைப் பின்பற்றி மரபைக் காப்பாற்றுகிறவர்கள் தயவுசெய்து அமைதியாக உட்கார வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைத் தீயணைப்புத் துறை, காவல் துறை மானியம் வரும்போது அவர் விரிவாகக் கேட்கலாம். விரிவான பதில் என்னிடத்திலே தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் தொடங்கிவிட்ட இந்த நேரத்தில், சென்னையில் குடிசைப் பகுதிகளில் தீ விபத்து அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. *1989-90* ஆம் ஆண்டு, குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட தீ விபத்து அதிகம் ஏற்பட்டிருக்கின்றது. அப்போது தற்காலிகமாக தீயணைக்கும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு, பெரும் சேதங்கள் தடுக்கப்பட்டன. அந்த முறை இடைக்காலத்திலே நிறுத்தப்பட்டது. ஆகவே, மீண்டும் தீயணைக்கும் வாகனங்களை குடிசைப் பகுதிகளில் தற்காலிகமாக நிறுத்தி, இப்படிப்பட்ட தீ விபத்தின் மூலம் ஏற்படும் பெரும் சேதத்தைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியில் இடம் பெற்றுள்ள 'ஸ்நோர்கெல்' ஊர்தி என்பது மிக உயரமான மாடிக் கட்டடங்களில் தீ ஏற்படும்போது அதை அணைப்பதற்காக. தாழ்வான குடிசைப் பகுதிகளைப் பற்றி மற்றொரு கேள்வி கேட்டால், தனியாக பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 183, திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**183—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

***4114—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டப்பட்டு வரும் சங்கராபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை இருபது படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சங்கராபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் 3-1-1997 முதல் 32 படுக்கைகளுடன் அரசு மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன், இருக்கையில் இல்லை. வினா எண் 184, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**184—**

**ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுதல்**

***8409—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 15]

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கீழையூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழையூர் ஒன்றியத்தின் தலைநகரமாக கீழையூர் செயல்பட்டு கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால் வெகு தூரம் செல்ல வேண்டியிருப்பதால், அந்த ஊரில் இந்த மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஊராட்சி ஒன்றிய மருந்தகம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 74,108 ஆகும். அவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே, திருப்பூண்டி, வேளாங்கண்ணி, பிரதாபராமபுரம், விழுந்தமாவடி, திருக்குவளை, பாலக்குறிச்சி ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் அங்கே அதிகபட்சம் 3, 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இயங்க முடியும். ஏற்கெனவே 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதலாக இருக்கின்ற காரணத்தால் மேலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அளிக்க இயலாத நிலையில் அரசு இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையில் நாம் கணக்கிட்டுப்

பார்த்தாலும்கூட, தமிழகத்திலே இன்னும் நிறைய ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் ஆரம்பித்தாக வேண்டும். அந்த அளவுக்கு மக்கள் தொகை பெருகியிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில்கூட, வேலூர் பகுதியில் இருக்கும் வேலூர் ஒன்றியத்திலே அலமேலுமங்காபுரம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகவும், அதேபோல் ஆலங்காயம் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய வெள்ளக்குட்டை துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகவும் மாற்றுவதற்கு ஏற்கெனவே 7 ஆண்டுக் காலமாக கேள்வி போட்டுப் போட்டுப் பார்த்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு துணை சுகாதார நிலையங்களையும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 7 ஆண்டு காலமாகக் கேள்வி போட்டவர்கள், இப்போது தனிக் கேள்வியாகப் போட்டிருக்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலமேலுமங்காபுரம், வேலூருக்கு மிக அருகில் உள்ளது. [illegible] இந்தியாவிலேயே புகழ்பெற்ற சி.எம்.சி. மருத்துவமனை [illegible]து கிலோ மீட்டரில் இருக்கிறது. 5-வது கிலோ மீட்டரில் மாவட்டத் தலைநகர மருத்துவமனை இருக்கிறது. இது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல. இருந்தாலும்கூட, அவருடைய வேண்டுகோள் 5, 6 ஆண்டுகளாக இந்த அவையில் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகின்ற காரணத்தால் வாய்ப்பு வருகின்ற நேரத்தில் நிதி வசதிக்கு ஏற்ப, மத்திய அரசு தன்னுடைய இந்த 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அந்த விதியைத் தளர்த்துமானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத துணைத் தலைவர்:** வினா எண் 185, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**185—**

## அம்பாசமுத்திரம் வட்டத்தைப் பிரித்தல்

***9507—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேரன்மகாதேவி வட்டம் உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேரன்மகாதேவி வட்டம் உருவாக்குவது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ராதாபுரம் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து திசையன்விளையை தலைநகரமாகக் கொண்டு [illegible] தாலுக்கா அலுவலகம் அமைக்க கருத்துரு, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தங்களுக்கு வந்ததாக நான் அறிகிறேன். ஆகவே, திசையன்விளையைத் தலைநகரமாக அமைக்க, ராதாபுரம் தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டில் புதிய வட்டம் மற்றும் புதிய வருவாய்க் கோட்டம் போன்ற நிருவாக அமைப்புகளை நிதிநிலை காரணமாக உருவாக்குவது இல்லை என்று 20-6-1997-ல் அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, வரும் 20-6-1998-க்கு பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தோடு பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சரிதானே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 186, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**186—** [1998 ஏப்ரல் 15

## பழுதடைந்துள்ள வீடுகளைச் சீர்செய்தல்

***3817—திரு. அ. வெங்கடாசலம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வாண்டான் விடுதி காலனி, அறந்தாங்கி ஒன்றியம், செங்கமாரி, நம்பளவக்குடி குடியிருப்பு, திருவரங்கம் ஒன்றியம், திருக்கட்டளை இந்திரா நகர் குடியிருப்பு ஆகியவற்றில் உள்ள பழுதடைந்த வீடுகளைச் செப்பனிட்டு, சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குடி தொகுதியில் 1977-லிருந்து 1990 வரையில் பல கட்டங்களாகக் கட்டப்பட்ட கான்கிரீட் ஓடு வீடுகளுக்கு முற்றிலுமாக ஆதிதிராவிட மக்கள் குடியிருக்க முடியாத அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறைந்தது 500 வீடுகள் அந்தத் தொகுதியில் குடியிருக்க முடியாத அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, ஆண்டுக்கு இத்தனைப் புதிய வீடுகள் என்று சொல்லி கட்டிக் கொடுக்கின்ற இந்த அரசு, பழுதடைந்த வீடுகளை ஆண்டுக்கு இத்தனை வீடுகள் ஒரு ஒன்றியத்திற்கு என்று சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அந்த பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்கவோ அல்லது புதிய வீடுகளை அவர்களுக்கு வழங்குவதற்கோ அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வாண்டான் விடுதியில் உள்ள ஆதிதிராவிடர் காலனி, 1991-92 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிலுவையாக இருந்த 20 தொகுப்பு வீடுகள் தற்போது முடிக்கப்பட்டு, பயனாளிகளிடம் நல்லநிலையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. ஆனால், அறந்தாங்கி ஒன்றியம் நம்பளவக்குடி



1998 ஏப்ரல் 15]

*கிராமக் காலனியில் 28 வீடுகள் கட்டப்பட்டதில், 26 வீடுகள் திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மீதமுள்ள இரண்டு வீடுகள் சிறிது பழுது பார்க்கவேண்டிய நிலையில் உள்ளன. செங்கமாரிடி கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் 'தாட்கோ' மூலம் 1981-82-ல் கட்டப்பட்ட 30 வீடுகள் முழுவதையும் இடித்து முழுமையாகப் புதுப்பிக்க வேண்டியுள்ளது. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருக்கட்டளை ஊராட்சியில், இந்திரா நகர் காலனியில் 1988-89-ல் கட்டப்பட்ட இருபது வீடுகள் முற்றிலும் மோசமாக உள்ளன. ஒரு வீடு மட்டும், அந்தப் பயனாளி மூலமாகத் திரும்பவும் கட்டிக்கொள்ளப்பட்டுவிட்டது. 19 வீடுகள் திரும்பக் கட்டப்பட வேண்டியுள்ளன. மாவட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையில் 129 வீடுகளுக்கு ஆகஸ்ட் 1997-லேயே புதுப்பிக்கப்பட வேண்டிய தொகை பிரித்து வழங்கப்பட்டுவிட்டதால், மேற்கண்ட நம்பளவக்குடி காலனியில் 28 வீடுகளும், செங்கமாரி காலனியில் 30 வீடுகளும், திருக்கட்டளை இந்திரா நகர் காலனியில் 19 வீடுகளும், அடுத்துவரும் நிதி ஒதுக்கீட்டில் எடுத்துச் செய்ய முன்னுரிமை அளிக்கப்பட நடவடிக்கை நிலுவையில் உள்ளது.*

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். மணி நாடார்.

**திரு. எஸ். எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலே பெரியதாளை என்கின்ற மீனவர் வாழ்கின்ற பகுதியில், அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகள் அத்தனையும் பழுதடைந்து கிடக்கின்றன. அந்த வீடுகளைச் செம்மைப்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மூன்று ஒன்றியங்களைப் பற்றியது. துணைக் கேள்வி வேறு ஒரு மாவட்டத்தை ஒட்டியது. அதற்கான தகவல் தற்சமயம் என்னிடம் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு பொதுவான விளக்கத்தைத் தரலாம் என்று நான் விரும்புகிறேன். ஆண்டுக்கு ஏறத்தாழ 50,000, 60,000, 70,000 என்று இந்த ஆட்சி வந்த நேரத்தில் தொடங்கி, இதுவரை இலட்சக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு, அவர்களிடத்தில் நாம் ஒப்படைத்துவிட்டோம். அப்படி ஒப்படைத்துவிட்ட பிறகு, அதிலே

[1998 ஏப்ரல் 15

பழுதுகள் பார்ப்பது என்பது சிரமமாக இருக்கிறது. ஏறத்தாழ 80 சதவீதம் பழுதடைந்து விடுமானால், அவற்றை நீக்கிவிட்டு, புதிதாக அந்தந்த ஆண்டினுடைய நிதி ஒதுக்கீட்டின்படி அவர்களுக்கு முன்னுரிமை தந்து அவற்றைக் கட்டிக் கொடுக்கலாம் என்ற உணர்வில் நாங்கள் இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு அதற்கான ஒரு நிலையை உருவாக்கலாம் என்று கருதுகிறேன். சாதாரணமாக பழுது என்று வருகிறபோது, உண்மையாகவே அது நிறைவேற்றப்பட்டு சரியான அளவிற்குப் பணம் செலவிடப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பது என்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது என்பதைப் பகிரங்கமாகச் சொல்வதற்கு நான் துக்கப்படவில்லை. ஆனால், அதிலே ஏற்படுகின்ற தவறுகளைத் திருத்தவும் முயற்சிகள் எடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் வளருகின்றன என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2, 3 ஒன்றியங்களில் இருக்கக்கூடிய பழுதடைந்த கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்கான சில விவரங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கிடையிலே, பேரூராட்சிகள் என்று வருகின்றபோது, அந்தப் பேரூராட்சிகளில் இவ்வாறு பழுதடைந்த வீடுகளைப் பார்ப்பதற்கான பணிகள் இடம் பெறுகின்றனவா என்பது ஒரு பிரச்சினை. எனவே, இதுபோன்ற நிலையில், கடையான்கோடு பேரூராட்சியில் ஆதிவாசி, பழங்குடியினர் தங்கி குடியிருக்கின்ற வீடுகளுக்கு, அவற்றைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது மின் இணைப்பு கொடுப்பதற்கோ, விதிமுறைகளில் இடம் இல்லை என்று அதிகாரிகள் மறுத்துவிடுகிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் அமலில் இல்லை. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் இந்திரா நினைவு குடியிருப்புகள், பேரூராட்சிகளுக்குப் பொருந்துவதில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்ற முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 1990-91 ஆம் ஆண்டில், ஏழைகள் அங்கேயும் வாழ்கிறார்கள், ஆதிதிராவிட மக்கள் அங்கேயும் வாழ்கிறார்கள்;



1998 ஏப்ரல் 15]

ரொம்பவும் மோசமான நிலையில் வாழ்பவர்களுக்காவது ஏதாவது செய்ய வேண்டுமென்ற பரிதாப உணர்வோடு இந்தத் திட்டத்தைத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு ஆட்சிக் கலைக்கப்பட்டது. அடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் அதை விட்டுவிட்டனர். ஆனாலும் சட்டப்படி செய்யக்கூடாது என்று மத்திய அரசிலிருந்து இப்போது அதற்கு 'norms' எல்லாம் 'fix' பண்ணி, அது நகரப் பஞ்சாயத்து அல்லது ஊரகப் பேரூராட்சி என்ற நிலைக்கு வந்துவிட்ட காரணத்தால், அவ்வாறு கட்டப்பட்ட வீடுகள் ஏதாவது இப்போது இருந்தால் எல்லாவற்றையும் கவனிப்பதைப்போல இவற்றையும் கவனிப்பதற்குச் சட்டம் இடம் தருகிறதா என்று ஆராய்ச்சி செய்து, அதற்குப் பிறகு கவனிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது வெள்ளக்கோவில் தொகுதி நாதநாய்க்கன்பட்டி கிராமத்தில், 1959 ஆம் ஆண்டு சுமார் 25 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டன. அந்த வீடுகள் இப்பொழுது இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளன. இதைப்பற்றி, வெள்ளக்கோயில் வட்டார வளர்ச்சி திட்ட அலுவலருடைய கவனத்திற்குக் கொண்டு போனபோது, அதற்குரிய சான்றுகள் அலுவலகத்தில் இல்லை; அதனால் அந்தத் திட்டத்தில் இடியும் வீடுகள் புதுப்பிக்கப்படுகின்ற திட்டத்தில் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற சூழ்நிலைகளைக் கருதி, அதற்குரிய சான்றுகள் இல்லையென்றாலும் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று முன்புதான் அதற்கான பதிலை நான் சொல்லியிருக்கிறேன். ஏராளமான எண்ணிக்கையுள்ள வீடுகள் பழுதடைந்ததாகத் தகவல் வந்திருக்கிறது. 15 கோடி ரூபாயை அதற்காக நாம் ஒதுக்கினோம். அதை முழுமையாகச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, சான்று இல்லை, சான்று இருக்கிறதா என்பது அல்ல பிரச்சினை. செய்கின்ற வாய்ப்பும், தரமாகச் செய்ய முடியுமா, அனைத்தையும் நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகத்தில் இருக்கிறது.

எனவே, அப்படி இதுவரையில் எடுத்துக் கொண்டிருக்கிற பணிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற நிதி இருக்குமானால், அதைத் தனியாக என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், விசாரித்து முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 187, திரு. ஆ. செ. மணிக்கண்ணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**187—**

**சித்த மருத்துவமனை நிர்வாகச் செலவு**

***9469—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இயங்கும் சித்த மருத்துவமனைக்கு ஆகும் நிர்வாகச் செலவு அனைத்தையும் அரசே ஏற்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சித்த மருத்துவமனைக்கு ஆகும் நிர்வாகச் செலவு அனைத்தையும் அரசே ஏற்கக் கூடிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. நடராஜன்.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்த ஊராட்சிகளுக்கு வழங்க முடியாது என்று கூறினார்கள். ஆனால், மிகவும் பின்தங்கிய ஊராட்சிகளுக்கெல்லாம் இந்தச் சித்த மருத்துவமனைக்கு வேண்டிய மருந்துகளுக்குப் பணத்தை ஒதுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதனால், அரசு மீண்டும் ஆய்வு செய்து, இப்படிப்பட்ட, மிகவும் பின்தங்கிய ஊராட்சிகளுக்கு இந்த மருந்துகளை வழங்க முன்வருமா? என்னுடைய



தொகுதியான, வல்லம், ஒலக்கூர் ஆகிய ஒன்றியங்களில் இந்தச் சித்த மருத்துவமனையைத் தொடங்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 295 ஊரக மருந்தகங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சித்த மருத்துவமனைக்கு ஆகும் நிர்வாகச் செலவு அனைத்தையும் அரசே ஏற்கக் கூடிய செயற்குறிப்பு தற்போது இல்லை என்று சொன்னேன். எனினும் தற்போது அளிக்கப்பட்டு வரும் 10 இலட்சம் மானியத்தை 100 இலட்சமாக உயர்த்தி ஏதாவது பரிசீலித்து அதை நிறைவு செய்யலாமா என்பதைப்பற்றி ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து கருத்துரு ஒன்று நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது தற்சமயம் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ. அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய புதிய சட்ட திட்டங்களின்படி சிற்றூராட்சிகளுக்கு நிதி வசதிகளை அதிகமாகச் செய்து, அதிகாரங்களும் தந்திருக்கிறோம். ஒன்றியங்களிலே வருமானமே இல்லை என்ற நிலை வந்துவிட்ட காரணத்தினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, சித்த மருந்தகங்கள் இப்பொழுது மக்களுக்கு மிகவும் பயன்படுவதால், அரசே அந்த நிதியை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதற்காகத்தான் ரூ. 10 இலட்சம் நிதியை ரூ. 100 இலட்சமாக உயர்த்தி ஏதாவது செய்யலாமா என்பதை அரசுக்கு இயக்குநர் அனுப்பியிருக்கிறார். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், அதைப்போல, ஊராட்சி ஒன்றியங்கள், இதுபோன்ற உள்ளாட்சி அமைப்புகளெல்லாம் சம்பளம்கூடக் கொடுக்க முடியாமல் நிதி நெருக்கடியில் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள், ஏற்கெனவே இதுபோன்ற உள்ளாட்சித் துறை மருத்துவமனைகளெல்லாம், தீர்மானம்

போட்டுக் கொடுத்துவிட்டால், அரசே ஏற்று நடத்துவதற்குத் தயார் என்றுகூட ஒருமுறை அறிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உள்ளாட்சியிலே இருக்கக் கூடியவர்களுக்குச் சம்பளம்கூடக் கொடுக்க முடியாத நிலை இருக்கிற காரணத்தினாலே அனைத்தையும் அரசு மருத்துவமனைகளாக மாற்றி விடுவதற்கு ஆவன செய்வாரா? தீர்மானங்களெல்லாம் போட்டுக் கொடுத்துவிடத் தயாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் கேள்விக்கும், எனக்கும் தொடர்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *188*, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**188—**

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்துதல்

***9237—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலத்திலே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வேண்டுமென்ற கேள்வி அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களுடைய கேள்வியாகும். அங்கேயிருக்கக்கூடிய விவசாய சங்கங்கள் நீண்டகாலமாக அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வேண்டுமென்று போராடி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கோரிக்கையை மீண்டும் பரிசீலித்து, கண்டமங்கலம் பகுதிக்கு ஒரு



ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அளிப்பதற்கு ஆணையிட முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் *17* ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. கண்டமங்கலத்தில் *6-12-1976*-ல் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவங்கப்பெற்று நடைபெற்றது. ஆனால், அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் போதிய அளவிற்கு பொருள் வரத்து இல்லையென்பதை அறிந்து *30-4-1978*-லே அது மீண்டும் மூடப்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் அங்கு ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கக்கூடிய அளவுக்கு பொருள் வரத்து இருக்காது என்று அரசு கருதுவதால் இப்போது அங்கு ஆரம்பிக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, *11* மாவட்டங்களிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தனி அலுவலகங்கள் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு அறிவித்தீர்கள். எங்கள் மாவட்டமான திண்டுக்கல் மாவட்டத்திற்கும் அது அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னமும் சொத்துக்கள், வங்கிக் கணக்குகள் பிரிக்கப்படாமல், அரசு இன்னமும் உத்தரவு வழங்காமல் இருப்பதாகத் தகவல் தெரிகிறது. எனவே, அதற்கான உத்தரவை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக விற்பனைக் குழு அமைக்கின்ற அந்த நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. விரைவிலேயே அதற்கான ஆணை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேடசந்தூர் தொகுதியில் எரியோட்டுக்கு

[1998 ஏப்ரல் 15

அருகில் இருக்கின்ற வெங்காய 'godown' ஒரு கோடி ரூபாயிலே கட்டப்பட்டு அது செயல்படாமல் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பலமுறை கூறினாலும், அந்தக் கட்டடம் என் வசம் இல்லையென்று சொல்கிறார்கள். அதுகுறித்து, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *189*, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**189—**

## கொள்ளிடம் ஆற்றின் கரையினை வலுப்படுத்துதல்

***5429—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், அணைக்கரை அணைக்கட்டு முதல் எய்யலூர் வழியே செல்லும் கொள்ளிடம் ஆற்றின் கரையினை வலுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணைக்கரை அணைக்கட்டிலிருந்து எய்யலூர் வரையிலும், அதற்கடுத்து முட்டம் வரையிலும் இருக்கக்கூடிய கொள்ளிடக்கரை ஒரு நேரத்தில் மிகவும் அகலமாகவும், வண்டி செல்லக்கூடிய அளவுக்கும் இருந்தது. அதனால் மக்கள் பயம் இல்லாமல் இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு சைக்கிளில் செல்ல முடியாத அளவுக்கு நடைபாதையாக மாறி பலம் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறது. வெள்ளக் காலங்களில் மக்கள் பயத்தோடும், அச்சத்தோடும் அந்தக் கரையிலேயே விடிய விடிய காத்திருந்து, என்றைக்கு எப்போது உடையுமோ, எந்த நிமிடத்திலே உடையுமோ என்று பயப்படக்கூடிய சூழ்நிலையிருக்கிற காரணத்தினால்,



1998 ஏப்ரல் 15]

மறுபரிசீலனை செய்து கரைகளை அகலப்படுத்தி, பலப்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் அந்தக் கரையில் அரிப்புகள் மற்றும் சேதாரம் ஏற்பட்டால் அவ்வப்போது பராமரிப்பு மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது. மேலும், அவர் குறிப்பிட்ட இடங்களில் அந்தக் கரைகள் யூனியனுடைய சாலையாக மாற்றப்பட்டு சில இடங்களில் பராமரிப்பில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த யூனியனிலிருந்து பராமரிக்கக்கூடிய சாலை, அணைக்கரையிலிருந்து வெறும் 1½ கிலோ மீட்டர் வரைதான் பராமரிக்கிறார்கள். இது கிட்டத்தட்ட 13 கிலோ மீட்டர் அளவுக்குள்ள கரை. அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு அந்தக் கரையைப் பலப்படுத்தித் தந்தால் நாங்கள் நிம்மதியாக வாழ வழிவகுக்கும் என்பதை அமைச்சருக்குத் தெரிவித்து, ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய கோரிக்கையை, போன மாதம் நான் அந்தப் பகுதிக்கு வந்தபோது தெரிவித்திருந்தால் அங்கேயே நான் பார்த்திருக்க முடியும். அடுத்தமுறை வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரைகள் கட்டுவது பற்றிய கேள்வி. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கரை கட்ட, கால்வாய்களைச் சீரமைப்பதற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, திட்டமிட்ட 100 தினங்களுக்குள் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதாகப் பரிசீலிக்கப்பட்டது. திரும்ப 90 நாளிலேயாவது அது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்று வரையிலும் அந்தப் பணி தொடங்கப்படாத காரணத்தாலேயும், மேட்டூரில் ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாலும், அந்தப் பணிகள் பாதிக்கப்படலாம், தடைப்படலாம் என்று அங்கே இருப்பவர்கள்

அஞ்சுகிறார்கள். ஆகவே அந்தப் பணிகளை உடனடியாகத் தொடங்குவதற்கான முயற்சிகளில் அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-00*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல 20 கோடி ரூபாயில் தூர் வாருகின்ற பணிகள் என்பது உண்டுதான். தூர் வாருகின்ற பணிகள் என்று சொன்னவுடன், நம்முடைய இஷ்டத்திற்கு தூர் வாரமுடியாது. அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிப்பதற்கு என்று சில நியதிகள் உண்டு. அதன் அடிப்படையில்தான் டெண்டர்கள் விடுகின்ற காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. ஆகவே 24-ஆம் தேதிக்கு மேல் வேலைகள் வேகப்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலையடைகிற அளவிற்கு இருக்காது. ஜூன் 12-ஆம் தேதிக்குள் பணிகள் செம்மையாக முடிக்கப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியில் இருக்கின்ற வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு ரூ.[illegible] கோடி ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சிதம்பரம், காட்டுமன்னார்குடி தாலுக்காக்களிலும் காவிரி டெல்டா பகுதிகள் வருகின்றன. சென்ற ஆண்டும் அந்தப் பகுதிகளில் தூர் வாரப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டு அந்தப் பகுதிகளில் தூர் வாருவதற்கான திட்டம், பொதுப்பணித் துறையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்திருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் கேட்பது புதிய திட்டம். நிதிநிலை அறிக்கையிலும், ஆளுநர் அவர்களின் உரை மீதும் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், இதைப்பற்றியெல்லாம் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் மதங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும், முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இது கொண்டுவரப்படும். காரணம் அதுவும் காவிரி



டெல்டா பகுதிதான். அங்கேயும் தூர் வாருகின்ற பணிகள் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்தேயிருக்கிறது. முதல்வர் அவர்களோடு கலந்து பேசி அது குறித்து முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் இடது கரையில் அமைக்கப்பட்டு இருக்கிற இந்த வலுவூட்டக்கூடிய கரை மிகக் குறுகிய பாதையாக உள்ளது. தஞ்சையிலிருந்து சிதம்பரம் வரை செல்லும் இந்தக்கரையை அகலப்படுத்தி, தற்போது கோஸ்டல் ரோடுகள் அமைப்பதைப்போல, கொள்ளிடம் ஆற்றின் கரையில் ரிவர் பாங்க் ரோடு அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆவன செய்ய அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *190*, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**190—**

## தாம்பரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***9654—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூரில் இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை வட்டாரத் தலைமையிடமான தாம்பரத்திற்கு மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மிகப் பெரிய அலுவலகமாக இருக்கிறது. ஆண்டொன்றுக்கு *30* ஆயிரம் வண்டிகளுக்கு மேல் அங்கே வந்து பதிவு செய்யப்படுகின்றன. அருகிலேயே சென்னை கிண்டியில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருக்கிறது. தாம்பரம் வட்டம் மிகப் பெரிய

வட்டம் என்ற காரணத்தால், கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து எல்லாம் வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டியவர்கள் வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே நுழை வாயிலாக இருக்கிற வட்டாரத் தலைமையிடமாக இருக்கின்ற தாம்பரத்திலேயே இந்த அலுவலகத்தை மாற்ற மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நுழைவாயிலிலேயே அலுவலகத்தை அமைப்பதைவிட, அந்தப் பகுதியினுடைய நடுவில் இருந்தால்தான் பலருக்கும் அது வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தோடுதான் தாம்பரம், சைதாப்பேட்டை, பூந்தமல்லி ஆகிய பகுதிகளை அடக்கிய அந்த அலுவலகம், நடுவிலே இருக்கக்கூடிய ஆலந்தூரில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிண்டியில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில், மைலாப்பூர், திருவான்மியூர் போன்ற பகுதி வாகனங்களுக்கும் பதிவு செய்யப்படுவதால், இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மைலாப்பூரில் ஒரு யூனிட் அலுவலகம் இருக்கின்ற காரணத்தால், இட நெருக்கடியைக் குறைக்கின்ற வகையில் மைலாப்பூரில் இருப்பவர்கள் மைலாப்பூரிலேயே பதிவு செய்துகொள்ள அரசு வசதி செய்துகொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு சென்னையில் 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வந்தன. அவை தற்போது ஐந்தாக உயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைமையினைப் பொறுத்து வருங்காலத்தில் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில், தாம்பரம், சைதாப்பேட்டை, பூந்தமல்லி ஆகிய பகுதிகளுக்காக ஆலந்தூரில் இந்த அலுவலகத்தை அமைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பூந்தமல்லி பகுதியை அதிலிருந்து பிரித்துச் சென்று நீண்ட நாட்களாகிவிட்டன. இப்போது



பூந்தமல்லி வட்டத்தில் உள்ளவர்கள், திருவள்ளூருக்குச் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே பூந்தமல்லியில் தனியாக ஒரு ஆர்.டி.ஓ. அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து முதலிலேயே தனியாக ஒரு கேள்வி கேட்டிருந்தார்கள். அன்றையதினம் அவர் வரவில்லை. ஆகவே இப்போது இந்தக் கேள்வியில் கேட்கிறார்கள். அப்போது அதற்கான பதிலும் சொல்லப்பட்டது. அதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை. நிதிநிலையைப் பொறுத்து, வருங்காலத்தில் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சென்னையினுடைய நுழைவு வாயில் என்றுதான் நான் குறிப்பிட்டேனே தவிர, வட்டத்தினுடைய நுழைவு வாயில் தாம்பரம் அல்ல. தாம்பரம் மிக மையமான இடம் என்கிற காரணத்தால்தான் வட்ட அலுவலகத்தை நாம் அங்கே அமைத்திருக்கிறோம். ஆகவே, இந்த அலுவலகத்தையும் அங்கேயே அமைப்பதுதான் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, சென்னையின் நுழைவுவாயில் தவிரவும் தாம்பரம் வட்டத்தினுடைய நுழைவு வாயில் என்கிற காரணத்தால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதில் சிபாரிசுகளுக்கு இடமில்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் சொல்கிறேன். எந்த சட்டமன்ற உறுப்பினருடைய சிபாரிசின் பேரிலேயும் இதைச் செய்ய முடியாது. ஆகவே, இதைப் பொறுத்தவரையில், இது நடுவிலேயிருக்கிற ஆலந்தூரிலே இருக்கிறது. மேலும், புதிய இடம் தேடுகிற முயற்சியையும் இப்போது மேற்கொண்டிருக்கிறோம். அந்தப் புதிய இடம், தாம்பரத்திலே வசதியாகக் கிடைக்குமானால் அங்கே அதை மாற்றுவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் அவர் பகுதிக்கு வட்டார அலுவலகம் கேட்கலாமே தவிர, ஆலந்தூரில் இருக்கின்ற அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டும் என்று கேட்பது என்ன நியாயம் என்று தெரியவில்லை. இரண்டாவது, தாம்பரம் அந்த வட்டாரத்தில் இருந்தாலும், இது தேசிய நெடுஞ்சாலையில் ஒரு நல்ல ஒதுக்குப்புறமான இடத்தில் தற்போது செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இப்படி நன்றாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற அலுவலகத்தை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் தொகுதிக்குக் கேட்பது அவருடைய உரிமை. உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேளுங்கள்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருப்பதை அவர் கேட்க வேண்டாமே என்பதற்காகத்தான் சொல்ல வருகிறேன். ஆகையினால், ஆலந்தூரிலே நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிற இந்த அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றாமல் இருப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களோடு வேறு ஒரு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பூந்தமல்லியிலே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களையெல்லாம் கூப்பிட்டுவைத்துப் பேசி, இருக்கிற இடத்திலேயே அதை இயக்குவதற்குச் சாத்தியக்கூறு இருக்குமா என்று பார்த்து இயக்கப்படும். மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அதேபோல் பெருகி வருகிற வாகனங்களினுடைய எண்ணிக்கையைப் பார்த்து வருங்காலங்களிலே இது குறித்து முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 191, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**191—**

**பவானி—கொமாரபாளையம் பாலம் பழுதுபார்த்தல்**

***5426—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட இணைப்புப் பாலமான பவானி-கொமாரபாளையம் பாலம் பழுதுபார்க்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பழுதுபார்க்கப்படும். இது தவிர வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தில் மேற்படி பாலத்தினையும் மீண்டும் கட்டுவதற்கு ரூ.1,424 இலட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் இருக்கையில் இல்லை. திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானி-கொமாரபாளையம் பாலத்தைப் பழுதுபார்த்தாலும், இப்போது சென்னையில் இருக்கின்ற மிக நெரிசலான அண்ணா மேம்பாலம் சற்று பழுதடைந்து, அங்கேயிருக்கின்ற ஜல்லிக் கற்கள் எல்லாம் பரவிக் கிடப்பதாகப் பத்திரிகையிலேகூட செய்தி வந்திருக்கின்றது. அதை உடனடியாகப் பழுது பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும், இன்று பத்திரிகையிலே - தினமணி பத்திரிகையிலே - வந்திருக்கிற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்; தினமணி இதழுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா மேம்பாலம் 1973 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. 25 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இந்த 25 ஆண்டுகளில், மேலே மேலே தார் போட்டுக்கொண்டு வந்த காரணத்தால் அதனுடைய எடை அதிகமாகி, ஏறத்தாழ 2,000 டன், அதாவது 1,500 டன்னிலிருந்து 2,000 டன் வரையில் அதனுடைய எடை கூடியிருக்கிறது. தார் அதிகமாகி, கனமாகியிருக்கிற காரணத்தினால் வெயில் காலத்தில் தார் உருகி வாகனங்கள் போகிறபோது, சில நேரங்களில் பிரேக் போடுகிறபோது, அலையைப்போல் மேடுபள்ளமாக அந்தத் தார் உருகி நிற்கிறது. அதனால் வாகனங்கள் போவதற்குக்கூட

சிரமமாக இருக்கிறது. இது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது ஜல்லிக் கற்கள் பரவியிருப்பதைப் பற்றிச் சொல்லப்பட்டது.

மேலே மேலே தார் போட்டால் எடை அதிகரித்துவிடும் என்பதற்காக, மில்லிங் மெஷின் அந்தத் தாரை வெட்டி எடுத்து, இருக்கிற தாரை வெளியேற்றிவிட்டு, மறுபடியும் புதிய வகையிலே தார்ச்சாலை போடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு இப்போது செயல்படத் துவங்கியிருக்கிறது. இரவு 9 மணி, 10 மணிக்கு மேல் அந்த மில்லிங் மெஷின் வருகிறது. காலை 5 மணி வரையில் அது வேலை செய்கிறது. ஒரு நாளைக்கு 750 சதுர மீட்டர்தான் வெட்டி எடுக்க முடியும். எனவே, சிறிது காலத்திற்கு அந்த வேலை நடக்கும். இரவிலே வெட்டப்பட்ட அந்தப் பொருட்களை லாரி மூலமாக வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே சிறிது சிறிதாக ஜல்லிக்கற்கள் பரந்து கிடக்கின்றன. விரைவில் அந்த வேலையை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.10

**மாண்புமிகு** பேரவைத் **துணைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் கேட்கப்பட்ட பழுதடைந்த கொமாரபாளையம் பவானி இணைப்புப் பாலம், என்னுடைய தொகுதியையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய தொகுதியையும் இணைக்கின்ற பாலம், அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அது இப்போது மிகவும் வலுவிழந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால், புதிதாக பாலம் கட்டுவதற்கு 16.24 கோடி ரூபாய் 'ஹட்கோ' நிதி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று அந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்களால் அந்தப் பாலம் வெறொரு இடத்திலே புதிதாக அமைக்கப்பட்டு, 20 அல்லது 25 இலட்சம் ரூபாய் செலவிலே பழுது பார்க்கப்படுமானால், இரு சக்கர வாகனங்களும் இலகு வாகனங்களும் செல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால், அந்தப் பாலத்தைப் பழுது பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய முதல் பதிலிலேயே பழுதுபார்க்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். பழுது பார்க்கும் பணி தவிர, புதிய பாலம் கட்டுவதற்கும் ரூபாய் 14 கோடிக்கும் மேலான மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன. டெண்டர் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை விரைவிலே தொடங்கும் என்று தெரிவிப்பதோடு, இருக்கின்ற பாலத்துக்கு ஆபத்து இல்லாமல், தேவையான அளவுக்கு அது பழுதுபார்க்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 192, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**192—**

## அம்மன் கோயில் தேர் ஓடச் செய்தல்

***5562— திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் புஷ்பவனேஸ்வர் சௌந்திரநாயகி அம்மன் கோயில் தேர் ஓடச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனேஸ்வர் திருக்கோயிலுக்குச் சொந்தமான பழுதடைந்திருந்த சுவாமி மற்றும் அம்மன் திருத்தேர்களுக்குத் தேவையான இரும்பு அச்சு மற்றும் சக்கரங்கள் ரூ.4,05,000/- மதிப்பில் திருப்புவனம் கிராமத்தார்களால் உபயமாகப்

பெறப்பட்டு, நல்லமுறையில் பொருத்தப்பட்டு *22-3-1997* அன்று தேர்த் திருவிழா நடைபெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பார்த்தோம் என்று சொன்னால், பழைய கோயில்கள் பழுதடைந்த நிலையில், செயலிழந்து இருக்கின்றன. அதே நேரத்தில், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தேர்களெல்லாம் ஓடாமல் பழுதடைந்திருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழுதுபட்ட ஆலயங்களை மறுபடியும் புதுப்பித்து, தேர்களையெல்லாம் ஓடச் செய்வார்களா என்று அறிவதோடு, என்னுடைய தொகுதியில் அணையபுரம் என்ற கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க நரசிம்மசுவாமி திருக்கோயில் இருக்கின்றது. கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வந்து வழிபாடு செய்கின்ற புனிதத் தலம். அது பாழ்பட்டு இருக்கின்ற காரணத்தால், அந்தக் கோயிலையும் புதுப்பித்து, அங்குள்ள தேரையும் ஓடச் செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய *36,253* கோயில்கள் இருக்கின்றன. அதில் பல்லாயிரக்கணக்கான தேர்களும் இருக்கின்றன. ஒவ்வொரு தேரும் கிட்டத்தட்ட *10* ஆண்டுகள், *20* ஆண்டுகளுக்கு முற்பட்டவை. சிறந்த நிலையில் ஓடக்கூடிய தேர்களும் இருக்கின்றன, பழுதடைந்த நிலையில் ஓடமுடியாத தேர்களும் இருக்கின்றன. எனினும், ஒவ்வொன்றாக எடுத்துச் செய்வதற்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவாகும் என்பதை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன். இந்தத் துறையில் அரசு, உபயதாரர் நன்கொடையைப் பெற்றும், ஆலய நிதி அமைப்புகளிடமிருந்து உதவி பெற்றும் செம்மைப்படுத்தி வருகிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்ட திருப்புவனம் கோயிலுக்குக்கூட வருமானம் என்பது ஒரு பசலியில் ரூ. *1,67,000/-* செலவு *1,54,000* ரூபாய். எனவே, *13,000* ரூபாயைத்தான் மொத்தத்தில் மீதமாக வைத்துக்கொண்டு, தேர்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. எனவே, பல்வேறு நிலைகளில் இருக்கின்ற தேர்களுடைய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்த அடிப்படையில் இன்றைக்குத் தேர்கள் புதுப்பிக்கப்படுகின்றன. ஏராளமான இடங்களில் அவை ஓடவிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த, அந்தக்



குறிப்பிட்ட கோவிலைப் பற்றிய செய்தி இப்போது கையில் இல்லை. எனினும் அது கவனிக்கப்படும்.

முற்பகல் *10-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டத்தில் வைத்தீஸ்வரர் கோவில் தேரும், வேதபுரீஸ்வரர் கோவில் தேரும், தேவிகாபுரத்தில் அருணகிரீஸ்வரர் தேரும், வில்வாரணியில் ஒரு தேரும், அதேபோல, திருவண்ணாமலையில் அம்மன் கோயில் தேரும் ஓடாமல் இருக்கின்றன. அவற்றை ஓட வைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறைப்படி இதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்லமுடியும் என்றாலும் ஏற்கெனவே இருக்கின்ற பட்டியலில் இவையும் சேரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் கருப்புலீஸ்வரர் ஆலயத்தினுடைய தேர் இந்தச் சித்திரை மாதம் ஓடும் என்று கடந்த மாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். சித்திரை மாதம் தொடங்கிவிட்டது. இன்னும் அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெகு விரைவில் அந்தப் பணி நிறைவடையும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்குத் தங்கத் தேர் செய்வதாக கடந்தகால ஆட்சியிலே அறிவித்தார்கள். அதனுடைய நிலைமையைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 15

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தங்கத் தேர் செய்வதற்கு அனுமதி கொடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அது உங்களுக்கே தெரியும் என்று நான் கருதுகிறேன். காரணம் புதிதாக எந்தத் தங்கத் தேருக்கும் இசைவு கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் கருதுகிறோம். ஏற்கெனவே தொடங்கப்பட்டு, பாதியில் இருக்கின்ற அந்தத் தேர்களை முழுமைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டுக்குச் சொல்ல வேண்டுமென்றால் கோவை மாவட்டத்திலே இருக்கின்ற ஈச்சனாரியிலே இருக்கின்ற பிள்ளையார் கோவில் தேர் இழுக்கும் நிலையில் தயார் நிலையில் இருக்கின்றது. அதேபோல, மருதமலைக் கோவிலிலும் தேர் தயார் நிலையில் இருக்கின்றது. ஆனால் புதிதாகத் தங்கத் தேர் செய்ய அனுமதி வழங்குவதில்லை என்ற அரசின் கருத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனினும் அரசு இதுபற்றிச் சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் திருக்கழுக்குன்றத்தில் எரிந்துவிட்டத் தேரை புதிதாக செய்வதற்காக 7½ இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். ஆனால் ஆண்டுகள்தான் 8 ஆகிவிட்டனவே தவிர புதிதாகத் தேர் செய்கின்ற பணி இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. எனவே அதனை உடனடியாக ஆரம்பித்து, மிகப் பிரசித்திபெற்ற அந்தக் கோவிலின் தேரை வீதி உலா வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில தேர்களைச் செய்கின்றபோது நேரடியாக அறநிலையத் துறை மட்டுமே அதை எடுத்துச் செய்வதில்லை. ஏற்கெனவே பூம்புகார் கலைப் பொருள் துறை இதுபோன்ற தேர்களைச் செய்வதற்கான பொறுப்புகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய நுட்பத் தொழிலாளர்கள் நேரடியாக வந்து பார்த்து அதற்கு என்ன மரம் தேவை, அதனை எப்போது வெட்டியெடுக்க வேண்டும் என்பதை எல்லாம் அவர்கள்தான் முடிவு செய்கிறார்கள். எங்களுடைய துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாற்றப்பட்டு அது முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அந்தத் தேர்களுடைய பணி தொடங்குவதற்குக் காலதாமதம் ஆகிவிடுகிறது. எனினும் மாண்புமிகு



1998 ஏப்ரல் 15]

உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய கவனம் செலுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 193, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**193—**

### திருவையாற்றில் இசைப் பல்கலைக்கழகம்

***11747—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை இசைக் கல்லூரிகள் இயங்குகின்றன?

(ஆ) திருவையாறு இசைக் கல்லூரியை இசைப் பல்கலைக்கழகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் தற்போது 4 அரசு இசைக் கல்லூரிகள் இயங்குகின்றன.

(ஆ) திருவையாறு அரசு இசைக் கல்லூரியை இசைப் பல்கலைக்கழகமாக மாற்றும் திட்டம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவையாறிலே இசைக் கல்லூரி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காவிரி என்றாலே இசை என்று அர்த்தம். தியாகராஜர் வாழ்ந்த பூமி திருவையாறு. அந்த இடத்தில் ஒரு இசைப் பல்கலைக் கழகத்தை நிறுவினால் மிகச் சிறப்பாக இருப்பதோடு, தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதால் அங்கு பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 15

முற்பகல் 10-20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழக அரசின் திட்டம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 29 மாவட்டங்களிலும் இசைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்த வேண்டும் என்பதும், தமிழ்நாட்டில் இருக்கின்ற 29 மாவட்டங்களிலும் இசை விழாக்கள், தமிழிசை விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் தான். நம்முடைய இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் 13-5-1996-ல் தமிழகத்தில் மொத்தம் 3 இடங்களில், அதாவது, சென்னையில், கோவையில் மற்றும் மதுரையில் மட்டுமே இசைக் கல்லூரிகள் இருந்தன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற 23 மாதத்திற்குள் திருவையாறு இசைக் கல்லூரியில் வடமொழி இசைக் கல்லூரியோடு இணைந்து இருந்த ஒன்றைத் தனியாகப் பிரித்து அதை நான்காவது இசைக் கல்லூரியாக உயர்த்தியிருக்கிறோம். அது போக, இசைப் பள்ளிகள் என்ற முறையிலே திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 5 இசைப் பள்ளிகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டில் 5 இடங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்திலே தெரிவித்திருக்கிறார்கள். எப்படியும் தமிழகத்தில் உள்ள 29 மாவட்டங்களிலும் இசைப் பள்ளிகள் முழுமையாக அமைக்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து சிந்திக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் இசைக்கென்று தனித்தனிப் பண்கள் இருக்கின்றனவா? அல்லது தமிழ் இசைக்கென்று தனியாக மேளகர்த்தா பண்கள் இருக்க வேண்டுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் இசைக்கென்று தனித்தனிப் பண்கள் இருக்கின்றன. இது உறுப்பினர்களுக்குத் தெரியும். சிலப்பதிகாரம் போன்ற பழைய நூல்களிலும், தேவாரத்திலும், வேறு சில நூல்களிலும் தனித்தனிப் பண்களும் அவற்றுக்குரிய சாகித்தியங்களும் இருக்கின்றன. எனவே, தமிழ் இசை என்பது தனியானது, மற்றவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கக்கூடியது என்பது அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.



1998 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 194, திரு.வ. வேலுசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**194—**

**பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் புதிய வீடுகள்**

***8216—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, கீரைத்துறை, கிருதுமால்நதி அருகில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகப் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, கீரைத்துறை, கிருதுமால்நதி ஓடைக்கரை அருகில் சுமார் 40 ஆண்டு காலமாக, பல்வேறு மக்கள் மிக மிக சிறிய குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். சில சமயங்களில் திடீர் என்று தீப்பிடித்து குடிசைகள் எல்லாம் நாசமாகிவிடுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கிருந்த சமயத்திலும், மதுரை வந்த சமயத்திலும் இதுபற்றி எடுத்துச்சொல்லி குடிசை மாற்று வாரியத்திலிருந்து அலுவலர்கள் வந்து அந்த இடத்தை ஆய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து அந்த இடத்தை அளப்பதற்கு வந்தார்கள். ஒரு வாரத்திலே அதற்கான பதிலை தெரிவிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரையில் 6 மாதங்கள் ஆகியும் அதற்கான பதில் வரவில்லை. எனவே, வேறு இடத்திலாவது குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி அந்த ஏழை எளிய மக்களுக்கு கொடுப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, கீரைத்துறை, கிருதுமால்நதி அருகில் சுமார் 200 குடிசைவாசிகள் வாழ்கின்றனர். மாநகராட்சியிடம் நிலம்

கேட்டிருக்கிறோம். மாநகராட்சி குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் ஒப்படைத்தால் அடுக்குமாடி வீடுகள் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *195*, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**195—**

### குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்

***7239—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் உட்பட்ட பு. புளியம்பட்டியில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம் பு. புளியம்பட்டியில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ.அ. ஆண்டமுத்து, இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் தமிழ்நாட்டில் எத்தனை வட்டங்களில் உள்ளன. மேலும் அத்தகைய நீதிமன்றங்கள் எத்தனை கோட்டங்களில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, District Munsif Court என்று சொல்லப்படுகின்ற நீதிமன்றங்கள் தமிழ்நாட்டில் *169* இருக்கின்றன. Judicial Magistrate Court என்று சொல்லப்படுபவை *175* இருக்கின்றன. District Munsif-*cum*-Judicial Magistrate Court என்பவை *57* இருக்கின்றன. மொத்தம், வட்ட அளவில் *401* நீதிமன்றங்கள் தமிழகத்தில் இருக்கின்றன.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். தமிழ்ச்செல்வன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரில் பல ஆண்டு காலமாக இயங்கிவந்த ஜே.எம்.2, குற்றவியல் நீதிமன்றம்-2 தற்போது சோளிங்கபுரத்திற்கு மாற்றப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது அரக்கோணத்திலேயே இயங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல்கள் ஏதும் தற்போது என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்திலே குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் ஆகிய இரண்டும் ஒரே வளாகத்தில் ஒரே நீதிபதியின் மூலம் நடைபெறுகின்றன. நிறைய வழக்குகள் அங்கே தேங்கியிருக்கின்ற காரணத்தினால், அவற்றைத் தனித்தனியாகச் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக இதுவரையில் உயர்நீதிமன்றத்திலிருந்து எந்தப் பரிந்துரையும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், வழக்கறிஞர்களிடத்திலேயிருந்து பெறப்பட்ட முறையீடுகளைக் கருதி, இவற்றின் மீதான பரிந்துரை கிடைக்கப் பெற்றவுடன் அரசு பரிசீலித்து இறுதி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட வட்டங்களில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் தொடங்கப்படுமா என்பதையும், பெரம்பலூர் மாவட்டத்தில் எனது தொகுதியான வரகூரிலுள்ள குன்னம் வட்டத்தில் உடனடியாக குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத்துணைதலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் 12 வட்டங்களில் நீதிமன்றங்கள் துவங்கப்படாமல் உள்ளன. இது தொடர்பாக, ஏற்கெனவே முன்னோடித் திட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்ட நீதிமன்றங்களை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாமா என உயர்நீதிமன்றத்தைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் ஒப்புதல் அளித்த பிறகு எல்லா வட்டங்களிலும் நீதிமன்றங்களை அமைக்க அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 196, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**196—**

## குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைத்தல்

***39699—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் ராதாபுரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரத்தில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா தாலுகா தலைநகரங்களிலும் குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் நீதிமன்றங்கள் இருப்பதைப்போன்று, தாலுகாவினுடைய தலைநகராக விளங்குகின்ற ராதாபுரத்தில்— கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே பகுதி நேர வழக்காடு மன்றங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது அதையும் நிறுத்திவிட்டார்கள்—குற்றவியல் நீதிமன்றமாவது அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் வள்ளியூர்தான் பெரிய





நகராகும். அங்கே ஏற்கெனவே District Munsif Court இருக்கிறது. என்றாலும், ராதாபுரம் வட்டத் தலைநகராக இருக்கின்ற காரணத்தினால், அங்கே நீதிமன்றங்கள் அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது என்பது உண்மை. அந்தக் கோரிக்கையினை அரசு பரிசீலிப்பதற்கு முன்னால், அங்கே District Munsif *Cum* Judicial Magistrate Court அமைப்பதற்கு உயர்நீதிமன்றம் இப்பொழுது பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான பரிந்துரை அரசுக்கு இன்னும் வரவில்லை. அந்தப் பரிந்துரை வந்த பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி ஒரு வட்டத் தலைநகரம். அங்கே ஏற்கெனவே ஒரு Judicial Magistrate Court வைத்திருக்கிறார்கள். உரிமையியல் தொடர்பான தகராறுகளுக்கு திருப்பத்தூருக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அங்கே D.M.C. என்ற கோர்ட்டாவது அமைத்துத்தர வேண்டுமென்பது நீண்ட நாட்களாக இருந்து வருகின்ற கோரிக்கை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து ஒரு D.M.C. கோர்ட்டாவது அங்கே ஏற்படுத்தித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை கிடைத்த பிறகு அரசு அதுபற்றி இறுதி முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தனி வட்டமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னால், அது நாங்குனேரியில் உள்ளடங்கி இருந்தது. இப்பொழுதும் நாங்குனேரியில் ஒரு நீதிமன்றம்—Judicial Magistrate Court— இருக்கிறது. ராதாபுரம் பகுதியிலே உள்ள வள்ளியூரிலே உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் தனியாக இருக்கின்றன. உரிமையியல் நீதிமன்றத்திற்கு அரசுக் கட்டிடம்கூட கிடையாது. ஆகவே, ராதாபுரம் தாலுகா தலைநகரமாக இருப்பதால், வள்ளியூரில் இருக்கின்ற உரிமையியல் நீதிமன்றத்தை Judicial-*cum*-Magistrate Court என மாற்றி அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்க ஆசைப்படுகிறேன்.

[1998 ஏப்ரல் 15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற எந்தவொரு நீதிமன்றத்தையும் எந்த நகரத்திலிருந்தும் மாற்றுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. ஏனென்றால், அது அரசியல் பிரச்சனையாக மாற்றப்படுகிறது. வழக்குரைஞர்களுடைய ஒத்துழைப்பு, அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு இவற்றையெல்லாம் வைத்துத்தான் நாம் அதை மாற்ற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேட்பதைப்போல வள்ளியூரிலே இருக்கின்ற நீதிமன்றத்தை ராதாபுரத்திற்கு மாற்றுவது என்பது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் *197*, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**197—**

**கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பள உயர்வு**

***14581—திரு. வி.பி. இராசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த அரசு ஆணை (நிலை) எண் *34*, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (டி1) துறை *16-3-1998*-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆணையினை அமல்படுத்தும் பொருட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மேல்நடவடிக்கை எடுத்து வருகிறார்.



1998 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி:

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் பல ஆண்டு காலமாக ஊதிய உயர்வின்றி வேதனைப்பட்டு வந்தார்கள். நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு கூட்டுறவுத் தேர்தலை நடத்தியதன் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் சார்பில் அந்தந்த சொசைட்டியில் அவர்களுக்கு என்ன சக்தி உண்டோ அந்த அளவிற்கு ஊதிய உயர்வு வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அத்தகைய ஒப்பந்தத்தை அங்கீகரிக்க கைத்தறித் துறை இயக்குநரகம் மறுக்கிறது. அந்த மறுப்பை நீக்கி அந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கங்களுடைய நிதிநிலையையும் அதனுடைய கடந்த கால இலாப நஷ்டக் கணக்கினையும் பார்த்து உயர்ந்தபட்சமாக 20 சதவிகிதம் என்ற அளவிற்கு அளிக்க ஒரு குழு பரிந்துரை செய்துள்ளது. அப்படி, வலுவில்லாத சங்கங்கள் அந்த 20 சதவிகிதத்தையே இரண்டு மூன்று தவணைகளிலே முறைப்படுத்திக் கொடுக்கலாம் என்றும் குழு பரிந்துரை செய்துள்ளதால் இதிலே எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையை விட மேலும் இதில் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பிலை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *198*, திரு. ந.பூ. இராமஜெயம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**198—**

**திரைப்பட நகரில் சிறுவர் பூங்கா**

***9794—திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்பட நகரில் சிறுவர் பூங்காவினைத் தனியாருக்கு விட அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1998 ஏப்ரல் 15

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*(அ)* சிறுவர் பூங்காவினைத் தனியாருக்கு விட தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுவர் பூங்காவினைத் தனியாருக்கு ஏலம் விட்டால் பெரும் அளவு இலாபம் ஈட்ட வாய்ப்பு உள்ளது. எனவே, பூங்காவினை ஏலம் விட அரசு மறுபரிசீலனை செய்யுமா? மேலும், சிறுவர் பூங்காவிலுள்ள பழுதுபட்டுள்ள விளையாட்டுச் சாதனங்களை மாற்றியமைக்க அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலுள்ள சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டுச் சாதனங்களை தனியாருக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் அதிக இலாபம் ஈட்டலாம் என்று திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கருத்துரு அனுப்பி இருந்தார். மேற்படி கருத்துருவில் அரசு வழக்குரைஞர்—திரைப்பட நகருக்கு செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, அரசு ஆணை எண் 50, நாள் 10 பிப்ரவரி 1993-இன்படி ஒதுக்கப்பட்ட 85. ஏக்கர் 94.5 செண்ட் நிலத்தில் முன்நுழைவு செய்ய சில நிபந்தனைகளின் அடிப்படையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனவே, உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் மேற்படி நிலத்தை தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் ஆதாயத்திற்குப் பயன்படுத்த இயலாது என்றும் இந்நிலையில் தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம் இதனைத் தனியாருக்கு உரிமை வழங்க இயலாது — எனவும் தெரிவித்துள்ளார். எனவே, சிறுவர் பூங்காவினைத் தனியாருக்கு விடுவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அதே நேரத்தில் சிறுவர் பூங்காவினை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. முப்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட ரோலர் கோஸ்டர் விளையாட்டு இரயில் இயந்திரம் பழுதுபட்டிருந்ததைப் பழுது பார்ப்பதற்காக ரூ.4,82,000/- செலவில் Southern Amusement நிறுவனத்தில் டெண்டர் கோரப்பட்டு அவர்களுடைய மேற்பார்வையில் அந்தப் பணிகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *199*, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**199—**

### முட்டுக்காடு உடல் ஊனமுற்றோர் தொழிற்கூடம்

***8567—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் ஒன்றியம், முட்டுக்காடு உடல் ஊனமுற்றோர் தொழிற்கூடம் சரிவர இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) அத்தொழிற்கூடத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்?*

*இ) உற்பத்தியாகும் பொருட்கள் என்ன?*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*(அ) (ஆ) மற்றும் (இ) : 1975-ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டம், முட்டுக்காடு கிராமத்தில் 15.8 ஏக்கர் நிலப்பரப்பில் நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. அந்த இடத்தில் மத்திய அரசு பலவகை ஊனமுற்றோருக்கான தேசிய நிலையம் அமைப்பதற்கு விரும்பிக் கேட்ட காரணத்தினால் 10-10-1995 முதல் இந்தத் தொழிற்கூடம் கிண்டியில் திரு.வி.க. தொழிற்கூடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. ரூ. 9.71 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளுடனும் ரூ. 0.41 இலட்சம் மதிப்புள்ள மரம் மற்றும் இரும்புச் சாமான்களுடனும் கிண்டி தொழிற்பேட்டைக்கு மாற்றப்பட்டது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருத்திய விடையைப் படிப்பதற்கு, முன்பே நீங்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை தரப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்ட நேரத்திலே தொழிற்பேட்டை நடத்தப்பட்டு வந்த முட்டுக்காட்டில் உள்ள இடம் மத்திய அரசுக்குத் தரப்பட வேண்டிய காரணத்தினால் அங்கு அந்தத் தொழிற்கூடம் இயங்கவில்லை

[1998 ஏப்ரல் 15

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மாறாக 1995 ஆம் ஆண்டிலேயிருந்து கிண்டியிலே தொழிற்பேட்டை நடைபெற்று வருகிறது. சமீபத்தில் முட்டுக்காட்டில் உள்ள இடம் அரசு ஆணை நிலை எண் 1038, வருவாய்த்துறை, மூலமாக 5-11-1997 முதல் மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இடத்தில் 3 சக்கர வண்டிகளும் சக்கர நாற்காலிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்க அனுமதி கோருகிறேன். கடந்த ஆண்டு டிசம்பர் வரை 2724 பேர்களுக்கு 3 சக்கர நாற்காலியும், 448 பேர்களுக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே அரசுப் பணியாளர்கள் 12 பேர்களும் தினக்கூலிப் பணியாளர்கள் 20 பேர்களும் பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம்.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய முட்டுக்காடு உடல் ஊனமுற்றோர் தொழிற் கூடம் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால், அவர்கள் முதலமைச்சராக வந்தவுடன் துவக்கப்பட்டது. கருணை உள்ளத்தோடு அவரால் துவக்கப்பட்ட அந்தத் தொழிற் கூடத்தில் உடல் ஊனமுற்றோர்களுக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை ஆகாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இடம் அதிகமாக இருக்கிறது. எனது தொகுதியில் உள்ள இடத்தை மாற்றாமலும் அந்த உற்பத்தித் திறனைப் பெருக்கவும், உற்பத்தியாகின்ற அந்த வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசே முன்வருமா, அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முட்டுக்காட்டில் இருக்கின்ற இடம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அதை வழங்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக ஊனமுற்றோர் பற்றிய ஆராய்ச்சி நிலையமும் நடைபெற இருக்கிறது. பலவகை ஊனமுற்றோர்களுக்காக உதவிக் கருவிகளைச் செய்கின்ற ஒரு தொழிற் கூடமும் அங்கு அமைய இருக்கிறது. எனவே, அந்த இடம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதால் எந்தவிதத்திலும்



1998 ஏப்ரல் 15]

பாதிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது கிண்டியில் தயாரிக்கப்படுகின்ற அனைத்துப் பொருள்களும் அரசின் மூலமாக இலவசமாக ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது மட்டும் அல்ல மற்றவர்கள் விரும்பிக் கேட்டால் அந்தப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 200, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**200—**

## ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதி கட்டுதல்

***2705—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, கணியூர் கிராமத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய குத்தாலம் தொகுதி குடவாசலில் ஒரு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி தாராபுரத்தைப் பற்றியது. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பால் விற்பனை விலை உயர்வு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லா. சந்தானம், திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். சொக்கர், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் பால் விலை உயர்வு குறித்து கவன ஈர்ப்பாகவும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும் எடுத்துக்கொள்ள அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக ஏற்றுக்கொண்டு கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில் முதலில் பேச திரு. டி. சுதர்சனம் அவர்களை அழைக்கிறேன். சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழக அரசு பால் விலையை 1 ரூபாய் 50 காசு கூட்டி அறிவித்திருக்கிறது. அந்த 1 ரூபாய் 50 காசை 26 இலட்சம் விவசாயிகளுக்கு - பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமாக உயர்த்திக் கொடுத்திருப்பதன் காரணமாக இன்றைக்கு விலையை ஏற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, தமிழக அரசு - ஏழை எளிய மக்கள் சமுதாயத்திலே நலிவுற்றிருக்கின்ற மக்கள் எல்லாம் பாலை உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள் - 1 ரூபாய் 50 காசு உயர்த்தியவுடனே டீ கடைக்காரர்கள் எல்லாம் ஒரு டீக்கு 50 காசை உயர்த்திவிட்டார்கள். காபிக்கு 50 காசை உயர்த்திவிட்டார்கள். ஒரு லிட்டர் பாலினுடைய விலை 1½ ரூபாய் கூடியிருக்கிறது. அந்த 1 லிட்டர் பாலிலே 30 காபியோ 30 டீயோ போட முடியும். ஆனால், அரசு உயர்த்தியிருக்கின்ற ஒன்றரை ரூபாயைக் காரணங்காட்டி 15 ரூபாய் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அப்படி அவர்கள் கொள்ளையடிக்கின்ற காரணத்தினால் இந்த அரசுக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது. இந்தப் பால் விலை உயர்வினால் 26 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26 இலட்சம் விவசாயிகளுக்கு உதவ முன்வந்திருக்கிறார்கள்.





முற்பகல் 10-40

இன்றைக்கு, பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ரூபாய் 3 கோடியே 8 இலட்சம் அரசுக்கு 'ஆவின்' மூலமாக நட்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்தகால ஆட்சியில் பல்வேறு முறைகேடுகள் இந்தத் துறையிலே நடைபெற்றன. அதனால், நிர்வாகத்தில் மோசமான நிலைமை இருந்தது.

அதேபோன்று, பால் வந்து விடும் என்று சொல்லி, ஈரோட்டில் நாளொன்றுக்கு 20 டன் பால் பவுடர் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை உருவாக்கினார்கள். ஆனால், அந்தத் தொழிற்சாலையில் இதுவரை 1 டன் பால் பவுடர் கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. அதேபோன்று, மதுரையிலே, கிருஷ்ணகிரியிலே, இப்படிப் பல்வேறு [illegible]லே 'ஆவினுக்கு' நட்டம்தான் ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, 17 ஒன்றியங்களை ஏற்படுத்தி, அதற்குத் தலைவர்களை எல்லாம் நியமித்தார்கள். அப்படி நியமித்ததன் பயனாக அவர்கள் அடித்திருக்கின்ற கொள்ளை ஏராளம். அதுமட்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து அதிலே இருக்கின்ற அதிகாரிகள் அடித்த கொள்ளையும் ஏராளம். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. 60 கோடி ரூபாய் மூலதனத்தில் பால்பவுடர் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை அமைத்தும், அத்தொழிற்சாலையிலிருந்து 1 கிலோ பவுடர் கூட உற்பத்தி செய்ய முடியவில்லை என்பதுதான் நிலைமை. ஐந்தாண்டுகளில் இப்படிப்பட்ட மோசமான நிலையை உருவாக்கிவிட்டுப் போனவர்கள் இன்றைக்குப் பால் விலை உயர்வைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிக் குறைக்க வேண்டும் என்று சொல்கிற முன்னாள் முதல்வர் அவர்கள் 26 இலட்சம் விவசாயிகள் பயனடையக்கூடிய விதத்தில் பால் விலையைக் கூட்டியதைக்கூட எதிர்க்கிறார்களா என்றும் தெரிவிக்கவில்லை. ஏதோ, 'வந்தோம், போனோம்' என்று சொல்லி அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு, பால் உற்பத்திக்கும், விற்பனைக்கும் இடையிலே இரண்டு ரூபாய் லாபம் வருகிறது. அது Overhead charges என்று சொல்லப்படுகிறது. அதை நாம் கொஞ்சம் குறைத்துக்கொண்டு, பாலினுடைய விலையை ஒரு ரூபாய் ஐம்பது காசிலிருந்து குறைத்து,

அதன் மூலமாக By-Products என்று சொல்லப்படுகிற வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் போன்றவற்றிலிருந்து ஏதாவது நாம் நட்டத்தை ஈடுசெய்ய முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதன் மூலமாக நட்டம் வராமல் தடுக்க முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு பல்வேறுபட்ட நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, இன்றைக்கு இந்தப் பால் விலை உயர்வினால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், நீங்கள் தயவுசெய்து, நிச்சயமாக, இந்த பால் விலை உயர்வினைக் கைவிட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பால் உற்பத்தியாளர்களுக்கு, லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசு என்கிற அளவிலே விலை உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. அதனாலே, உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். இருந்தாலும், பால் என்பது எல்லாத் தரப்பு மக்களும், குழந்தைகள், வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள், முதியோர்கள் மற்றும் [illegible]களிலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்கள், டீ, காபி போன்றவைகளையெல்லாம் உட்கொள்ளக்கூடிய பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், எப்படி அரிசியை எல்லா மக்களும் ஆகாரமாகக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல, பாலையும் ஆகாரமாகக் குழந்தைகளும், நோயால் பீடிக்கப்பட்டவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், அது அத்தியாவசியப் பண்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற காரணத்தினால், இந்த அரசு உணவுக்காக பல கோடி ரூபாயை மானியமாக வழங்கி வருகின்ற காரணத்தினால், இதுவும் உணவு வகையிலே வருகின்றது என்ற காரணத்தால்—உற்பத்தியாளர்களுக்குக் கூட்டிக்கொடுக்கின்ற அளவுக்கு 1.50 ரூபாய் என்கிற நிலையிலே விற்பனை விலை கூட்டப்பட்டிருக்கிறது. அதைத் தயவுசெய்து நமது அரசு பரிசீலனை செய்து ஓரளவுக்குக் குறைத்தால் ஏழை மக்கள் பயன் அடைவார்கள் என்கிற நிலையிலே அரசு குறைப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி.

முற்பகல் 10.45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளிடத்திலே, தீவன விலை உயர்ந்துவிட்ட காரணத்தால், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்தது. அதை இந்த அரசு செய்தது சரி. அதேநேரத்தில், இந்தப் பால்விலை உயர்வு நுகர்வோர்களை கடுமையாகப் பாதித்திருக்கிறது. குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், அரசுத் தரப்பிலிருந்து விலையைக் குறைக்க வேண்டுமென்றால் நடவடிக்கை உடனடியாக எடுப்பதில்லை. அதேநேரத்தில் விலையேற்றம் என்றால் நேரடியாக, உடனடியாக அமல்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. பால்விலை உயர்வின் மூலமாக, அரசின் அறிவிப்புக்குப் பிறகு, காப்பி ஓட்டல், டீக்கடை வைத்திருக்கக்கூடியவர்கள் விலையை உயர்த்தியிருப்பதால், தொழிலாளர்கள் முதற்கொண்டு வசதி படைத்தவர்கள் வரை இந்த உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்து, விலையேற்றத்தின் காரணமாக இருக்கிற பாதிப்பைக் கருத்தில் கொண்டு, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சுதர்சனம் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி அவர்களும் இங்கே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பின் வாயிலாக பால் விலையேற்றம் பற்றிய தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

முத்தாய்ப்பாக விலையைக் குறைக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஒரு வேளை திரு. சுதர்சனம் அவர்களும், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும் இந்தக் கவன ஈர்ப்பை அளித்த காரணத்தால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே நம்முடைய திரு. பழனிசாமி அவர்களும் ஏற்கெனவே இந்த விலை உயர்வைத் தவிர்க்க முடியாது என்ற கருத்தைக் கட்சியின் சார்பிலே சொல்லியிருந்தாலும்கூட, அதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள விளைவுகளை எண்ணிப்பார்த்து, விமர்சனங்களை எண்ணிப்பார்த்து அவர்களும் இன்றைக்கு, அவர்களோடு இணைந்து, தன்னுடைய குரலை இங்கே உயர்த்தியிருக்கின்றார்கள்.

முதலில் சில விளக்கங்களை நான் இங்கே தர விரும்புகின்றேன். கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று, சற்றொப்ப 20 இலட்சத்திற்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள், கிராமப்புற விவசாயிகள், அவர்களின் சார்பாக, அந்தப் பிரதிநிதிகள் எங்களிடத்திலே வலுவாக வாதிட்டு, கொள்முதல் விலை 1 ரூபாய் 50 காசு உயர்த்தப்பட்டது. கொள்முதல் விலை எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டதோ, அதே அளவுக்குத்தான் நுகர்வோருக்கு விற்பனை விலையும் நிர்ணயிக்கப்பட்டது. இதிலே ஆவின் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய். இந்தப் பத்து கோடி ரூபாயை நம்முடைய திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய் போன்ற பொருள்களை, உபபொருள்களாக உருவாக்கி அதன் மூலமாக அவற்றை விற்று வருகின்ற வரவு 8 கோடி ரூபாய் என்ற அளவில் நிகர நட்டம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய். ரூபாய் 1.50-ஐ கொள்முதல் விலையில் உயர்த்தி, அதே ரூபாய் 1.50க்கு உயர்த்தி விற்பனை விலை நிர்ணயித்த நிலையில் 10 கோடி ரூபாய் நட்டம். அதிலே ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய் இவைவிற்பனை மூலமாக 8 கோடி ரூபாய் வரவு; நிகர நட்டம் 2 கோடி ரூபாய். அஃதன்னியில், இங்கே நம்முடைய, குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அடிக்கடி எடுத்துக்காட்டியதின் மூலம், அந்தக் காலத்தில், பத்தாண்டுகளுக்கு முன்பு, மாதவரம் பால் பண்ணையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை, அவ்வப்போது மீண்டும் மீண்டும் வேலையிலே சேர்த்துக்கொண்டுள்ளோம். இப்போதுகூட 314 பணியாளர்களை வேலையில் சேர்த்ததன் மூலமாக 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு மேலும் இழப்பு. எனவே, 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் நிகர இழப்பு, இப்போதே, இந்த நிலையிலேயே. அதாவது ரூ.1.50 கொள்முதல் விலையிலும் உயர்த்தி, ரூ.1.50 விற்பனை விலையிலும் நிர்ணயித்த இந்த நிலையில்கூட மொத்தம் 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் நட்டம் ஆகிறது.

முற்பகல் 10-50

இப்போது ஒன்றைச் சொன்னால், இதையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டக் கூடாது என்று கூறுவீர்கள். இருந்தாலும் உங்கள் நினைவுக்காக ஒப்பிட்டுக் காட்டுகின்றேன். ஆந்திராவில் ஒரு லிட்டர் 11 ரூபாய்தான். அதிலும் குறிப்பாக ஹைதராபாத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். பெங்களூரில் 10 ரூபாய் 50 காசுகள். ஆனால், பெங்களூர் தவிர்த்து கர்நாடகப் பகுதியில் எல்லா இடங்களிலும் 11 ரூபாய்.





திருவனந்தபுரத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். டில்லியில் 11 ரூபாய். இங்கே இந்த விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற நேரத்தில், உதாரணத்திற்கு ஒரு 50 பைசா குறைப்பதாக இருந்தால்கூட -- சென்னை நகரத்திலே ஒரு நாளைக்கு விற்பனையாகின்ற பால் 8 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர்கள். சென்னை தவிர்த்து வெளியூர்களில் விற்பனையாகின்ற பாலின் அளவு 6 இலட்சத்து 60 ஆயிரம் லிட்டர். மொத்தம் 14 இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர். 50 காசுகள் இதிலே குறைத்தால்கூட ஒரு நாளைக்கு நட்டம் 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்—365 நாளைக்கும் ஏறத்தாழ 27 கோடி ரூபாய் நட்டம். ஏற்கனவே இருக்கின்ற நட்டம் 3 கோடி ரூபாய். மொத்தம் 30 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இதைத் தாங்கக் கூடிய அளவில் ஆவின் நிறுவனம் இன்றைக்கு இல்லை என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். ஆனாலும், தேநீர் கடைக்காரர்கள் தேநீரின் விலையை உயர்த்தி விட்டார்கள் என்று நம்முடைய திரு. டி. சுதர்சனம் அவர்களும், நம்முடைய திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. லா. சந்தானம் அவர்களும் சொன்னார்கள். இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. தேநீர் கடைக்காரர்கள் எல்லாம் ஆவின் பால் வாங்கிதான் டீ போட்டார்கள் என்கிற உண்மை இப்போதுதான் எனக்குப் புரிகிறது. ஆனால் இன்று இந்த விலை உயர்வை வைத்துக்கொண்டு அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

வரியை நீக்கினால் விலை குறையும், தேங்காய் எண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், நல்லெண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், அவற்றின் விலைகள் குறையும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு விலை குறையவில்லை என்று நான் நம்புகிறேன். இருந்தபோதிலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக இன்றைக்கு உரையாற்றியவர்கள் தெரிவித்த கருத்துக்கள், பத்திரிகைகளிலே வந்துள்ள கட்டுரைகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது, 50 காசுகள் குறைத்து அதாவது — 11 ரூபாயிலிருந்து 10.50 காசுகள் என்ற அளவில் இனிமேல் பாலின் விலை நிர்ணயிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது இப்போது 11 ரூபாய் என்றிருப்பது 10 ரூபாய் 50 காசுகள் என்று ஆக்கப்படுகிறது. இப்படி ஆக்கினாலே 30 கோடி ரூபாய் இந்த ஆண்டுக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்த 30 கோடி ரூபாய் இழப்பை நிறுவனம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். இதுவரையிலும் கேள்வி நேரத்தின்போது அதிகாரிகள் குறிப்பிட்டதைத்தான் நான்

பேசிக்கொண்டிருந்தேன். எனவே, அரசு இதற்கு மானியம் தரும். எவ்வளவோ மானியம் தருகிறோம். அதோடு இந்த மானியத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசு மானியம் 30 கோடி ரூபாய் ஆவின் நிறுவனத்திற்கு வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, பாலின் விலை 10.50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விலை நிர்ணயம் நாளை முதல் அமலுக்கு வரும். ஏற்கெனவே பணம் கட்டி அட்டைகள் வாங்கியிருந்தால், அடுத்த கார்டுகள் வாங்கும்போது இந்தப் பணம் சரி செய்து கொள்ளப்படும் என்பதையும் சொல்லி அதற்காக ஒரு விமர்சனமும் வேண்டாம் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகின்றேன்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன் கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[1998 ஏப்ரல் 15

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன் கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**(இ) பொது நிறுவனங்கள் குழு - உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவிற்குப் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன் கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1998 ஏப்ரல் 15]

**(ஈ) உரிமைக் குழு — உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன் கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## 6. அறிவிப்பு

**பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் கால அட்டவணை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கு, ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு, பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ்:

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழு | - | Committee on Estimates |
| பொதுக் கணக்குக் குழு | - | Committee on Public Accounts |
| பொது நிறுவனங்கள் குழு | - | Committee on Public Undertakings |
| உரிமைக் குழு | - | Committee on Privileges |

**ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை *1998* ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் *22* ஆம் நாள்**

புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளைச் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1998-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அடுத்து, 1998-99-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்......

## 7. தகவல் கோரல்

### காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தேசிய நதிநீர்க் கொள்கை மூலம் தீர்ப்பது

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Zero Hour முடிந்து, அடுத்த அலுவல்கள் எல்லாம் தாண்டி வந்தாகிவிட்டது நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்; உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை; உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** Zero Hour முடிந்து, அடுத்த நிகழ்ச்சிக்கு வந்தாகி விட்டது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரொம்ப முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 8-ஆம் தேதி கர்நாடகத்தினுடைய முதலமைச்சர்



அவர்கள் நம்முடைய புதிய பாரதப் பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்து விட்டு வந்து, அதற்குப் பின்னால் ஒரு பத்திரிக்கைச் செய்தியிலே சொல்கிறபோது—தேசிய நதிநீர்க் கொள்கை சம்பந்தமாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களிடத்திலே நான் அனுமதி பெற்று இருக்கிறேன்; அதற்கு, தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்—தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்படும் வரையில், காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக எந்த ஒரு முடிவும் எடுக்கக் கூடாது என்று பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களிடத்திலே கர்நாடக முதலமைச்சர் திரு. ஜே. எச் பாட்டீல் வலியுறுத்தியுள்ளதாக சொல்லி இருக்கின்றார். அதோடு மட்டுமல்லாமல் காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையிலே உள்ள பிரச்சினைகளை டில்லி தீர்க்க முடியாது; இரு மாநிலங்களும் தங்களுக்கு இடையிலே பேசித் தீர்வு கொள்ளவேண்டும். இறுதித் தீர்வு ஏற்படும் முன்னால் இந்தப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க சம்பந்தப்பட்டு இருக்கிற மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தை மத்திய அரசு உடனடியாகக் கூட்ட வேண்டும். தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்படும் என்று பாரதீய ஜனதா கட்சி கூட்டணி அரசு, தேசிய வரைவுத் திட்டத்தில் கூறியுள்ளதைப் போன்று, அதனுடைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்ததாகக் கூறப்பட்டிருப்பது, காவிரி நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பை, அரசிதழிலே வெளியிடக்கூடாது என்றும் இது குறித்துத் தமிழகம் வற்புறுத்துவதை கர்நாடகம் ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். நடுவர் மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பாக இருந்தாலும்கூட, கணக்கிலே எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அவரிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்திலே, நம்முடைய பாரதப் பிரதமரைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார்கள். தேசிய நதிநீர்த் திட்டம் என்பது வேறு, காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை என்பது வேறு. ஆக, உடனடியாக அந்தப் பிரச்சினைகளுக்கு இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னால், இன்றைய தினத்திலே கர்நாடக அரசு தொடர்ந்து இதிலே முரண்பட்ட கருத்துக்களைச் சொல்லி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால், கர்நாடக அரசோடு ஐந்து தடவை பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகாண முடியாத சூழ்நிலையில் மீண்டும் இன்றைய தினத்திலே நடுவர் மன்றத் தீர்ப்பு

சரியென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர்கூட, இந்தத் தேசிய நதிநீர்த் திட்டம் மூலமாகத் தீர்வுகாண வேண்டுமென்று, தமிழகத்தினுடைய மக்களுக்குப் பாதகமான கருத்துக்களைச் சொல்லி, வரைவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிற செய்திகளை நம்மால் காண முடிகிறது. ஆக, மத்திய அரசு காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறதா; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடத்திலே வலியுறுத்தினார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், இதுபற்றி இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கை தொடர்பாகப் பொது விவாதம் நடைபெற்று, அப்போது நான் உரை நிகழ்த்தியபோதும், ஆளுநர் உரை தொடர்பாக நான் உரை நிகழ்த்தியபோதும், இந்தப் பிரச்சினை பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றேன்.

இந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும், காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை; இதை மிகத் தெளிவாகப் பலமுறை, நாம் விளக்கியிருக்கின்றோம். உச்சநீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது. இடையிலே உச்சநீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக முதலமைச்சரோடு நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4, 5 தடவை பேசிப் பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தால், அதைப் பற்றி உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டு விட்டோம். பிறகு உச்சநீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்த கருத்து மாநில அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா



அல்லவா என்பதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று எல்லா மாநிலங்களையும், குறிப்பாக, தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின்மீது தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பி இருக்கிறது. அதைப் போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியுள்ளது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பி வைத்து இருக்கின்றது. கர்நாடகம் மாத்திரம், மத்திய அரசு—ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு—எடுத்த நிலைக்கு மாறாக வேறொரு நிலையை எடுத்திருக்கிறது. Authority என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த Authority யினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றத் தீர்ப்பை, இடைக்காலத்திற்கு, தமிழகத்திற்கு தரப்படவேண்டிய அளவு தண்ணீர் எவ்வளவு என்பதை அறிந்து, அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் தருவதைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அந்த Authority யினுடைய பணியாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசு தந்துள்ள திட்டமாகும். அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத கர்நாடக அரசு Authority என்று இருக்கக்கூடாது, Committee என்று இருந்தால் போதுமானது என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்துக்கள் இருக்கின்றன. இதைத்தான் வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றோம்.

முற்பகல் *11-05*

இப்போது நான் பிரதமரை டெல்லியிலே சந்தித்தபோதுகூட அவரிடத்திலே கொடுக்கப்பட்ட, தமிழகத்தினுடைய நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கிய கோரிக்கையாகக் காவிரிப் பங்கீடு பற்றிய கோரிக்கையையும் தந்து, அவரிடத்திலே விவாதித்து இருக்கின்றேன். இதிலே ஐக்கிய முன்னணி அரசு—மத்திய அரசு—எடுத்த அதே நிலையைத்தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயிகளுக்குப் பேராபத்தாக முடியும் என்பதை அவரிடத்திலே வலியுறுத்தி எழுதியும் கொடுத்திருக்கிறேன்; நேரிலும் அவரிடத்திலே பேசிவிட்டு வந்திருக்கின்றேன்.

அடுத்து, கர்நாடக முதல்வர் தந்துள்ள அறிக்கையைப் பற்றி எல்லாம் இப்போது நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஏன் என்றால் அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இனியும் பேச்சு வார்த்தை என்பதற்கு இடம் இல்லை. ஆனால், இன்றைய பிரதமர் அவர்கள், மீண்டும் பேச்சுவார்த்தை என்று வலியுறுத்துவார்களேயானால் அவரிடத்திலே, எத்தனை முறை பேச்சுவார்த்தை நடைபெற்று இருக்கிறது,

எவ்வளவு தோல்விகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றபிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய முடிவைத்தான், ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைத்தான், தமிழக அரசின், சார்பாக தமிழ் மக்களின் சார்பாக, எல்லாக் கட்சிகளின் சார்பாக நான் எடுத்து வைக்க இருக்கின்றேன் என்பதை எடுத்துக்கூறி, இதற்கு இடையிலே நாம் இதுபோன்ற விவாதங்களை அடிக்கடி இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, சூடானதாக, உணர்ச்சிவயப்பட்டதாக ஆக்குவதன் மூலம், இரு மாநில மக்களிடையே வேறுபாடான கருத்துக்களையோ இரு மாநில மக்களுடைய நல்லெண்ணங்களுக்கு ஊறுதேடுகிற நிலைகளையோ உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான், சட்டப்படி காரியங்கள் நடைபெற வேண்டும் என்ற அந்த நோக்கத்திலே இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. அதிலே இம்மியும் பிறழாமல் இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, காவிரிப் பிரச்சினைக்கு நல்ல முடிவைக் காண்பதற்கு இன்றுள்ள மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே நான் மத்திய அரசுக்கு வைத்து, இந்த அளவில் அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் என்னிடம் ஒரு அறிவிப்பாகக் கூடத் தரவில்லை. ஆனால் ஒரு செய்தித்தாளின் நகலைக் காட்டினார்கள். இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத் தயாராக இருந்த காரணத்தாலும், இதை இங்கே எழுப்புவதற்கு அவர்களுக்கு அனுமதி அளித்தேன். அதை முன்னுதாரணமாக, எதிர்காலத்திலே மற்ற உறுப்பினர்கள் பின்பற்றக்கூடாது என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 17—கல்வி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1998-99ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 17-கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 3601,07,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 349, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேலூர் அடுத்த சதுவாச்சாரி அரசு மேல் நிலைப் பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகின்றேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 95, திரு. கே. சுப்பராயன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 122, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சென்னைப் பல்கலைக்கழகத்தில் இராமசாமி படையாச்சியார் பெயரில் ஓர் அறக்கட்டளை உடனடியாகத் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகின்றேன்:

''கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 360, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தொழில் கல்வி அனைத்திலும் கிராமப்புற மாணவர்களுக்கு

15 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை உண்மையான கிராமப்புற மாணவர்களுக்குப் பயன்படும்படி தேர்வு நடைமுறையை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து`` விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 400, திரு. பி. ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 421, திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ``கலைக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் வயது 17-க்கு மேல் 21 வயதுக்குள் என இருப்பதைக் கைவிட வேண்டியதன் அவசியம் குறித்து`` விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 68, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 129, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருது வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 797, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ``பள்ளிகளில் காலியாக உள்ள தொழில் ஆசிரியர் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து''



விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 583, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ``மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்ற பட்டப் படிப்புகளுக்கு மாவட்டங்களிலுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் மாவட்ட வாரியாக இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

``கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 334, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியர்கள் பணியிடங்கள் நீண்ட நாட்களாகக் காலியாக உள்ளதாலும், இடைநிலை ஆசிரியர் ஒருவர் ஓய்வு பெற்றதினால் ஏற்பட்ட காலிப் பணியிடம் ஒன்றையும் உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 454, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 809, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 534, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 591, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 657, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலும் மாணவர்கள் அனைவருக்கும் பெஞ்ச், டேபிள் வேண்டுதல் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 713, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியிலுள்ள தாரமங்கலம் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரக்கல்லூர் 14 வார் என்னுமிடத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி புதியதாக ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 781, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 786, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மன்னார்குடி தொகுதி, குறிச்சிமூலையில் தொடக்கப்பள்ளி ஒன்று உடனடியாகத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 1291, திரு. டி. சுதர்சனம்.



**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி நகரத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 872. திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Deputy Speaker Sir, to discuss 'the need to appoint Tamil Teachers in Telugu School to teach the State Language in addition to their mother tongue Telugu from III or IV Stds'. I move—

"That the allocation of Rs. 3601,07,70,000/- under Demand No.17-Education be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 505, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி, வீரமாங்குடியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 77, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய வடகம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2401, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, கைலாசபதி இந்து நடுநிலைப் பள்ளியில் ஆதிதிராவிட மாணவர் படிக்கும் வகையில் அரசே நேரடியாக நிர்வாகத்தை எடுத்து நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3601,07,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 596, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்த ஆண்டு பள்ளிக் கல்வி, உயர்க் கல்வி @ என்ற இரண்டு தலைப்புகளில் தனித்தனிக் கொள்கை விளக்கக் குறிப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு குறிப்பேடுகளும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய

@ 435 முதல் 571 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த விவாதத்திலே பங்குகொண்டு 12 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் நேரத்தைக் கருத்தில்கொண்டு பேச வேண்டுமென்று கேட்டு, விவாதத்தைத் தொடங்கி வைக்க திரு. வி.கே. லட்சுமணன் அவர்களை அழைக்கின்றேன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த மாமன்றத்திலே இன்று மிகப் பொருத்தமான ஒரு குறளைச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று தாங்கள் இங்கே சொன்னது மிகப் பொருத்தமாகும். இன்றைக்கு மனிதவள மேம்பாட்டுத் துறையிலே கல்வி என்பது ஒரு அங்கமாக இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, இந்த ஆண்டு கல்விக்காக சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.631.95 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட மொத்த வருவாயில் அது 0.65 சதவீதம் குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1986-ஆம் ஆண்டு மைய அரசினால் வெளியிடப்பட்ட புதிய கல்விக் கொள்கையிலே கல்விக்காக செலவழிக்கிற பணத்தைச் செலவுக் கணக்கிலே எழுதாது, அதை "Investment" என்று முதலீடு என்று சொல்லவேண்டுமென்று அந்தக் குறிப்பு தெரிவித்திருக்கிறது. ஆக இங்கே அந்தத் தொகை 0.65 சதவீதம் குறைவாக இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல குறிப்பாக பள்ளிக் கல்வியிலே இந்த ஆண்டு தனியாக ரூ.3136 கோடி ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட 1997-98ஆம் ஆண்டினுடைய இதே துறைக்குள்ள மொத்த வருவாயை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது அது 0.22 சதவீதம் குறைவாகத்தான் இருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பேட்டிலே பல இடங்களிலே கூறுவது கூறல் என்ற முறையிலே

சில செய்திகள் சென்ற ஆண்டு சொன்ன செய்திகள், அதே சொற்களை அப்படியே பயன்படுத்தியிருந்தாலும் கூட, இந்தக் கொள்கைக் குறிப்பிலே தொடக்கப் பள்ளிகளைப் புதியதாகத் துவக்கவும், ஏற்கெனவே உள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றவும் அரசு பெரு நிதி ஒதுக்க முன்வந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், குடிநீர், கழிப்பறை, எழுதுபொருள் ஆகியவற்றுக்கு எல்லாம் மிகுந்த கவனத்தோடு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிகத் தேவையான ஒன்றாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக மானியக் குழு எல்லா மாநிலங்களுக்கும் அறிவித்திருந்தாலும் கூட, தமிழ்நாட்டில் மட்டும்தான் 'வொகேஷனல் எஜுகேஷன்'- தொழிற்கல்வி என்பது மிகச் சிறிய அளவிலே கருதப்பட்டு, அது பள்ளிகளில் மட்டுமல்ல, மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமல்ல, மைய அரசினுடைய உதவியோடு பட்டப் படிப்பிலும் கூட தொடரவேண்டுமென்று அரசு முடிவு செய்திருப்பதை நான் வரவேற்கின்ற அதே நேரத்திலே இந்தத் துறைக்காக-வொகேஷனல் எஜுகேஷனுக்காக, ஒரு 'வெர்டிகல் மொபிலிட்டி' இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இயக்குநரகம் இல்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

அதுமட்டுமல்லாமல், இந்தத் துறையிலே 16 சதவிகிதம் மாணவர்கள் இன்றைக்கு படிக்கிறார்கள் என்பது இந்தியாவிலேயே மிக அதிகமான ஒரு எண்ணிக்கை என்பதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த மனையியல் கல்வி என்பது மாணவிகளுக்கு மட்டும் உரியது. அது கல்லூரியிலே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், இந்த Vocational Education-லே தொழிற் கல்வியிலே, தமிழ்நாட்டிலே 131 மாணவிகள் மனையியல் படிக்கிறார்கள் என்பதை நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். பொதுவாகக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, இரண்டு மாவட்டங்கள் முன்னணியிலே இருக்கின்றன. ஒன்று என் அருகாமையிலே இருக்கிற திரு. சொக்கர் அவர்களுடைய மாவட்டமான விருதுநகர் மாவட்டம். இன்னொன்று கோவை மாவட்டம். உயர்க் கல்வியிலே குறிப்பாக 1996-97ஆம் ஆண்டிலே



விருதுநகர் மாவட்டமானது உயர்நிலைப் பள்ளியிலே 87.3 சதவிகிதமும், மேல்நிலைப் பள்ளியிலே 89.39 சதவிகிதமும் மாணவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேபோல கோவையிலே உயர்நிலைப் பள்ளியிலே 79.24 சதவிகிதமும், மேல்நிலைப் பள்ளியிலே 89.2 சதவிகிதமும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மிகுந்த பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டிலே நுழைவுத் தேர்வு எழுதுகின்றபோது, நாம் பறக்கும் படையை வைத்து யாரும் காப்பி அடிக்காமல் பார்க்க வேண்டிய ஒரு நிலை இன்றைக்கு இருப்பதைப் பார்க்கிறோம். மிக ஆச்சரியமாக இருக்கிறது. மாணவர்கள், பொறியியல் படிக்க, மருத்துவம் படிக்க மிகுந்த செலவாகும் என்ற கருத்திலே எப்படியாவது நுழைவுத் தேர்விலே அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இந்தக் காப்பி அடிக்கும் முறையைக் கையாளுவதை நாம் கண்டிப்பாக தடுத்தாக வேண்டும். இந்தத் தேர்விலே கண்காணிப்பாளர், Invigilator அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை, கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் முயன்றால்தான் இந்த நிலையைத் தடுக்க முடியும். அதுமட்டுமல்ல, இந்தப் பறக்கும் படையானது இப்படிப்பட்ட தவறு செய்யும் மாணவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குரிய தண்டனையைக் கொடுத்தால்தான், இந்த நிலை இங்கே இனிமேல் தொடராமல் இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பள்ளிக் கல்வியிலே பல காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆசிரியர் பதவிகள் அங்கே நிரப்பப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, இசை ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோருடைய பணியிடங்கள் மிகப் பெரிய அளவிலே தமிழகம் முழுவதும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. நீண்ட நாட்களாக இந்த மன்றத்தில் நாங்கள் சொல்கின்ற கோரிக்கை, இந்தத் தனியார் பயிற்சி பள்ளியிலே பயின்ற மாணவர்களுடைய நிலை. நான் இன்றைக்கு என்னுடைய யோசனையாக சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் தனியார் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியிலே பயின்ற மாணவர்களுக்கு அரசு நடத்துகின்ற DIET-லேயாவது ஆண்டுக்கு 50 சதவிகிதம் சேர்த்து அவர்களுக்கு 2 ஆண்டுகள் படிப்பதற்கு வாய்ப்புக்களைக் கொடுத்தால், அவர்கள் தங்களுடைய நிலைகளை உயர்த்திக்கொள்ள வாய்ப்பளித்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு ஆரம்பக் கல்வியை நாம் இலவசக் கல்வியாக ஆக்கியிருந்தாலும்கூட, அதைக் கட்டாயக் கல்வியாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்குவதற்காக எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பேட்டிலே கோவையிலே ஒரு செயற்கைத் தடகளம் நிறுவுவதற்கு 20 லட்சம் ரூபாய் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதேபோல, நூலகங்கள். நூலகங்களைப் பொறுத்தமட்டிலே பல இடங்களிலே புத்தகங்கள் பொருள்வாரியாகவும் இல்லை, எழுதிய ஆக்கியோன் வாரியாகவும் இல்லை, அல்லது புத்தகப் பெயர் வாரியாகவும் அவர்களால் அடுக்கி வைக்கப்படவில்லை. நிறைய நூலகங்களிலே, குறிப்பாக கன்னிமாரா போன்ற நூலகங்களிலே கணிப்பொறிகள் இருக்கின்றன. ஆனால் அந்தக் கணிப்பொறிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் நம்முடைய பேரவையில் இருக்கின்ற கணிப்பொறிகள் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

பள்ளிகளிலே சமய சார்புள்ள கருத்துக்களைச் சொல்லக்கூடாது என்பதில் அரசு உறுதியாக இருந்தாலும்கூட நீதிநெறிகளை நாம் இன்றைக்குக் கண்டிப்பாகச் சொல்லித்தான் ஆக வேண்டும். அப்படி ஒருவேளை சொல்லிக்கொடுத்திருந்தோம் என்று சொன்னால் நாவரசு கூட கொலை செய்யப்பட்டிருக்க மாட்டான் என்று நான் கருதுகிறேன். கடந்த பல ஆண்டுகளாக பள்ளியிலே விடுபட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை-ட்ராப்-அவுட்ஸ் பெர்சன்டேஜ் பார்த்தால் குறிப்பாக நடுநிலைப் பள்ளியிலே 30% ஆக இருந்தாலும்கூட அது மிகவும் அதிகமான எண்ணிக்கை என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாகச் சொன்னால் ஆரம்பப் பள்ளியிலே 100 பேர்கள் சேர்ந்தால் மேல்நிலைப் பள்ளி வருகின்றபோது 20 பேர்கள்தான் இருப்பார்கள். 80 பேர்கள் அங்கே விடுபட்டு போகிறார்கள். இந்த நிலை கண்டிப்பாக மாற்றப்பட்டாக வேண்டும். கோவையிலே ஒரு கோளரங்கு நிறுவுவதற்கு அரசு முயன்று வருகிறது. அதை விரைவாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் உள்ள நூலகத்திற்கு கணிப்பொறியும் MALIBNET-ம் கொடுக்க அரசு முன்வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மழலையர் பள்ளியை முறைப்படுத்துவதற்காக



சிட்டிபாபு அவர்கள் தலைமையிலே ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு என்ன அறிக்கை கொடுத்திருக்கிறது என்பதை அரசு வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே 50 இடைநிலை ஆசிரியர்களுக்கு 26-9-1997 அன்று தேர்வு நடந்தது. அதிலே 10 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மீதம் உள்ள ஆசிரியர்கள் கதி என்ன எனபதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே வழக்கமாக நான் சொல்கிற ஒரே கருத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அலுவலர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது என்பதுதான். மற்ற மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மிகக் கணிசமாக குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை பல்வேறு கமிட்டிகள் போட்டு நாம் ஆய்வு செய்திருந்தாலும்கூட இதனுடைய நிலை நமக்குத் தெளிவாக இன்னும் புலப்படவில்லை. எனக்குத் தெரிந்த வரையிலே நம்முடைய மாநிலத்திலே முதுகலைப் பாட நிலையை நாம் பல்கலைக்கழகத்தில் சொல்லிக்கொடுப்பதில்லை. பெரிய அளவிலே, 85% மாணவர்கள் முதுகலைப் பாடங்களை கல்லூரியில்தான் படிக்கிறார்கள். ஆனால் அந்தக் கல்லூரிகளிலே பேராசிரியர்களோ, ரீடர்களோ இல்லை. அப்படி இல்லாததன் காரணமாக அவர்கள் முழுமையாகக் கல்வியைப் பெறமுடியவில்லை. அதன் விளைவாக அந்தப் பல்கலைக்கழகத்திலே படிக்கிற மாணவர்களுக்கு மைய பல்கலைக்கழகத்தோடு போட்டியிடுகின்ற அளவுக்குத் திறமை இல்லாமல் போய்விடுகிறது. இன்றைக்கு வெற்றி பெற்ற மாணவர்கள் எங்கே படித்தார்கள் என்று பார்த்தால் ஒன்று பீஹாரிலே அல்லது யு.பி.யிலே படித்த மாணவர்களாக இருக்கிறார்கள். அல்லது டெல்லி பல்கலைக் கழகத்தில் படித்த மாணவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே இன்றைக்கு ஒரு மைய பல்கலைக் கழகம் இங்கு இல்லை. அதன் காரணமாக நம்முடைய மாநிலத்தினுடைய தரம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற கொள்கைக் குறிப்பிலே Information Technology of Tamil Nadu என்று சொல்லப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தை உருவாக்குவதாகச் சொஸைட்டி சட்டத்தின்கீழ் உருவாக்கி ஒரு மானியம் பெறாத பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்ற குறிப்பும் அங்கே சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு அதற்குப் பெயர் மாற்றம்

செய்து 'TANITEC' என்று அது அழைக்கப்பட்டு அது கம்பெனி சட்டத்தின்கீழ் விதி 25-ன் கீழ் பதிவு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் கம்பெனி சட்டத்தின்கீழ் அப்படி நிறுவனத்தைப் பதிவு செய்தால் அதை பிற்காலத்தில் பல்கலைக்கழகமாக மாற்ற முடியுமா என்பதுதான். அதை நீங்கள் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சிறந்த தொழில் நுணுக்கங்கள் உள்ள நிறுவனங்களை அமைக்க வேண்டுமானால் அத்தனையும் பல்கலைக்கழக அமைப்பு முறையின்படி அமையவேண்டுமென்று எதிர்பார்க்கவே கூடாது. ஐ.ஐ.டி. போன்ற எத்தனையோ கல்வி நிறுவனங்கள் உயர்தரமான நுணுக்கமான கல்வியை வழங்கக்கூடிய அதுவும் Information Technology போன்ற இந்தக் காலத்தினுடைய தேவையை நிறைவு செய்யக்கூடிய அமைப்புகள் தனி நிறுவனங்களாக அரசினுடைய ஆதரவோடு இயங்குகின்றபோதுதான் முழு அளவிலே செம்மையாகச் செயல்படமுடியும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொசைட்டி சட்டத்திலே அதைப் பதிவு செய்வதற்கும், கம்பெனி சட்டத்திலே அதைப் பதிவு செய்வதற்கும் என்ன வேறுபாடு என்பதைத் தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அது ஒரு பக்கம் இருந்தாலும் கூட, தமிழ்நாட்டில் இன்றைக்கு கல்வி என்பது அதுவும் குறிப்பாக உயர் கல்வி என்பது அரசு கையில் இல்லை. 90 சதவீதம் பொறியியல் கல்லூரிகள் தனியார் வசம் இருக்கின்றன. அதுபோல 80 சதவீதம் கலைக் கல்லூரிகள் தனியார் துறையில் இருக்கின்றன. இந்தக் கல்லூரிகள் எல்லாம், அரசினுடைய பெரிய சுமையை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். 50 சதவீதம் அரசு அனுப்புகிற மாணவர்களுக்கு அவர்கள் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்த முறையில் அந்தக் கல்வி நிறுவனங்களுக்கு அங்கே இருக்கிற பல்கலைக்கழகங்களிலே எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இல்லை. சிண்டிகேட்டிலோ, செனட்டிலோ அந்தப் பல்கலைக்கழகங்களிலோ எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லை. ஆகவே, நம்முடைய பல்கலைக் கழக சட்டங்களைத் திருத்தி நமக்காக கல்லூரிகள் நடத்துகின்ற அந்த



நிறுவனங்களுக்கு நீங்கள் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலே, ஆட்சி மன்றக் குழுவிலே இடம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுக் கல்லூரிகளில் பல ஆண்டு காலமாக, குறிப்பாக பொறியியல் கல்லூரிகளிலே பலபேர் பகுதி நேர விரிவுரையாளர்களாக பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கவேண்டும். அதேபோல் அரசு கல்லூரிகளிலே சுமார் 450 பேர் கெஸ்ட் லெக்சரர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கவேண்டுமேன்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த தனியார் கல்லூரிகளை நாம் வழக்கமாக சுயநிதிக் கல்லூரிகள் என்று அழைக்கிறோம். அரசு இலாக்காவிலே அதை எழுதுகின்றபோது ஒரு பக்கம் அன்-எய்டட் என்றும், ஒரு பக்கம் எய்டட் என்றும் எழுதுகிறார்கள். நான் தங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இந்த சுயநிதி என்ற சொல்லைப் பிரயோகிப்பதை விடுத்து ஒன்று மானியம் பெறும் கல்லூரிகள், இன்னும் ஒன்று மானியம் பெறாத கல்லூரிகள் என்று தான் அதை அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைச் சுற்றியிருக்கின்ற பல்வேறு மாநிலங்களிலே உள்ள பல்கலைக்கழகங்களுக்கு நிறைய நிதி கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் கொடுத்தால் பக்கத்தில் உள்ள மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு பல மடங்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற பல்கலைக்கழகங்களுக்கு நாம் குறைவாக நிதி கொடுப்பதால் அவர்கள் இணைப்புக் கல்லூரிகளிடமிருந்து நிறைய பணத்தைக் கேட்கிறார்கள். இணைப்புக்காக, எண்டவ்மெண்டுக்காக, கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல, அஞ்சல் வழிக் கல்லூரிகளிலே அவர்கள் பெறுகிற பணத்திலே 20 சதவீதத்தை அரசு கேட்கிறது. அவ்வாறு கேட்டால், ஏற்கெனவே அவர்களுக்குப் பணம் இல்லாதபொழுது அரசு இந்த 20 சதவீதம் பணத்தை கேட்பது அவ்வளவு சரியல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரேயொரு நிமிஷம். ஒரே கருத்து, முடித்து விடுகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சயன்ஸ் சிட்டி 2000 என்ற ஒரு நிறுவனத்தை கம்பெனிஸ் ஆக்டின் கீழ் உருவாக்க அரசு முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நேற்றையதினம் பத்திரிகையிலே ஒரு செய்தி. 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றப்பட்டார்கள் என்று ஒரு செய்தி. நீங்கள் கேட்கலாம், கல்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று. நான் அந்தப் பெயர்களை மட்டும் படிக்கிறேன். இது யாரையும் குற்றம் சொல்வதற்காக அல்ல; இவை பத்திரிகையிலே வந்த பெயர்கள்.

1. Mr. Lal Rawna Seilo
2. Mr. Ravindra Kumar Sharma
3. Mr. Ashok Ranjan Mohanty
4. Mr. P.W.C. Davidar
5. Mr. Sandeep Saxena
6. Mr. Harmander Singh
7. Mr. Shiv Das Meena
8. Mr. Dayanand Kotaria
9. Mr. Ruolkhumlien Buhril
10. Mr. Otam Dai
11. Mr. Om Kumar

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிர்வாக வசதிக்காக மாற்றினார்கள்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 36 பேர் மாற்றப்பட்ட ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள்; மாற்றப்படாதவர்கள் இதேபோன்று பெயர்களே புரியாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

எனக்குள்ள வேதனையெல்லாம், அண்மையிலே முதல்வரவர்கள் என்னை வருவாய்த் துறை கமிஷனிலே ஒரு துணைத் தலைவராகப் போட்டு பாரத நாடு முழுக்கச் சுற்றச் சொன்னார்கள். நான் வேறு மாநிலத்திற்கெல்லாம் போனேன். ஒரு மாநிலத்திலேகூட ஒரு தமிழனை ஐ.ஏ.எஸ். ஆபீசராகப் பார்க்க முடியவில்லை.

அதுமட்டுமல்ல, டெல்லியிலே உத்யோக் பவனிலே போனால், முன் காலத்திலே காரிடாரிலே போனோம் என்று சொன்னால், நிறையத் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் இருக்கும். ஆனால் இப்பொழுது ஒரு பெயர்ப் பலகையும் இல்லை. (குறுக்கீடு) தமிழ்ப் பெயர்



இருக்கும்; ஆனால் இப்பொழுது தமிழ்ப் பெயர் இல்லை. ஆகவே, அந்த நிலையெல்லாம் மாற வேண்டும். அதற்குத் தகுந்தபடி நம்முடைய கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதவி பெறாத, மானியம் பெறாத கல்லூரிகளிலே நீங்கள் சில முக்கியமான வகுப்புகளைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், பல்கலைக்கழகம் அதை மாலை நேர வகுப்பாக அறிவிக்கிறது. ஈவினிங் காலேஜ் என்று சொல்கிறது. நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், ஈவினிங் காலேஜ் என்று சொன்னால், யூஜிசி.-யிலே டெவலப்மெண்ட் கிராண்ட் கொடுக்க மாட்டார்கள். நீங்கள் பல்கலைக்கழகத்திற்குத் தக்க அறிவுரையை சொல்லி, மானியம் பெறாத கல்லூரிகளிலே இதுபோன்ற வகுப்புகளைத் தொடங்குகின்ற பொழுது, அதை டே காலேஜ் ஆகவே கருத வேண்டும் என்று சொல்லி அவர்கள் இணைப்பு கொடுக்கச் சொல்லி, அதன் மூலமாக மானியக் குழுவிலேயிருந்து உதவி பெறுவதற்கு நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெகுநேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். இதோடு உரையை முடித்துவிடுங்கள். அடுத்து திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கொள்கைக் குறிப்பைப் பார்க்கின்றபொழுது, பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், தேசிய அளவில் இரண்டாவது இடத்தையும், பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில் இந்தியாவில் மூன்றாவது இடத்தையும் நம்முடைய தமிழகம் பெற்றிருப்பது பாராட்டுதற்குரியது.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ர.ா. சேதுநாதன்) தலைமை*

அதைப்போல, பெண்கள் கல்லூரியைப் பொறுத்தவரையில், "ஈ.வெ.ரா. நாகம்மையார் இலவசக் கல்வித் திட்டத்தின்" மூலமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 24,000-க்குக் கீழ் வருமானமுள்ள பெண்களுக்குப் பட்டப் படிப்பு இலவசம் என்று அரசு அறிவித்து, சென்ற ஆண்டு 4,000 மாணவிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

ராகிங் என்று சொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த, "கேலி வதைத் தடுப்புச் சட்டத்தை" இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக அரசுதான் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 700 குக்கிராமங்களில் தொடக்கப் பள்ளிகள் இல்லை; இந்த ஆண்டு 300-ம் அடுத்த ஆண்டு 400-ம் ஆக அடுத்த ஆண்டுக்குள் ஆரம்பப் பள்ளிகளே இல்லாத குக்கிராமங்கள் இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு அரசு ஒரு நிலையை உருவாக்குமென்று அறிவித்திருப்பதற்காக நான் பாராட்டுகின்றேன்.

முற்பகல் 11.35

அதைப்போல, இலவசப் பாடப் புத்தகங்கள், முன்பு மதிய உணவு சாப்பிடக்கூடியவர்களுக்கு மட்டும் இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் தரப்படும் என்று அறிவித்திருப்பதற்காகவும், என்னுடைய பாராட்டுதலையும் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நெல்லையைப் பொறுத்தவரையில் 1990 ஆம் ஆண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்தார், பேராசிரியர் அவர்கள் கல்வியமைச்சராக இருந்தார், நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக அந்த முறை இருந்தேன். பிறகு, ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு, அந்தப் பல்கலைக்கழகத்திற்கு, பிறகு வந்த அரசாங்கம் அதிகப்படியான நிதியுதவி தரவில்லை என்பதை நான் மெத்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீண்டும் முதலமைச்சராக மாண்புமிகு கலைஞர் அவர்கள் வந்திருக்கிறார்கள். கல்வியமைச்சராக பேராசிரியர் இருக்கிறார், அதே தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே, நான் வலியுறுத்த விரும்புவதெல்லாம், அதிகப்படியான பணத்தை இந்த வளர்ந்து வருகின்ற பல்கலைக்கழகத்திற்கு, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கிட வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, வளர்ச்சி பெறாத பல்கலைக்கழகமாக அது இருக்கிறது. ஒரு நோஞ்சான் குழந்தையாக



இருக்கின்ற அந்தப் பல்கலைக்கழகத்திற்கு, அண்ணா ஒரு திரைப்படத்திலே எழுதியதைப்போல, வைட்டமின் 'ப' மாத்திரைகளை அதிகமாக அரசாங்கம் தர வேண்டுமென்று நான் மிக அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

துணை வேந்தரைப் பொறுத்தவரையிலே, இருக்கின்ற துணை வேந்தர் விரைவில் ஓய்வுபெறவிருக்கிறார். புதிய துணை வேந்தரை நியமிக்க இருக்கின்றீர்கள். பொதுவாக, துணை வேந்தரை நியமிக்கின்றபோது, இது வளர்ந்து வருகின்ற பல்கலைக்கழகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களை, அதுவும் குறிப்பாக மதுரைக்குத் தெற்கே, தென் மாவட்டங்களிலே இருப்பவர்களை நியமித்தால், அந்தப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து, அதன் வளர்ச்சியிலே முழு மூச்சோடு அவர்கள் பாடுபடுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். பல்கலைக்கழகங்களில், அதுவும் குறிப்பாக "மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில்", கல்லூரி நிருவாகத்திலே, இருப்பவர்களுக்கு ஆட்சிக் குழுவில் சிண்டிகேட்டில் இடமே கிடையாது. நானும் ஒரு கல்லூரி தாளாளராக இருக்கிறேன். அவரும் ஒரு கல்லூரியினுடைய தாளாளராக இருக்கிறார். பலமுறை நாங்கள் போராடிப் பார்த்திருக்கிறோம். ஐந்து இடங்கள் சிண்டிகேட்டில் இருக்கின்றன. அதில் இரண்டு கல்லூரி முதல்வர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பேராசிரியர்களுக்கு, ஒன்று பொதுத் தொகுதி. அதிலே யாரும் வர முடியாது.

ஆகவே, நான் அரசை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்கு எத்தனையோ கல்லூரிகளை இலட்சக்கணக்கில் பணத்தைப் போட்டு நாங்கள் நடத்துகிறோம். எங்களுக்கு அந்தப் பல்கலைக்கழகத்தில, அதனுடைய நிருவாகத்தில் பங்கு பெறுவதற்கு உரிமையில்லையா என்பதுதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எங்களுடைய பல்கலைக்கழகத்தில் 42 கல்லூரிகள் இருக்கின்றன. 41 கல்லூரிகள் தனியார் கல்லூரிகள். அதிலே ஒரு அரசுக் கல்லூரி, "இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி", நெல்லையில் உள்ளது. மீதி 41 கல்லூரிகள் தனியார் கல்லூரிகள். அதுபோக, 10 சுயநிதிக் கல்லூரிகள். அவர் சொன்னதுபோல், மானியம் பெறாதக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, கிட்டத்தட்ட 51 கல்லூரிகள்

நாங்கள் இருக்கின்றபோது, இந்த நிருவாகத்தில், அந்தப் பல்கலைக் கழகத்தில், ஆட்சிக் குழுவிலே நாங்கள் இடம்பெறவில்லையென்றால் எப்படி அந்த நிருவாகம் செம்மையாக நடக்கும் என்பதை நான் கல்வி அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, சட்டத்தை நிச்சயமாகத் திருத்தியாக வேண்டும் என்று அவர் முன்மொழிந்ததை நான் வழிமொழிகிறேன்.

அதோடு இப்போது அந்தப் பல்கலைக்கழகத்தில் விரைவில் ஆட்சிக் குழு நியமனம் செய்ய வேண்டியிருக்கிறது. தற்காலிகமாக, அந்தச் சட்டத் திருத்தம் வரும் வரையாவது கல்லூரி நிருவாகத்தில் இருக்கின்றவர்கள் ஒன்றிரண்டு பேரை ஆட்சிக் குழுவிலே இடம் பெறுகின்ற அளவில், ஆளுநர் நியமிக்க அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எங்களுடையப் பல்கலைக்கழகம் தென் மாவட்டத்தில திருநெல்வேலியில் இருக்கிறது. அதிலே இருக்கின்ற சிண்டிகேட் உறுப்பினர் ஒருவர் ஆந்திராவிலிருந்து வந்திருக்கிறார். இதைவிடக் கேவலம் அந்தப் பகுதி மக்களுக்கு வேறு என்ன இருக்க முடியும் என்பதை நான் மெத்தப் பணிவோடு கேட்க விரும்புகிறேன். ஆகவே, அதையும் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னொன்று மாணவர்கள். அவர்களுக்கு பல்கலைக் கழக நிருவாகத்திலே பங்கு தந்தால் என்ன கெட்டுவிடப் போகிறது? பி.எஸ்சி. படித்த மாணவர்களுக்கு வேண்டாம், பட்டம் பெற்று எம்.எஸ்சி. படிக்கின்றவர்கள், எம்.ஏ. படிக்கின்றவர்கள், எம்.ஃபில். படிக்கின்றவர்கள், அப்படி மேல்கல்வி படிக்கின்றவர்கள், முதுகலை பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்கள் ஆட்சிக் குழுவிலே இடம் பெறுகின்ற அளவில், சிண்டிகேட்டில் இடம் பெறுகின்ற அளவில் ஒன்றிரண்டு பிரதிநிதித்துவம் அவர்களுக்கும் அதிலே தந்தால் நிச்சயமாக அவர்கள் பொறுப்போடு, அந்தப் பலகலைக்கழகம் நடத்துகின்ற பாடத் திட்டங்கள் மற்றவற்றில் அவர்களுடை கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாணவர்களுடைய பிரதிநிதிகளும் அந்தச் சிண்டிகேட்டில் இடம் பெறுகின்ற வகையில், சட்டத் திருத்தத்தை, இந்தியாவிலேயே முதன்முதலாக இத்தகைய சாதனையை தமிழகம்தான் செய்தது என்ற பெருமையைத் தருகின்ற விதத்தில் செய்ய வேண்டுமென்று நான் மாணவர்கள் சார்பாக இந்தநேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னொன்று. மானியம் பெறாத கல்லூரிகள். fees structure இப்போது அவர்களுக்கு இருக்கின்ற அந்தக் கட்டண விகிதத்தை மாற்றியமைப்பதற்காகப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் திரு. ஆளுடையப்பிள்ளை அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே பொறியியல் கல்லூரிகளுக்காக ஒரு குழு அமைத்து, அவர் ஒரு அறிக்கையைத் தந்து அது இப்போது நடைமுறையிலே இருக்கிறது. இன்று ஆர்ட்ஸ் கல்லூரிகளுக்கு திரு. ஆளுடையப்பிள்ளை அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைத்திருக்கிறீர்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இந்தக் கல்வி நிலையங்களை மூன்று பகுதிகளாகப பிரித்து, சென்னைக்கு 'ஏ' என்றும், மற்றும் மதுரை, கோவை, திருச்சி போன்றவைகளை 'பி' என்றும் வைத்துக்கொண்டு, மற்ற நகரங்களை 'சி' என்ற பிரிவிலே வைத்துக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாடத் திட்டத்திறகும் ஒரு கட்டணம் என்று நிர்ணயித்தால் அது படிக்கின்ற மாணவர்களுக்கு வாய்ப்பாக இருக்கும். அதேநேரத்தில் சுயநிதிக் கல்லூரிகளில், அரசு உதவி பெறாத, மானியம் பெறாதக் கல்லூரிகளுக்கு University Grants Commission சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுவது நியாயமல்ல. ஒரு தொகுப்பூதியமாக 'ஏ' கிரேடு சிட்டிக்கு இவ்வளவு தாருங்கள்; 'பி' கிரேடு சிட்டிக்கு இவ்வளவு தாருங்கள்: 'சி' கிரேடு சிட்டிக்கு இவ்வளவு தாருங்கள், என்று, தொகுப்பூதியமாக இவ்வளவு என்று நிர்ணயித்தால் அந்தக் கல்லூரிகள் தொடர்ந்து இயங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் நான் இந்தநேரத்திலே மெத்தப் பணிவோடுத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன.

*முற்பகல் 11-40*

இன்னொன்று, இங்கே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு கருத்தை விளக்கமாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது, நிதிநிலை இல்லாத காரணத்தால் இன்றைக்கு மானியம் பெறாத தனியார் கல்லூரிகளுக்கு நாங்கள் தாராளமாக அனுமதி தருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால், முன்பு இருந்த அரசாங்கம் தாராளமாக தரவில்லை. வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு, பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டு தரவேண்டியதைத் தந்தார்கள். ஆனால் இப்போது இருக்கிற அரசாங்கம் ஏராளமாகச் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி தந்திருக்கிறது. அதற்காக வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன். ஆனால், ஒன்று. முந்தைய அரசாங்கம்

இப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளை, மானியம் பெறாத கல்லூரி நிர்வாகிகளை எல்லாம் ஏதோ திருடர்களைப் போல் பார்த்தார்கள் நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே நேச உணர்வோடு, மிகப் பாசத்தோடுப் பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, கல்வித் துறை அதிகாரிகளும், பல்கலைக்கழகங்களும் இன்றைக்கு மானியம் பெறாத கல்லூரி நிர்வாகிகளை ஏதோ தீண்டத்தகாதவர்களைப் போல் Untouchable போல் அவர்கள் கருதுகிறார்கள். அதற்கு நீங்கள் ஒரு தகுந்த அறிவுரையை வழங்க வேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அன்றைக்கு ஒரு தனி மனிதர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தோன்றியிருக்காவிட்டால், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்றைக்கு சிதம்பரத்திலே உருவாகியிருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு அழகப்பச் செட்டியார் என்ற தனி மனிதன் தோன்றியிருக்காவிட்டால் அழகப்பா அவர்களுடைய பெயரிலே அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடியிலே இன்றைக்கு உருவாகியிருக்கமுடியுமா? மதுரையிலே தாயுமானவர் சுந்தரம்பிள்ளை, திரவியம் பிள்ளை என்ற சகோதரர்கள் - நான் செயலாளராக இருக்கின்ற அந்த மாவிதா இந்து கல்லூரிக்கு அன்றைக்கு இரண்டு இலட்சம் ரூபாய் தராமல் இருந்திருந்தால் அந்தக் கல்லூரி இன்றைக்கு நிலைபெற்று 123 ஆண்டுகள் கல்விச் சேவை செய்திருக்கமுடியுமா என்பதையும் சிந்தித்துப பார்க்க வேண்டுமென்று அரசு அதிகாரிகளையும், அதேநேரத்தில் பல்கலைக்கழகங்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** பத்து நிமிடம் முடிந்துவிட்டது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முக்கியமான கட்டம், கல்லூரிகளைப் பற்றியது என்பதாலே ஐந்து நிமிடம் கூடக் கொடுங்கள்.

அதைப்போலவே இன்றைக்கு கிறிஸ்துவப் பாதிரியார்கள் உழைப்பினாலும், அவர்கள் தந்த பணத்தினாலும் அல்லவா லயோலா கல்லூரி, ஜோசப் கல்லூரி, சேவியர் கல்லூரி, போன்றவை உருவாகின? C.S.I. Diocese எடுத்துக்கொண்டால், அவர்கள் புகழ்பெற்ற Christian College, American College; St. Johns College, Sarah Tuckar College போன்ற கல்லூரிகளை அவர்கள் நடத்தி வருகிறார்கள். அவர்கள்



எல்லாம் தனியார்கள் அல்லவா என்பதை அந்த அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. அரசுக் கல்லூரிகளில் இன்றைக்கு 311 பேராசிரியர்கள் காலி இடங்களை அவர்கள் நிரப்பியிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். மிகுந்த பாராட்டுகள். எனக்கிருக்கிற ஆதங்கம் என்னவென்றால் ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்களுக்குக்கூட நியமனம் பற்றித் தெரியவில்லை. தெரியவில்லை என்றால் குறைபாடாகச் சொல்லவில்லை. முன்பிருந்த அரசாங்கம் என்றால் பேரம் நடந்திருக்கும். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இப்போது, பாரதிதாசன் பல்கலைக்கழகம் இதற்கான தேர்வு நடத்தியிருக்கிறது. தேர்வாணைக் குழு அவர்களை நியமித்திருக்கிறது. ஓசைப்படாமல் 311 கல்லூரிப் பேராசிரியர்களை நியமித்த ஒரு பெருமை உண்டு என்றால் அது நம்முடைய அரசுக்குத்தான் உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-45*

ஆனால், தனியார் கல்லூரிகளில், இன்றைக்கு உதவி பெறுகின்ற கல்லூரிகளில் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றனவா என்றால் இல்லை. ஓய்வு பெற்றவர்கள், இறந்தவர்கள் ஆகியவர்களுடைய பணியிடங்கள் இன்னும் ஏராளமாகக் காலியாக இருக்கின்றன. சென்ற அரசு இருக்கும்போது நாங்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகு அவர்கள் adhoc basis என்கின்ற அளவில் 75 சதவீதம் நிரப்பிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். Single man department ஒரு பேராசிரியர் இருக்கின்ற ஒரு பாடப்பிரிவு என்றாலும் அதை நிரப்பினார்கள், இன்னும் மீதம் 25 சதவீதம் நிரப்பப்படவில்லை. அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. கேட்டால், ஆசிரியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே வேலைப் பளு பிரச்சினையில் இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லையென்று சொல்கிறார்கள். இந்தியா-பாகிஸ்தான் இடையே உள்ள காஷ்மீர் பிரச்சினையைக்கூட ஐ. நா. சபையில் பேசித் தீர்த்துவிடலாம் என்ற

நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால், work load பிரச்சினையில், ஆசிரியப் பிரதிநிதிகள்-அரசாங்கம் இடையே பேசி இதைத் தீர்த்து வைக்க முடியுமா என்ற நம்பிக்கை எனக்கில்லை. நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, பல்கலைக்கழக மானியக் குழுவிலே சொல்கின்ற, அந்தச் சம்பளம் வேண்டுமென்று கேட்கின்ற ஆசிரியர்களுக்கு அந்தக் குழு, யுஜிசி. நிர்ணயிக்கின்ற வேலைத் திட்டமான 18 மணி நேரத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, அரசு இதிலே முடிவெடுத்து விரைவாக இந்தக் கல்வியாண்டு தொடக்கத்திலாவது அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வேலை நாட்கள்: முதல் செமஸ்டர் 90 நாட்கள்; இரண்டாவது செமஸ்டர் 90 நாட்கள்; ஆக 180 நாட்கள். 365 நாட்களில் 50% ஆவது கல்லூரி இயங்கவில்லையென்றால், மாணவர்களுடைய படிப்பு எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால், அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளெல்லாம் இன்றைக்கு 200 நாட்கள், 210 நாட்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, கலைக் கல்லூரியிலும் ஒரு செமஸ்டருக்கு 100 நாட்கள் என்கின்ற அளவுக்கு, 200 அல்லது 210 நாட்கள், வேலை நாட்களைக் கூட்டவேண்டுமென்று கல்வியாளர் என்ற முறையில் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாணவர்கள் சேர்க்கை: இதற்கு நல்ல கைடுலைன்ஸை கொடுத்திருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் இது சரிதானா, இதன்படி சரியாகச் சேர்த்திருக்கிறோமா என்று யார் பார்க்கவேண்டும்? ஒருநாள் பார்த்தால், Joint Director of Education வருகிறார், மறுநாள் பார்த்தால், பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் வருகிறார், நாங்கள் யாருக்குப் பதில் சொல்ல வேண்டும்? இரட்டை ஆட்சிமுறை இருக்கிறது. யார் இதை நெறிப்படுத்துவது? பல்கலைக்கழகத்தில் இதை நெறிப்படுத்தலாம் என்றால் அவர்களிடத்தில் ஒப்படையுங்கள்; அல்லது கல்வி அதிகாரிகள் இதை ஆய்வு செய்யலாம் என்றால், அவர்களிடத்தில் ஒப்படையுங்கள். இந்த இரட்டை ஆட்சிமுறை வேண்டாமென்று என்னுடைய கோரிக்கையாக இங்கே வைக்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள், இது இரட்டை ஆட்சிமுறை என்று சொல்கிறார்கள். இரட்டை ஆட்சிமுறை அல்ல. அரசு மேற்பார்வை நிர்வாகம் சம்பந்தப்பட்டது. மாணவர்களுடைய எண்ணிக்கை, இட ஒதுக்கீடு இவற்றை முறைப்படுத்துவது. பல்கலைக்கழகம் கவனிப்பது, ஓரளவுக்கு எண்ணிக்கையைக் கவனித்தாலும்கூட, பாட வகையில் கல்லூரியினுடைய, ஆசிரியர்களுடைய தர அடிப்படையில் அவர்கள் நடத்துகின்ற பாடத்தினுடைய தகுதிபற்றி அவர்கள் தீர்மானிப்பார்கள். Academic Council பல்கலைக்கழகத்தில்தான் இயங்குகிறது. கல்வி இயக்குநர் நிர்வாக முறையில் பார்க்க வேண்டிய கட்டாயக் கடமை இருக்கிறது. இந்த இரண்டு பேரும் பார்த்தும் தவறு செய்கின்ற எத்தனையோ கல்லூரிகள் இருக்கின்றன. அப்படிப் பார்க்கின்றபோது இது பெரிய தவறு அல்ல. கல்லூரி நிருவாகம் காண்பிக்கின்ற பட்டியல் ஒரே பட்டியல்தான்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாக் கல்லூரியும் ஒழுங்காக நடப்பதாக நான் சொல்லவில்லை. ஒருசில கல்லூரிகளில் தவறு இருக்கலாம். என்னுடைய கேள்வியெல்லாம், பல்கலைக்கழகத்திலிருந்து வருகிறார்கள். கல்வி அதிகாரிகளும் மாணவர்கள் சேர்க்கை சரியாக இருக்கிறதா என்று பார்க்க வருகிறார்கள். இவர்கள் இரண்டு பேருமே செய்யவேண்டியது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதி வழங்குகிறது. நிதி வழங்குகின்ற காரணத்தால், அந்த நிறுவனத்தினுடைய பணியை அரசாங்கம் மேற்பார்வை செய்யவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. பல்கலைக்கழகம் படிப்புத் தகுதியை ஏற்றுக்கொண்டு பட்டம் வழங்குகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் அவர்கள் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து காலியிடங்கள் பற்றி. மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு கடைசி நாள் ஜூலை 31 என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழகம் ஆகஸ்டு முதல்வாரம் வரை நீட்டித்துக் கொடுக்கலாம். ஆனால்,

இன்ஜினியரிங் கல்லூரி, தொழில் கல்லூரிகளில் செப்டம்பர் மத்திவரை அவர்கள் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். எங்கள் கல்லூரியிலே கணிதப் பிரிவில் பார்த்தோம் என்றால் இருந்த 40 பேரில் 4 பேர் செப்டம்பரில் போய்விடுகிறார்கள். Physics-ல் இருந்த 36 பேரில் 10 பேர் போய்விடுகிறார்கள். கம்ப்யூட்டர் பிரிவில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்குக்கூட இடம் கிடைக்கவில்லை. 24 பேர் இருந்தால் 6 பேர் போய் விடுகிறார்கள். இப்படி ஜூலை 31-க்குப் பிறகு, பல்கலைக் கழகம் வரைமுறை கடைசி தேதி என்று விதித்த பிறகு, நீங்கள் பொறியியல் கல்லூரியில் செப்டம்பர் வரை கொடுக்கின்ற காரணத்தால், இங்கிருக்கின்ற மாணவர்கள் போய்விடுகிறார்கள். எங்கள் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் ஏராளமான பேர் காத்திருக்கும்போது இடம் கிடைத்த இப்படிப்பட்டவர்கள் தொழில் கல்லூரிகளுக்குப் போய்விடுகின்ற காரணத்தால், இன்றைக்கு எங்கள் கல்லூரிகளில் அவர்களது இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்தக் காலி இடங்கள் மூன்று ஆண்டுகளும் தொடர்கின்றன. இதற்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும். ஒன்று, ஜூலை 31 ஆம் தேதிதான் இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்வதற்கும் இறுதிநாள் என்று வையுங்கள். அல்லது, காத்திருப்போர் பட்டியலிலேயிருந்து காலியான இடங்களை செப்டம்பர் வரை நிரப்பிக் கொள்வதற்கு எங்களுக்கு உத்தரவு தாருங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

ஹைஸ்கூல் பற்றி மட்டும் ஒன்றைச் சொல்லி, அந்த ஒரேயொரு கோரிக்கையோடு நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று, பல்கலைக்கழக மானியக் குழு, நூறு ஆண்டுகள் முடித்து, நூற்றாண்டு விழா கொண்டாடிய கல்லூரிகளுக்கு கட்டட மானியமாக 25 இலட்ச ரூபாய் தந்திருக்கிறது. நான் செயலராக இருக்கின்ற இந்து கல்லூரிக்கு 25 இலட்ச ரூபாய் தந்திருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள்தான் அந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்; முதல்வராக இல்லாதபோது, விழாவிற்கு வந்தார்கள். அதனாலே அந்தக் கோரிக்கையை அப்போது வைக்க முடியவில்லை. இப்பொழுது நான் அந்தக் கோரிக்கையை இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். இன்றைக்குச் சில பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் நூறு ஆண்டுகள் பணியினை முடித்திருக்கின்றன. ஆகவே, நம்முடைய தமிழக அரசாங்கம் அவர்களுடைய கல்விப் பணியினை அங்கீகரிக்கின்ற விதத்தில், பாராட்டுகின்ற விதத்தில், அப்படி நூறு ஆண்டுகளை முடித்த



பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் சார்பாகக் கட்டட நிதியாக, அவர்களுடைய பணியினைப் பாராட்டி 10 இலட்சம் ரூபாயாவது கட்டட மானியமாகத் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கோரிக்கை எழுப்புகிறேன்.

இன்னொன்று, பாளையங்கோட்டையிலே — நம்முடைய பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்கூட எதிரே இருக்கின்றார்கள் — இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. ஒன்று, Swain Higher Secondary School for Deaf — காது கேட்காதவர்களுக்காக. அதை அழகாகத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்; சுவயின் செவித் திறன் குறைந்தோர் மேல்நிலைப்பள்ளி என்று. இன்னொன்று, விழியிழந்தோர் பள்ளி. ப்ளைன்ட் ஸ்கூல். இந்த இரண்டு பள்ளிகளுக்கும் 100 ஆண்டுகள் முடிந்து விட்டன. இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு. அதைப்போல 100 ஆண்டுகள் முடித்த பள்ளிகளுக்கு ஐந்து அல்லது பத்து இலட்சம் ரூபாய் கட்டட மானியமாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று. இந்தப் பள்ளிகள் முன்பு கல்வித் துறையின் கீழ் இயங்கி வந்தன. இப்போது அவை சமூக நலத் துறையின் கீழ் — அம்மையார் அவர்களுடைய துறையின் கீழ் — போய்விட்டன. அங்கே ஏழு, எட்டு மாதங்களாக அவர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை. அவர்கள் இஸ்திரிப் பெட்டி கொடுத்து, மூன்று சக்கர வண்டி கொடுத்து, மிச்சப் பணத்திலேதான் இந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருகிறார்கள். ஆகவே, மீண்டும் இந்தப் பள்ளிகளை கல்வித் துறைக்கே மாற்ற வேண்டுமென்று நான் ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் மனுத் தந்திருக்கிறேன். எனவே, அப்பள்ளிகளைக் கல்வித் துறைக்கே மாற்ற வேண்டுமென்று கேட்டு, நல்ல திட்டங்களைத் தந்தமைக்காகப் பாராட்டி, வரவேற்று முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 17, கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே ஒருசில கருத்துக்களை மட்டும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றாலும் அல்லது ஒரு மனிதன் முழுமையான மனிதனாக வாழ வேண்டுமென்றாலும், இந்த நாட்டிற்கும், மனிதனுக்கும் கல்வி இன்றியமையாதது. ஆகவே, அப்படிப்பட்ட கல்வியைக் கொடுக்க நம்முடைய அரசு எவ்வளவுதான்

முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும்கூட, இன்றைய நிலையிலே தேவையான, முழுமையான கல்வியைக் கொடுக்கவில்லை என்றுதான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும். வள்ளுவர்கூட அழகாகச் சொல்வார்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே நம்முடைய தமிழக அரசானது கல்விக்காகக் கடந்த ஆண்டு ஒதுக்கிய நிதியைவிட இந்த ஆண்டு நிதியினைச் சற்றுக் குறைவாக ஒதுக்கியிருப்பது கண்டு உள்ளபடியே நாங்கள் வருத்தப்படுகிறோம். எனவே, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தமிழகம் கல்வித் துறையிலே எவ்வளவோ முன்னேறியுள்ளதாகச் சொன்னாலும்கூட, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளிலே தேர்ச்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கையினைப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே உள்ளவர்களுடைய எண்ணிக்கையினைப் பார்க்கின்றபோது அது மிகவும் குறைவாக இருப்பது நமக்கெல்லாம் மிகவும் வேதனையாக இருக்கிறது. கல்வியின் தரம் குறைந்துவிட்டதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலையிலே இலவசக் கல்வி, கட்டாயக் கல்வி, தரமான கல்வியாக இருக்கிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. அதிலும் குறிப்பாக, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 8ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த அறிவிப்பிற்கேற்ப கடந்த ஆண்டு முழுமையாகக் கட்டாயக் கல்வி அந்த வகையிலே அமலாக்கப்பட்டதா என்பதை எங்குமே காணமுடியவில்லை. ஆகவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம், கடந்த ஆண்டு அறிவித்த 8ஆம் வகுப்பு வரையிலான கட்டாயக் கல்வித் திட்டத்தை இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு வரையிலும் நீட்டித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து



வளர்ந்துவிடக்கூடாது என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். கட்டாயக் கல்வி என்பது அரசியல் சட்டப்படி 14 வயது வரை எல்லாப் பிள்ளைகளும் படிக்க வேண்டும் என்பது 14 வயது வரை கூடப் படிக்காமல் சிலபேர் 6-வது வகுப்பிலே நிறுத்தலாம். சிலபேர் 7-வது வகுப்போடு விட்டுவிடலாம். அதுவேறு. 10-வது வகுப்பு வரை கட்டாயக் கல்வி என்ற பேச்சே கிடையாது. இலவசக் கல்வி என்ற பிரச்சினைதான். 10-வது வகுப்பு வரையிலே இலவசமாகப் படிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். தொடக்கப் பள்ளிகளிலே கட்டாயக் கல்வியை எல்லா இடங்களிலேயும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு நடத்திய ஆலோசனையிலே, அந்தக் கட்டாயக் கல்வியை வலியுறுத்திச் செயல்படுத்தும் ஆலோசனையிலே பஞ்சாயத்து உறுப்பினர்கள், பஞ்சாயத்து அமைப்புகள் மூலமாக அந்தந்தப் பஞ்சாயத்துக்களிலுள்ள பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள்தான் அதை முன்னின்று செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. இல்லையானால் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்களைத் தண்டிப்பதாக இருந்தால் நம்முடைய சமுதாயத்தினுடைய பின்தங்கிய நிலைமையைக் கருதுகிறபோது, பெற்றோர்களைத் தண்டிக்கின்ற அளவிற்கு ஒரு சட்டத்தைச் செயல்படுத்தக்கூடாது என்ற கருத்து என்னாலேயே வலியுறுத்தப்பட்டது. மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தில் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டியதைக்கூட முழு அளவுக்கு உணர்ந்து செயல்படுத்தமுடியாத சூழ்நிலையில் அவர்களைத் தண்டிக்கும் முறை கூடாது. பிள்ளைகளை எப்படியும் ஊக்கப்படுத்தி பள்ளிகளிலே சேர வைப்பதுதான் தகுந்த முறை என்று சொல்லி அந்த அடிப்படையிலேதான் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் பள்ளி அமைய வேண்டும். அப்பால்தான் தொடக்கப் பள்ளிக்கூடம் இருக்கிறது என்று சொன்னால் பிள்ளைகளைச் சேர்க்க மாட்டார்கள். 300 மக்களாவது இருக்கக்கூடிய ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு தொடக்கப் பள்ளியை துவக்கி பிள்ளைகளை எப்படியாவது சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு பெரிய முயற்சியை மேற்கொண்டுள்ளோம். கி.பி. 2000 ஆண்டுக்குள்ளாக எல்லோரும் இந்த நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்களாக ஆக வேண்டும் என்று சொன்ன அந்தக் கொள்கை பல மாநிலங்களில் பாதி அளவுக்குக்கூட எட்டவில்லை. கேரளாவிலேதான் கட்டாயக் கல்வியில் அதிக வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எழுத்தறிவு இல்லாத மக்களுடைய மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ ஒரு கோடியே ஐம்பது இலட்சம் வயதானவர்கள் உள்பட அடித்தட்டிலே

நடைமுறைகளை நாம் மிகுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் அந்தக் குழந்தைகள் படிக்க வருவார்கள். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய சாதாரண பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கற்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் இத்திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12.00

அடுத்து, இலவசக் கல்வி, என்று சொல்லுகிறபோது கல்வியின் தரம் குறைந்து விடுகிறது. கிராமப்புறத்திலே படிக்கின்ற மாணவனையும், நகரத்திலே படிக்கின்ற மாணவனையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காணலாம். எனவே, நாம் கல்வியின் தரத்தை எப்படியாவது மேம்படுத்தியாகவேண்டும். கல்வியின் தரத்தை எடுத்துக்கொண்டால், ஏழைக்கு ஒரு தரமான கல்வி, நடுத்தர மக்களுக்கு ஒரு தரமான கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு தரமான கல்வி என்ற நிலை இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் வெளிநாடுகளிலே பார்க்கிறபோது, அங்கே நாட்டினுடைய ஜனாதிபதியினுடைய குழந்தையாக இருந்தாலும் சரி, அந்த நாட்டின் துப்பரவுத் தொழிலாளியினுடைய குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரே தரமான கல்வியை, வேறுபாடு இல்லாமல், ஓர் இடத்தில் அமர்ந்து அவர்கள் படிக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. ஆனால், நம்முடைய நாட்டில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. மிகவும் மோசமான நிலைதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எப்படியாவது முயற்சி செய்து, கல்வியினுடைய தரத்தை ஒரே அளவில் கொண்டுவருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது கல்வி விற்பனைக்குரியதாக ஆகிக்கொண்டிருக்கிறது. மெடிக்கல் சீட்டாக இருந்தாலும், இன்ஜினியரிங் சீட்டாக இருந்தாலும், உயர்ந்த படிப்பு என்று சொல்லுகிறபோது பணம் கொடுத்து அந்தக் கல்வியை விலைக்கு வாங்கக்கூடிய அவல நிலை நாட்டிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கருத்தை தவறாக ஏடுகள் வெளியிடக்கூடும். அரசாங்கத்தினுடைய எந்தக் கல்வி நிலையத்திலும் சீட்டுக்கள் விற்கப்படுவதில்லை. அதெல்லாம் கடந்த காலத்தில் அரசாங்கத்தினுடைய கல்வி நிலையங்கள்



எல்லாவற்றிலும் முறைப்படுத்தப்பட்ட நுழைவுகள்தான் அனுமதிக்கப்படுகின்றன. பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், அரசு மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், வேளாண் கல்லூரியாக இருந்தாலும், கால்நடைப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், மாணவர் சேர்க்கை முறைப்படி நடத்தப்படுகின்றன. அதிலே எந்தக் குறையையும் யாரும் சொல்ல முடியாது. தனியார் நடத்துகின்ற கல்லூரிகளில், தனியார் நடத்துகின்ற நிலையங்களில், அவர்கள் கேப்பிடேஷன் பீஸ் என்ற முறையை வைத்துத்தான் அந்த வகுப்புகளைத் தொடங்கிய ஒரு காலம் இருந்தது. அதனுடைய தொடர்ச்சி இருக்கலாம். அதைக் கட்டுப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக விதிமுறைகளிலே மாற்றம் வேண்டும். அதை உடனடியாக நாமே செய்துவிட முடியாது. ஆனால், சுயநிதிக் கல்லூரிகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த, கட்டணத்தைத் தீர்மானிக்க என்று அதற்கான குழுக்கள் போடப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் அரசு கல்லூரிகளில் அத்தகைய நிலை இல்லை. ஆனால் சுயநிதிக் கல்லூரிகளில் மேனேஜ்மென்ட் கோட்டா என்று சொல்லுகிற இடங்களுக்கு, மார்க்குகள் குறைவாக இருந்தாலும்கூட, பணத்தைப் பெற்றுக்கொண்டு இடம் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்ட நிலை சில கல்லூரிகளிலே இல்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி மணி அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நமது மாணவர்கள் அதிகம் போய்ச் சேர்ந்ததால்தான் இங்கே சுயநிதிக் கல்லூரிகள் வந்தன. 'அங்கே ஏராளமான கல்லூரிகள் ஏற்பட்டு தமிழ்நாட்டு மாணவர்கள் அங்கே போய்ப் பணம் கொடுத்து படிக்கிறார்கள், இங்கே அதை அனுமதிக்க வேண்டும்' என்றுதான் எல்லா தலைவர்களும் கேட்டார்கள். அதனால்தான் 'Self Financing' என்ற அமைப்பே தமிழ் நாட்டிலே 10 வருடங்களாக வர ஆரம்பித்தது. இன்னும் அதிகம் தேவை என்று கேட்பதற்குக் காரணம், இப்போதும் குறைந்த மதிப்பெண்கள் உள்ளவர்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று படிக்க முடிகிறது. தமிழகத்திலே படிக்க முடியவில்லை என்றுதான் இன்னமும் குரல் கொடுக்கிறார்கள். இருந்தாலும் சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்க நாம் இசைவளித்து வருகிறோம்.

10 இலட்சம் பிள்ளைகள் ஒவ்வோர் ஆண்டும் முதல் வகுப்பிலே சேருவதற்கு நாம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து, தகுந்த ஆசிரியர்களைத் தந்து அந்த அடித்தட்டிலே நல்லதொரு சூழ்நிலை உருவாக்குவதற்குதான் கல்வித் துறை கருதி செயல்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றோர்களைத் தண்டிக்கக்கூடிய வகையிலே நம்முடைய செயல்பாடுகள் இருந்துவிடக்கூடாது என்பதை அவர் வலியுறுத்தியதாக இங்கே தெரிவித்தார்கள். கட்டாயக் கல்வி என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டு, தண்டனையை நாம் கொடுக்காமல் விட்டோம் என்று சொன்னால் அந்தச் சட்டத்திற்கு எந்தவிதமான மரியாதையும் இல்லாமல் போய்விடும். பிறகு எப்படி நாம் அதைச் செயல்படுத்தப் போகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், ஏதோ சட்டங்கள் எல்லாம் முழு அளவில் பயன்படுவதாக எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டம் என்ன ஆகியிருக்கிறது? இன்னும் எத்தனையோ சட்டங்கள் என்ன ஆகியிருக்கின்றன. சட்டங்கள், சமுதாயத்தால் உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுகிற போதுதான் பயன்படுமே தவிர, சமுதாயம் ஏற்காதபோது அந்தச் சமுதாயத்தினுடைய தகுதி உயராதபோது சட்டங்கள் முழு அளவில் பயன்படுவதில்லை. இந்தச் சட்ட அடிப்படையிலே மக்களை ஈர்ப்பதற்கு நாம் முயற்சிக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி. பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டங்கள் எல்லாம் செயல்படுவதுபோல எண்ணிவிடக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டங்கள் பொதுவாக செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான்



இந்த மாமன்றத்தில் எவ்வளவோ ரூபாய் செலவு செய்து நாம் இந்த இடத்திலே உறுப்பினர்களாக அமர்ந்து சட்டதிட்டங்களை இயற்றுகிறோம். அந்தச் சட்டங்களை நிறைவேற்றுவது அரசாங்கத்தினுடைய கடமை. ஆகவே, சட்டங்களை, அது மதுவிலக்குச் சட்டமாக இருந்தாலும் சரி, எந்தச் சட்டமாக இருந்தாலும் சரி, எல்லாச் சட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் முயல வேண்டும். குற்றங்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதையெல்லாம் நாம் போட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கட்டாயக் கல்வி என்ற சட்டத்தை நாம் இயற்றிவிட்டு அதற்கு தண்டனைக் கொடுக்கக்கூடாது என்று சொன்னால் பிறகு இந்தச் சட்டத்தை நாம் வாபஸ் பெறவேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அந்தச் சட்டமே மத்திய அரசு சொன்ன ஆலோசனைப்படி தமிழ்நாட்டிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, வற்புறுத்துவதற்காகச் சட்டம். செயல்படுத்துகிறபோது தண்டனை என்ற அளவுக்குப் போகிறபோது, ஏற்கெனவே மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது குடித்தவனுக்கு 6 மாத தண்டனை என்று ஆரம்பித்து, 3 முறை, 4 முறை குடித்தவனைக் கைது செய்தால் நாடு கடத்துகிற தண்டனை என்ற ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். நான் சொன்னேன் இப்படிப்பட்ட சட்டங்கள் நடைமுறையில் வெற்றி பெறாது என்று. அந்தக் கருத்து, மாறுபாட்டுக்காக சொன்னது அல்ல. சமுதாயச் சட்டங்களை மெள்ள, மெள்ளத்தான் சமுதாயத்தில் நிறைவேற்ற முடியும். இந்த அரசு அனைத்து மாணவர்களையும் பள்ளியில் சேர்க்க முயற்சிக்குமே தவிர யாரையும் தண்டிக்கும் கொடுமைக்கு ஆளாக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் விளக்கத்திற்கு மிக்க நன்றி. இருந்தாலும்கூட, 14 வயது வரையிலே இருக்கும் பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டும் என்று நாம் அறிவித்திருந்தாலும்கூட, அரசியல் சட்ட ரீதியாக நாம் ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட, முழுமையாக அந்தக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற அந்த எண்ணம் பெற்றோர்களுக்கு வரக்கூடிய வகையிலே நாம் தூண்ட வேண்டும். அப்படிப்பட்ட

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகள் ஏற்படாத வகையில் அந்தக் குழுக்கள் சரியான வகையில் கண்காணித்து முறையாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாடத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், பல்வேறு விதமான பாடத் திட்டங்கள் இருக்கின்றன. 10 ஆம் வகுப்பு வரை எடுத்துக்கொண்டால், தமிழ் வழிக் கல்வியிலே ஒரு வகையான பாடத்திட்டம், ஆங்கில வழிக் கல்வியிலே ஒரு வகையான பாடத் திட்டம் என்று இருக்கிறது. மெட்ரிகுலேஷன் பள்ளியை எடுத்துக்கொண்டால் அதற்கு ஒரு வகையான பாடத்திட்டம், மேல்நிலைப் பள்ளி என்றால் அதற்கு ஒரு வகையான பாடத்திட்டம் என்று இருக்கிறது. மொழி மாறுபாடு இருந்தாலும்கூட, பாடத் திட்டங்களாவது ஒன்றாக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏனென்றால் என்னுடைய நோக்கம் அதுவல்ல. அரசு நடத்துகின்ற எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், தமிழ் மொழியிலே நடத்துவதானாலும், ஆங்கிலத்திலே நடத்துகின்ற ஓரிரு வகுப்புகளா இருந்தாலும், அத்தனையிலும் ஒரே பாடத்திட்டம்தான். அந்தப்பாடத் திட்டத்தில் மாற்றம் இல்லை. மத்திய அரசு நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள், சிபி.எஸ்.இ. போர்டு பள்ளிக்கூடங்கள், மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றுக்கு வேறு பாடத்திட்டங்கள். அது அவரவர்களுடைய அமைப்பு முறை. அங்கே சொல்லித்தரப்படுகின்ற மொழிப் பாடங்கள் வேறுபடுகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடங்களிலே 10 ஆம் வகுப்பினுடைய பாடத்திட்டத்திற்கு, தமிழக அரசின் அதே பாடத்திட்டத்தை அவர்களும் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், சென்ட்ரல் போர்டு பள்ளிக்கூடங்களில் இந்தப் பாடத் திட்டத்தை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் அகில இந்திய அளவில், எல்லா மாநிலங்களிலும் வேறு பாடத்திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், நம்முடைய நிர்வாகத்திற்குள் வருகின்ற அத்தனை பள்ளிக்கூடங்களிலும், ஆங்கிலத்திலே ஓரிரு வகுப்புகள் நடைபெற்றாலும்கூட, ஒரே பாடத் திட்டம்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-05

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். இங்கே மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே ஒருவிதமான பாடத் திட்டம் இருக்கிறது—ஆனால் வயது வரம்பு இவைகளைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒரே அளவிலே இருக்கிறது—மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஒருவிதமான பாடத் திட்டம் இருக்கிறது. அதுபோல சி.பி.எஸ்.இ. இதற்கு ஒருவிதமான பாடத்திட்டம் இருக்கிறது. இதனைப் பொறுத்தவரையில் நாம் மத்திய அரசிலே, இங்கே எங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப நீங்கள் பாடத் திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தலாம். ஆக இந்தப் பாகுபாடுகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பாகுபாடெல்லாம் தேவையில்லாத காரணத்தினாலே பாடத்திட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுபடியும் குறுக்கிடுகிறேன். ஒரு விளக்கத்திற்காகத்தான். பாடத்திட்டங்கள் பிள்ளைகளினுடைய அறிவு வளர்ச்சியிலே பெரிய மாற்றத்தை உண்டாக்கி விடுவதில்லை. எந்தப் பாடத்திட்டமாக இருந்தாலும், பிள்ளைகளுக்குத் தருகிற பயிற்சிதான் மிக முக்கியமானதாக இருக்கிறதே தவிர, இரண்டு விதமான பள்ளிகளில் படித்த இரண்டு பிள்ளைகளையும் நீங்களே பார்த்தீர்களேயானால் அவர்களுக்குத் தரப்படுகின்ற பயிற்சியை ஒட்டித்தான் அவர்களுடைய அறிவாற்றல் இருக்கிறதே தவிர, அவர்களுடைய பாடத்திட்டங்கள் பெரிய மாற்றத்தை உண்டாக்கி விடுவதில்லை. அதேபோல, ஒரே பாடத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 5 இலட்சம் மாணவர்களுக்கு, 10 இலட்சம் மாணவர்களுக்கு என்று சொல்கிற ஒரே காரணத்தினால், அதனால் பெரிய பலன் எதுவுமில்லை. ஒரே ஒரு வாய்ப்பு, வசதி என்னவென்றால் புத்தகங்களை இனாமாகக் கொடுக்க, குறைந்த விலையிலே தர, ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்க இது போன்றவைகளுக்குத்தான் அது பயன்படுகிறதே தவிர, பாடத்திட்டங்களைப் பொறுத்து நீங்கள் பல்கலைக்கழங்களைப் பார்த்தால் ஒரே படிப்பிற்கான பாடத்திட்டம் பல்கலைக்கழகங்களுக்குத் தகுந்தாற்போல் மாறும். அறிவு வளர்ச்சியிலே இந்தப் பாடத்திட்ட வேறுபாடு என்பது அவ்வப்போது தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு உருவாக்கப்படுவது, அதிலே நாம் அதிகமான கருத்தைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கப்பள்ளிகளை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் தமிழ்நாடு முழுவதும் ஓராசிரியர் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட ஓராசிரியர் பள்ளிகள் என்னுடைய பெண்ணாகரத்திலேகூட ஏராளமாக இருக்கின்றன. தாரமங்கலத் தொகுதியிலேகூட ஏராளமாக இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் ஆசிரியர்கள் விடுமுறை எடுத்துக்கொண்டால் பள்ளியே விடுமுறை. இதனை நீண்டகாலமாக நாங்களும் பேசி வருகின்றோம். ஆகவே, இந்த ஓராசிரியர் பள்ளிகளை மாற்றி அந்தப் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே எங்கு பார்த்தாலும் சரி, குறிப்பாக எங்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளில் எல்லாம் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றது. ஆசிரியர்கள் முழுவதுமாக நியமிக்கப்பட்ட பள்ளி ஒன்றுகூட இல்லை. ஆகவே. தமிழ்நாடு முழுவதும் மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நடப்பு ஆண்டிலே நியமனம் செய்ய வேண்டுமென்று சொல்லி நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதிலேகூட, பி.எட். ஆசிரியர்கள் என்று சொல்கிறபோது. பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். முதுநிலைப் [illegible]தாரிகள் ஏராளமாக இருக்கின்றார்கள். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை நியமனம் செய்வதன்மூலம் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அதே நேரத்தில் மாணவர்களுடைய கல்வித்தரமும் சீர்செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. மிகவும் முக்கியமானது. நுழைவுத் தேர்வு. தி.மு.க. அரசு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது நுழைவுத் தேர்வு கூடாது என்று சொல்லி நாம் எல்லோரும் சேர்ந்து போராட்டம் நடத்தினோம். ஆனால், இன்று ஆட்சியில் இருக்கின்ற காரணத்தினால் நாம் மீண்டும் நுழைவுத் தேர்வை வைத்துக்கொண்டிருப்பது எந்த வகையில் ஏற்புடையதாக இருக்கிறது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆகவே, தி.மு.க. அரசு, அன்று எதிர்க்கட்சியாக இருந்து போராடிய அதே காரணத்தை வைத்து இப்போது அந்த நுழைவுத் தேர்வினை ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன்.



அடுத்ததாக, இடைநிலை ஆசிரியர்களைப் பற்றி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று, இரண்டு ஆண்டு பயிற்சி எல்லாம் முடித்து, தேர்வு எழுதி சான்றிதழ் பெற முடியாத நிலை இருக்கிறது. பயிற்சி பெற்று தேர்வு எழுதிய நிலை, ஓராண்டு பயிற்சி முடித்து இரண்டாவது ஆண்டு செல்ல முடியாத நிலை என்றெல்லாம் இருககிறது. வழக்குகள் நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட, அந்த மாணவர்களுடைய வாழ்க்கைத் தரம் சீரழிந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, எப்படியாவது.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்திலே இல்லை. நீதிமன்றத்தில் இவைகள் எல்லாம் பள்ளிக்கூடங்களே அல்ல, பயிற்சியே தரப்படவில்லை, 'போகஸ்', ஆகவே, இந்த மாணவர்களுக்கு எந்தச் சான்றிதழும் வழங்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு முடிந்து போய்விட்டது. வழக்குமன்றத்திலே நாம் அப்பீல் பண்ணுகிற நிலை கூட இல்லை. சுப்ரீம் கோர்ட் வரையில் போய், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது என்று அவர்களும் சொல்லி விட்டார்கள். அதனாலே நமக்கு வழியில்லை. நீதிமன்றத் தீர்ப்பை மீறாமல் ஏதாவது செய்ய முடியுமா என்பதற்கு சட்ட ஆலோசனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி பேசி முடிக்கட்டும். திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. மணி, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஜி.கே.மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியிருந்தாலும்கூட, மாணவர்களுடைய வாழ்க்கைத்தரம் சீரழிந்து கொண்டிருக்கிற காரணத்தினால், அனுபவம் வாய்ந்த, நல்ல திறமை பெற்ற நம்முடைய கலவி அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வாழ்வு கொடுக்கக்கூடிய வகையிலே மீண்டும் ஓராண்டுக் கால பயிற்சியோ அல்லது ஏதாவது ஒரு வழிவகையோ தேடி, அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைக்குமாறு இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதேபோன்று, ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணத்தினாலே, பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக நியமிக்கப்படுபவர்கள் குறைந்த

ஊதியத்தைப் பெற்று வேலை செய்கிறார்கள். அதேபோன்று Guest Lecturers என்று பணியாற்றுகிறார்கள். ஆகவே, நடப்பு ஆண்டில், பணி நியமனத்திலே அவர்களையும் சேர்த்துக்கொண்டு, பணி நியமனம் வழங்குமாறு இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நியமனத்தின்போது, வேறு மாவட்டங்களிலிருந்து ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று மாதங்களிலே அவர்கள் மாறுதல் பெற்றுச் சென்று விடுகிறார்கள். ஆகவே, சீனியாரிட்டி பிக்ஸ் பண்ணுகிறபோது மாவட்ட வாரியாக—எங்களுடைய தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆசிரியர்களை அங்கே நியமனம் செய்தால், இரண்டு அல்லது மூன்று மாதங்களிலே மாறுதல் பெற்றுச் சென்று விடுகிறார்கள். ஆகவே, அப்படி மாவட்ட வாரியாக—சீனியாரிட்டியை நிர்ணயம் செய்து, வேலைவாய்ப்பு அளிப்பதற்கு முன்வரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு விட்டீர்கள். சீக்கிரம் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி. கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்குக் கல்வி இன்றியமையாதது. ஆகவே, மாணவப் பருவத்திலே, பிஞ்சு உள்ளத்திலே, நல்ல கருத்துக்களையெல்லாம் புகுத்த வேண்டும். இதற்கு முன்னாலே, வகுப்புகளில் எல்லாம் நீதி போதனை வகுப்புகள் Moral Instruction Classes என்று இருந்தது. இப்போது அது இல்லாமல் போய்விட்டது. ஆகவே, மாணவனை ஒழுங்குபடுத்துவதற்கு, செம்மைப்படுத்துவதற்கு வாழ்க்கையிலே நல்லவனாக இருப்பதற்குக் கல்வி இன்றியமையாதது என்பதால், நீதி போதனை வகுப்புகளை மீண்டும் கொண்டுவர வேண்டும். அவர்களைச் செம்மைப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும், ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 20 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். போதும். திரு. சி. கோபு.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விக்கென, நாம் ரூ. 3601.07 கோடி ஒதுக்குகிறோம். அப்படி ஒதுக்கப்பட்ட தொகையிலே முழுமையான நிறைவை நாம் காண்கிறோமா என்றால், நிறைவு காணமுடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். புதற்கு என்ன காரணம் என்பதை அரசுதான் தெரிவிக்க வேண்டும்.



ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெற்றபோது, அந்தப் பள்ளிகளிலே பயிலுகிற மாணவ, மாணவியர்கள் எல்லாம் தரையிலே அமர்ந்து படிக்காத நிலை இருந்தது. அதாவது, பலகைகள் போட்டு, அவர்கள் அதிலே அமர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. தற்போது, இந்த ஆரம்பப் பள்ளிகளிலே பணிபுரிகிற ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, உள்ளாட்சித் துறையும் அந்த மாணவ, மாணவியர்களுடைய நிலையை அறிய முன்வரவில்லை. அதேபோன்று, கல்வித்துறையும், அந்த மாணவ, மாணவியர்களுடைய நிலையை அறிய முன்வரவில்லை. குறிப்பாகச் சொல்லப் போனால், ஆசிரியர்கள் அமர்ந்து கல்வி போதிப்பதற்கு சில பள்ளிகளிலே நாற்காலிகூட இல்லை. இந்த நிலைமை எல்லாம் மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

கல்விக்காக ரூ. 3601.07 கோடி நாம் அளித்தாலும், பொதுப்பணித் துறை மூலமாகவும், உள்ளாட்சித் துறை மூலமாகவும், ஆதி திராவிடர் நலத் துறை மூலமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகவும் கல்விக்காக நிறைய சேவைகளைச் செய்கிறோம். உள்ளாட்சித் துறையிலே இருந்து தற்போது கட்டட வசதிகள் எல்லாம் அளிக்கிறோம். அதேபோன்று, பொதுப் பணித் துறையின் மூலமாகப் பள்ளிகளுக்குக் கட்டட வசதிகள் அளிக்கிறோம். அதேபோன்று, ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகக் கட்டட வசதிகளை நாம் அளிக்கிறோம். இவ்வளவு தொகையை நாம் செலவு செய்தும், இன்னும் சில பள்ளிகளிலே வகுப்பறைகளே இல்லாத நிலையில், மரத்தடியின் கீழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலைமையை எல்லாம் மாற்ற அரசு முன்வர வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல, நாம் நடுநிலைப் பள்ளிகளை தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகின்றபோதும், உயர்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகிறபோதும், பொதுமக்களுடைய பங்கீடாக, உயர்நிலைப் பள்ளிக்கு 1 இலட்சம் ரூபாய் என்றும், மேல்நிலைப் பள்ளிக்கு 2 லட்சம் ரூபாய் என்று வசூல் செய்கிறோம். ஆனால், அணைக்கட்டு தொகுதியில் திப்பசமுத்திரம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்காக 1990ஆம் ஆண்டிலே சலான் எண் 6697/90-ன்படி 10,000 ரூபாயும், சலான் எண் 578/90-ன்படி 12,500 ரூபாயும்-ஆக 22,500 ரூபாய் பொதுமக்களுடைய

பங்கீடாக, அப்போதிருந்த விதிகளுக்குட்பட்டு, அரசு கேட்ட தொகையைக் கட்டியுள்ளார்கள். இன்னமும் அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பெறவில்லை. தொடர்ந்து அவர்கள் மீண்டும் 1997-ஆம் ஆண்டிலே இரண்டு தவணைகளாக 5,000 ரூபாயும், 15,000 ரூபாயும்-ஆக 42,500 ரூபாயை திப்பசமுத்திரம் மக்கள்-ஊராட்சி மக்கள் செலுத்தியிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் இன்று உயர்நிலைப் பள்ளி பெறவேண்டுமானால், இன்னும் 57,500 ரூபாய் செலுத்தினால்தான் அவர்கள் அந்தப் பள்ளியைப் பெற முடியும் என்ற நிலை இருக்கிறது.

கிராமப்புறங்கள் பொதுவாக விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். குறிப்பாகச் சொல்லப்போனால், அணைக்கட்டு தொகுதியில் எந்த ஒரு நகரமும் கிடையாது; அனைத்தும் குக்கிராமங்கள், குக்கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் இவ்வளவு பெரிய தொகையைச் செலுத்த இயலாத நிலை இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திப்பசமுத்திரம் நடுநிலைப் பள்ளியை, அவர்கள் செலுத்தியிருக்கின்ற தொகையே போதும் என்று முடிவெடுத்து, இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அணைக்கட்டு தொகுதியில் கீழ்கூத்தூரில் நடுநிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அவர்கள் மேல்நிலைக் கல்வி பெறவேண்டுமானால் சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒடுக்கத்தூருக்குச் செல்ல வேண்டும், அல்லது அணைக்கட்டுக்குச் செல்ல வேண்டுமானாலும் 12 கிலோ மீட்டர் தொலை தூரம்தான். இது மத்தியப் பகுதியிலே நடுநிலைப்பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவான நம்முடைய அரசினுடைய கொள்கை - தொடக்கப் பள்ளி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்ற ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே, பணம் கட்ட முடியாத, பங்குத் தொகை செலுத்த முடியாத பள்ளிகளைக்கூட தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஒசூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர வேண்டுமென்று இந்த விவாதத்தின்போது கேட்டுக்கொள்கிறேன்.

அணைக்கட்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஒடுக்கத்தூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பொய்கை பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகியவைகளைப்பற்றி இந்த விவாதத்தின்போது எடுத்து வைக்க



விரும்புகிறேன். இந்தப் பள்ளிகளையெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாது, சின்னப்பள்ளிக்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளி, அகரம் அரசு உயர்நிலைப் பள்ளி இப்படிப் பல பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கின்றன. இவர்கள் மேல்நிலைப் பள்ளிக் கல்வி பெற வேண்டுமென்றால், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் சுமார் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிற மேல்நிலைப்பள்ளிகளுக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, இந்த நிலையை உணர்ந்து அரசு இந்த உயர்நிலைப் பள்ளிகளையெல்லாம் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சில நேரங்களில், அதாவது கவர்னர் உரை மீதான விவாதத்தில், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல வேண்டுமென்று விழைந்தேன். பெரும்பான்மை கட்சி உறுப்பினர் அல்லது ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற முறையில், அந்த வாய்ப்புகளை இழந்தேன். எனவே, இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியில் என்னென்ன பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலரசம்பட்டு நீர்த்தேக்க அணை ஒன்று கட்டித் தர வேண்டுமென்று சட்டமன்றத்திலே வினாக் கொடுத்து, அதற்கான பதிலையும் பெற்று இருக்கிறேன். இருந்தாலும், அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல, பேயாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலமும், குப்பம்பட்டு ஊராட்சி, ஒடுக்கத்தூர் பள்ளி மாணவர்கள் எல்லாம் அந்த ஆற்றினைக் கடந்துதான் ஒடுக்கத்தூர் மேல்நிலைப்பள்ளியிலே படிக்க வேண்டிய நிலை இருப்பதால், குப்பம்பட்டு ஊராட்சியையும், ஒடுக்கத்தூர் பேரூராட்சியையும் இணைக்கின்ற வகையிலே குந்தா காவிரி என்ற ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலமும் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முருகன் நகர், பள்ளிடையம்பட்டி ஆகிய கிராமங்களை இணைக்கின்ற வகையிலே ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித்தரக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, வேலூரிலிருந்து ஒடுக்கத்தூர் வழி ஊசூர் வரை உள்ள ஒரு வழிப்பாதையை இருவழிப்பாதையாக மாற்றித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. கோபு] [1998 ஏப்ரல் 15

சென்னை-பெங்களூர் சாலையில், அதாவது சிவில் விமானத் தளத்தின் அருகே தார்ச் சாலை வரையிலே இருவழிச்சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பொய்கையிலே அரசு கால்நடை மருந்தகம் ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று நீண்டநாட்களாகக் கேட்டு வருகிறோம். பொய்கையிலே மாட்டுச்சந்தை மிகவும் பிரசித்திபெற்றது. வேலூர் மாவட்டத்திலே அது மிகப்பெரிய சந்தை. ஆகையால் அதை முக்கியமாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக இயங்காமல் இருக்கின்ற அரியூர் நூற்பாலை மீண்டும் தொடர்ந்து இயங்க வேண்டும்; அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் நிலுவையிலே இருக்கிறது. அவர்களுக்கு அந்தச் சம்பளத்தையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்திலே குறிப்பிட்டிருக்கிற 2000ஆம் ஆண்டுக்குள்ளாக அனைத்து மக்களும் கல்வி பெற வேண்டும் என்ற மாபெரும் திட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் பத்மா.

***டாக்டர் பத்மா:** 1998-99 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கல்வியின் செலவிற்கு கவனமாக நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளமை பாராட்டுக்குரியது. பள்ளிகளில் போதிய கட்டடங்கள் இல்லாமல் இயங்குவதைத் தவிர்க்க இந்த ஆண்டில் புதிய கட்டடங்கள் கட்ட ரூபாய் 10 கோடி ஒதுக்கி உள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மரத்தடியில் பயிலுகின்ற நிலையில் பல பள்ளிகள் உள்ளன. புதிதாகத் தொடங்கும் பள்ளிகளில் போதிய வகுப்புகள் இல்லாமலேயே தொடங்கப்படுகின்றன. அப்பள்ளிகளுக்கு உடனடியாக உள்ளாட்சி மன்றத்தின் மூலம் ஒன்றிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் கட்ட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குறிப்பாக, திருவாரூர், நாகை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் வெள்ளம், புயல் ஆகியவற்றால் பாதிக்கப்படும் பள்ளிகள் உள்ளதால்,



1998 ஏப்ரல் 15] [டாக்டர் பத்மா]

ஏனைய மாவட்டங்களை விட அந்த 3 மாவட்டங்களுக்கும் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தர வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. எனவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கல்வி அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், Employment Assurance Scheme-ன்கீழ் நிதி ஒதுக்கும்பொழுது இம்மூன்று மாவட்டங்களுக்கும் சிறப்பு ஒதுக்கீடு வழங்க வேண்டுகிறேன்.

கணினி பாடம் 50 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. தொடங்கப்படும் அந்த வகுப்புகளை கிராமப்புறங்களில் தொடங்க வேண்டுகிறேன். நகர்ப் புறங்களில் அந்தப் பாடம் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றது. கிராமப்புறங்களில் அந்த வாய்ப்பு இல்லை. மேலும் அங்குள்ளவர்களுக்குத் தனியாரிடம் பயிலும் அளவுக்குப் பொருளாதார நிதி வசதியும் இல்லை. அடுத்த ஆண்டிலிருந்து நிறையப் பள்ளிகளில் தொடங்கத் திட்டமிட வேண்டுகிறேன். அவ்வாறு தொடங்கினால் ஒன்றியத்திற்கு ஒரு மேல்நிலைப்பள்ளியில் கணினி பயிற்றுவிக்க இயலும். அதோடு நீண்டகாலத் திட்டமாக அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்கள் பயிலும் வாய்ப்பு வழங்க மக்கள் நலம் மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு விளங்கும் கலைஞர் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், எதிர்காலத்தில் கணினியின் இயக்கம் எல்லாத் துறைகளிலும் வந்துவிடுவதால் எல்லோரும் அவ்வறிவைப் பெறுவது இன்றியமையாததே.

பிற்பகல் 12-25

பள்ளிகளில் விளையாட்டுத் துறையில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் அரசு நிதியொதுக்கீடு செய்துள்ளது. அந்த ஒதுக்கீட்டை மேல்நிலைப் பள்ளிகள் பெரும்பாலும் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. கிராமப்புறங்களில் மேல்நிலைப்பள்ளிகள் நகர ஊராட்சியில் உள்ளன. நகர ஊராட்சிகளில் இன்னும் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை. நகர ஊராட்சிகளுக்கு வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் உருவாக்கப்படும்வரை அவ்வாய்ப்பை நகர ஊராட்சிகளிலுள்ள பள்ளிகள் பெற அரசு வழிகாண வேண்டுகிறேன்.

வரும் ஆண்டிலிருந்து அனைத்து மாணவர்களுக்கும் 1 முதல் 5ஆம் வகுப்புவரை இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவாக்கம் பெறுவது பாராட்டுக்குரியது.

பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள் ஒரே வண்ணத்தில சீருடை, அனைத்துப் பள்ளிகளிலும் அணிவதைக் கட்டாயப்படுத்தி பெற்றோர்களுக்கு அறிவுறுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன். அப்படி எல்லா மாணவர்களும ஒரே வண்ணத்தில் உடையணிவதால் வித்தியாசமான உணர்வு அவர்களின் வாழ்வில் ஏற்பட வாய்ப்பு குறைந்துவிடும். மத வேறுபாடும, ஜாதி வேறுபாடும் வெகுவாகத் தலை தூக்கியிருக்கின்ற நிலையை இன்றைக்கும் நாம் காண்கின்றோம். கல்லூரிகளில்கூட மாணவர்கள் ஜாதி வழி பிரிந்து சண்டை போடுவதை ஏடுகளில் பார்க்க முடிகிறது இந்நிகழ்ச்சிகள் நாட்டுப்பற்றுக் கொண்டோருக்கு மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. ஜாதி ஒழிக்கப்பட வேண்டுமா அல்லது தீண்டாமை மட்டும் ஒழிந்தால் போதுமா என்ற கேள்வி இந்திய அரசியலில் தலைதூக்கி நின்ற நேரத்தில், ஜாதி ஒழிய வேண்டும், ஜாதி ஒழிந்துவிட்டால் தீண்டாமை ஏது என்று எதிர் வினா எழுப்பிய வழித்தோன்றல்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே, டாக்டர் கலைஞர் அவர்களையும், பேராசிரியர் அவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன், ஜாதி ஒழிப்பிற்கு ஏற்றாற்போல் பாடத்திட்டங்களைப் பள்ளிகளில அமையுங்கள் என்று. பகுத்தறிவுப் பாடத்திட்டங்களைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தொடங்குங்கள். அதன்மூலம், காந்தி, பெரியார், அம்பேத்கர் போன்ற பெரியோர்களின் கனவு நனவாக உதவியாக இருக்கும்.

தொடக்கப் பள்ளிகளின் பாடத்திட்டங்களில் குடிமைப் பயிற்சிகளைப் பெறுகின்ற அளவில் வாரத்தில் 2 வகுப்புக்கள் நடைபெறுகின்ற அளவில் பாடம் அமையப் பெற்று, பொதுச் சுகாதாரம், போக்குவரத்து விதி மற்றும் ஜாதி ஒழிப்பு, மனித நேயம் போன்றவைகளை, திருக்குறள் வழி பாடம்பெற வகை செய்தால், எதிர்காலத்தில் பேதமற்ற சமுதாயம் அமைய அடிகோலியவர்கள் ஆவீர்கள்.

தனியார் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு நியமிக்க மறுக்கின்றார்கள். கடந்தகால ஆட்சியில் தனியார் கல்லூரி மற்றும் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் பணியில் வருகின்ற வாய்ப்பைத் தவிர்த்தார்கள். அருள்கூர்ந்து தனியார் கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதில் கண்டிப்பைக் கடைபிடிக்க நடவடிக்கை மேறகொள்ள வேண்டுகிறேன்.

நீதி போதனை, குடிமைப் பயிற்சி போன்ற பாடத் திட்டங்களை உருவாக்கி, தேர்வுக்கு அப்பாடங்களை உட்படுத்தி மதிப்பெண்கள் பெறுவதைக் கட்டாயம் ஆக்க வேண்டும்.



கல்லூரிகளில், ஐ.ஏ.எஸ். மற்றும் மாநில அரசுப் பணியில் முதல் பிரிவிற்குரிய பாடத்திட்டங்களைப் பாடமாக வைப்பதன் மூலம் மாணவர்கள் பயிற்சி பெறவும் அவ்வழியில் முயற்சியினை மேற்கொள்ளவும் பயனுள்ளதாக இருக்கும்.

உயர்நிலைப் பள்ளிகளில் நல்ல மதிப்பெண்களும், நல்ல தேர்வுகளும் இல்லாத பள்ளிகளைக் கண்டறிந்து அவர்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு ஆசிரியர் என்ற முறையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுகிறேன். தொடக்கப் பள்ளிகளுக்கு இம்முறை மிகமிக அவசியம்.

தொடக்கப் பள்ளிகளில், பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பி.எட் பட்டம் பெற்றவர்கள் ஆகியவர்களை இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்க உத்தரவு பிறப்பித்தும் இதுவரை திருவாரூர், நாகை மாவட்டங்களில் அவ்வாறு நியமிக்கவில்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருமருகல் என்னும் பகுதி மிகவும் தாழ்த்தப்பட்ட பகுதி. அங்குள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், நன்னிலத்திலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ஆக்குவதற்கும், பள்ளிகள் செலுத்த வேண்டிய வைப்பு நிதியைச் செலுத்த முடியாத நிலையில் இந்தப் பள்ளிகள் இருப்பதால் அந்த இரண்டு பள்ளிகளுக்கும் அரசு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் அப்படி அளிக்கக் காலதாமதம் ஆகும் என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கீட்டிலிருந்து இந்தத் தொகையை நாம் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

தற்போது திருவாரூர் மாவட்டத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆடுதுறையில் இயங்கி வருகின்றது. திருவாரூர் மாவட்டத்திற்கு ஏற்படுத்த வேண்டிய பயிற்சிப் பள்ளி எப்போது ஆரம்பிக்கப்படும்? அதுவரை ஆடுதுறையில் இந்த ஆண்டிற்கு மேலும் 100 மாணவர்களை அதிகப்படுத்தித் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அரசின் சார்பில், விடுதியில் தங்கும் மாணவ மாணவிகளுக்குக் கொடுக்கும் நிதியைப்போன்றே, சேவா சங்கங்கள் நடத்தும் விடுதிகளுக்கும்தர அரசு முன் வர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

பிற்பகல் 12-30

அடுத்து, எனது தொகுதியைப் பொறுத்தவரை, அது ஆறுகள் நிறைந்த பகுதியாகும். அதிலே 4 இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பலமுறை விண்ணப்பித்தும், என்னுடைய விண்ணப்பங்கள் இன்றுவரை அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, கல்வி அமைச்சர் மூலமாக இந்த இடத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புவது, என்னுடைய தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, 2 3 பாலங்களையாவது இந்த ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி. ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கல்லூரிகளையும் கொண்டு, தந்தை பெரியார் அவர்கள் பெயரிலே, பெரியார் பல்கலைக்கழகத்தை சேலத்தில் அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நான் ஒரு கல்லூரியின் தாளாளன் என்ற முறையிலே மாவட்டப் பொது மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே ஏறத்தாழ, 3600 கோடி ரூபாய் கல்விக்காக நிதி ஒதுக்கியிருப்பதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது அரசின் கொள்கை, 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியைத் தரவேண்டும் என்பது ஆகும். அந்த உயரிய நோக்கத்தை வரவேற்கின்றேன். அரசியலமைப்புச் சட்டத்தில், 14 வயது வரை உள்ள மாணவர்களுக்கு கல்வி அளிக்க வேண்டுமென்ற நிலை, 10 ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று இருந்தும்கூட, இன்னும் அது முழுமையாகச் செயல்படவில்லை. நடப்பு ஆண்டில் 700 குக்கிராமங்களுக்கு தொடக்கக் கல்வி நிலையம் அமைக்க வேண்டுமென்ற குறியீட்டை நிர்ணயித்து, இந்த ஆண்டு மட்டும் 300 தொடக்கப் பள்ளிகள் அமைக்கத் திட்டமிட்டு இருப்பதை வரவேற்கிறேன். இரண்டாயிரமாவது ஆண்டில்



அவை அனைத்தும் நிறைவேறுமென்று உறுதி அளித்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5ஆம் வகுப்புவரை அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உன்னத இலட்சியம் வரவேற்கத்தக்கது.

பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் அனைவரும் குறைந்தபட்ச அறிவும், திறனும் பெற வேண்டுமென்ற நல்ல நோக்கம் நிறைவேறி வருகிறதா என்றால், அது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, கிராமப்புறங்களிலே பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் முழு ஈடுபாட்டுடன், பாடத்திட்டத்தை நடத்துவது இல்லை என்ற புகார் வருகிறது. பள்ளிகளைத் தரம் உயர்த்துவதிலே, ஆண்டுக்கு ஒ[illegible] உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவ[illegible]றேன். ஆனால் இந்த ஆண்டு, 40 பள்ளிகளை மட்டும் தரம் உய[illegible]த்த [illegible]றியீடு நிர்ணயித்திருப்பது போதாது என்றும், அதை 80-ஆக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கூடங்களில் சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால், பல வேண்டத்தகாதவர்கள், சமூக விரோதிகள் இரவு நேரங்களில் அந்த இடத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, பள்ளிகளுக்கு கட்டடம் கட்டும்போது, சுற்றுச் சுவரும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட தொடக்கக் கல்விக்கு மிகச் சிறப்பான...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடக் கட்டடம் கட்டுவதற்கே நிதிப் பற்றாக்குறை. 500 பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டுமென்று நாம் விரும்பினால், 150 பள்ளிக்கூடங்கள் அளவுக்குத்தான், மூன்றில் ஒரு பங்குதான் அவ்வப்போது நிதி கிடைத்து கட்டுகிறோம். நான்கு அறைகள் தேவைப்படுகிற இடத்தில் இரண்டு அறைகள்தான் கட்டுகிறோம். ஆகவே, கொள்கை அடிப்படையிலே ஏற்கெனவே, சுற்றுச்சுவர் கட்டுகிற செலவை அரசு ஏற்பதில்லை என்று கைவிட்டிருக்கிறது. ஆனால், முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக அங்கேயுள்ள வன இலாக்கா அதிகாரிகளைக் கொண்டோ, அல்லது வேளாண்மைத் துறை அதிகாரிகளைக் கொண்டோ, சுவர் வைக்க வேண்டிய இடத்தில், பசுமைக் கன்றுகள் அல்லது முள் மரங்களை நடுவதன் மூலமாக, சவுக்கு போன்றவற்றை வைப்பதன் மூலமாக, சுவர் இடத்தை அப்படித்தான் பசுமை வேலியாக அமைக்க வேண்டுமென்பது ஒரு கொள்கையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தனியார் வேண்டுமானால், அவர்களுடைய வசதியைக்கொண்டு, சுற்றுச்சுவர் கட்டலாமே தவிர, அரசு பொது அடிப்படையில் மேற்கொள்வது கடினமான காரியம்.

பிற்பகல் 12-35

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய நிதியிலிருந்து சுற்றுச்சுவர் எழுப்புவதற்கு அரசு அனுமதி அளிக்குமா? அப்படி ஓர் ஆணையைப் பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் குறிப்பிட்டு எதைச் சொல்கிறீர்களோ, அதற்கு அவர்கள் ஒதுக்குகிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய நிதி முழுவதையும் கட்டடமாகவே கட்ட நான் தயாராக இருக்கிறேன். எவ்வளவு கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். அதேபோல், சில இடங்களிலே டாக்டர் பத்மா அவர்கள் குறிப்பிட்டதைப்போல - எந்த நிதியும் செலுத்த முடியாத வட்டாரத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிதியை அப்படிச் செலுத்திக்கூட பெற்றுக்கொள்ளலாம். ஒரு வேளை சிலபேர் சொன்னதைப் போல, நிதியைச் செலுத்த முடியாதவர்களுக்கு அரசு விதிவிலக்குத் தரவேண்டும் என்றால், நிதி செலுத்தி, 200 பேர்கள் கேட்கிறபோது, 40 பள்ளிக்கூடங்களை நாம் அனுமதிக்கிறோம். இதை அதிக மாணவர்கள் இருக்கிற இடமாகப் பார்த்து, மாவட்டத்திற்கு ஒன்றிரண்டுதான் அனுமதிக்கிறோம். இங்கே பேசிய அணைக்கட்டுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அவருடைய தொகுதியில் மட்டும் 8 பள்ளிக்கூடங்களைக் கேட்டிருக்கிறார். மாவட்டத்திற்கு ஒன்று வரும். உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஒன்று அல்லது இரண்டு வரும். அதற்கு மேலாகத் தருவதற்கு அதிக வாய்ப்பு இல்லை, வசதி இல்லை. ஏன் என்றால், தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளை மிகுதியாக வளர்க்க வேண்டிய அடிப்படையான கடமையை நாம் நிறைவேற்றுகிறோம். எனவே, அந்தச் சூழ்நிலையை எண்ணிப்பார்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சுற்றுச் சுவருக்கு நிதி ஒதுக்குவதைவிட பள்ளிக் கட்டடங்களுக்காக ஒதுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. ப. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொடக்கக் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அந்தப் பள்ளிகளுக்குக் குடிநீர், கட்டடம் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து



கொடுப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல், உயர்நிலைப் பள்ளிகளுக்கும், குடிநீர் வசதியையும், கட்டட வசதியையும், செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு கட்டட வசதிக்காக ரூ. 10 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டு இருப்பது மிகவும் குறைந்த தொகை. அதை 20 கோடி ரூபாயாக ஒதுக்கி, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் கல்வியை பொறுத்தவரையில், குறிப்பாக, பொறியியல் கல்லூரிகளில் காலி இடங்கள் சென்ற ஆண்டு மிகுதியாக இருந்தன என்று கேள்விப்படுகிறேன். அண்டையிலுள்ள மாநிலமான கர்நாடகத்திலே இருப்பதைப்போல 60 விழுக்காடுகளுக்கு மேல் இருக்கின்ற மாணவர்களைத்தான், பொறியியல் கல்லூரிகளில் சேர்ப்பது என்ற நிலையை மாற்றி-50 விழுக்காடுகளுக்கு மேல் இருந்தால்கூட சேர்த்துக்கொள்ளலாம் என்ற நிலையை நாம் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, 7, 8 ஆண்டுகள் ஆகியும் பல்கலைக்கழகத்தின் நிபந்தனைகளை முறைப்படி, 'Infrastructure' வசதிகளை நிறைவேற்றி இருந்தும்கூட, நிரந்தரப் பதிவு வழங்கப்படவில்லை. நிரந்தரப் பதிவு வழங்கப்பட்டால், நாங்கள் பல்கலைக்கழகத்தின் மானியக் குழுவிடமிருந்து நிதியும் மற்றும் இதர வசதிகளைப்பெற வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல- இந்த மன்றத்தில் பேச அதிக வாய்ப்பு இல்லாத காரணத்தால்- நானும் என்னுடைய தொகுதியில் உள்ள 5 வேண்டுகோள்களை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி நதிநீர் தாவாவை விரைந்து முடிக்க அரசு அக்கறை மேற்கொண்டுள்ளதை, அதன் செயல்பாடுகளை மிகவும் பாராட்டுகின்றேன். ஏன் என்றால், என் தொகுதியில் காவிரி ஓரத்தில் 12 கிலோ மீட்டர் நீளத்தில் உள்ள பயன் அடையும் விவசாயிகள் ஆற்றிலிருந்து ஊற்று நீரை இறைக்க தடையில்லாச் சான்றிதழ் - அதாவது ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் இறைக்கிறார்கள், தடையில்லாச் சான்றிதழ்-மற்றும் மின் இணைப்பும் கிடைக்காமல் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்தப் பாதிப்பின் காரணமாக, பல பேர் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய நிலைக்குகூட தள்ளப்பட்டு இருக்கிறார்கள். எனவே, இதைக் குறிப்பாக, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, அந்த அனுமதியை

வழங்க முயற்சி எடுத்து கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செங்கோடு நகராட்சியைப் பொறுத்தவரையில், திருச்செங்கோட்டிலே 2 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், வழியோரக் கிராமங்களுக்கு, ஏறத்தாழ 35 கிராமங்களுக்கு தண்ணீர் எடுக்கப்படுவதன் காரணமாக, திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாரம் ஒரு முறையும் 10 நாட்களுக்கு ஒரு முறையும்தான் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சி காரணமாகவும் மற்றும் பல மக்கள் குடியேற்றத்தின் காரணமாகவும், மிக வேகமாக வளர்ந்து வருகிற அந்த நகருக்கு தனியாக ஒரு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க, Parallel Main நிறுவி, தனியாக ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதியிலே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இரண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவை மிக வேகமாக நிறைவேற்றப்பட்டு வந்தாலும், அதற்காகத் தபால்கோட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சி 2-னுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். "எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான இடம் நோக்கி நகர்கின்றது இந்த வையம்" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொல்வார். ஆனால், இன்றைக்கு தமிழக முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசானது நம்முடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் பெருந்தகை அவர்களுடைய சீரிய தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிற இந்தக் கல்வித் துறையானது 'எல்லார்க்கும் கல்வி தருவதற்கான இடம் நோக்கி விரைகிறது' என்று சொல்லத்தக்க அளவிற்கு கல்வித் துறையிலே பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்திருப்பதை நாங்கள் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.



இன்றைக்கு 5ஆம் வகுப்பு வரை இலவசப்பாடப் புத்தகங்கள், கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு, அதேபோல் தொழில்நுட்பக் கல்லூரிகளிலே ஒற்றைச் சாளர முறையிலே மாணவர்கள் தேர்வு இப்படியெல்லாம் புரட்சிகரமான நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிற இந்த அரசு, கல்விக்காக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. அதே நேரத்திலே, மேலை நாடுகளை ஒப்பிடுகிறபோது, நம்முடைய நாட்டிலே கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது மிகவும் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையை நாம் மறந்துவிடக் கூடாது. மேலைநாடுகளிலே திட்டங்கள் தீட்டப்படுகிறபோது அதன் பலன் பெருவாரியான மக்களுக்குப்போய் அடைவதற்கு அடிப்படைக் காரணமே கல்வியிலே அவர்கள் மிகுந்து இருப்பதுதான் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் 6 ரூபாய்க்குத் திட்டம் போட்டால் ஒரு ரூபாய் அளவிற்குத்தான் மக்களுக்குச் சென்று அடைகிறது என்கின்ற அவலநிலை இருப்பதற்குக் காரணமே கல்வி அறிவானது நம்முடைய மக்களுக்கு மிகவும் குறைவாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான வளர்ச்சியிலே நாம் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம் என்ற அக்கறையோடு, ஆழ்ந்த சிந்தனையோடு இன்றைக்குக் கல்வித் துறையிலே பல்வேறு சிறப்பான திட்டங்களை அரசு அறிவித்திருப்பதை நான் பாராட்டி வரவேற்கின்ற அதே நேரத்திலே ஒரு சில செய்திகளையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கடந்த கால அரசிலே நடைபெற்ற கொள்ளைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சொல்லி, அரசு அக்கறையோடு பல முயற்சிகளை எடுத்திருப்பதை நாங்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்திலே இன்றைக்குக் கல்வியிலே பெரிய கொள்ளையே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுகுறித்து இந்த மன்றத்திலே பலமுறை ஆழ்ந்த கவலையோடு தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இன்றைக்குச் சொல்லப்போவோமேயானால், தனியார் பள்ளிகள், தனியார் கல்வி நிறுவனங்களிலே தொடக்கக் கல்விக்கும், நடுநிலைக் கல்விக்கும் நாம் அதிகமான கவனம் செலுத்தி, அவற்றை வளர்த்தெடுக்கவேண்டுமென்று நினைக்கின்ற அதே நேரத்திலே, இந்தக் கல்வி நிறுவனங்களிலே பெற்றோரிடமிருந்து காசுகள் அநியாயமாகப் பிடுங்கப்படுகிறது என்பதை அரசு ஆழ்ந்த கவலையோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு உதாரணமாக, அரசு நடத்துகின்ற பள்ளிகளைவிட, தனியார் கல்வி நிறுவனங்களிலே இரண்டு மடங்கு

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 ஏப்ரல் 15

அதிகமாக கட்டணம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசிடம் நிதிவசதி இல்லாத காரணத்தினாலே இதற்கான அனுமதி வழங்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இருந்தாலும்கூட, அந்தத் தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி போன்றவற்றிலே நடைபெறுகின்ற சூழ்நிலைகளை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

உதாரணமாக, சுமார் 30,000 பள்ளிகள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், ஒரு பள்ளியிலே 100 மாணவர்கள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும், அந்த மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதத்திற்கு ரூ.100 மட்டுமே வசூலிப்பதாக வைத்துக்கொண்டாலும், அந்த ஒருமாத காலத்திலே ஏறத்தாழ ரூ. 30 கோடி அளவிற்கு, ஓர் ஆண்டிற்கு ஏறத்தாழ ரூ.300 கோடி அளவிற்கு என்ற வகையில் இந்தத் தொடக்கநிலைக் கல்வியிலே பெற்றோரிடமிருந்து அந்தத் தனியார் பள்ளிகளின் மூலமாகச் சுரண்டப்படுகிறது என்பதை அரசு சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, நீங்கள் தனியார் கல்வி நிறுவனங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தியிருக்கிறீர்கள். அவர்கள் இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்கவேண்டுமென்று சொல்லி ஒரு வரையறை, ஒரு கட்டுப்பா... இந்த அரசாங்கமானது மக்கள்பால் மிகுந்த அக்கறையோடு ...டு வந்திருக்கிறது. அதேபோல் மழலையர் பள்ளியிலே இன்னின்ன வகுப்பிற்கு இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்கவேண்டுமென்று வரன்முறை செய்தாலாவது ஓரளவிற்கு பெற்றோர்கள் அந்தப் பணச்சுமையிலிருந்து மீள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

கடந்த 30 ஆண்டுகாலமாக உயர் கல்வி வளரவில்லை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் ஒரு விழாவில் பேசியிருக்கிறார்கள். அந்த உயர் கல்வி வளர்வதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு, நிதிவசதி இல்லாத காரணத்தினால் நான் ஒரு ஆலோசனையை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, இந்த முறையை தொழிற்சார் கல்லூரிகளிலேயாவது, பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பக் கல்லூரிகளிலேயாவது அமல்படுத்தமுடியுமா என்பதை அரசு ஆலோசிக்க வேண்டுமென்று நான் அதை ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு மிகுந்த பணம் பிடுங்கப்படுகிறது என்பதை நிறுத்துவதற்காகத்தான் ஒற்றைச் சாளர முறையைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதேபோல, இன்னும் பல பாடப் பிரிவுகளிலே மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக்கூடிய அளவிற்கு என்ன செய்யலாம் என்றால், அத்தகைய கல்லூரிகளிலே ஷிப்ட் முறையைக் கொண்டு வந்தால், அந்த ஷிப்ட் முறைகளின் மூலமாக இன்னும் பல மாணவர்களுக்கும், அதேபோல படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பல ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பைத் தருவதற்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதிலேகூட, இந்த மாதிரி ஷிப்ட் முறை அனுமதிக்கப்படுகின்ற அந்த இடத்திலேகூட இன்றைக்குத் தனியாரிடம் கொண்டுபோய் ஒரு மருத்துவக் கல்வி இடத்திற்கு 15 இலட்சம் ரூபாய் என்றெல்லாம் கொட்டி அழுகிறார்கள். இதிலே ஒரு குறிப்பிட்ட சதவிகித இடத்தை, அப்படிப் பணம் கட்டிப் படிக்க முன்வருகின்றவர்களுக்கு நாம் ஒதுக்கித்தந்தால் கல்வித் துறைக்கு வருமானமும், மற்றத் துறைகளிலே இலவசமாக பலவற்றை செய்துகொண்டிருப்பதை ஈடுகட்டுவதற்கு, செலவினங்களை ஈடுகட்டுவதற்கு, பண முதலீடு கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாகவும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 ஏப்ரல் 15] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

சமூக நீதிக் கொள்கையிலே ஆழ்ந்த ஈடுபாடு உள்... நம்முடைய அரசு என்பதை நான் நன்றாக அறிவேன். இருந்தாலும்கூட கல்விக் கூடங்களுக்கெல்லாம் தலைமைப் பீடமாக இருந்து கொண்டிருக்கிற பல்கலைக்கழகங்களிலே, இந்த வேலைவாய்ப்புகளிலே இட ஒதுக்கீடு முறையானது இன்னும் முயல் கொம்பாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஒரு பகல் கனவாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே ஆழ்ந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல்கலைக்கழகம் வேலைவாய்ப்புகளிலே இட ஒதுக்கீடு முறை சரிவர அமல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க இந்த ஆண்டிலாவது அதற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்பதை வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு ஓராசிரியர் பள்ளிகளுக்கெல்லாம் ஆசிரியர்களைக் கூடுதலாக நியமனம் செய்திருக்கிறோம். ஆனால், பல்கலைக்கழகங்களிலே பல துறைகளிலே, சமூகவியல் துறை, வரலாற்றுத் துறை, இப்படிப்பட்ட பல்வேறுத் துறைகள் ஓராசிரியர் துறைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

இதனாலே, ஆராய்ச்சிப் படிப்புகளை சரியான முறையிலே அவர்களாலே செயல்படுத்த முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்படி ஓராசிரியர் துறைகளாக இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களிலே உள்ள துறைகளுக்கு மேலும் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்து ஆய்வுப் பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கும், உயர் கல்வி வளர்வதற்கும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிண்டிகேட் உறுப்பினர்களைத் தேர்வு செய்யக்கூடிய அந்த ஆட்சி மன்றக் குழுவிலே தேர்வு முறையிலே ஒரு குறை இருப்பதை அரசு நிவர்த்திக்க வேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்திற்கு இந்த நேரத்திலே கொண்டுவருகிறேன். மேதகு ஆளுநர் அவர்கள் அந்த ஆட்சி மன்றக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது மூன்று பல்கலைக்கழகப் பேராசிரியர்களை நியமிக்கிறார். அதோடு, துணை வேந்தர் அவர்கள் இணைப் பேராசிரியரிலிருந்து ஒருவரையும், விரிவுரையாளரிலிருந்து ஒருவரையும் ஆக மொத்தம் 5 பல்கலைக்கழக ஆசிரியர்களை இன்றைக்கு சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவிலே இடம் பெறச் செய்கிறார்கள். இந்த மாதிரி, அதிகமான எண்ணிக்கை வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் கிடையாது. இத்துடன் தேர்தல் முறையின் மூலமாகவும் கூடுதலாக 2 ஆசிரியர்கள், 3 ஆசிரியர்கள் வந்துவிடுகிறார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டு பார்கின்றபோது 8 ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் அந்தப் பல்கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்து வந்துவிடுகிறார்கள். அதே நேரத்திலே, தனியார் கல்லூரி, அரசுக் கல்லூரியிலே, 1,500க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கக்கூடிய இடங்களிலே அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பார்க்கிறபோது, 2 பேர்தான் இடம் பெறுகிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்று சொன்னால், இந்த ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் சில நேரங்களிலே துணை வேந்தர் அவர்களை சுயமாக, தன்னிச்சையாக செயல்படுவதற்குக்கூட சில நெருக்கடிகளைத் தருவதாகவும், சில நேரங்களில் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதனாலே ஆய்வுப் பணிகளை அவர்களால் சரியாகச் செய்ய முடியவில்லை, நிர்வாகப் பணிகளையும் அதிகமாக சரிவர செய்ய இயலாத நிர்ப்பந்தம், சூழ்நிலை வருகிற காரணத்தினாலே



அவர்களால் இரண்டையும் சரிவரச் செய்ய இயலவில்லை. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னவென்று சொன்னால், இந்த விகிதாச்சார முறையானது தலைகீழ் விகிதாச்சார முறையாக இருக்கிறது. விகிதாச்சார முறையே அல்ல இது. எனவே, உரிய முறையிலே ஏனைய ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையிலே பல்கலைக்கழகங்களிலே இந்த முறையில் சரியான ஒரு சட்ட வரையறையைக் கொண்டுவந்து இந்தக் குறைபாட்டை நீக்கி எல்லாத் தரப்புக்கும் பொதுவான பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய அளவுக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இன்றைக்கு மைய அரசுத் தேர்வுகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளிலே தமிழ்நாட்டு மாணவர்கள் குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுகிறது. அதையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒருமுறை பஞ்சாபினுடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த பிரதாப்சிங் கெய்ரோன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது 'conquer Delhi Secretariat for Punjab prosperity' என்று 'பஞ்சாபை முன்னேற்ற வேண்டும் என்று சொன்னால், டெல்லியினுடைய அரசுச் செயலகத்தைக் கைப்பற்று' என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சொன்னதோடு மட்டும் அல்ல, கல்லூரிகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விற்கு சிறப்புப் பாடப் பயிற்சிகளை அவர்கள் வகுத்துக் கொடுத்தார்கள். அதனாலே இன்றைக்கு பஞ்சாப் மாநிலமானது அதிகமான அளவுக்கு ஐ.ஏ.எஸ்., தேர்வுகளிலே வெற்றிபெறுகிறது. யு.பி. போன்ற மாநிலங்கள், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் இதேமுறையைக் கடைபிடித்து வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவதெல்லாம் ஐ.ஏ.எஸ். போன்ற மையப் பணித் தேர்வுகளை நடத்துவதற்குரிய வகையிலே நம்முடைய பாடத்திட்டங்களை மாற்றியமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்திலே நூலகங்களை நாம் அதிகமாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தர வேண்டும்.

அதேபோல பொது அறிவுத் தேர்வுகள் இருக்கின்றன அல்லவா, அதை ஒரு கட்டாயப் பாடமாகவே வைப்பதற்கு ஆவன செய்ய

வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு இடையிலே பல்வேறு குழுக்களை நியமித்து அவற்றின் மூலமாக வினா வங்கி புத்தக வங்கி, ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி தருவதற்காக அமைக்கப்பட்டு இருக்கின்ற அந்தப் பயிற்சி நிலையங்களிலே வெறும் 50 பேர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பு தரப்படுகிறது. ஆனால், அதே நேரத்திலே டெல்லியிலே இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்திலே பார்த்தால், ஆயிரம் பேர்களுக்கு அந்த வாய்ப்பு தரப்படுகிறது. பிற மாநிலங்களிலே 500 பேர் 700 பேர்களுக்கு என்று அந்தப் பயிற்சியைத் தருகிறார்கள். இப்படி பரவலாகத் தரப்படுகிறபொழுது, தேர்ச்சி பெறுகிற நேரத்திலே கூடுதலாக அந்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்ஸிலே சேர்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சியிலே இருக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை விகிதத்தை அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மகளிர் கல்வியை மேம்படுத்தினால் ஒழிய, நாம் முன்னுக்கு வர முடியாது. 'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்' என்றெல்லாம் சுட்டிக்காட்டப்படுகிறது. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற அரசாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தினாலேதான் அவர்களுடைய கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக பெண்களுக்கான வேலைவாய்ப்பை 50 சதவீதமாவது நாம் உயர்த்திக் கொடுத்தால்தான் பெண் கல்வி மேலும் மேலும் வளர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, குறைந்தபட்சம் தனியார் துறைகளிலாவது அவர்களுக்கு உடனடியாக 50 சதவீத இட ஒதுக்கீட்டை வேலைவாய்ப்புகளிலே உருவாக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அது பெண் கல்வியை ஊக்குவிப்பதற்கு ஒரு வழியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளி பாடத்திட்டத்திலே வேளாண்மைப் பிரிவைச் சேர்த்திருப்பதாக நான் அறிகிறேன். அதை வரவேற்கிற அதே நேரத்திலே, ஜாதி மத பூசல்களை வேரறுப்பதற்காக 'Humanism' என்று சொல்லக்கூடிய அந்த மனித நேய பாடப் பிரிவுகளை ஒன்றாம் வகுப்பு முதற்கொண்டே சொல்லிக் கொடுத்தால்கூட இந்த நாட்டிலே ஜாதி சமய பிணக்குகள்



குறைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதேபோல சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பாடப்பிரிவுகளைக்கூட மாணவர்களுடைய பாடத்திட்டங்களிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கம்ப்யூட்டர், பி.பி.ஏ. போன்ற பாடப் பிரிவுகளை சுயநிதிக் கல்லூரிகளில் அதிகமாக உள்ள பாடப்பிரிவுகளை அரசு கல்லூரியிலே அதிகமாகத் தொடங்குவதற்கு அரசு அனுமதிக்கவில்லை. ஏதோ ஒன்றிரண்டைத் தருகிறார்களே தவிர, பெருவாரியாக தனியார்களுக்கு வழங்கப்படுவதைப்போல தருவதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அதையும் நிவர்த்தி செய்து, அரசு கல்லூரியிலும் சுயநிதித் தொழில் தொடங்கப் பயன்படும் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 234 சட்டமன்றத் தொகுதிகளிலே பல தொகுதிகளிலே எந்தக் கல்லூரியுமே கிடையாது. என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே அப்படி எந்த ஒரு கல்லூரியுமே கிடையாது. ஆகவே, கல்லூரியே இல்லாத பல தொகுதிகள் இருக்கிறபோது அதை அரசு தன் கவனத்திலே கொண்டுவந்து அத்தகைய தொகுதிகளிலே அறிவியல் கல்லூரியோ தொழில் நுட்ப கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ ஏதாவது ஒரு கல்லூரியைத் திறப்பதற்கு முன் வந்தால் கல்லூரியே இல்லாத தொகுதிகளை உருவாக்கிய பெருமை தமிழக அரசைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலே உள்ள நூலகங்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான பாயிண்ட்— நாம் நூல்களைத் தேர்வு செய்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி அனுப்பப்படுகிறபோது 25 நூல்களையோ அல்லது 50 நூல்களையோ கூடுதலாக வாங்கி- 60-க்கு மேற்பட்ட நாடுகளிலே தமிழர்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தமிழர்கள் வசிக்கக்கூடிய நாடுகளிலே உள்ள நூலகங்களிலே 50 நூலகங்களைத் தேர்வு செய்து நம்முடைய தமிழக நூலகங்களுக்கு நூல்களை கொள்முதல் செய்கிற நேரத்திலே 500 நூல்களை கொள்முதல் செய்கிறார்கள் என்று சொன்னால், கூடுதலாக ஐம்பதோ, நூறோ நூல்களைக் கூடுதலாக வாங்கி அவற்றை இந்தியாவிலே இருக்கக்கூடிய அயல்நாட்டுத் தூதர்களின் மூலமாகக் கொடுத்தால் அந்த அயல்நாட்டுத் தமிழர்களுக்கு இந்த நூல்கள் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 ஏப்ரல் 15 பிற்பகல் 12-55

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் பல பணியாளர்கள் இளநிலை உதவியாளர்களாக 15 ஆண்டு காலமாகவும், உதவியாளர்களாக 17 ஆண்டு காலமாகவும், கண்காணிப்பாளர்களாக 19 ஆண்டு காலமாகவும் பதவி உயர்வு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு ஆசிரியர்-மாணவர் எண்ணிக்கை விகிதமானது 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருக்கிறது. கல்வித் தரத்தை மேம்படுத்திக்கொள்ள குறைந்தது 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அளவில் நியமிக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிச் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தனியார் பள்ளி ஆசிரியர்கள். அவர்களுடைய போஸ்டு சேங்ஷன் செய்கிறபோது அரசாங்கம் கொஞ்சம் கஞ்சத்தனமாக நடந்து கொள்வதாக பல தனியார் பள்ளி ஆசிரியர்கள், பல தனியார் பள்ளிகள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கூட விருத்தாசலத்தில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. விருத்தாசலத்திலே Danish Mission Higher Secondary School என்ற அந்தப் பள்ளியானது மிக சிறப்பான தேர்ச்சியை தந்து கொண்டிருக்கிற பள்ளி. ஆனால், அதற்கு போஸ்டு சேங்ஷன் செய்கிறபோது அவர்களுக்குக் குறைவாகத் தரப்படுகிறது என்ற ஒரு குறை இருக்கிறது. இந்தக் கல்வி ஆண்டிலாவது குறைந்தது 5 ஆசிரியர்களை அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர் பணிக்குச் செல்வதற்கு பல பேருக்கு எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ் மூலமாகக் கிடைக்கின்ற வாய்ப்பை அவர்கள் அடைவதற்குள் வயது எல்லாம் ஓடிவிடுகிறது. எனவே, குறைந்தது அந்த ஆசிரியர் பணிக்கான வயதுவரம்பையாவது இந்த அரசு ரத்து செய்திட வேண்டும். ஏன் என்றால் 10 ஆண்டுகள் ஆனாலும்கூட, 15 ஆண்டுகள் ஆனாலும்கூட அவர்களுக்குப் பணி கிடைப்பது இல்லை. எனவே, ஆசிரியர் பணிக்கு உள்ள வயது உச்ச வரம்பை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன் சார்.



1998 ஏப்ரல் 15] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

என்னுடைய தொகுதியான ஆண்டிமடம்— நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் அடிக்கடி வலியுறுத்திக்கொண்டு வருகிறேன்— மிக, மிக பின்தங்கியது மட்டுமல்ல, மிக மிக தீவிரமாக சிந்திப்பவர்கள் அதிகமாக இருக்கிற தொகுதியாக இருக்கிறது. அதனால், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்கு எல்லாம் பல நேரங்களில் இடர்பாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்காக அங்கே ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளியாவது, ஒரு தொழில்நுட்பக் கல்லூரியாவது, ஒரு பொறியியல் கல்லூரியாவது ஏதாவது ஒன்றை பெரிய மனது வைத்து தொடங்கித்தர ஆவன செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கல்வித் துறை மானியக் கோரிக்கையானது தமிழகத்தினுடைய அறியாமை இருளை அகற்றுகின்ற வகையில் மிகச் சிறப்பான வகையில் தீட்டப்பட்டு இருக்கிறது என்பதை நன்றியோடு தெரிவித்துப் பாராட்டி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. கோவிந்தன்.

***திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வலிமை படைத்த தமிழ் இனத்திற்கு அடிப்படையாக வலிமை சேர்ப்பது கல்வியே. அதை நினைவில் கொண்டுதான் நம்முடைய அரசு இந்த ஆண்டு தமிழகத்தில் உள்ள எல்லா குக்கிராமங்களிலும் கல்விக்கூடமே இல்லாத நிலை இல்லை என்ற நிலையை உருவாக்கி இந்த ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகளையும், அடுத்த ஆண்டு 400 தொடக்கப் பள்ளிகளையும் ஆரம்பிப்பதற்கு மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த அறிவிப்பு வெளியானவுடன் குக் கிராமங்களில் இருக்கிற மக்கள் எல்லாம் தங்களுடைய பிள்ளைகள் இனிமேல் வெளியூருக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற அளவில் உள்ளூரிலேயே படிக்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்திய தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கல்வி வளம் சிறக்க 50 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடங்கள் தொடங்க 3.52 கோடி ரூபாயும், 500 பள்ளிகளில் கூடுதல் வகுப்பு அறைகள் கட்ட 10 கோடி ரூபாயும், 300 பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்ட 10 கோடி ரூபாயும், ஒதுக்கப்படும் என்றும், 40 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 100 லட்சம் செலவில் ஆய்வு உபகரணங்கள் வழங்கப்படும் என்ற இந்த அறிவிப்பைக் கண்டு மாணவர்களின் கல்வி அறிவு தொலைநோக்கு அடிப்படையில் விழுமிய கருத்தின் அடிப்படையாக அமைந்துள்ளதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களின் இலவச சீருடைக்காக ரூபாய் 45 கோடியிலிருந்து ரூபாய் 57 கோடியாக உயர்த்தியுள்ளதையும், சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல், ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசப் பாட புத்தகங்கள் அளிப்பதைக் கண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.00

மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் பாராட்டும் ஒற்றைச் சாளர முறை வரும் ஆண்டில் தொழில்நுட்பப் பயிலகங்களிலும் அறிமுகப்படுத்தப்படும் என்னும் அறிவிப்பு மாணவர் உலகம் மகிழ்ந்து கொண்டாடும் அறிவிப்பாகும்.

1998-99 ஆம் ஆண்டில் 300 தொடக்கப பள்ளிகளைத தொடங்கவும், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு தீர்மானித்து, அதற்கேற்ப அடிப்படை வசதிகள், ஆசிரியர்களை அமைத்தல் போன்ற திட்டங்களை அறிவித்திருப்பது மக்கள் நலத் திட்டம் ஆகும்.

சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குவதும், கூடுதல் பதவிகளை உருவாக்கியும், எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர்களை அமர்த்திடவும், கல்வி வளர்ச்சிக்காகக் காணும் திட்டம் வேலை வாய்ப்புக்கு ஊக்கம் அளிக்கும் உன்னதத் திட்டமாகும்.

தொடக்கக் கல்வியில் அனைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் திட்ட அணுகுமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது சாலச் சிறந்தவையாக அமைந்துள்ளது.

1998-99 இல் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக— கிராமப்புறங்களில் 30 உயர்நிலைப் பள்ளிகளும், நகர்ப்புறங்களில் 10



உயர்நிலைப் பள்ளிகளும்— நிலை உயர்த்தப்படும் என்னும் அறிவிப்பு தமிழக அரசின் கொள்கை மற்றும் வழிகாட்டிகள் உயிரோட்டமுள்ளதாக இருக்கிறது என்பதைக் குறிக்கிறது.

வேளாண்மை தொடர்புடைய தொழிற்கல்விப் பாடத்திட்டங்களைத் தொடங்கவும், அதனை வலுப்படுத்த 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பல்திறன் உருவாக்கத்திற்கான முன்தொழிற் கல்விப் பாடப் பிரிவுகளை அமைத்து கற்பிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மேலும், என்னுடைய தொகுதியில் பல்லல குப்பம் என்ற நிடுநிலைப் பள்ளி கடந்த ஆண்டு 1 இலட்சம் ரூபாய் அரசுக்குச் செலுத்தி, உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்காகக் கருத்துரு வரப் பெற்றுள்ளது. அன்புகூர்ந்து, நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இவ்வாண்டில் அந்தப் பல்லல குப்பம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய ஐந்தாறு கிராமங்கள் உள்ளன. அங்கு படிக்கிற மாணவர்களெல்லாம் படிக்க வேண்டுமானால் ஏறக்குறைய நான்கைந்து கிலோமீட்டர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டும். அதை நினைவில்கொண்டுதான், தேவலாபுரம் ஊராட்சியில், இராமச்சந்திராபுரத்தில் ஒரு தொடக்கப்பள்ளியும், மிட்டாளம் ஊராட்சியில் பைரபல்லியில் ஒரு தொடக்கப்பள்ளியும், கார்கூர் ஊராட்சியில் மேல்கொத்தமாரி குப்பம் என்ற ஊரில் ஒரு தொடக்கப் பள்ளியும் ஆரம்பிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் வட்டத் தலைநகரங்களில் பெற்றோர், ஆசிரியர்கள் ஒன்றாக கிராமங்களில் கலந்துகொண்டு அந்தப் பள்ளிக்கு வேண்டிய அனைத்து உபகரணங்களையும் பெறுவதற்காகக் கல்வி மாநாடு நடத்தினார்கள். அதை இப்பொழுது நடத்துவதாகத் தெரியவில்லை. ஆகவே, வட்டத் தலைநகரங்களில் அதுபோன்று கல்வி மாநாடுகளை அமைத்தால், பள்ளியின் வளர்ச்சிக்கு அது உறுதுணையாக இருககுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டில் இருக்கின்ற உயர் படிப்பில் படித்த மாணவர்களெல்லாம் கல்லூரி செல்லவேண்டுமானால், வேலூர் அல்லது சென்னைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வறுமைக்கோட்டில் இருக்கின்ற மாணவர்களெல்லாம் தொடர்ந்து படிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, பேரணாம்பட்டில் அரசு கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்தின் தலைநகரான வேலூரில் சட்டக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று ஏற்கெனவே அம்மாவட்டத்தில் உள்ள மக்களெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் கருத்திற்கொண்டு வேலூரில் சட்டக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி கல்விக்காக நம்முடைய அரசு பல்வேறு வகையில் அதிகமான நிதியை ஒதுக்கி இன்று தமிழக மக்களெல்லாம், ஏழை எளிய மக்களெல்லாம் பாராட்டுகின்ற வகையில் நம்முடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அன்புகூர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொ[illegible]கிறேன்.

பொதுவாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த[illegible] வேறு சில கோரிக்கைகளை நான் விடுத்து அமர்கிறேன். பேரணாம்பட்டு ஒன்றியத்தில் வேல்பட்டி என்ற ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அது புறக்காவல் நிலையம். அதை முழுக்காவல் நிலையமாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அப்பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டால், பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பேரணாம்பட்டுக்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நலன் கருதி, அங்கே முழுக்காவல் நிலையத்தை ஏற்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், ஆலங்காயம் ஒன்றிய[illegible]தில் ஒரு பகுதி வருகிறது. அந்த ஆலங்காயம் ஒன்றியத்தில் வேல[illegible] [illegible]ற ஊரில் தொடக்கப் பள்ளி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று [illegible]க்கொண்டு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு [illegible]ன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1.05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வா. சந்தானம்.

***திரு. வா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வளர்ந்து வருகின்ற இந்தச் சமுதாயம் சீரோடும் சிறப்போடும் ஜனநாயகக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்றால், அதற்குக் கல்வி என்பது மிக



அவசியமானது என்கிற நிலையைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஏறத்தாழ 600 கோடி ரூபாய் கல்விக்காக அதிகப்படியான நிதியை ஒதுக்கி இந்தக் கல்வி வளர்ச்சியிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து."

என்று சொல்வார்கள். கல்வி என்பது கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம். அறியாமையைப் போக்குகின்ற ஒரு மாமருந்து என்று குறிப்பிடுகிறார்கள்.

இன்றைக்கு நாம் கிராமப்புறங்களிலே கல்வியை வளர்க்க வேண்டும், கல்விச் சாலைகள் இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு நாம் நிதியை ஒதுக்கி, கல்விச் சாலைகளைத் திறந்தாலும்கூட, இன்றைக்கு நாமே ஒத்துக்கொண்டிருக்கிறோம், கிராமப்புறங்களிலேயிருந்து வருகின்ற மாணவர்களுக்கு 15 விழுக்காடு பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூ[illegible]களில் அதிகப்படியாக வழங்க வேண்டுமென்று. அது பாராட[illegible]டியதாக இருந்தாலும்கூட, கிராமப்புறங்களிலேயிருக்கின்ற க[illegible]ரம் குறைந்துவிட்டது அதை ஈடு செய்வதற்காகத்தான் நாம் அந்த மாணவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் காட்டுகிறோம் என்கிற அளவிலே நாம் அதை ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்த அரசு எல்லாவித சலுகைகளையும் செய்து கொடுக்கிறது. பள்ளிகளை அமைத்துத் தருகிறது. அப்படியிருந்தும்கூட, இன்றைக்கு தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே 100-க்கு 100தேர்ச்சி பெறுகிறார்கள். அதிகப்படியான மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். அரசால் நடத்தப்படுகின்ற பள்ளிகளிலே ஏன் அப்படித் தேர்ச்சி பெற முடியவில்லை, ஏன் அதிகப்படியான மார்க்குகளைப் பெறமுடியவில்லை என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசு நல்ல

எண்ணத்தோடு மற்ற எல்லா துறைகளுக்கும் ஒதுக்குகின்ற நிதிகளைக் காட்டிலும் மிக அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, இந்தத் துறையை மேம்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

எனவே, இந்தக் கல்வித் துறையை நிர்வகிக்கிற அத்தனை பேருக்கும், கல்வி என்பது கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் என்பதை நமது மாணவர்களுக்கு கல்லூரியிலும் சரி, தொடக்கக் கல்வியிலும் சரி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியிலும் சரி, கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் அதை உணர்ந்து செயல்படுவதற்கு நமது அதிகாரிகள் மிகுந்த கடமை உணர்வோடு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டால்தான், இந்த அரசு கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்படுத்துகின்ற அந்த நல்ல திட்டம் நாட்டு மக்களுக்குச் சென்றடைகின்ற ஒரு நிலை இருக்கும்.

இன்றைக்கு அரசு இவ்வளவு அக்கறை காட்டினாலும்கூட, இந்தக் கல்வியினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை, நமது குழந்தைகள் இந்தக் கல்வியினுடைய பயனைப் பெற்று முன்னுக்கு வரவில்லை என்ற காரணத்தினால், இன்றைக்கு பெற்றோர்களிடத்திலே பள்ளிகளுக்கு மாணவர்களை அனுப்புகின்ற ஒரு எண்ணம்கூட குறைந்து வருகிறது. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், கல்விக்கு நிதி ஒதுக்குகின்ற அதே நேரத்தில், இன்றைக்கு நமது நாட்டைப் பொறுத்தளவிலே கல்வி என்பது அறிவை வளர்த்துக்கொள்வதற்கு மட்டும் பயிலுகின்ற ஒரு நிலையில் நமது பொருளாதார நிலையில்லை. அந்தக் கல்வியைக் கற்பதன் மூலம் ஏதாவது அரசு துறையிலே ஒரு உத்தியோகத்தைப் பெற வேண்டும், ஒரு பொறுப்பினைப் பெற வேண்டும் என்கிற நோக்கத்தோடு இன்றைக்கு பெற்றோர்களெல்லாம் கல்விக் கூடங்களுக்கு பிள்ளைகளை அனுப்புகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வேலைவாய்ப்பை தருகின்ற ஒரு நிலையையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-10

இந்த வேலைவாய்ப்பைப் பெறுகின்ற அளவிலே நம்முடைய கல்வியினுடைய தரத்தை மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கு மற்ற கல்வியைக் காட்டிலும் தொழில்துறைக் கல்வியில் அவர்கள் பயன் பெறுகின்ற அளவிலே அந்தக் கல்வியை நாம் அதிகமாக ஏற்படுத்தித் தர வேண்டும். தொழில்துறையிலே இருக்கின்ற Polytechnic, engineering



கல்லூரி போன்றவற்றை எல்லாம் அரசு ஏற்று நடத்துவதைக் காட்டிலும் இன்றைக்கு தனியார்கள் அதிகமாக ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தனியார்கள் அவைகளையெல்லாம், நமது நாட்டிலேயிருக்கின்ற மாணவர்களுக்குப் பயன்படுகின்ற நிலையிலே இல்லாது அதை ஒரு வியாபாரமாக ஏற்றுக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று பல்வேறு உறுப்பினர்கள்கூட இங்கு குறிப்பிட்டார்கள்.

அதுபோலத்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்துகின்றவர்கள் எல்லாம். அந்தப் பயிற்சிப் பள்ளியை தனியார்கள் நடத்துகின்றபோது கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றி நடத்துகிறார்கள். ஏறக்குறைய ஆயிரம் மார்க்குகள் பெற்றிருக்கின்றவர்களுக்குக்கூட அங்கே இடம் கிடைக்கவில்லை, ஆனால் மிகக்குறைந்த மார்க்குகள் பெற்றவர்கள் அதிகப்படியான பணத்தைக் கொடுத்தால் இடம் கொடுக்கின்ற ஒரு நிலைதான் இன்றைக்கும் இருக்கின்றது. நம்மிடம் பயிற்சிப் பள்ளி இயக்குநரகம் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் இதையெல்லாம் தயவுசெய்து பார்க்க வேண்டும். ஒரு பயிற்சிப் பள்ளியிலே ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையாகப் பெற்றுக்கொண்டு, அதோடு அவர்களின் கல்விக்கென்று வேறு ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 30,000 ரூபாய் பெறுகின்றார்கள். ஆக, ஒரு இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலே ஆசிரியராகப் பயிற்சி பெறுவதற்கு ஒரு மாணவன் ஒரு இலட்சத்து 30,000 ரூபாய் கொடுத்துப் பயிற்சி பெறுகின்ற ஒரு நிலை இருந்தால் இந்தச் சமுதாயத்திலே திறமையுள்ள மாணவனுக்கு தன்னுடைய உழைப்பால் அதிகபடியான மதிப்பெண்களை பெற்றிருக்கின்ற மாணவனுக்கெல்லாம் அங்கே எப்படி இடம் இருக்கும் ஆனால் அரசு நடத்துகின்ற பயிற்சிப் பள்ளிகளிலே வேறு நிலைமை கடைபிடிக்கப்படுகிறது. அதன் மூலமாக ஒரு சிலர்தான் பயன் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே, அப்படித் தனியார்கள் நடத்துகின்ற பயிற்சிப் பள்ளிகளிலே எந்த அளவிற்கு அவர்கள் கட்டணம் வாங்கிக்கொள்ளலாம் என்கின்ற ஒரு திட்டத்தை அரசு செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், குறிப்பாக பட்டதாரிகளுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தேவையில்லை, இனி தொடங்கக் கூடாது என்று அரசு முடிவு எடுத்து, கடந்த சில

ஆண்டுகளாகத் தொடங்கப்படவேயில்லை. இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும்கூட ஏறத்தாழ 210, 212 பள்ளிக்கூடங்கள் நீதிமன்றத் தீர்ப்பால் அடிபட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டுவிட்டன. அதற்கு முன்னால் நடத்தப்பட்ட, பல ஆண்டுகளாக நடத்திய அப்படிப்பட்ட சுயநிதி அல்லது தனியார் Secondary Grade ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்தான் இருக்கின்றன. அந்தப் பள்ளியிலே ஒரு இடத்திற்கு 1,30,000 ரூபாய் யாராவது கொடுத்திருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகம். ஒருவேளை, அப்படி யாராவது கொடுத்தால், அது பற்றி ஒரு புகார் கிடைக்குமானால்— சுயநிதிக் கல்லூரியிலே மற்ற மாநிலங்களிலே நடைபெற்ற காரணத்தால் நம்முடைய மாநிலத்திலும் அது வழக்கத்திற்கு வந்து இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது—உதவி பெறுகின்ற கல்லூரியாக இருந்து, அவர்கள் அப்படி யாராவது நிதி வாங்கியிருப்பார்களேயானால், குற்றச்சாட்டு வருமானால், தகுந்த சான்று இருக்குமானால் விசாரித்து ஒழுங்குபடுத்த வாய்ப்புண்டு.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Secondary Grade இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்காக உசிலம்பட்டியிலே சென்ற ஆண்டு ஏறக்குறைய 20 மாணவர்களிடமிருந்து இந்தத் தொகை பெறப்பட்டிருக்கிறது. அந்தப் பெற்றோர்களிடத்திலேயிருந்து எழுதி வாங்கி நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்க முடியும். இவ்வாறு உறுதியாக நடந்திருக்கிறது இதை என்னால் நிரூபிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 1-15*

**திரு. லா. சந்தானம்:** இன்றைக்குள்ள தொடக்கப்பள்ளிகள் எல்லாம் ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்த காரணத்தால் அங்கேயிருக்கின்ற பள்ளிகளையெல்லாம் சீர் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்களினுடைய நிதியிலிருந்து சீர் செய்கின்ற ஒரு நிலை இருந்தது. இன்றைக்கு அந்த நிலை இல்லாத காரணத்தால், ஏற்கெனவே நாம் கட்டிக் கொடுத்திருக்கின்ற பள்ளிகள் எல்லாம் மிகுந்து பாழடைந்து இருக்கின்றன. அந்தப் பள்ளிகளையெல்லாம் சீர் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் முன்வருவதில்லை. காரணம் அவர்களுக்கு எந்தவித



பொறுப்பும் அந்தப் பள்ளிகளில் இல்லை. அவர்கள் முன்வரவில்லை என்ற காரணத்தால் அரசு அதற்கென்று தனியாக நிதியை ஒதுக்கி, எப்படி நாம் புதிதாக பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்குகிறோமோ அதைப்போல பழைய பள்ளிக்கூடங்களை சீர் செய்வதற்காக தனியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும், பல்கலைக் கழகங்களில் பல இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் இவர்களுக்கு இட ஒதுக்கீட்டு முறை சரியாகக் கடைபிடிக்கப்படுவதில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இன்றைக்கு மதுரை, காரைக்குடி போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்களில் அவர்களுக்கு உள்ள ஒதுக்கீட்டை தருவதில்லை என்று புகார் சொல்லக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு இந்த ஒதுக்கீட்டு முறையை, முறையாக அமல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

கல்லூரிக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி சற்றுக் குறைவாக இருக்கிறது. நமது அரசு அங்கீகாரம் பெற்ற பல கல்லூரிகளில் பேராசிரியர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது அந்தக் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமிக்க நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி,

**THIRU B. VENKATASAMY:** Honourable Deputy Speaker Sir, in support of the cut motions already given by me for the Demands for Grants, 1998-99, pertaining to Education, I would like to say a few words. I want to appreciate the Government for having introduced a lot of new schemes to develop education in a proper way. In spite of the fact that 20 per cent of the total budget has been allotted for Education, there is no proper development in this field. There is a Constitutional mandate to provide free and compulsory elementary education within 10 years. But even after 50 years of independence and nearly 50 years after we got our Constitution, we could only have a literacy rate of less than 50 per cent in entire India. However, I am very happy that our Government has taken a lot of interest to see that at least within the next two or three years, illiteracy is eradicated.

Our Hon. Deputy Speaker mentioned before beginning the business today that there is no wealth equal to good education. Education is very important for any Nation. The Nations which are highly educated have no poverty and they are all very happy. We have also got very good citizens and intellectuals in Tamil Nadu. But we must give very good education like the education given in foreign countries. From the beginning itself the Britishers have given an educational system suitable for clerical jobs, officers and white collar jobs. There is no use in following the same system even now. In this system what is a boy going to do after completing plus two? He has to go and loiter in the streets. That is what is actually happening. Afterwards, he has to go to some training school or polytechnic. I, therefore, request the Hon. Education Minister and the Hon. Chief Minister to see that even if a boy passes plus two he must be fit for any job. You have to change the entire system of education and see that job oriented education is given to the pupil who are interested. Then only the wealth of Tamil Nadu can be improved.

In the Policy Note you have mentioned that new schools would be started in about 700 hamlets to promote education. You have also set a target of opening one Middle School for every three Primary Schools. It has been stated that one lakh students have been enrolled under Vocational Education. You have also stated that these students have to be given training as in the case of I.T.I.s and Polytechnics.

*பிற்பகல் 1-20*

It has been mentioned in the Policy Note that 60 Middle Schools in rural areas and 20 Middle Schools in urban areas are to be upgraded. I am very happy about this. In my Constituency, In Kalingapuram and Davasanapalli areas, they have applied for the upgradation of the High Schools. In Bagalur the higher secondary section for girls should be separated. I understand that this has also come to the notice of the Government. I request the Hon. Minister for Education to see that this is done.

Education with the aid of Television is more essential. But now-a-days Television is focusing on a lot of other things. I request the Hon. Minister for Education to see that TV Channels broadcast programmes for the



development of Education. Because if a lesson is taught in a TV it is more easily understandable. I request the Hon. Minister for Education to see that it is included in the Budget.

Introduction of vocational education in Higher Secondary Schools is a good scheme viz. introduction of Agriculture, Home Science, Commerce, Engineering, Technology and Health are really very good. So far 16% of the students who have studied in the vocational institutions have been benefitted. So, I request the Hon. Minister to see that job oriented Education is taught in the Schools.

Regarding Secondary Grade Teachers, in my Constituency, about 50 posts of Secondary Grade Teachers reserved for SC and ST, are vacant because there are no trained Teachers. I request that a Training School is opened because there are no Telugu Secondary Grade Teachers to teach the Telugu Classes. I request that you must also provide for this. I request sufficient SC and ST Training Schools should be opened for the minorities.

Sir, about 250 Telugu Teachers are on the verge of retirement. If they go out, no Teachers will be available for teaching Telugu. So, I request that more students should be trained in Telugu and for this a training institution should be opened and students should be admitted so as to fill up the posts.

Sir, Tamil is our official language. We are in the Telugu area. Some time back Hon. Minister Thiru V. Mullaiventhan and Hon. Minister Dr. M. Thamizhkudimagan came to Hosur and discussed with the officials about the implementation of Tamil Language in Telugu Schools. Now we are reading purely in Telugu. So, we are not in a position to get employment opportunities in Tamil Nadu Government. So, there is a demand for an additional language, i.e. Tamil. Those who are studying in their mother tongue, viz., Telugu, Kannada or Urdu, they want to learn Tamil as an additional language so as to understand the policies and principles and get employment opportunities in Tamil Nadu. Our Hon. Ministers have already discussed about this with the officers there. I request the Hon. Minister for Education........

*மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் நீண்ட காலமாக இந்தக் கோரிக்கையினைத் தெரிவித்துக் கொண்டிருப்பதனால், இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆகியோரோடு பேசியிருக்கிறோம். அது தொடர்பாக நானும், மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைச்சரும் இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஓசூரிலேயே அனைத்துக் கல்வி அலுவலர்களையும் கொண்ட கூட்டத்தைக் கூட்டினோம். முறையான அறிக்கை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தரப்பட்டபின் அது செயல்படுத்தப்படும் என்பதை மட்டும் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** நன்றி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓசூர் பகுதியிலே தமிழ் மொழிப் பாடமே இல்லாத பள்ளிக்கூடங்கள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களும் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற நம்முடைய தமிழக அரசு, இப்படி தமிழ்ப் பாடமே இல்லாமல் பள்ளிகள் தமிழ்நாட்டிலே இருப்பதைச் சற்று யோசித்து, கூடியவிரைவிலே அங்கே தமிழ்ப் பாடத்தைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I thank the Hon. Minister for giving me positive answer. It is more important that the interest of the linguistic minorities should be protected. So, I request that Tamil should be introduced as an additional language in the Telugu and Kannada Schools. I think there is a controversy in this matter because language is a sensitive issue. I request the Education Minister to see that an Expert Committee is appointed for implementing this. I request that local people are also consulted very properly in this regard.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டுகூட தங்களுடைய தெலுங்கு படிக்கிற பிள்ளைகள் தமிழும் படிக்கத் தயார் என்று தெரிவித்தார்கள். நம்முடைய பாடத்



திட்டத்தில் 3-வது மொழியாக ஒரு மொழியை அது தமிழாக இருந்தாலும்கூட இடம்பெறச் செய்ய— நம்முடைய பாடத்திட்ட அடிப்படையில் உள்ள— விதிகள் இடம் தரவில்லை. இருமொழிகள்தான் நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து பள்ளிக்கூடங்களிலும் இருக்கலாம் என்ற அறிஞர் அண்ணாவினுடைய தீர்மானத்தினை நாம் செயல்படுத்துகிறோம். ஆகவே, மாணவர்கள் தமிழ் படிக்க விரும்பினால் Optional ஆக மாலை நேரத்தில், வகுப்பு நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலேதான் அதைப் படிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் 20 மாணவர்களாவது, 30 மாணவர்களாவது ஒரு பள்ளிக்கூடத்தில் தமிழ் படிக்க விரும்பி முன்வருவார்கள் என்று சொல்வார்களானால் அவர்களுக்கு அந்த ஏற்பாடு செய்யலாம். 5 மாணவர்கள், 3 மாணவர்கள் வருகிற இடத்திலே எல்லாம் ஏற்பாடு செய்ய முடியாது. Bi-lingual-ஆக இருக்கிற இருமொழி வழங்குகிற சில பள்ளிகள் இருக்கின்றன. தமிழ் வகுப்பும் இருக்கின்றது, தெலுங்கு வகுப்பும் இருக்கின்றது. அந்தப் பள்ளிக்கூடங்களில் தமிழ் இடம்பெற்றிருக்கிறது. தெலுங்கு மட்டுமே இருக்கக்கூடிய அல்லது கன்னடம் மட்டுமே படிக்கக்கூடிய மாணவர்கள் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் குறைந்தது 20, 25 மாணவர்கள் இருப்பார்களேயானால் ஒரு ஆசிரியரை நியமிக்கலாம் என்ற அடிப்படையில் அரசு ஆலோசனை செய்யும்.

**THIRU B. VENKATASAMY:** Honourable Deputy Speaker, Sir....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் தமிழே தெரியாத ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதாக ஒரு புகார் வந்திருக்கிறது. அவர்களுக்கு தெலுங்கு மட்டும்தான் தெரியும், தமிழே தெரியாது. ஆகவே மாணவர்கள் மிக பாதிப்பு அடைகிறார்கள் என்று எனக்கு ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்க முடியாது. ஓசூர் வட்டாரத்திலே, எல்லை வட்டாரங்களிலே தமிழ் படிக்காதவர்கள் இருக்கிறார்களே தவிர, தமிழ் பேசத் தெரியாதவர்கள் இருக்க

மாட்டார்கள். இருந்தாலும்கூட அங்கே இருக்கிற மைனாரிட்டி பள்ளிக்கூடங்கள் என்று அழைக்கப்படுகிற தெலுங்குக் கல்வி வழங்குகிற பள்ளிக்கூடங்களில் தெலுங்கு மாணவர்களுக்கு தெலுங்கு ஆசிரியர்களை நியமிக்கிறபோது, அவர்கள் தெலுங்குதான் அறிந்தவர்களாக இருப்பார்கள். தமிழ் அறியவில்லை என்று சொல்லிக்கொள்ள அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

**THIRU B. VENKATASAMY:** Honourable Deputy Speaker, Sir, my request is that you must arrange to teach Tamil compulsorily in every school to all and not to merely 15 pupil. That is our request.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டாயமாகத் தமிழைப் பயிற்றுவிப்பது என்பது அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருக்க முடியாது. இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அகில இந்தியாவிலும் எல்லா மாநிலங்களிலும் எந்த மொழியையும் கட்டாயப்படுத்த முடியாது. தமிழ் மொழி படிக்காமல் தெலுங்கோ, மலையாளமோ படிக்கக்கூடிய உரிமை உள்ளவர்களாக இருக்கிற மைனாரிட்டி என்ற தகுதி பெற்றவர்கள் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை நடத்துவார்களேயானால் அவர்களுக்குத் தமிழை விருப்பப்பாடமாக, பள்ளிக்கூட நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலேதான் நடத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதிலே திரு. வெங்கடசாமி அவர்கள் இரண்டுவிதமான கருத்தைத் தெரிவிக்கிறார்கள். வகுப்பு நேரத்திலே தமிழை நடத்த வேண்டுமென்றால் இப்போதுள்ள பாடத்திட்ட முறையில் மூன்றாவது மொழிக்கு நாம் இடம் தர முடியாது. அப்படித் தமிழுக்கு இடம் தேடி நாம் ஒகூரிலே நுழைந்தால இந்தி இங்கே நுழையும். இந்தி நுழைவதைத் தடுப்பதற்காக இருமொழித் திட்டம் அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டது. ஆகவே இந்த அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை மாற்றிக்கொள்ளாது. மூன்றாவது மொழி படிக்க விரும்பினால் அதற்கு உதவி செய்கிற திட்டமாகத்தான் அரசு இதைக் கருதமுடியும்.

**THIRU B. VENKATASAMY:** We want to read Tamil compulsorily in addition to Telugu. Otherwise, we will not be able to get job opportunities in Tamil Nadu. Since it is a policy matter, you can discuss and decide it. I leave this matter to the Hon'ble Chief Minister and Hon'ble Education Minister.



Coming to the other points..... (gong was sounded) I will finish within two minutes.

**HON. DEPUTY SPEAKER:** Please finish within a minute.

**THIRU B. VENKATASAMY:** Deputy Speaker Sir, I will finish within a minute.

Regarding Physical Education, it has to be improved. I also request that a Stadium be constructed at Hosur.

Next, the capitation fees collected by Private Institutions for higher education is too much and it has to be curbed. There are one third of people in Tamil Nadu who are speaking Telugu. So, I request you to see that Telugu is made as a Second Official Language in Tamil Nadu, Sir.

*பிற்பகல் 1-30*

In Andhra Pradesh 13% Urdu speaking people are there. Their Government have made Urdu as a second official language. Similarly, I request you to see that Telugu is made a second official language in Tamil Nadu where one third of the population are Telugus.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*118. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் ஆங்கிலம்).*

[1998 ஏப்ரல் 15

*119. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். (1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).*

*120. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).*

*121. 1996-97ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இருபத்தி ஆறாம் ஆண்டறிக்கை. (1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ்).*

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

*54. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மையில் ஆராய்ச்சிப் படைப்புகள். (1997-98) (தமிழ்).*

*55. மானியக் கோரிக்கை எண் 17-பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ்).*

*56. மானியக் கோரிக்கை எண் 17-உயர் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).*



1998 ஏப்ரல் 15]

**இணைப்பு - I**

**[368 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]**

## பள்ளிக் கல்வித் துறை

### தொலைநோக்குக் கொள்கை

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

*என்பது வள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது. பொருளாதார முன்னேற்றம் அடையாத, ஆனால் கல்வித்தரம் முன்னேறிய நாடுகளில்கூட இதைக் கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியடைவதுமன்றி வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகத் துய்க்க, கல்வி கற்றவனால் இயலும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்தி சாதகமாக்கிக் கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளின் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும், கல்வி வழி செய்கிறது. மக்களிடையே கல்வியறிவு பெருகிய நாடுகளில் மக்கள் உடல்நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னேறி, நோய்களைத் தடுப்பதில் முன்னெச்சரிக்கையாக இருத்தல் போன்றவற்றால் குழந்தைகள், மகளிர், வறியர் ஆகியோரிடையேயும், நோயற்ற வாழ்க்கை அமைந்திருப்பது சுட்டிடும் உண்மையாகும். இத்தகைய பயன்மிக்கக் கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே கல்வித் துறையின் நோக்கமாகும்.*

*2. தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் (1991 மக்கட் கணக்கெடுப்பு) 1.80 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவிகிதத்தினர். ஆதிதிராவிடர் வகுப்பினரில் 65 சதவிகிதத்தினர்*

[1998 ஏப்ரல் 15

கல்வி அறிவு பெறாதவர். மலைவாழ் மக்களில் 79 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாய குறிக்கோள்.

3. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எய்த, கல்வி கற்கும் வசதி பெற வேண்டியவர்களின் சூழ்நிலை தன்மையின் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேரும் வயதை அடைகின்றனர். இதைத்தவிர பல்வேறு காரணங்களால் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிற்பவர் (இளம் வயதினர்) எண்ணிக்கை ஒரு புறம்; முதியோர் உள்ளிட்டு 180 இலட்சம் கல்வி கற்காதவர்கள் எண்ணிக்கை மற்றொருபுறம்; இவ்வகையில் அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

4. தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து விடுபட்டுள்ள சிற்றூர்களில் அடிப்படைக் கல்வி வசதி ஏற்படுத்துவதும்,

தமிழகத்தில் அமைந்துள்ள பலநிலையிலுள்ள கல்வி நிலைகளிலும் அமைந்துள்ள உள்கட்டமைப்பையும் (infrastructure) சூழ்நிலையையும் மேம்படுத்தி, பள்ளி மாணவர்களுக்கு கற்பதை விரும்பி ஏற்கும் இனிமையான பட்டறிவாக்கி, மேலும் தொடராது இடைநிற்றலை குறைப்பதும்.

பள்ளிகளில் மாணவர் பெறும் கல்வி, அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் அறிவை வளர்க்கும் வகையிலும், நற்பண்புகள் தழைக்கும் வாயிலாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், ஏற்ற அடிப்படையாகவும் அமைய ஏற்ற வகையில் கற்பித்தல் அமையவும்,

ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கல்வி கட்டமைப்பில் கல்வி பெறாமல் விடுபட்ட மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

இதன் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் துறைகளின் செயற்பாடும் அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த



1998 ஏப்ரல் 15]

முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக்கல்வி இயக்குநரகம், பள்ளிக்கல்வி இயக்குநரகம், பள்ளிச்சாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பாடநூல் நிறுவனம், நூலகத் துறை மற்றும் விளையாட்டுத் துறை ஆகியவையும் தத்தம் பணியில் சிறக்க ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படும்.

## 1998-99 ஆம் ஆண்டின் சிறப்புகள்

5. தொலைநோக்குக் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்டம் இவ்வாண்டு தீட்டப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்த புதிய தொடக்கக் கல்விப் பள்ளிகள் தொடங்கவும், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் திட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த பல்வேறு இயல்பான நடவடிக்கைக்கு மேலாக, முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவுகளையும் நடவடிக்கைகளையும் இவ்வாண்டு இத்துறை மேற்கொண்டுள்ளது.

7. அகில இந்தியக் கல்வி ஆய்வுப் புள்ளிவிவர அடிப்படையில், தமிழகத்தில் சுமார் 700 கிராமங்களில் இன்னமும் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளிகள் வசதிகள் ஏற்படுத்தப்படவில்லையெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இந்தச் சிற்றூர்கள் அனைத்திலும் 1998-99-லும், 1999-2000-லும் ஆக இரண்டு ஆண்டுகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கி 21-ம் நூற்றாண்டின் முதல் ஆண்டில் தொடக்கப் பள்ளியில்லாத சிற்றூர்களே இல்லையென்ற ஒரு முடிவான நிலையை எய்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 1998-99 ஆம் ஆண்டில் 300 சிற்றூர்களில் புதிய பள்ளிகள் தொடங்கப்படும்.

8. நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் கற்பிக்கும் திறனை உயர்த்த அறிவியல், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிக்க பட்டதாரி ஆசிரியர்களைப் படிப்படியாக நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான முதல் முயற்சியும் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

[1998 ஏப்ரல் 15

9. பள்ளிக்கல்வியைப் பொறுத்தவரையில் சிறந்த முறையில் கற்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க போதிய வகுப்பறைகள் கட்டுதல், அறிவியல் கூடங்கள் கட்டுதல், குடிநீர் வசதி அளித்தல், குறிப்பாக மாணவிகளுக்கு கழிப்பிடங்கள் அமைத்தல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், நூலக வசதி ஏற்படுத்தித் தருதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வாண்டு கூடுதலான முயற்சிகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

10. பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் பயனுள்ள வகையில் வேலைவாய்ப்புகளைத் தேடிக் கொள்ளவும், சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும், அவர்களுடைய திறன்களை வளர்க்க தொழிற்கல்வித் திட்டத்தில் தகுந்த முயற்சி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பலவகைப்பட்ட தொழிற் திறன்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு திட்ட வரைவு தயாரிக்கவும், கணினி பாடத் திட்டப் பயிற்சியை விரிவுபடுத்தவும் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. பள்ளிக் கல்வியின் இயல்பான நடவடிக்கைகளில் மேற்கொண்டுள்ள இந்த மாற்றங்கள் பள்ளிக் கல்வித் திறனை வளர்த்திடும் தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதில் விரைவான முன்னேற்றத்தை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மாநில வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வி குறித்த நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை **17** - கல்வி என்ற தலைப்பில், 1998-99 ஆம் ஆண்டுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ. 3601.08 கோடி ஆகும். இந்த ஒதுக்கீடு, நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கிலான மொத்த செலவில் (ரூ. 18048.04 கோடி) [illegible] விழுக்காடாகும். பள்ளிக்கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 3136.61 கோடி ஆகும். இதில் ரூ. 167.22 கோடி திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு வருவாய்க் கணக்கிலான மொத்த செலவில் 17.38 விழுக்காடு ஆகும். அனைவருக்கும் கல்வி என்னும் இவ்வரசின் சீரிய குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற வகை செய்யப்பட்டுள்ளதை இதன் மூலம் கண்கூடாக அறியலாம்.



1998 ஏப்ரல் 15]

**அட்டவணை - 1**

**1998-99 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு - பள்ளிக் கல்வி.**

| கணக்குத் தலைப்பு. | | திட்டப்பணி. | திட்டத்தில் சேராதது. (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம். |
|---|---|---|---|---|
| 2059 | அரசுப் பள்ளிகள் கட்டிடங்கள்- பராமரித்தலும் - செப்பனிடுதலும் | | 774.80 | 774.80 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 01 | தொடக்கக் கல்வி | 8[illegible]4.49 | 159757.52 | 168372.01 |
| 02 | இடைநிலைக் கல்வி | [illegible].35 | 124004.11 | 128710.46 |
| 04 | முதியோர் கல்வி | 78[illegible] | 45.23 | 830.17 |
| 05 | மொழி வளர்ச்சி | 1.[illegible] | 244.01 | 245.29 |
| 80 | பொதுவானவை - ஏனைய செலவு | 0.01 | 6674.00 | 6674.01 |
| மொத்தம் - பொதுக்கல்வி | | 14107.07 | 290724.87 | 304831.94 |
| 2204 | விளையாட்டுக்களும் இளைஞர் நலனும் | 1065.28 | 86.43 | 1151.71 |
| 2205 | கலையும், பண்பாடும் பொது நூலகங்கள் | 37.25 | 2247.56 | 2284.81 |
| 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் | 1470.91 | 17.97 | 1488.88 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | 0.01 | 7.00 | 7.01 |
| | திருப்பி வசூலிக்கப் பட்டவை | 41.51 | 3080.20 | 3121.71 |
| பெருமொத்தம் | | **16722.03** | **296938.83** | **313660.86** |

[1998 ஏப்ரல் 15

## அட்டவணை - 2

### பிற துறைகளில், பள்ளிக்கல்வி சார்ந்த சில திட்டங்களுக்கும் கீழ்வரும் கணக்குத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவுத் திட்ட மதிப்பீடு

| கணக்குத் தலைப்பு. | திட்டப்பணி. | திட்டம் சேராதது (ரூபாய் இலட்சத்தில்). | மொத்தம். |
|---|---|---|---|
| அ. வருவாய் கணக்கிற்குட்பட்டது | 34.00 | .. | 34.00 |
| மானியக் கோரிக்கை எண் 27 | | | |
| சமுதாய மேம்பாடு - சமூகக் கல்வி | | | |
| மானியக் கோரிக்கை எண் 36 | .. | .. | .. |
| பொதுப் பணிகள் - அரசு இடைநிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் - சிறு பணிகள் | | | |
| மானியக் கோரிக்கை எண் 41 | | | |
| 2071 அரசு மான்யம் பெறுகின்ற கல்வி நிலையங்களில் பணியாளர்களுக்கு ஒய்வூதியம் | .. | 36197.78 | 36197.78 |
| ஆ. வருவாய் கணக்கிற்கு உட்படாதது | | | |
| மானியக் கோரிக்கை எண் 56 | 1836.76 | .. | 1836.76 |
| 4202 அரசு இடைநிலைக்கல்வி நிலையங்களுக்கு கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு | | | |
| மொத்தம் | **1870.76** | **36197.78** | **38068.54** |



1998 ஏப்ரல் 15]

## 1998-99 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப்பட்டியல்.

### பள்ளிக்கல்வித் துறை.

| தொடர் எண். (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | இறுதிச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) (3) | 1998-99இல் செலவு. (4) |
|---|---|---|---|
| | தொடக்கக் கல்வி. | | |
| 1. | 300 புதிய தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தல். | 153.97 | 128.31 |
| 2. | 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல். | 102.65 | 85.54 |
| 3. | நடுநிலைப் பள்ளிகளுக்கு 25 தமிழாசிரியர் பதவிகளை ஏற்படுத்தல். | 15.77 | 13.15 |
| 4. | நடுநிலைப் பள்ளிகளுக்கு 100 இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு பதிலாக 100 அறிவியல், கணித, பட்டதாரி ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்தல். | 11.79 | 9.82 |
| 5. | தொடக்கக் கல்வி உதவி அலுவலர்கள் அலுவலகத்திற்குக் கணக்குத் தணிக்கைக்காக தணிக்கைப் பிரிவை ஏற்படுத்தல். | 9.64 | 8.03 |
| 6. | இயக்ககத்தில் துணைப் பணியாளர்களுடன், இணை இயக்குநர் பதவி ஒன்றை ஏற்படுத்தல். | 6.13 | 5.59 |
| 7. | மாவட்டத் தொடக்கக் கல்வி அதிகாரிகளுக்காக புதிதாக 4 ஜீப்புகள் வாங்குதல். | 16.80 | 16.80 |
| 8. | சிறந்த பள்ளிகளுக்கு பரிசு. | 2.42 | 2.42 |
| 9. | 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல். | 194.03 | 161.70 |
| 10. | 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல். | 281.40 | 234.54 |

[1998 ஏப்ரல் 15

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 11. | 200 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல சாதனங்கள் வழங்குதல். | 60.00 | 60.00 |
| 12. | புதிதாக நிலை உயர்த்தப்பட்ட 40 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல். | 40.00 | 40.00 |
| 13. | 200 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு தண்ணீர் வசதியுடன் கழிப்பிட அறைகளைக் கட்டுதல். | 160.00 | 160.00 |
| 14. | 200 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல். | 50.00 | 50.00 |
| 15. | 60 உயர்நிலைப் பள்ளிகளில் பலதிறப் பயிற்சித் திட்டத்திற்காக வாழ்க்கைத் தொழில் பாடத் திட்டத்திற்கு முந்தைய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தல். | 10.00 | 10.00 |
| 16. | கணினி பாடமுறையை அறிமுகப்படுத்த 50 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி படிப்பைக் கொண்டு வருதல். | [illegible] | 352.08 |
| 17. | தமிழ்நாட்டில் சாரணர், சாரணியர்களுக்கு இராஜிய புரஸ்கார் பரிசு. | 5.00 | 5.00 |
| 18. | உடற்பயிற்சி (ஆசிரியர்கள்) நிலை-II பதவிகள் 50ஐ நிலை-I பதவியாக நிலை உயர்த்துதல். | 10.50 | 8.75 |
| | **பள்ளிச் சாராக் கல்வியும் முதியோர் கல்வியும்** | | |
| 19. | பள்ளிப் படிப்பை பாதியிலேயே விடுபவர்களுக்கும் கல்வியைத் தொடராதவர்களுக்கும் (6 வயது முதல் 14 வயது வரை) குறிப்பாக, மகளிருக்கும் பழங்குடியினருக்கும் பள்ளிச் சாரா கல்வித் திட்டம். | 55.32 | 55.32 |



1998 ஏப்ரல் 15]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | **பொது நூலகங்கள்** | | |
| 20. | கிராமப் பகுதிகளில் புதிதாக 20 கிளை நூலகங்கள் தொடங்குதல். | 9.00 | 7.50 |
| 21. | சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட மத்திய நூலகங்களில் கணினி மயமாக்கல் வசதியும் "மாலிப்நெட்" வசதியும் செய்தல். | 15.00 | 15.00 |
| 22. | கன்னிமாரா பொது நூலகத்தில் மேற்கோள் நூல்கள் வசதி அளித்தல். | 7.10 | 7.10 |
| 23. | சேலம், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடமா[illegible] [illegible]லக வசதி ஏற்படுத்துதல். | 3.84 | 3.20 |
| 24. | கன்னிமாரா பொது நூலகத்[illegible] பழம்பெரும் புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகளை பைண்டிங் செய்தல். | 3.00 | 3.00 |
| | **அரசுத் தேர்வுகள் இயக்ககம்** | | |
| 25. | 2 வட்டார அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டிடம் மற்றும் கழிவுத்தாள் கிடங்கு கட்டுதல். | 15.00 | 8.40 |
| 26. | சென்னை வட்டார அலுவலகத்திற்கு பலநோக்குப் பணி ஆற்றும் இடம் மற்றும் அலுவலகக் கட்டிடம், கழிவுத்தாள் கிடங்கு கட்டுதல். | 10.00 | 6.50 |
| 27. | 4 வண்டிகள் வாங்குதலும், 4 ஓட்டுநர் பதவிகளை ஏற்படுத்துதலும். | 15.60 | 15.60 |
| | **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு நிறுவனம்** | | |
| 28. | ஒரு மாவட்டத்தில் நீச்சல் குளம் அமைத்தல். | 20.00 | 8.00 |
| 29. | திருச்சியில் உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல். | 35.00 | 14.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 30. | ஒரு மாவட்டத்தில் தடகள ஓடுபாதை அமைத்தல். | 20.00 | 8.00 |
| 31. | இரண்டு மாவட்டங்களில் (மாற்று தலைமையிடம்) விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல். | 40.00 | 16.00 |
| 32. | உயரகப் பள்ளிகளுக்கும் விளையாட்டு வளாகங்களுக்கும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்குதல். | 10.00 | 10.00 |
| 33. | தமிழ்நாட்டில் விளையாட்டு மேம்பாட்டிற்காக தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல். | 1.00 | 1.00 |
| | ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் | | |
| 34. | இயக்ககத்திற்கு அலுவலகப் பயனுக்கான கார் வழங்குதல். | 3.85 | 3.85 |
| 35. | ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (TTIs) 8-க்கு ஆய்வுக்கூடச் சாதனங்கள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல். | 4.00 | 4.00 |
| 36. | அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சி. | 1.10 | 1.10 |
| 37. | இயக்ககத்திற்கு ஆராய்ச்சிப் பிரிவை வலுப்படுத்த நூலகப் புத்தகங்கள் வாங்குதல். | 1.00 | 1.00 |
| 38. | இயக்ககத்திற்கு "இண்டர்காம்" வசதியுடன் கூடுதல் தொலைபேசிகள். | 0.64 | 0.64 |
| 39. | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள்/ மையங்கள் BR மையங்கள் / DIETs வாயிலாக பள்ளிகளுக்கு ஒலி நாடாக்கள்/ வீடியோ காசட்டுகள் வழங்குதல். | 2.50 | 2.50 |
| | **பெருமொத்தம்-திட்டப்பணிகள்** | **1765.55** | **1543.44** |



## கொள்கை

### 1. தொடக்கக் கல்வி

1.1 கல்வி கண் போன்றது. மனிதனை மனிதனாக வாழவைப்பது கல்வி, அத்தகைய கல்வியை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்குவது அரசின் தலையாய கடமையாகும். அனைவருக்கும் கல்வி என்பதன் முதல் கட்டப் பணி அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குவதுதான்.

1.2 அரசியலமைப்புச் சட்டத்தைச் செயற்படுத்திய நாளிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் இலவச ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தாலும், இந்த நோக்கம் அவ்வளவு எளிதில் கைகூடுவதாக இல்லை. அதனை நிறைவேற்றும் பணி தொடர வேண்டியுள்ளது. பள்ளி செல்லும் வயதிலிருக்கும் அனைத்துச் சிறுவர் சிறுமியர்களும் பள்ளியில் கற்பதற்கு ஆர்வம் கொள்ளுதற்கு ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்கும் எண்ணத்துடன் பள்ளிகளும், பள்ளிக்கட்டிடங்களும், ஆசிரியர் பணியிடங்களும், கற்றல் - கற்பித்தல் பணிக்கு உதவும் பொருள்களும் வழங்க வகை செய்யப்பட்டு வருகின்றன. ஆறாவது இந்தியக் கல்வி ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 700 சிற்றூர்களில் 1 கி.மீ. தொலைவிற்குள் மாணவர்கள் சென்றடையும் வகையில் தொடக்கப்பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இரு ஆண்டுகளில் அதாவது கி.பி. 2000 ஆண்டிற்குள் இவை அனைத்திலும் தொடக்கப்பள்ளி அமைக்கப்பெறும்.

1.3 அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்னும் கொள்கை மூன்று கூறுகளை உள்ளடக்கியது. அவையாவன:

(அ) பள்ளி செல்லும் வயதுடைய, 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகள் அனைவரும் இடையில் விட்டுவிடாமல் 8-வது வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டும்.

(இ) அவ்வாறு படிக்கும் குழந்தைகளுக்குக் குறைந்தபட்ச அறியும் திறன் உருவாகும் வண்ணம் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும்.

1.4 இம்மூன்று இலக்குகளை அடைய அவற்றின் இன்றைய நிலையை ஆராய்ந்து உணர வேண்டும்.

(அ) முதலாவது இலக்கைப் பொறுத்தவரை ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டு விடுகின்றனர். தமிழ்நாட்டில் மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும் விகிதம் ஏறக்குறைய 94 விழுக்காடு ஆகும். பெண்களில் 93.35 சதவிகிதத்தினர் தொடக்கப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். ஆதிதிராவிடர் பிரிவினரில் 82.13 சதவிகிதத்தினர் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு பள்ளியில் சேர்க்கும் பணியில் திருப்திகரமான நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

(ஆ) இரண்டாவதாக, பள்ளியில் சேரும் குழந்தைகளில் எத்தனை பேர் இடைவிலகல் இல்லாமல் தொடர்ந்து ஐந்தாவது வரை படிக்கின்றார்கள் என்று பார்ப்போமேயானால் துறையின் புள்ளி விவரங்களின்படி இவ்வாறு இடைவிலகல் 16 விழுக்காடு அளவு எனினும், சில மாவட்டங்களில் எடுக்கப்பட்ட மாதிரிக் கணக்கெடுப்புகளின் வாயிலாக இது கூடுதலாக இருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

(இ) அடுத்ததாக, இதுபோன்று ஐந்தாவது வரை பள்ளியில் தொடர்ந்து பயிலும் மாணவர்களில் எத்தனை பேர் குறியீட்டுத் திறன்கள் அனைத்தும் எய்துகின்றனர் என்பதற்கான சரியான புள்ளி விவரம் இல்லை. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்திற்காக எடுத்த கணக்கெடுப்பின்படி, 40 விழுக்காடு மாணவர்கள்தான் குறியீட்டுத் திறன் அனைத்தும் பெற்றுள்ளனர் என அறியப்படுகின்றது.

1.5 இவற்றை எண்ணுங்கால் அரசின் முயற்சியும் நிதி ஆதாரங்களும் முழு அளவில் பயன் அளிக்காமல் வீணாவது கண்கூடாகத் தெரிகிறது. தொடக்கக் கல்விதான் சமுதாய முன்னேற்றத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படை. இது கட்டிடத்திற்குக் கடைக்கால் போன்றது. கட்டிடத்தின் அடிப்படை சரியாக அமையாமல் மாடிகள் கட்டுவது





வானத்தில் கோட்டை கட்டுவது போன்றதாகும், தரமான கல்வி அனைவருக்கும் சீராகச் சென்றடைந்து அவர்களின் திறன்களைப் பெருக்கிப் பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் வகையில் தொடக்கக்கல்வி அமைய வேண்டும் என்பது அரசின் முதன்மையான கொள்கையாகும்.

1.6 இவ்வாறு தொடக்கக் கல்வி அமைய மக்கட்தொகை 300-க்கும் மேற்பட்ட அனைத்துக் குடியிருப்புகளில் ஓரிரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கக் கல்வி நிலையம் அமைக்கப்பட வேண்டும். மூன்று தொடக்கக் கல்வி நிலையங்களுக்கு ஒரு நடுநிலைப்பள்ளி என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பது துறையின் இலக்காகும்.

1.7 மகளிரிடையே கல்வியின் தரம் உயர்ந்துள்ள பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறி இருப்பதை நாம் காண்கிறோம். பெண்கள் பள்ளியில் சேராமையாலும், இடைவிலகலாலும் காணப்படும் பின்தங்கிய நிலையைச் சீரமைப்பதற்கு ஏற்ற வகையில் திட்டம் இடுவதற்கும் அரசு முன்னுரிமை அளிக்கும்.

1.8 பொருளாதார வளர்ச்சிப் பயன் சமுதாயத்தில் காணப்படும் பலவகைப்பட்ட ஏற்றத்தாழ்வு வேற்றுமைகளினால் அனைவரையும் ஒரே சீராகச் சென்றடையவில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. அதுபோலல்லாமல் தொடக்கக் கல்வி அனைவரையும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவரையும் சென்று அடையச் செய்வதற்கு ஏற்ற வழிமுறைகளில் அரசு தனிக்கவனம் செலுத்தும்.

1.9 முழுமையான கல்வி என்னும் குறிக்கோள் செயல்பாட்டிற்குப் பயில்வோரின் கவனத்தை முழுமையாக ஈர்க்கும் வகையில் பாடங்களும், கற்பிக்கும் முறைகளும் அமைய வேண்டியது அவசியம். உற்சாகத்துடன் சிறுவர், சிறுமியர் பள்ளியில் பயிலும் வகையில் பாடத் திட்டங்களையும், கற்பிக்கும் முறைகளையும் அளிப்பதற்கேற்ப ஆசிரியர்களுக்கான பயிற்சி முறைகளைத் திருத்தி அமைக்கவும் அரசு கருதியுள்ளது. அதற்குரிய பணியிடைப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

1.10 பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் குறைந்தபட்ச அறியும் திறன் பெறவேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்ற அவர்கள் பெற்ற கல்வியறிவின் நிலையைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொடக்கக் கல்வி அளவில் நடைபெறும் வகுப்புத் தேர்வுகள்

[1998 ஏப்ரல் 15

மாணவர்களைக் கல்வியில் ஊக்கப்படுத்துவதற்குத் துணையாகவே நடைபெறும், மேல்வகுப்புக்குச் செல்லத் தடையாகாது. இந்த மதிப்பீடுகள் அடிப்படையில் பாடத் திட்டங்களில் மாறுதல்களும் கற்பிக்கும் முறைகளில் புதிய உத்திகளும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி

*2.1* அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட பள்ளிக்கூடம், பொருத்தமான பாடத்திட்டம், சிறந்த கற்றல்-கற்பித்தல் முறைகள் ஆகியவற்றின் மூலம் திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதே இடைநிலை-மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கமாகும். 14-18 வயது பிரிவினரின் நுண்ணறிவுத் திறன், கல்வி ஆர்வம் ஆகியவற்றை வளர்த்து ஒளிரச் செய்வதால் சுயவேலை ஈடுபாட்டுக்கும், உயர் கல்வி நாட்டத்துக்கும் அவர்களைத் தகுதியுடையவர்களாய் உருவாக்க முடியும்.

*2.2* மாணவர்கள் எதிர்கால வாழ்விற்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள ஏற்ற துறையை, பாடப் பிரிவைத் தேர்ந்தெடுக்க அடிப்படையாகவும் வாயிலாகவும் அமைவது இடைநிலைக் கல்வி. தொடக்கக் கல்வியில் பெறுகின்ற மூன்று [illegible]களாகிய படித்தல், எழுதுதல், கணக்கறிதல் ஒரு மாணவனை இடைநிலைக் கல்வி பெறத் தகுதியுடையவனாக்குகின்றன. மொழிப் பாட அறிவு பெறுவது தொடர்ந்து தேவைப்படுவதான ஒன்று. முக்கியமாக அறிவியலறிவு பெற மாணவனைத் தூண்டிவிடும் முக்கிய பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். மிக விரைவாக வளர்ந்துவரும் அறிவியல் உலகில் ஒரு மாணவன் தன்னையும் தகுதியுடையவனாக்கிக் கொள்ள (இன்றையச் சூழலில்) அறிவியல் கல்விக்கும் கணிப்பொறி கல்விக்கும் முக்கிய இடம் தரவேண்டியது அவசியம். ஒரு மாணவனிடம் மறைந்து கிடக்கின்ற அரிய ஆற்றல்களை வெளிக்கொணர வேண்டிய வாய்ப்பான முக்கிய பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். செயல்முறைக் கல்வியோடு இணைந்து பெறுவதால் மாணவன் தன் திறனை வளர்த்துக் கொள்ள துணை செய்வது அறிவியல் கல்வி.

*2.3* வளர்ந்து வருகின்ற நாடுகளில் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் கையாளப்படும் கணிப்பொறி முறையால், மனித வளத் தட்டுப்பாடின்றித் திட்டமிடுதலும், செயலாக்குதலும் நடைமுறையில் உள்ளன. இன்றைய மாணவர்களின் நுண்ணறிவு ஈர்ப்பு மேம்பாட்டால் நிறையக் கற்கவேண்டும்; அறிய வேண்டும்; தெளிய வேண்டும் என்ற



1998 ஏப்ரல் 15]

உணர்வோடு பள்ளிகளுக்கு வருவதால் அதற்கேற்ற ஆயத்த வாய்ப்பான நிலையை ஏற்படுத்த கணிப்பொறிக் கல்வி இன்றியமையாத ஒன்று. கற்றல் - கற்பித்தல், செயல்முறைகளின் இணைந்த ஒரு கருவியாகக் கணிப்பொறியையும் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். படிப்படியாக அனைத்துப் பள்ளிகளிலும் கணிப்பொறியை நிறுவி, கற்பித்தல், கற்றல் நெறிமுறைகளோடு இணைந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற அடிப்படைத்தளம் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி நிலையில் அமையவேண்டும்.

*2.4* தொழிற்கல்வி பெறுவதால் சுயவேலை வாய்ப்பு பெற, மற்ற தொழில்துறை நிறுவனங்களில், எளிதில் வேலை பெற மாணவர்களை இளமையிலேயே ஆயத்தப்படுத்த வேண்டும். புதிய தொழிற்கல்விப் பாடங்களைப் புகுத்தி அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் அப்பாடப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டு, உரிய தரமான பயிற்சி வழங்க வேண்டும். மேல்நிலைக் கல்வியில் 1978 முதல் தொழிற்கல்விப் பாடப் பிரிவுகள் துவங்கப்பெற்றன. இன்று சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் பயிலுகின்ற வேளையிலும், அதனை முறைப்படுத்தப் போதிய இடவசதி, உபகரணங்கள் வழங்குவதும், தகுதியான ஆசிரியர்களைப் பொறுப்பேற்கச் செய்வதும் தேவையாகும். தொழில்நுட்பப் பயிலக மற்றும் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களின் திறனுக்கு இணையாக மேல்நிலைக் கல்வி தொழிற் பாடப்பிரிவு மாணவர்களும் போதிய தரம் பெற அவசியமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பள்ளிகளின் அடிப்படை வசதிகளைப் பெருக்குவது, முக்கியக் குறிக்கோளாக வேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் துணையோடு கட்டிட வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் முதலானவை மேலும் செய்யப்பட வேண்டும்.

*2.5* பள்ளிக் கல்வியானது, உயர்கல்விக்கு ஒரு படிக்கல். இந்த அடிப்படை நோக்கில் இந்த அரசு கீழ்க்காணும் கூறுகளுக்கு முக்கிய இடம் தரவுள்ளது:-

(அ) பொருத்தமான பாடத்திட்டம் மூலம் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளை உயிரோட்டமுடையதாக்குதல்.

(ஆ) போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு முறையாகக் கற்பிப்பதைச் சீர்படச் செய்தல்.

(இ) அறிவியல் அறிவு வளர்ச்சியடைய ஆய்வக வசதிகள் செய்து தருதல்.

[1998 ஏப்ரல் 15

(ஈ) தொழிற்கல்விக்கு முக்கிய இடமளித்து அதில் சேரும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதல். அக்கல்வியினால் சுய வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொள்ளும் தகுதி பெறச் செய்தல்.

(உ) அடிப்படை வசதி இல்லாத பள்ளிகளுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துதல், குறிப்பாகக் கழிப்பிட வசதி செய்து தருதல்.

(ஊ) பள்ளிகளில் கல்வி கற்பித்தல் சிறப்புற நடைபெற கண்காணிப்பு ஆய்வு முறைகளை முடுக்கிவிடுதல்.

(எ) பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி, பள்ளி சீராக இயங்கத் துணை செய்தல்.

(ஏ) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்தி நன்கொடைகள் மூலம் போதிய தளவாடங்கள், கட்டிடங்கள், ஆய்வகக் கருவிகள் பெறுதல், நூலக வசதி பெருக்கல் ஆகியவற்றிற்கு வழிசெய்தல்.

(ஐ) பள்ளி இணைப்புத் திட்டம் செயல்படுத்தல்.

(ஒ) மாணவர்களுக்குத் தரமான கல்வி பயிற்றுவிப்பதை ஊக்குவிக்கும் வழிகாணல்.

## 3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

கல்வி, ஆசிரியரை மையமாகக் கொண்டு அமையாமல் குழந்தையை மையமாகக் கொண்ட நோக்கத்தில் விளங்க வேண்டும். வகுப்பறைகளில் புதிய கல்வி நுட்பங்களை விளக்கும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு, கற்றல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் கற்பித்தல் நடைபெறும் பொழுது கல்வியில் மாணவருக்கு ஈடுபாடு ஏற்படும், கல்வியின் பயனும் எட்டும். அரசு அளித்து வரும் நிதி உதவிகள் தவிர உள்ளூரில் கிடைக்கும் பலவகைப் பொருட்களையும் பயன்படுத்திப் பள்ளியைக் கல்விக் கருவூலமாக மாற்றவேண்டும். ஆசிரியர் பயிற்சிக் கல்வி இந்நோக்கத்தை எய்த ஏதுவாக அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும்.

## 4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

வயதுவந்தோர் கல்வி கல்லாமையை இல்லாமை ஆக்கத் துணை புரிகின்றது. எழுத்தறிவு அற்றவர்கள் எழுத்தறிவு பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள உதவுகிறது பள்ளிசாராக் கல்வி. பள்ளிக்குச் செல்லாதவர்களும் பள்ளிப்படிப்பை இடையில் விட்ட சிறார்களும் மீண்டும் பள்ளிக் கல்வியைத் தொடர வாய்ப்பாக முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி அமைந்துள்ளது.



1998 ஏப்ரல் 15]

## 5. அரசுத் தேர்வுகள்

மாணவர்கள் அடைந்துள்ள அறிவுத் திறனை அறிந்திடும் பொருட்டுக் கல்வி ஆண்டின் இறுதியில் ஒரு தேர்வினை நடத்துதல் இன்றியமையாததாகின்றது. தேர்வு பலகாலமாக நடைபெற்றாலுங்கூடத் தேர்வு நடத்தும் முறையானது அவ்வப்போது காலத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். மாணவர்களின் கல்வித் திறனை அளவிடுவதற்கு வாய்த்த முறைகளுள் தேர்வு ஒரு சிறந்த அளவு கோலாக அமைகிறது. தேர்வு மாணாக்கர்களின் புரிந்து கொள்ளும் திறனையும் பகுத்தறிந்து ஒப்பாய்வு செய்யும் திறனையும் கணக்கிடும் ஒரு கருவியாக அமைகிறது.

## 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987-இல் தோற்றுவிக்கப்பட்டு, 1988 முதல் செயல்படத் துவங்கியது. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான அனைத்து ஆசிரியர்களையும் தெரிவு செய்யும் பொறுப்பு இவ்வாரியத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1990-இல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் சட்டக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர் தெரிவு செய்யும் பணியும் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. கடந்த ஆண்டு முதலாக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நடப்பு ஆண்டில் பதிவு பெற்றுள்ள மூப்பு நிலை அடிப்படையில் நேர்முகமாகத் தெரிவு செய்ய முடிவு எடுக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பணி தவிர்த்துப் பிறவகை ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமே தெரிவு செய்யப்படுகின்றனர்.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

நல்ல தரமான பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களைக் காலத்தில் தயாரித்து மாணவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்குவதற்கும், ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கும் இந்நிறுவனம் திறமையுடன் செயலாற்றி வருகிறது.

[1998 ஏப்ரல் 15

## 8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டு மற்றும் இளைஞர் நல வளர்ச்சியை மேம்படுத்துவது அரசின் குறிக்கோளாகும். அரசின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கென்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் உருவாகியுள்ள, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மேற்கொண்டுள்ள செயல் திட்டங்கள்:

(அ) உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையில் பரவலான அளவில் ஊக்குவித்தல்.

(ஆ) விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மாவட்டத் தலைநகர்களில் உருவாக்குதல்.

(இ) சென்னையைப் போலவே மாநிலத்தின் வட்டாரத் தலைமை இடங்களில் பன்னாட்டுப் போட்டிகளை நடத்தும் அளவிற்குத் தகுதியான விளையாட்டு மையங்கள் அமைத்தல்.

(ஈ) மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன் கொண்டவர்களைக் கண்டறிதல்.

(உ) திறன் கொண்ட விளையாட்டு வீரர்களைப் பயிற்சி மூலம் உருவாக்குதல்.

(ஊ) விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் தனித்திறன் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதி மற்றும் இதர உதவிகளை வழங்குதல்.

## 9. பொது நூலகங்கள்

ஏராளமான மக்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த படிக்கும் வாய்ப்பு அளிப்பது என்பதே பொது நூலக இயக்கத்தின் குறிக்கோளாகும். நூலகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற புது மொழியினைச் செயல்படுத்தும் முகமாக நூலகத் துறையின் தொண்டு அமைய வேண்டும் என்பது அரசின் நோக்கம். மாவட்ட, கிளை நூலகங்களின் சேவை மக்களை அடைய வேண்டும் என்பதும், மக்களின் ஒத்துழைப்புடன் நூலக இயக்கம் வளர வேண்டும் என்பதும் நோக்கமாகக் கொண்டு அதற்கேற்பத் திட்டமிட்டு பொது நூலக இயக்குநரகம் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் புதிய கிளை நூலகங்கள் திறக்கப்படுவதுடன், நிதி நிலைக்கேற்ப புதிய புத்தகங்கள் இடம்பெறச் செய்யப்படுகின்றன. கிளை நூலகங்களுக்கான கட்டிடம் கட்டுவதும் முக்கியமான பணியாகும்.



1998 ஏப்ரல் 15]

## திட்டங்கள்

## 1. தொடக்கக் கல்வி

1.1 முழுமையான தொடக்கக் கல்வி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப 1997-98 ஆம் கல்வியாண்டில் 168 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கவும், 41 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு இசைவளித்தது. இவை அனைத்தும் செயல்படத் தொடங்கியுள்ளன. இதன் தொடர்ச்சியாக, இளம் மாணவர்கள் பள்ளிக்கு எளிதில் சென்றடையும் வகையில் 1998-99 ஆம் ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகள் துவக்கவும், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு தீர்மானித்துள்ளது:

1.2 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் நலனுக்காக, பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

(அ) தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க புதிய நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர் நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாண்டு முதல் இது செயல்படுத்தப்படும். இதனால் 1385 ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர் நியமிக்கப்படுவர்.

(ஆ) தொடக்கப்பள்ளிகளில் முழுமையாக பள்ளி வயது சிறுவர் சிறுமியரைச் சேர்த்த பின்னர் அவர்கள் இடையில் நின்றுவிடாமல் இருக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளிகளில் தொடர்ந்து படிக்க ஊக்க

உதவியாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயனடைவோருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தை, இவ்வாண்டு முதல், ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இப்புத்தகங்கள் கல்வியாண்டு தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

(இ) தொடக்கப் பள்ளிகளில் இன்னமும் 1846 பள்ளிகளில் உறுதியான வசதிகளுடன் வகுப்பறைகள் இல்லை எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான கட்டிட வசதிகளை, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றின் நிதி ஆதாரத்தைக் கொண்டு உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் செயற்படும் மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் எழுதுபொருள் இனங்களை வாங்குவதற்காக ஓர் ஆண்டுக்கு 3 ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளுக்கு, ஒவ்வொன்றிற்கும் ரூ. 300-ம் 3 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூ. 500-ம் 1996-97 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கு இதற்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டிலும் இது அனுமதிக்கப்படும். இவ்வாண்டு முதல் நகராட்சிப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

(உ) தொடக்கப் பள்ளிகளில் குடிநீர் வசதி செய்து தருவதற்கென அரசு ரூ. 29 கோடியில் ஒரு திட்டம் வகுத்து, 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 173.88 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 1998-99-ல் ரூ. 696 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கம் பரவலாக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்படும். இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.



1.3 கிராமப்புற துப்புரவுத் திட்டத்தின்கீழ், தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் குறிப்பாகப் பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

1.4 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை மேம்படுத்த நான்கைந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்த 20544 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மாவட்ட வேலை வாய்ப்பகப் பதிவு மூப்பின் அடிப்படையில் மட்டுமே இனவாரி சுழற்சி முறை கடைப்பிடிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டது. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பெறும் பயிற்சியில் கலந்து வெற்றிபெறும் தகுதி வாய்ந்த பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் 173 பேரை இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் கொணர்ந்து ஆணையிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பிரிவினைச் சேர்ந்த இடைநிலை ஆசிரியர் போதிய எண்ணிக்கையில் இல்லாத காரணத்தால் 1996-97 ஆம் ஆண்டு நிரப்பப்படாத 1340 பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டன. இவர்களுக்கு மழலையர்களுக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்காகச் சிறப்புப் பயிற்சியும், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது. இவ்வாறே 1997-98 ஆம் ஆண்டும் 1152 பதவிகளை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1.5 தொடக்கக் கல்வி நிர்வாகத்தை வலுப்படுத்தும் முக்கியப் படியாக உயர்நிலை வகுப்புகளுக்குரிய பட்டதாரி ஆசிரியர் தரத்தில் பணியாற்றி வந்த அனைத்து உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களையும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களாக மாற்றி ஏற்கெனவே பி.எட். தகுதியுடன் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்களை நியமனம் செய்துள்ளது.

1.6 பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்று, பெண்கள் கல்வி முன்னேற்றத்திற்கென ரூ. 150 இலட்சமும், நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வசதிகளுக்கென ரூ. 248.40 இலட்சமும், தொடக்கப் பள்ளிகளில் குடிநீர் வசதிக்கென ரூ. 695.53 இலட்சமும் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

[1998 ஏப்ரல் 15

## மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

1.7 21 ஆம் நூற்றாண்டு மலரும் முன்பாக அனைவருக்கும் தொடக்கக் கல்வி இலக்கை அடைவதற்கு உதவ வந்துள்ள முக்கியத் திட்டங்களின் முன்னோடியே மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டமாகும். அனைவரையும் பள்ளியில் சேர்த்து, சேர்ந்த அனைவரையும் தொடர்ந்து கற்கச் செய்து, கல்வித் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு தேர்ந்தெடுத்த மாவட்டங்களில் இந்த விரிவான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எனவே, பள்ளி வசதிகள், தொடர்ந்து கற்கச் செய்தல், கற்போர் திறன் உயர்வு, தொடர்புடைய நிறுவனங்கள், தனி நபர்களிடையே திறன் வளர்ப்பு போன்ற நோக்கங்களை நிறைவேற்ற மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ஏற்ற முயற்சியை மேற்கொள்கிறது. இதற்குத் தன்னிச்சையான, பரவலாக்கப்பட்ட தீவிரச் செயல்பாடுகள் அடிப்படையில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் நோக்கம் ஒன்றே என்றாலும், திட்டமிடல், அமலாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியவற்றில் மாவட்டங்களிடையே ஒரே மாதிரியான செயல்முறை திட்டத்தில் வற்புறுத்தப்படவில்லை. சூழலுக்கேற்பத் திட்டமிடல், அந்தந்தப் பகுதிகளுக்கேற்ற சில குறிப்பிட்ட திட்டங்கள் வகுத்தல், தனிப்பட்ட புதுமையான செயல்முறை வடிவங்கள் உருவாக்கம் ஊக்குவிக்கப்படுகின்றன. தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் இத்திட்டம் நான்காவது ஆண்டாகச் செயல்படுகிறது. இரண்டாம் கட்டமாக, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில், 1997-98-இல் இத்திட்டம் தொடங்கி செயல்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்துக்குத் திட்ட ஒதுக்கீடு ரூ. 124.74 கோடி. இரண்டாம் கட்டத்துக்கு ரூ. 92.44 கோடி ஆகும். இரண்டாம் கட்டத்தில் 34 ஒன்றியப் பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தில் 407 பள்ளிக் கட்டிடங்களும், 34 பயிற்சி மையக் கட்டிடங்களும் ரூ. 21.00 கோடி செலவில் கட்டப்படும்.

1.8 தொடக்கக் கல்வியில் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும் வகையில் திட்ட அணுகுமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நாட்டில் பொதுவாகத் தொடக்கக் கல்வித் திட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கணக்கெடுப்புகள், அதிலும் குறிப்பாக இத்திட்ட அமலாக்கத்திற்காகவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கணக்கெடுப்புகள் அடிப்படையில் இந்த அணுகுமுறைகள் அமைந்துள்ளன.



1998 ஏப்ரல் 15]

## நடைமுறையிலுள்ள திட்டங்கள்

### வசதி மேம்பாடு

1.9 தற்போது புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகையில் 24 விழுக்காடு தொகை பயன்படுத்தப்படுகிறது. பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை ஆகியவற்றுக்கேற்ப இரண்டு/மூன்று வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட 871 கட்டிடங்களுக்குக் கூடுதலாக, 1997-98-இல் 48 கட்டிடப் பணிகள் திட்டமிடப்பட்டு, இதுவரை மொத்தமாக 850 பள்ளிகளில் புதிய கட்டிடங்கள், பெண் குழந்தைகளுக்கான 667 பள்ளிகளில் கழிவறைகள், 188 பள்ளிகளில் குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

1.10 படிப்பை இடையில் நிறுத்தியவர்கள், பள்ளியிலேயே சேராதவர்கள் ஆகியோருக்கான கற்றல் வசதி ஏற்படுத்த, தேர்ந்தெடுந்த 18 ஒன்றியங்களில், 819 மாற்றுப் பள்ளி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் செயல்பாடு பற்றிய ஆய்வுக்குப் பிறகு இந்தத் திட்ட மாவட்டங்களிலுள்ள பிற இடங்களிலும் மாற்றுப் பள்ளி மையங்கள் தொடங்கப்படும்.

1.11 மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்பாடுகளில் மிகக் கூடுதலாக ஏற்பட்டுள்ள மாணவர்கள் சேர்க்கைக்கேற்ப புதியதாக 1026 இடைநிலை ஆசிரியப் பணியிடம் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1.12 1997-98 ஆம் ஆண்டு சிறப்பாகப் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நான்காவது வகுப்புக்கான பாடத் திட்டத்தின் அடிப்படையில் புதிய பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வகுப்பில் பாடம் கற்பிக்கும் ஆர்வமுள்ள ஆசிரியர் குழு, இப்புத்தகங்களை முதன் முறையாக தயாரித்துள்ளது. இப்புத்தகங்களைக் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்குக் கையேடும் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முதல் இரண்டாம் வகுப்புகளுக்கான மாணவர்களுக்கு முதன் முறையாக பயிற்சிப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை படிப்படியாக அனைத்து வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

[1998 ஏப்ரல் 15

(இ) பள்ளிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதில் அந்தந்த ஊர் பள்ளிக் குழுவின் ஒத்துழைப்பு முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.13 முதல் மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் இலக்கான ரூ. 50.04 கோடியில் ரூ. 24.06 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. இவ்வாண்டு இப்பணி சிறப்பாக முடிக்கப்பட்டு, ரூ. 29.32 கோடி செலவிடப்பட்டது. இது முதல் மூன்றாண்டு செலவைவிட அதிகம் என்பது இவ்வாண்டுச் செயலாக்கத்தின் சிறப்பு.

1.14 1998-99 ஆம் ஆண்டு, முதல் கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ. 27.38 கோடியும், இரண்டாம் கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ. 9.09 கோடியும் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்ட திட்டத்தில் பள்ளிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தல், பயிற்சிப் புத்தகங்கள் - ஆசிரியர் கையேடு தயாரித்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சி தொடரப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது, மற்ற மாவட்டங்களைப் போன்று இங்கும் ஆசிரியர் பயிற்சி தொடங்கும்.

1.15 சென்ற ஆண்டைப்போல் இவ்வாண்டும் ஐந்தாம் வகுப்பிற்கான புத்தகங்களை எழுதும் பணி, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படும்.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

### 2.1 அடிப்படை வசதி செய்து தருதல் :

அனைத்து உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அறிவியல் ஆய்வகங்கள் போன்றவை ஏற்படுத்தித்தர முன்னுரிமை அளித்து இவ்வாறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. குறிப்பாக மாணவியர் பயிலும் பள்ளிகளில் கழிப்பறை வசதி ஏற்படுத்துவதற்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 30-9-1996 நாள் நிலவரப்படி 2459 உயல்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கழிப்பறை வசதி இல்லாமல் உள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 144 இலட்சம் செலவில் பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி செய்து கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 200 பள்ளிகளுக்கு ரூ. 160 இலட்சம் செலவில் கழிப்பறை வசதி செய்து தர அரசு முடிவு



1998 ஏப்ரல் 15]

செய்துள்ளது. கிராமப்புற சுகாதார திட்டத்தின் கீழ் பெண்கள் பயிலும் அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலவரைக்குள் அனைத்துப் பள்ளிகளுக்கும் இவ்வசதி ஏற்படுத்தப்படும்.

2.2 அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டிட வசதி இன்றியமையாத அடிப்படைத் தேவையாக உள்ளது. இதற்காக 1996-97 ஆம் ஆண்டில் அரசு ரூ. 4 கோடி அனுமதித்தது. இதிலிருந்து 98 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் இரண்டு/ மூன்று வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஈட்டு மானிய அடிப்படையில் 23 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்ட ரூ. 60 இலட்சம் அரசு அனுமதித்து அவையும் முடிக்கப்பட்டுள்ளன. 1997-98-இல், 30 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் ஈட்டு மானியத்தின் அடிப்படையில் கட்டித் தர ரூ. 150 இலட்சமும், 249 பள்ளிகளில் கூடுதல் அறைகள் கட்ட 1997-98 ஆம் ஆண்டில் ரூ 10 கோடியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 500 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். வகுப்பறைகள் அதிகமாகத் தேவைப்படும் பள்ளிகளுக்கும், பெண்கள் பள்ளிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். 1997-98 ஆம் ஆண்டில் 119 பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை மே திங்களுக்குள் கட்டி முடிக்கப்படும். 1998-99 ஆம் ஆண்டில் 250 அறிவியல் கூடங்கள் கட்டப்படும்.

*பொருத்தமான பாடத்திட்டம் மூலம் கற்றல்-கற்பித்தல் செயல்முறைகளை உயிரோட்டமுடையதாக்குதல்.*

2.3 கற்றல்-கற்பித்தல் சிறப்பாக அமைய வேண்டுமெனில் நல்ல பொருத்தமான பாடத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. இதனை கருத்திற்கொண்டு 1-12 முடிய வகுப்புகளில் பின்பற்றப்படும் பாடத் திட்டத்தைச் சீரமைக்கக் கீழ்க்கண்ட கோட்பாடுகள் ஏற்கப்பட்டுள்ளன:

(அ) தமிழக அரசின் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்,

(ஆ) 1986 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கை அடிப்படை,

(இ) யஷ்பால் கல்விக் குழுவின் அறிக்கையின்படி பள்ளிக் குழந்தைகளின் பாடச் சுமைகளைக் குறைத்தல்,

[1998 ஏப்ரல் 15

(ஈ) பாடத்திட்ட வளர்ச்சி குறித்து தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நெறிமுறை தழுவல்,

(உ) டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யாவின் அறிக்கையின்படி மாணவர் கற்றலுக்கேற்ப எப்படிக் கற்பிப்பது என்பதற்கான வழிமுறை காணல்,

(ஊ) அண்டை மாநிலங்களின் மத்திய இடைநிலைப் பாடத் திட்டத்தை நமது மாநில பாடத் திட்டத்தோடு ஒப்பாய்வு செய்தல்.

2.4 இதனடிப்படையில் 1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடத்திட்ட வரைவினை அரசு ஏற்று அனுமதி வழங்கியுள்ளது. திருத்தப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் பாடநூல்கள் முறையாக தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என உயர்மட்ட வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. இது படிமுறைக் கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. புதுப்பிக்கப்பட்ட பாடத் திட்டத்தினையொட்டிப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்கள் 1995-96 ஆம் ஆண்டில் 1,6,11 வகுப்புகளிலும், 1996-97 ஆம் ஆண்டில் 2,7,9 மற்றும் 12 ஆம் வகுப்புகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் மீதமுள்ள 3,8 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் புதிய பாடத் திட்டத்தின்படி நான்காம் வகுப்பிற்கான புத்தகங்கள் எழுதப்பட்டு, அறிமுகப்படுத்தப்படும்.

2.5 தற்போதுள்ள புத்தகங்களில் உள்ள சுமையைக் கண்டறிந்து குறைப்பதற்கு பரிந்துரை வழங்க முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிவஞானம் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மாணவர்கள், பெற்றோர் கல்வியாளர் ஆகியோரைக் கலந்து உரிய பரிந்துரைகளை அளித்துள்ளது. இவற்றை ஆய்வு செய்து ஏற்ற வகையில் பாடப் புத்தகங்கள் வரும் ஆண்டில் திருத்தியமைக்கப்படும்.

## மெட்ரிகுலேசன் பள்ளி பத்தாம் வகுப்பு புத்தகங்கள்

2.6 இதுநாள் வரையில் தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு 10 ஆம் வகுப்புவரை தனியார் பதிப்பகத்தார் பாடப் புத்தகங்களை வெளியிட்டு வந்தனர். தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள் அனைத்தையும் பதிப்பிப்பதை 1997-98 ஆம் ஆண்டு முதல் அரசுரிமையாக்கி ஆணை



1998 ஏப்ரல் 15]

வெளியிட்டுள்ளது. இதன் மூலம் அந்தப் பாடநூல்களை தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்குகின்றது. இதனால் கணிசமான அளவு குறைந்த விலையில் அந்தப் பாடப் புத்தகங்கள் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. சராசரியாக இப்புத்தகங்கள் முன்னர் இருந்ததைவிட 29 சதவீதம் குறைவான விலையில் வெளியிடப்பட்டுள்ளன.

## கல்வி வசதிகளை விரிவாக்குதல்

### (அ) உயர்நிலைப் பள்ளிகள்

2.7 பெரும்பான்மையான குடியிருப்புப் பகுதிகளிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் உயர்நிலைப்பள்ளி வசதி ஏற்படுத்தப்பட வேண்டுமென அரசு விழைகிறது. குடியிருப்புப் பகுதிகளின் தேவைக்கேற்ப 14-16 வயது நிலையில் உள்ள மாணவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஏற்ற வழிவகை செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் 61 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி மற்றும் 10 மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட உள்ளன. அரசு கொள்கையின்படி ஊரக வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு கிராமப் புறங்களில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் 60 நடுநிலைப் பள்ளிகளும், நகர்ப் பகுதிகளில் 20 நடுநிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

### (ஆ) மேல்நிலைப் பள்ளிகள்

2.8 1997-98-ல் அரசு உயர்நிலைப் பள்ளிகள் 76-ம், மாநகராட்சி பள்ளிகள் 4-ம் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 40 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் 30 உயர்நிலைப் பள்ளிகளும், நகர்ப் புறங்களில் 10 உயர்நிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

### அறிவியல் கல்வி முன்னேற்றம்

2.9 அறிவியல் கல்வி முன்னேற்றத் திட்டத்தின்படி மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகம்

அமைக்கப்படவேண்டும். 30-9-1997 ஆம் நாள் தேதிய நிலவரப்படி 1341 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகம் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில், 1997-98 ஆம் ஆண்டு வரை நிலை உயர்த்தப்பட்ட/திறக்கப்பட்ட அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டுவிட்டன. அறிவியல் ஆய்வகக் கட்டிடங்களைப் பொறுத்தமட்டில் 132 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வசதி செய்து தரப்பட வேண்டியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 175 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 539 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 336.70 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டிலும், இதேபோன்று 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 1998-99 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட உள்ள 40 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 100.00 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன. இதேபோன்று, 119 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்காக, 1997-98 ஆம் ஆண்டில் அரசு ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 250 பள்ளிகளுக்கு ஆய்வகக் கட்டிடங்கள் கட்டப்படும். இதற்கு ரூ. 20 கோடிக்கு அனுமதி வழங்கப்படும்.

2.10 1997-98 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கும், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களுக்கும் கணிப்பொறி வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியது. இதேபோன்று, மாணாக்கர்களின் இன்றையக் கல்வித் திட்டத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்ளவும், கணிப்பொறித் துறையில் அதிகமாக வேலை வாய்ப்புகளைப் பெறவும், முதற் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 352.08 இலட்சம் செலவில் கணிப்பொறி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கற்றல் முறைகளைச் சீர்படச் செய்தல்.

2.11 பள்ளிகளில் கற்பித்தல் பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டும் அனைத்துப் பள்ளி வேலை நாட்களும் கற்பித்தல் தவறாமல் நடக்கவும், பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல் மிகவும் தேவையானதாகும். இவ்வாண்டுத் தொடக்கத்தில் மிகவும் அதிக அளவில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்ததினால் ஆசிரியர் தேர்வு வாரியத்தை மேலும் விரிவுப்படுத்தித் தேவைப்படும் ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து 1834 காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்து முறையான



கல்வி அளிக்க வழி செய்யப்பட்டது. மேலும் ஓரிரண்டு ஆண்டுகளாகக் காலியாக இருந்த 450-க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பவும் ஆணை வழங்கப்பட்டது. அரசு, உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர் பணியிடங்களை நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு புதிய நெறிமுறைகளை வகுத்துள்ளது. மேல்நிலைப் பள்ளிகளுக்கு முன்னர் இருந்ததுபோல் இரண்டு பிரிவு பாடத் திட்டத்திற்கேற்ப கூடுதல் ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்படும். இதே வகையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கூடுதல் பதவிகள் உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் உள்ள மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் இப்பதவிகளை அனுமதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## மேல்நிலைப்பள்ளிக் கல்வி நிலையில் தொழிற் கல்வி

2.12 மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வி செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. விவசாயம், மனையியல், வணிகவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், பொது சுகாதாரம் மற்றும் இதர பாடங்கள் என்ற 6 இனங்களில் 66 பாடங்கள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 2840 மேல்நிலைப் பள்ளிகளில் 1377 பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடம் செயல்படுத்தப்படுகிறது. மேல்நிலை வகுப்புகளில் பயிலும் 7.14 இலட்சம் மாணவர்களில், 1.15 இலட்சம் மாணவர்கள், அதாவது 16 விழுக்காடு மாணவர்கள் தொழிற்கல்வி முறையில் பயின்று வருகின்றனர். இதில் 3366 தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேவையான நிலமுடைய பள்ளிகளில் வேளாண்மைத் தொடர்புடைய தொழிற்கல்விப் பாடத் திட்டம் தொடங்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது. உயர்நிலைப் பள்ளி வகுப்புகளிலும் பாடத் திட்டத்தில் வேளாண்மை பற்றிய பாடங்கள் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பாடங்கள் பிறபாடங்களுடன் இணைத்துச் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து இப்பாடங்கள் கற்பிக்கப்படும்.

2.13 இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பல்திறன் உருவாக்கத்திற்கான முன் தொழிற்கல்வி பாடப் பிரிவுகளை

[1998 ஏப்ரல் 15

அமைத்துக் கற்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக இத்திட்டம் இவ்வாண்டு தமிழகத்தில் ஏற்கெனவே மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடப் பிரிவுகள் உள்ள 60 உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு, 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### பள்ளி நூலக வசதி

2.14 பள்ளி மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், பாடத் திட்டம் சம்பந்தமான மாணாக்கர்களுடைய திறமையை மேம்படுத்துவதற்கும் பள்ளி நூலகம் மிக அவசியமான ஒன்று. தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு ஆகும் மொத்தச் செலவினத்தை அரசே ஏற்பது என்பது இயலாது. மொத்தச் செலவினத்தில் அரசு 50 விழுக்காடும், பொதுமக்கள் பங்குத் தொகையாக 50 விழுக்காடும் என்று இணை மானியத் திட்டத்தின்படி ஒரு பள்ளிக்கு ரூ. 50,000 மதிப்புள்ள நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்கப்படும். முதற்கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் 200 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 25,000 வீதம் (அரசுப் பங்கு மட்டும்) ரூ. 50.00 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 50.00 இலட்சம் இணை மானியமாக பொதுமக்கள் நன்கொடை மூலம் பெறப்பட்டு நூலகப் புத்தகங்கள் வாங்கப்படும்.

### மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள்

2.15 பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க வேண்டுமென்றால் ஆய்வு அலுவலர்கள் கட்டமைப்பை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். இதைக் கருத்திற்கொண்டு 1997-98 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள நான்கு புதிய வருவாய் மாவட்டத் தலைமையிடங்களில், முதன்மைக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. திருவள்ளூர்
2. நாமக்கல்
3. திருவாரூர்
4. தேனி



1998 ஏப்ரல் 15]

இதேபோன்று திருவாரூர், உத்தமபாளையம் ஆகிய கல்வி மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அலுவலகங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

### பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் செயற்பாடுகளை முறைப்படுத்துதல்

2.16 1994-95 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு சங்க விதிகளின்படி பதிவு செய்யப்பெற்ற சங்கங்களாகப் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வருகின்றன. பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பதற்குப் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு சிறந்த கட்டமைப்பாக விளங்குகின்றது. இந்த அமைப்பின் நோக்கமாவன:

(அ) பள்ளி வயது எய்திய எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கு வழி காணல்.

(ஆ) படிப்பைத் தொடராமல் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடும் குழந்தைகளைத் தக்க வைப்பதற்குத் துணையாகும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்."

(இ) கல்வித் தரமும் - மாணவர் திறமும் வளர்வதற்குரிய கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல்.

2.17 இத்தகைய பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பள்ளி நலன் கருதி பொதுமக்களிடமிருந்து பள்ளி வளர்ச்சிச் செயல்களுக்காக நன்கொடை திரட்டும் உரிமை பெற்றவை. பொதுமக்களிடமிருந்து அசையும், அசையா சொத்துக்களை நன்கொடையாகப் பெற்று, அடிப்படைத் தேவைகளாகிய கட்டடங்களையும் சுற்றுச் சுவர்களையும் அமைத்துத் தருவதிலும், இதர வசதிகளாகிய மின்சாரம், குடிநீர், கழிப்பிடம் முதலியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும் ஆய்வகத்திற்கானப் பொருள்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கி வழங்குவதிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் முன்னின்று செயலாற்றி வருகின்றன.

2.18 மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள், 1996 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தி வருகிறது. மாணவர்களின் நலனுக்காக மாணவர் கையேடு ஒன்றினை வெளியிட்டு வருகிறது. புதிய பாடத் திட்டத்தின்கீழ் 1997 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்வு எழுதவிருக்கும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குப்

பயன்படும் வகையில் வினாவங்கி ஏடுகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளது. 1997-98-இல் இத்திட்டம் 10-ம் வகுப்பிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்துதல்

2.19 தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுடைய கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படை வசதிகளான விளையாட்டுமிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, கற்பிக்கும் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் முதலிய தேவைகளைப் பூர்த்தி செய்யப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழி செய்கிறது. இந்த வசதிகளைப் பூர்த்தி செய்யப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன.

2.20 இத்திட்டத்தை முழு ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென அனைத்துக் கல்வித் துறை அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். 1997-98 ஆம் ஆண்டில் 6 மாவட்டங்களில் சீரமைப்பு மாநாடு நடத்தப்பட்டு ரூ. 39.48 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. இது 1998-99-இல் விரிவாகச் செயற்படுத்தப்படும்.

### பள்ளி இணைப்புத் திட்டம்

2.21 1976 ஆம் ஆண்டில் அண்ணல் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் பள்ளியின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் சீரிய நோக்கத்தின் பொருட்டு எல்லாக் கல்வி மாவட்டங்களிலும் பள்ளிக் கல்வி இணைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

2.22 பள்ளி இணைப்புத் திட்டத்தில் 10 முதல் 20 தொடக்கப் பள்ளிகளும், 3 அல்லது 4 நடுநிலைப் பள்ளிகளும் தாங்களே மனமுவந்து ஒன்றாக இணைந்து, கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடு, அப்பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியின் தொடர்போடு செயல்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியும், மற்றொரு பள்ளியோடு தொடர்பு கொண்டு கலந்தாலோசித்து, கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும். பள்ளி இணைப்புத் திட்டத்தில் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் தலைவராகவும், நடுநிலைப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து வருவர். இதேபோன்று நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் துணைக்



குழுவின் தலைவராகவும், தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர் உறுப்பினர் ஆகவும் இருப்பர்.

### பள்ளி இணைப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்

2.23 (அ) தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்தி அம்மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயில்வதற்கான ஆர்வத்தையும் திறமையையும் வளர்ப்பதே பள்ளி இணைப்புத் திட்டத்தின் முக்கியமான குறிக்கோளாகும்.

(ஆ) கல்வியின் வளர்ச்சிக்கு உரிய திட்டங்கள் தீட்டி உரிய நடவடிக்கை எடுப்பது.

(இ) பள்ளிகள் தனித்தியங்குவதைத் தவிர்த்து மற்ற பள்ளிகளோடு இணைந்து நல்ல முடிவுகளை எடுத்து, கல்வி கற்பதில் ஊக்கத்தினை மாணவர்களிடம் ஏற்படுத்துவது.

இத்திட்டத்தின் மூலம் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள அறிவியல் ஆய்வக வசதிகளையும், நூலகம், விளையாட்டு மைதானம், ஒலி, ஒளிக் கருவிகள், சிறப்பாசிரியர்கள் பணிகளையும் அருகிலுள்ள இவ்வகையான வசதிகள் இல்லாத பள்ளிகளுக்கும் பயன்படச் செய்து அங்குள்ள மாணவர்களும் பயன்பெறத்தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மாணவர்களுக்குத் தரமான கல்வி அளிக்க ஊக்குவிக்கும் திட்டங்கள்

2.24. 8,9,10,11,12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியரின் கல்வியை மேம்படுத்தும் வகையில் சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி வேலை நாட்களில் பள்ளி நேரம் முடிந்த பிறகு, மாலை வேளைகளில் ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்களில் சிறப்புப் பயிற்சிகள் தரப்படுகின்றன. இத்திட்டம், தற்போது 625 உயர்நிலைப் பள்ளிகளிலும், 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், வீட்டில் போதுமான வசதிகள் இல்லாத இதர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் பல பள்ளிகளில், பகல் உணவு இடைவேளையின் போதும், மாலை நேரங்களிலும்

ஆசிரியர்களால் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

### திறமை மிக்க, கிராமப்புற மாணவ மாணவியர்க்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்குதல்

2.25 கிராமப்புறங்களில் பயிலும் படிப்புத் திறன் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் திறன்காண் தேர்வு முறையைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. கிராமப் பகுதியில் 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்க்கு ஆண்டுதோறும் அரசுத் தேர்வு இயக்குநரால், மே திங்களில் திறமைகாண் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும், திறமைமிக்க 50 மாணவர்களும் 50 மாணவியரும் ஆக 100 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கும், ஆண்டுதோறும் ரூ. 1,000 வீதம் தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயில உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு இதற்கென ஆண்டுக்கு ரூ. 1 கோடி செலவிடுகிறது.

### பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் முதல் நிலை பெறும் 3 மாணவர்களுக்குச் சலுகை

2.26 மாணவர்களின் படிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அரசு இப்புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு மேல்நிலைப் படிப்பு முடிக்கும் வரை ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். இதேபோல் மேல்நிலைக்கல்வி பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மூன்று மாணாக்கர்களுககு உயர்கல்விக்கான செலவை (மருத்துவம், பொறியியல் முதலான தொழிற்கல்விச் செலவு உட்பட அனைத்தையும்) அரசே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தை மாவட்ட அளவிலும் விரிவுபடுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டு 104 மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்பிற்கும், 131 மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிக்கும் படிப்புதவித் தொகையாக ரூ. 8.03 இலட்சம், முதல் தவணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்காகும் தனித்தனிச் செலவு விவரம் பெற்று உரிய தொகை வழங்கப்படும்.



2.27 தமிழ்நாட்டில், 3,430 பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் நடைபெற்று வருகிறது. இதில், 74,500 சாரணர்களும், 43,889 சாரணியர்களும் நாட்டின் சமூக நலப் பணிகளில் பங்கேற்றுத் தொண்டாற்றி வருகின்றனர். இதற்கென, அரசு ஆண்டுதோறும் ரூ. 5.00 இலட்சம் செலவிடுகிறது.

### மகளிர் கல்வி

2.28 மகளிர் கல்வியை மேம்படுத்துவதற்காக அரசு பலவகை நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் உரிமை வாழ்வுக்கான சம உரிமையும், சமூக நீதியும் மகளிருக்குக் கல்வி அளிப்பதன் மூலம் எய்தலாகும். மகளிருக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதால் பெண்கள் கல்வியில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 30-9-1997 நாள் நிலவரப்படி 73.89 இலட்சம் மொத்த பள்ளி வயது பெண் பிள்ளைகளில் 58.66 இலட்சம் பெண்கள் கல்வி கற்று வருகின்றனர். மகளிர் சேர்க்கை 79.39 விழுக்காடு ஏற்பட்டுள்ளது. பல்வேறு மகளிர் கல்வி நலத் திட்டங்களின் பயனாக பெண்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் பயனாக, 1997 மார்ச் திங்களில் நடைபெற்ற கீழ்க்கண்ட பொதுத் தேர்வுகளில் பெண்களின் தேர்ச்சி விழுக்காட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

| | தேர்வு விழுக்காடு | |
|---|---|---|
| ஆண்கள் | பெண்கள் | |
| பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) | 65.12 | 71.96 |
| மேல்நிலைத் தேர்வு (+2 வகுப்பு) | 74.00 | 83.25 |

### மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி

2.29 ஆறாம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பிற பாடங்களைப் போல் உடற்பயிற்சிக் கல்வியும் வழங்கப்பட வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் உடற்கல்வி போதிக்க எம்.பி.எட்., தேர்ச்சி பெற்ற உடற்கல்வி இயக்குநர்களையே நியமிக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 868 பணியிடங்களில் இதுநாள் வரை 694 கிரேடு - 2 உடற்கல்வி இயக்குநர் பணியிடங்கள் கிரேடு - 1 பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 50 உடற்கல்வி இயக்குநர்

[1998 ஏப்ரல் 15

கிரேடு-2 பணியிடங்கள் கிரேடு-1 பணியிடங்களாக உயர்த்தத் திட்டமிடப்பட்டு ரூ. 8.75 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

## 3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

3.1 அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 21 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து ஆசிரியர் கல்வி மற்றும் கற்பித்தல் சார்ந்த அடிப்படையான பயிற்சியை ஆசிரியர்கட்கு அளிக்கிறது.

3.2 இத்துறையின் நோக்கங்களை, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்ற மூன்று கூறாகப் பிரிக்கலாம்.—

(அ) மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் ஆசிரியர் பயிற்சியாளர்களின் திறன்களையும், தொழில் திறமையையும் மேம்படுத்தி ஆசிரியர் கல்விப் பணித் திட்டத்தை, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய நிலைக்கு உயர்த்துதல்;

(ஆ) கல்வித்தர மேம்பாட்டிற்கான [illegible] புத்தகங்கள், கையேடுகள், பயிற்சியேடுகள், ஒலி, ஒளி நாடாக்கள் உள்ளடக்கிய கற்பித்தல் கருவிகள் ஆகிய கற்றல் கற்பித்தல் கருவிகளை உருவாக்குதல்;

(இ) அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்;

(ஈ) தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி சார்ந்த பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், அனைத்து நிலை ஆசிரியர்களிடமும் ஆய்வு நோக்கை ஊக்குவித்தல்;

(உ) நூலறிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு செயலாராய்ச்சியில் கண்டறிந்தவற்றைப் பரப்புதல்.

3.3 மேற்காணும் குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட நிர்வாகத் திறன்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய ஆசிரியர் கல்வி அமைப்புடனும் பல்கலைக்கழகத் துறைகளுடனும் கலந்தாலோசித்து எல்லா நிலையிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் பாடத் திட்டத்தை சீர்செய்தல்,



1998 ஏப்ரல் 15]

படிப்படியான நிலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் பாடப் புத்தகங்களும், கையேடுகளும், பயிற்சியேடும் தயாரித்தல்,

கல்வித் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் ஒலி, ஒளி நாடாக்கள் தயாரித்தல்,

உடல் நலக் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, உயிர்க்கொல்லி நோய் (எய்ட்ஸ்) கல்வி, மழலையர் கல்வி ஆகியவற்றிற்கான ஆதார கற்றல் பொருட்களை உருவாக்குதல்,

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடப் பொருள், கற்பித்தல் முறை மற்றும் பொதுத் தலைப்புகளில் பணியிடைப் பயிற்சி அளித்தல்,

பாடப் புத்தகங்கள் மற்றும் கற்றல்-கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் பலன் குறித்து ஆய்தல்,

பள்ளி மற்றும் வகுப்பறைச் சூழல் குறித்த செயல்முறை ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்களையும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களையும் ஊக்குவித்தல்,

ஆய்வின் முடிவுகளைப் பரப்ப ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் செய்தி மலர்கள் வெளியிடுதல்,

பயிற்சி குறித்த பல்வகைத் திட்டமிடுதல் குறித்து மாவட்டங்களில் புள்ளி விவர மையங்கள் பராமரித்தல்.

தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புப் புத்தறிவுப் பயிற்சி

3.4 சிறப்புப் புத்தறிவுப் பயிற்சியின் முக்கிய நோக்கம் தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்ட குறைந்தபட்சக் கற்றல் முறையின்படி திறன்களை அறிமுகப்படுத்துவதாகும். சிறப்புப் புத்தறிவுப் பயிற்சித் திட்டத்தின்கீழ், 28,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், குறைந்தபட்ச கற்றல் திட்டத்தின்கீழ் 2,000 ஆசிரியர்களுக்கும், ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டத்தின்கீழ் 5,200 ஆசிரியர்களுக்கும், பணியிடைப் பயிற்சித் திட்டத்தின்கீழ் 25,000 ஆசிரியர்களுக்கும், மாவட்டத் தொடக்கக்கல்வித் திட்டத்தின்கீழ் 10,000 ஆசிரியர்களுக்கும் இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## கூடுதல் கற்றல் பொருள்கள் தயாரிப்பு

3.5 ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் கீழ்க்குறிப்பிட்டுள்ள கற்றல் பொருள்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன:—

(அ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மூலம், மாவட்டங்களில் இயங்கும் மாற்றுப் பள்ளிகளுக்கான (தமிழ், கணிதம், சூழ்நிலைக் கல்வி) மூன்று புத்தகங்கள் அடங்கிய தொடக்கப் பயிற்சியேடு-I;

(ஆ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்களுக்காக 3-ம் வகுப்பு ஆசிரியர்களுக்கான கையேடுகளான, தமிழ், ஆங்கிலம், கணக்கு, சூழ்நிலையியல் அறிவியல், சூழ்நிலையியல் சமூக அறிவியல் ஆகிய ஐந்து புத்தகங்கள்;

(இ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட மாவட்டங்கள், மற்றும் திட்டமல்லாத மாவட்டங்களில் உள்ள 3-ம் வகுப்பு ஆசிரியர்களுக்குப் பொதுக் கட்டகங்கள் அச்சடித்தல்;

(ஈ) முதல் வகுப்பு ஆசிரியர்களுக்கு பாடப் பொருள் மற்றும் செயல் அடிப்படையிலான கையேடு (தமிழ், கணக்கு, சூழ்நிலையியல்) ஆகிய மூன்று புத்தகங்கள் அச்சடித்தல்;

(உ) இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களுக்கு பாடப் பொருள் மற்றும் செயல் அடிப்படையிலான கையேடு (தமிழ், கணக்கு, சூழ்நிலையியல்) ஆகிய மூன்று புத்தகங்கள் அச்சடித்தல்;

(ஊ) முதன்மைக் கருத்தாளர்களுக்கும், கருத்தாளர்களுக்கும் (Key Resource Persons and Resource Persons) கையேடுகள் அச்சிட்டு விநியோகித்தல்.

அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளைத் திறன்படுத்த, இவ்வாண்டு 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள் ஆகியன ரூ. 4.00 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. கல்வித்தரத்தை மேம்படுத்துதல் சார்ந்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ரூ. 1.10 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





3.6 இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு ஆதிதிராவிட வகுப்பினரிடமிருந்து போதிய தகுதியுடையவர்கள் இல்லாத காரணத்தால் 17 மாவட்டப் பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் 50 பேருக்கு (25 ஆண், 25 பெண்) 97-98 ஆம் ஆண்டு பயிற்சி தொடங்கப்பட்டது. இத்திட்டம் 98-99 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். ரூ.5 கோடி செலவில் தேவையான வசதிகள் உருவாக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் இப்பயிற்சி தொடரப்படும். சிறுபான்மையினர் மொழிப் பள்ளிகளுக்குப் போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத நிலை உள்ளதால் இந்நிலையைச் சீரமைக்கும் வழிகாண ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

## கல்வித் தொலைக்காட்சி

3.7 பாடத் தொடர்பான பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்ற ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.

3.8 10 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான அறிவியல் செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும், ஆசிரியர் பயிற்சிக்கான திறன் அளிக்கும் அடிப்படையிலான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும், இப்படப் பதிவு நிலையம் தற்போது கவனம் செலுத்தி வருகிறது. கீழே குறித்துள்ள பட நிகழ்ச்சிகளைத் தயாரித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது:

(1) 11, 12 ஆம் வகுப்புகளுக்கான அறிவியல் செய்முறைப் பயிற்சிகள்;

(2) 10 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான தமிழ் இலக்கணம்;

(3) 9 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான ஆங்கில இலக்கணம்;

(4) 10 முதல் 12 ஆம் வகுப்புக் கணக்குப் பாடநூலில் உள்ள கடினமான கணிதப் பாடங்கள்;

(5) 4 ஆம் வகுப்புக்கான திறன் வளர்க்கும் அடிப்படையிலான நிகழ்ச்சிகள்.

1997-98 ஆம் ஆண்டில் 193 ஒலி நிகழ்ச்சிகள், 21 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 72 வட்டார வள ஆதார மையங்கள் ஆகியவற்றின் பயனுக்காகவும், 25 ஒளி நிகழ்ச்சிகள், பள்ளி மாணவ மாணவியர்களின் பயனுக்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 1,000 பள்ளிகளுக்கு ரூ. 2.5 இலட்சம் செலவில் ஒலி நாடாக்கள் தயாரித்து வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 15

3.9 சென்னைத் தொலைக்காட்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் சேர்ந்து கடினமான பாடத் திட்டங்களை மாணவர்கள் எளிமையாகப் புரிந்துக்கொள்ள இயலும் வகையில் விளக்கும் பாடங்கள் தயாரிக்கப்பட்டு பள்ளிகளில் அவை காணபிக்கப்படும். ஊராட்சி மன்றங்களிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பயன்படுத்த அத்துறையுடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3.10 தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனம். வெளிநாட்டுக் கல்வி அமைப்பு ஆகியவை தயாரித்துள்ள ஒலி ஒளி படங்களையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைத்துப் பள்ளிகளுக்குப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி :

4.1 கல்லாமையை இல்லாமை ஆக்கும் சீரிய குறிக்கோளைச் செயல்படுத்த தமிழ்நாட்டில் கல்வி அமைச்சர் [illegible] தமிழக எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு [illegible]

### முழு எழுத்தறிவு இயக்கம் (அறிவொளி இயக்கம்) :

4.2 இந்த இயக்கம் 1990-91 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சியாளர்களால் அந்தந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின்மூலம் 90.59 இலட்சம் கல்லாதவர்களில் இதுவரை 75.10 இலட்சம் பேர் கற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதற்கான நிதி மைய அரசாலும் மாநில அரசாலும் 2:1 விகிதத்தில் செலவிடப்படுகின்றது.

### தொடர்கல்வி இயக்கம் (வளர் கல்வி இயக்கம்) :

4.3 புதிதாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கற்றதை மறந்துவிடாது நிலைநிறுத்தித் திறன் வளர்க்கத் தொடர் கல்வித்திட்டம் நடைபெறுகிறது. இது மாவட்டத்தில் முழு எழுத்தறிவுத் திட்டம் முடிவடைந்தபிறகு, ஈராண்டு செயல்படுத்தப்படுகின்றது. தமிழகத்தில் அறிவொளி தொடர்கல்வித் திட்டம் 19 மாவட்டங்களில் செயல்படுகின்றது. இதற்காக மைய அரசு ரூ.13.77 கோடியும் மாநில அரசு ரூ.3.01 கோடியும் செலவிட்டு உள்ளன.

### உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் :

4.4 உழைக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகள் தொழில் திறன் பெற்றுத் தற்சார்புடையவர்களாகத் திறமை பெற [illegible] உழைப்போர்



1998 ஏப்ரல் 15]

பல்நோக்குக் கல்வி நிறுவனம் உதவுகிறது. இத்தகைய நிறுவனங்கள் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாவட்டங்களில் மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுகின்றன.

### சிறப்புக் கல்வித் திட்டம் :

4.5 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 6-14 வயது சிறார் தொழிலாளர்கள் பிரிவினருக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, விருதுநகர், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் 700 மையங்கள் அடங்கிய 7 திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, மைய அரசு நிதி ரூ.50 இலட்சமும், மாநில அரசு நிதி ரூ.21 இலட்சமும் செலவிடுகின்றன. இதன் மூலம் 17,500 சிறார் பயன்பெறுகின்றனர்.

4.6 தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் குறைந்த அளவு எழுத்தறிவுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல், திருவாரூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் 6-14 வரை வயதுள்ள சிறுமியர் பயன்பெறும் வண்ணம் ஆறு பள்ளி சாராக் கல்வித் திட்டங்கள் மாவட்டம் ஒவ்வொன்றிலும் 100 மையங்களுடன் நடத்தப்படும். தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு இது பயனுள்ளதாக அமையும். இதற்கென ரூ.55.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வளர்கல்வி மையங்கள் :

4.7 முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் அறிவொளி தொடர் கல்வித் திட்டத்தின் தொடர்ச்சியாகத் தொடர்கல்வி மையங்கள் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் செயல்பட இருக்கின்றது. அறிவொளி மற்றும் தொடர் கல்வி இயக்கங்களின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்றதை நிலை நிறுத்திக் கொள்ள, கிராம நூலகங்கள் மூலம் சிறு சிறு நூல்கள், வார மாத இதழ்கள், செய்தித்தாட்கள் ஆகியவற்றைப் படித்துப் பயன் பெற உதவும் திட்டமாகச் செயல்பட உள்ளது. மேலும் அரசு வளர்ச்சித் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுதல், தொழில் பயிற்சி அளித்தல், குழு விவாதம், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் போன்றன இம்மையங்களின் மூலம் வழங்கப்படும். மைய அரசின் முழு நிதி உதவியுடன் கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, வேலூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் தொடர்கல்வி மையங்கள் செயல்பட உள்ளன. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகச் செயல்படுவார். மாவட்டத்திலுள்ள 8 முதல் 10 தொடர்கல்வி மையங்களுக்கு ஒரு

ஒருங்கிணைப்பாளர் மையம் செயல்பட இருக்கிறது. இதற்குப் பொறுப்பாளராக ஒரு தொடர்பாளர் இருப்பார். இப்பொறுப்பை ஊராட்சியில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர் கவனிப்பார். இம்மையங்கள் மூலம் அமையும் கிராம நூலகங்கள் நன்கு செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இவரது பொறுப்பேயாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான செலவினத்தை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும். பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் செலவினத்தை 50:50 என்ற பங்கீடு முறையில் ஏற்றுக்கொள்ளும். இதற்குப் பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய அமைப்புகளிடம் நிரந்தரமாகச் செயல்படத்தக்க வகையில் ஒப்படைக்கப்படும் இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### திறந்த வெளிப் பள்ளித் திட்டம் :

4.8 திறந்த வெளிப் பள்ளித் திட்டம், அனைவருக்கும் தொடர்கல்வி என்கிற இலக்கினை அடைய வழிவகுக்கின்றது. இத்திட்டம் டிசம்பர் 1997 முதல் செயல்பட்டு வருகிறது. பள்ளிப்படிப்பை இடையில் விட்டவர்களுக்கு 5 ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியைத் திறந்த வெளிப் பள்ளித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. அறிவொளி இயக்கத்தின் மூலம் புதிதாகக் கற்றவர்களுக்கு 3 ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியை திறந்த வெளிப்பள்ளி மையங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. ஓராண்டு காலத்தை மூன்று பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்த ஆண்டில் அடுத்த வகுப்பில் சேரத் தகுதியுடையவர்களாவர். புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் புதிதாக கற்றவர்களுக்கான திறந்த வெளிப்பள்ளிகள் மாவட்டத்திற்கு 20 மையங்கள் வீதம் 40 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிப்படிப்பை இடையில் விட்டவர்களுக்குப் பயிற்சி அளிக்க கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 மையங்கள் வீதம் 60 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2700 பேர் பயன் பெறுவார்கள்.

## 5. அரசுத் தேர்வுகள் :

5.1 அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 40 வகையான அரசுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், பள்ளி இடைநிலை





(எஸ்.எஸ்.எல்.சி) மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் (+2) பெரிய அளவிலானவை ஆகும். இவை மட்டுமன்றி ஆங்கிலோ இந்தியன்/மெட்ரிகுலேசன்/ஆசிரியர் கல்விப் பட்டயத் தேர்வு/கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, தையல், அச்சு மற்றும் விவசாயம் போன்ற தொழில் தொடர்பான தேர்வுகளும் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன.

### பிற தேர்வுகள் :

5.2 மையத் தேர்வாணைக்குழு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற நிறுவனங்களுக்காக இவ்வியக்ககம் 30 தேர்வுகள் நடத்தி வருகிறது.

### கேட்டல், பேசுதல் திறன் தேர்வு :

5.3 மேல்நிலைக் கல்வியின் மார்ச் 1997 தேர்வு முதல் மாணவர்களின் கேட்டல் பேசுதல் திறனறிய மொழிப்பாடங்களில் இதற்கான தேர்வு ஒன்று புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 20 மதிப்பெண் வழங்கிட ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### மாற்று எண் மதிப்பீட்டுமுறை :

5.4 விடைத்தாள் மதிப்பீட்டில் மறைபொருள் தன்மையைக் காத்திடும் பொருட்டு மேல்நிலைத் தேர்வு/மெட்ரிக் தேர்வு/ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு/ஆசிரியர் பயிற்சி பட்டயத் தேர்வு ஆகியவற்றிற்கு மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

5.5 கடந்த மார்ச்/ஏப்ரல், 1997 ஆம் ஆண்டு, நடந்த பொதுத் தேர்வுகளில் கலந்து கொண்டோர், தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தேர்வின் பெயர் | வருடம் | தேர்வர்களின் எண்ணிக்கை | | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| | | பதிவு செய்தவர் | தேர்ச்சி பெற்றவர் | |
| இடைநிலைக் கல்வித் தேர்வு | 1997 | 4,83,014 | 3,29,707 | 68.26 |
| மேல்நிலைக் கல்வித் தேர்வு | 1997 | 2,82,928 | 2,22,532 | 78.65 |
| மெட்ரிக் தேர்வு | 1997 | 48,065 | 45,910 | 95.51 |
| ஆங்கிலோ இந்தியத் தேர்வு | 1997 | 4,405 | 4,130 | 93,75 |

[1998 ஏப்ரல் 15

## 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

6.1 பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் கீழ்வரும் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியின்கீழ் வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைப் பள்ளிகளின் பட்டதாரி ஆசிரியர்களும், மொழி ஆசிரியர்களும், பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களும் வேலை வாய்ப்பகம் பதிவு முன்னுரிமை அடிப்படையில், நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, அவர்களது தகுதிகளுக்கேற்பவும், நேர்காணலில் பெறும் மதிப்பெண் அடிப்படையிலும், இனச் சுழற்சி அடிப்படையிலும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

6.2 தகுதிவாய்ந்த ஆசிரியர்களை அவர்களது முன் அனுபவம், வேலைக்காக பதிவு செய்து காத்திருந்த காலம், கூடுதல் கல்வித் தகுதிகள் அடிப்படையில் தேர்வு செய்வதற்கான மதிப்பிடும் முறை 1997-98 இல் சீரமைக்கப்பட்டது. இதே அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டும் 969 முதுகலை ஆசிரியர்களும், 735 பட்டதாரி ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

6.3 நேர்காணல் மதிப்பீடுகள், கணிப்பொறியில் பதிவு செய்யப்படுவதன் மூலம் மிகத் துல்லியமாகவும், விரைந்தும் தெரிவு செய்து முடிவுகளை அறிவிக்க ஏதுவாகிறது. இதன் பயனாக இவ்வாரியம் 1996-97 ஆம் கல்வியாண்டில் சுமார் 1700 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும், 1997-98 ஆம் கல்வியாண்டில் 1770 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்திற்கான தேக்கமடைந்த பணியிடங்களை நிறைவு செய்யும் வகையில் வாரியம் செயல்பட்டு அவ்வினத்தினருக்காக 1996-97 இல் சிறப்புத் தேர்வுகள் நடத்தி, 62 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 78 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. அவ்வாறே 1997-98 ஆம் கல்வியாண்டில் 42 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 23 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

7.1 தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகம் மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி 1997-98 ஆம் கல்வி ஆண்டில் 3,8 மற்றும் 10 ஆம்



1998 ஏப்ரல் 15]

வகுப்புகளுக்கான பாடநூல்களுடன், ஏனைய வகுப்புகளுக்கான பாடநூல்கள் மறுபதிப்பு 343 தலைப்புகளில், 592 இலட்சம் பாடநூல் பிரதிகளை இக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இதுபோல் சிறுபான்மை மொழிவழிப் பாடநூல்களும் இக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு 4 ஆம் வகுப்பிற்கான புதிய பாடநூல்களுடன் 349 தலைப்புகளில் 408.40 இலட்சம் பாடநூல் பிரதிகளை இக்கழகம் அச்சிட்டு வழங்கும். இதற்கான மொத்தச் செலவு ரூ.37.82 கோடி ஆகும்.

7.2 1997-98 ஆம் கல்வி ஆண்டில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள் 11 தலைப்புகளில், 8 இலட்சம் பிரதிகளை இக்கழகம் வெளியிட்டுள்ளது.

7.3 1997-98 ஆம் கல்வி ஆண்டில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்படி 1 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் 75 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.32.50 கோடி மதிப்புள்ள 336 இலட்சம் பிரதிகள் அச்சடித்து கல்வித் துறையில் உள்ள 414 உதவிக் கல்வி அலுவலர்கள் மூலம் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்புத்தகங்கள் முதல் முறையாகப் பள்ளி திறக்கப்படும்போதே வழங்கப்பட்டன. இச்சிறப்பான நிலை இவ்வாண்டும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். கூடுதலான புத்தகங்கள் விநியோகிக்கப்பட வேண்டியிருப்பினும் இப்பணி உரிய காலத்தில் முடிக்கப்படும். தேவையான சிறுபான்மையினர் மொழிப் பாடப் புத்தகங்களும் ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

7.4 பாடநூலின் விற்பனைப் பிரதிகளை விநியோகம் செய்ய 62 வட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள், 2099 கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் [illegible]00 தனியார் விற்பனையாளர்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள மாணவ, மாணவியர்க்குச் சிரமமின்றிப் பாடநூல்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7.5 இக்கழகம் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்து தயாரிக்கப்படும் குறிப்பேடுகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கும் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் ரூ.5.00 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளை இக்கழகம் விநியோகம் செய்கிறது. இவ்வாண்டு இந்த நோட்டுப் புத்தகங்களும் பள்ளி திறக்கும் நேரத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[1998 ஏப்ரல் 15

## 8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

8.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. இந்த ஆணையத்தின் மூலம் விளையாட்டு மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

8.2 இந்த அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு வழி செய்யக் கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. தற்போது 15 மாவட்டத் தலைமையிடங்களில் விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் விளையாட்டு மையங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மற்ற 12 மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் படிப்படியாகக் கட்டப்படும். மேலும், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குத் தேவையான வசதிகள் தற்போது சென்னையில் மட்டுமே உள்ளன. இவ்வாறான வசதிகள் மற்ற வட்டாரத் தலைநகர்களில் உருவாக்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் உள்விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும். முதலில் திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டத் தலைநகரங்களில் செயற்கைப் புல் மைதானம், செயற்கை ஓடு பாதை, சிமெண்ட் தரைதளம் மற்றும் நவீன வசதிகளை ரூ.40.00 இலட்சம் செலவில் இணை மான்ய அடிப்படையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்கென 1998-99 ஆம் நிதியாண்டில் ரூ.16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.3 விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கருதி, திருநெல்வேலியில் ஹாக்கி சிறப்பு விளையாட்டு மையமும், கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு மையமும், சத்துவாச்சேரியில் (வேலூர்) பளுதூக்கும் பயிற்சி விளையாட்டு மையமும், சென்னையில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், டென்னிஸ் அரங்கு, ஹாக்கி அரங்கு மற்றும் நீச்சல் விளையாட்டரங்கங்களில் உடற்பயிற்சித் திறன் வளர்க்கும் மையங்களும் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்திய சுதந்திர தினப் பொன்விழாவினைக் கொண்டாடும் வகையில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் 15 வகையான பிரிவுகளில் நடத்தப்பட்டன. இவற்றில் சுமார் 4000 விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டனர். சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் நினைவாக



1998 ஏப்ரல் 15]

சென்னையில் தேசிய இளைஞர் விழா 12-1-1998 முதல் 16-1-1998 முடிய சிறப்புடன் கொண்டாடப்பட்டது. நாடு முழுவதிலிருந்தும் சுமார் 3000 இளைஞர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

8.4 1997-98 முதல் வாலிபால் விளையாட்டு வளர்ச்சியினை மேம்படுத்த வேண்டி 18 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு திருப்பத்தூர் தூய இருதய கல்லூரியில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து ரூ.1.17 இலட்சம் நிதி செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

8.5 தற்போது சென்னையைத் தவிர மதுரை, உதகமண்டலம் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டத் தலைநகரங்களில் உள் விளையாட்டரங்கம் உள்ளது. கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களில் உள் விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1998-99 ஆம் நிதியாண்டில், முதலில் திருச்சிராப்பள்ளியில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் உள் விளையாட்டரங்கம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் மாநில அரசின் பங்காகவும், மீதமுள்ள 50 சதவீதத்தினைப் பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடனும் பெற்று செயல்படுத்தப்படும். இதற்கென, 1998-99 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காக ரூ. 14.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.6 தற்போதுள்ள 16 விளையாட்டரங்கங்களில் கடலூரில் மட்டும் நிலக்கரி தடகள ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது. முதலில் மாநகராட்சி நகரங்களில் மட்டும் செயற்கைத் தடகள ஓடுபாதை அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக கோயம்புத்தூரில் ரூ. 20 இலட்சம் செலவில் செயற்கைத் தடகள ஓடுபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்கென 1998-99 ஆம் நிதியாண்டில் ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.7 சென்னை, தஞ்சாவூர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் தற்போது நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் படிப்படியாக நீச்சல் குளம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதலில் மதுரையில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 50 விழுக்காடு மாநில அரசின் பங்காகவும், 50 விழுக்காடு பொதுமக்கள்/நிறுவனங்கள் மற்றும் நடுவண் அரசின் நிதியுதவியாகவும் பெற்று செயல்படுத்தப்படும். இதற்கென 1998-99 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்காக ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 15

### தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டம்

8.8 தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கென 2020 ஆம் ஆண்டு வரைக்கான தொலை நோக்கு விளையாட்டு வளர்ச்சித் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அதன் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரையிலான விளையாட்டு வசதிகளை வளர்த்திடும் வகையில் விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களது முழுத்திறனை ஊக்குவிக்கும் வகையிலும் தனியார் விளையாட்டுக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையிலும் இத்திட்டம் அமையும்.

8.9 இன்றைய நிலையில் விளையாட்டுத் துறையில் பல்வேறு மாறுபட்ட பிரிவுகள் விளையாட்டு வளர்ச்சிக்கென தன்னுரிமையுடன் இயங்குவதுடன் மிகச்சில சமயங்களில் மட்டுமே அனைத்துப் பிரிவுகளும் ஒன்று சேருகின்றன. அவைகளில் சில முக்கிய பிரிவுகள் பின்வருமாறு:—

1. விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
2. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் உடற்பயிற்சி/விளையாட்டுப் பிரிவு
3. மாநில விளையாட்டுக் கழகங்கள்
4. தனிப்பட்ட விளையாட்டு ஆர்வலர்கள்/வளர்ச்சி வளாகங்கள்
5. தனியார் விளையாட்டுக் குழுக்கள்/விளையாட்டு மன்றங்கள்

8.10 விளையாட்டினை மேம்படுத்த திட்டம் தயாரிக்க மேற்கண்ட பல்வேறு பிரிவுகளின் ஆலோசனைகளும் பெறப்படவேண்டும். மேலும் இந்த ஆணையத்தின் மாவட்டப் பிரிவுகளைத் தவிர, மாவட்டங்களில் உள்ள மற்ற விளையாட்டு வசதிகளையும், ஆராய்ந்து கண்டறிதல் வேண்டும். மேலும் விளையாட்டுத் துறைகளின் அனைத்துத் தரப்பினரின் செயல்பாடுகளை ஆராய்வதுடன் தேவைப்படின் மற்ற மாநிலங்களுக்கும் சென்று கலந்தாலோசிக்க வேண்டியிருக்கும். இதற்கென 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.11 மேலும், இத்துறையை மேம்படுத்த வேண்டி தொழில் அதிபர்கள், முனைவோர்கள் மற்றும் பரந்த மனப்பான்மை கொண்டவர்களிடமிருந்து நன்கொடையாக நிதி திரட்டி, அதற்கு ஈடான மாநில அரசின் பங்கும் பெற்று விளையாட்டு மேம்பாட்டிற்கான நிரந்தர நிதி ஒன்றினை உருவாக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு 1997-98 ஆம் ஆண்டில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.100.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 15]

## 9. பொது நூலகங்கள்

### வாசகர் வட்டம்

9.1 ஒவ்வொரு நூலகத்திலும் வாசகர் வட்டம் ஏற்படுத்தப்பட்டு வாசகர்களுடைய ஒத்துழைப்புப் பெறவும் நூல்கள் நிறைவாகப் பயன்படுத்தப்படவும் நூலகங்களின் வளர்ச்சிக்கு உதவவும் இவ்வாண்டு எல்லா நூலகத்திற்கும் வாசகர் வட்டம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### குழந்தைகள் நூலகம்

9.2 ஒவ்வொரு மாவட்ட நூலகத்திலும் குழந்தைகளுக்கெனத் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் நூல்களும் தளவாடங்களும் வைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### நூல்கள் வாங்குதல்

9.3 நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்தின் தேவைக்கேற்ப சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் ஆண்டுதோறும் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய்க்கு வாங்கப்படுகின்றன. பொதுமக்கள் நூலகங்களைச் செவ்வனே பயன்படுத்த இவை மிகவும் ஏதுவாக உள்ளன. இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை மூலம் மானியம் பெறப்பட்டு ஆண்டுதோறும் நூல்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் அறக்கட்டளையிலிருந்து வழங்கிய ரூ.50 இலட்சத்துடன் நூலக ஆணைக் குழு வழங்கிய ரூ.50 இலட்சத்தையும் சேர்த்து ரூ.100 இலட்சத்திற்கு புத்தகங்களும், பிற தளவாடங்களும் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு ரூ.1.2 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

9.4 வாசகர்களின் படிக்கும் ஆர்வத்திற்கு ஈடு கொடுக்க ஆண்டு தோறும் சுமார் ரூ.2 கோடி அளவிற்கு சிறந்த/விலை உயர்ந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வாங்கப்படுகின்றன. வாசகர்களின் வசதிக்காக ஆண்டுதோறும் சிறந்த காற்றோட்டமான நூலகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மொத்தமுள்ள 1,568 நூலகங்களில், இதுவரை 728 நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர 95 கட்டடங்கள் ரூ.406.27 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 26 நூலகக் கட்டடங்கள் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 15

### கன்னிமாரா பொது நூலகம்

9.5 கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு விழா நினைவாக ரூ.148 இலட்சத்திற்கு இணைப்புக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்நூலகத்தின் முன்னேற்றத்திற்காக ரூ.100 இலட்சத்திற்குத் தளவாடச் சாமான்கள் வாங்கப்படவுள்ளன. நூற்றாண்டு விழாவை ஒட்டி "அஞ்சல் வெளியுறை" வெளியிடப்பட்டுள்ளது. மாநில அரசு வலியுறுத்தியதின் அடிப்படையில் நினைவுத் தபால் வில்லையும் (Stamp) வெளியிட மைய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது. கன்னிமாரா பொது நூலகத்திற்கு நூல்கள் மற்றும் பருவ வெளியீடுகள் வாங்குவதற்கு ரூ.7.10 இலட்சமும், இந்நூலகத்திலுள்ள பழுதடைந்த நூல்களை கட்டுமானம் செய்ய ரூ.3.00 இலட்சமும், 1998-99 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குடிமைப்பணி நாடுவோருக்கான சிறப்பு வசதி

9.6 இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, வங்கிகள் நடத்தும் தேர்வு, இரயில்வே தேர்வாணையம், மைய தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் இளைய தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளதாகப் பயன்படும் முக்கியமான நூல்கள் சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, நீலகிரி, வேலூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்ட நூலகங்களில் வாங்கி வைக்கப்பட்டு குடிமைப்பணி நாடுவோருக்கான சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### ஊரக நூலகங்கள்

9.7 பொது நூலக இயக்குநரகத்தின்கீழ் தற்போது 1568 நூலகங்களும், 1146 பகுதி நேர நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. கூடுதலாக 625 ஊரக நூலகங்களும் படிப்படியாகத் திறக்க சீரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவை கிராமப்புற மக்களின் நூலக அறிவை வளர்க்க மிகவும் உதவியாக இருக்கும்.

### நிதி ஆதாரத்தைப் பெருக்குதல்

9.8 நூலக வரி மூலம் கிடைக்கும் வருவாயை நம்பியே நூலக ஆணைக் குழுக்கள் செயல்படுகின்றன. வளர்ந்து வரும் நூலகத் தேவைக்கு இவ்வருவாய் போதுமானதாக இல்லை. எனவே பொதுமக்கள் நூலக இயக்கத்தில் ஆர்வம் காட்டவும் நூலகங்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும் பொது மக்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுத்து



1998 ஏப்ரல் 15]

அவர்கள் வழங்கும் நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இதுவரை பெறப்பட்ட நிதி விவரம் :

| | | |
|---|---|---|
| அ) | புரவலர் நிதி | ரூ. 65 இலட்சம் |
| ஆ) | கட்டடமும் காலிமனையும் (மதிப்பு) | ரூ. 576 இலட்சம் |
| இ) | தளவாடங்கள் மதிப்பு | ரூ. 230 இலட்சம் |

9.9 5000 மற்றும் அதற்குமேல் மக்கள் தொகை உள்ள இடங்களில் நூலகம் அமைக்க வேண்டும் என்பது அரசின் குறிக்கோளாகும். 1998-99 ஆம் ஆண்டில் ஊர்ப்புறங்களில் 20 கிளை நூலகங்கள் திறக்க அரசு ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மைய நூலகங்களில் கணிப்பொறியை அமைப்பதன் மூலம் வாசகர்கள் தங்களுக்கு வேண்டிய நூல்களைத் தேடி எடுக்கும் நேரத்தைக் குறைப்பதுடன், வெளியே சென்றுள்ள நூல்கள் மற்றும் இருப்பில் உள்ள நூல்களின் விவரத்தை அறியவும் உதவும். எல்லா மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறியைப் படிப்படியாக அமைக்க உத்தேசித்து, முதற்கட்டமாக 1998-99ல் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் கணிப்பொறி மற்றும் "மேலிப்நெட்" வசதியை ஏற்படுத்த ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடமாடும் நூலகச் சேவை சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்ட நூலக ஆணைக் குழுக்களால் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. இச்சேவையை 1998-99-ல் சேலம், திருச்சிராப்பள்ளி திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கு ரூ.3.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## புள்ளி விவரம்

### பள்ளிக் கல்விப் புள்ளி விவரம்

1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்
2. பள்ளிகளின் எண்ணிக்கை
3. ஆசிரியர்களின் எண்ணிக்கை .
4. ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்
5. பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வகைப்படி) மாணவர்கள் சேர்க்கையும், ஆசிரியர் எண்ணிக்கையும்
6. ஆசிரியர்கள் எண்ணிக்கை பள்ளி நிர்வாக வகைப்படி

[1998 ஏப்ரல் 15

7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வகுப்பு வகைப்படி
8. மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல்
9. தொழிற் கல்விப் பாடங்கள்
10. பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)
11. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)
12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி
13. உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)
14. மேல்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)
15. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு, 1996-97
16. பெண்களின் கல்வி நிலை-புள்ளி விவரம்:—

(அ) பெண்களின் எழுத்தறிவு நிலை

(ஆ) மாணவிகளின் சேர்க்கை விவரம்

(இ) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை

ஈ) பள்ளியைவிட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)



1998 ஏப்ரல் 15]

## புள்ளி விவரங்கள்

### பள்ளிக் கல்வி, 1997-98.

#### (1) பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்.

| வயது தொகுதி | இனம் | மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (விழுக்காட்டில்) |
|---|---|---|---|---|
| 6 முதல் 11 | மாணவர்கள் | 37.03 | 35.19 | 95.02 |
| | மாணவிகள் | 35.30 | 32.95 | 93.35 |
| | **மொத்தம்** | **72.33** | **68.14** | **94.20** |
| 11 முதல் 14 | மாணவர்கள் | 18.67 | 19.30 | 103.37 |
| | மாணவிகள் | 17.83 | 16.64 | 93.31 |
| | **மொத்தம்** | **36.50** | **35.94** | **98.45** |
| 14 முதல் 16 | மாணவர்கள் | 10.94 | 8.84 | 80.78 |
| | மாணவிகள் | 10.68 | 6.18 | 57.84 |
| | **மொத்தம்** | **21.62** | **15.02** | **69.45** |
| 16 முதல் 18 | மாணவர்கள் | 10.32 | 4.25 | 41.19 |
| | மாணவிகள் | 10.08 | 2.89 | 28.71 |
| | **மொத்தம்** | **20.40** | **7.14** | **35.02** |
| 6 முதல் 18 | மாணவர்கள் | 76.96 | 67.58 | 87.80 |
| | மாணவிகள் | 73.89 | 58.66 | 79.39 |
| | **மொத்தம்** | **150.85** | **126.24** | **83.68** |

#### (2) பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30098 | 30329 | 30351 | 30471 | 30619 | 30796 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5608 | 5593 | 5578 | 5549 | 5503 | 5473 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3203 | 3270 | 3340 | 3419 | 3574 | 3765 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 2165 | 2221 | 2318 | 2490 | 2734 | 2975 |
| **மொத்தம்** | **41074** | **41413** | **41587** | **41929** | **42430** | **43009** |

[1998 ஏப்ரல் 15

### (3) ஆசிரியர்களின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 121212 | 116396 | 114308 | 115181 | 115561 | 115651 |
| நடுநிலைப் பள்ளிகள் | 65895 | 62192 | 61779 | 64392 | 64454 | 64395 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 42654 | 42329 | 43589 | 45429 | 46536 | 46372 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 74443 | 74496 | 76034 | 78796 | 81420 | 83451 |
| மொத்தம் | **304204** | **295413** | **295710** | **303798** | **307971** | **309869** |

### (4) ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகை | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 47 | 49 | 50 | 50 | 40 | 40 |
| நடுநிலைப் பள்ளிகள் | 47 | 51 | 52 | 50 | 40 | 40 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 41 | 43 | 44 | 44 | 44 | 45 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 35 | 37 | 38 | 39 | 39 | 40 |

### (5) பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வகைப்படி) மாணவர்கள் சேர்க்கையும் ஆசிரியர்கள் எண்ணிக்கையும், 1997-98.

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1496 | 3.00 | 7749 |
| | நகராட்சி, மாநகராட்சி | 1153 | 5.49 | 8950 |
| | ஊராட்சி ஒன்றியம் | 22998 | 25.83 | 68856 |
| | தனியார் | 5149 | 12.15 | 30096 |
| | மொத்தம் | **30796** | **46.47** | **115651** |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 214 | 1.26 | 3338 |
| | நகராட்சி, மாநகராட்சி | 399 | 2.60 | 6895 |
| | ஊராட்சி ஒன்றியம் | 2984 | 11.65 | 25760 |
| | தனியார் | 1876 | 10.21 | 28402 |
| | மொத்தம் | **5473** | **25.72** | **64395** |
| **மொத்த தொடக்க நடுநிலைப் பள்ளிகள்** | | **36269** | **72.19** | **180046** |



1998 ஏப்ரல் 15]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 1917 | 11.28 | 26002 |
| | நகராட்சி, மாநகராட்சி | 94 | 0.80 | 1483 |
| | தனியார் | 438 | 4.28 | 7928 |
| | மொத்தம் | 2449 | 16.36 | 35413 |
| | ஆங்கிலோ-இந்தியன் | 12 | 0.14 | 303 |
| | மெட்ரிக்குலேஷன் | 1245 | 3.86 | 9468 |
| | மைய அரசு | 59 | 0.49 | 1188 |
| **மொத்த உயர்நிலைப் பள்ளிகள்** | | **3765** | **20.85** | **46372** |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1087 | 13.24 | 32442 |
| | நகராட்சி, மாநகராட்சி | 75 | 2.08 | 3938 |
| | தனியார் | 857 | 12.24 | 31933 |
| | மொத்தம் | 2019 | 27.56 | 68313 |
| | ஆங்கிலோ-இந்தியன் | 29 | 0.47 | 1219 |
| | மெட்ரிக்குலேஷன் | 792 | 3.98 | 10093 |
| | மைய அரசு | 135 | 1.19 | 3826 |
| | **மொத்தம்** | **2975** | **33.20** | **83451** |
| | மொத்த உயர், மேல் நிலைப் பள்ளிகள் | 6740 | 54.05 | 129823 |
| | பெரு மொத்தம் (அனைத்துப் பள்ளிகள்) | 43009 | 126.24 | 309869 |

| | |
|---|---|
| மாணவர்கள் | 6757732 |
| மாணவிகள் | 5866249 |
| **மொத்தம்** | **12623981** |

## (6) ஆசிரியர்களின் எண்ணிக்கை - பள்ளி நிர்வாக வகைப்படி 1997-98

| வ. எண் | பள்ளிவகைகள் | மாநில அரசு/மைய அரசு | நகராட்சி மாநகராட்சி | ஊராட்சி ஒன்றியம் | தனியார் | மொத்தம் | ஆசிரியர்கள் ஆண் | ஆசிரியர்கள் பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | தொடக்கப் பள்ளிகள் | 7749 | 8950 | 68856 | 30096 | 115651 | 67884 | 47767 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 3338 | 6895 | 25760 | 28402 | 64395 | 33037 | 31358 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 26002 | 1483 | — | 18887 | 46372 | 25934 | 20438 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | 32442 | 3938 | — | 47071 | 83451 | 47737 | 35714 |
| | **மொத்தம்** | **70551** | **21266** | **94616** | **123436** | **309869** | **174592** | **135277** |

## (7) பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வகைப்படி)

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 | 91544 | 80571 | 172115 |
| 6 முதல் 8 | 39285 | 25635 | 64920 |
| 9 மற்றும் 10 | 28418 | 18115 | 46533 |
| 11 மற்றும் 12 | 15556 | 10745 | 26301 |
| 1 முதல் 12 | 174803 | 135066 | 309869 |



## (8) மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் 1997-98 (இலட்சத்தில்)

| வகுப்பு | இனம் | மேல்நிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | தொடக்கப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 முதல் 5 | மாணவர்கள் | 1.73 | 1.54 | 7.96 | 23.96 | 35.19 |
| | மாணவிகள் | 1.69 | 1.33 | 7.42 | 22.51 | 32.95 |
| | **மொத்தம்** | **3.42** | **2.87** | **15.38** | **46.47** | **68.14** |
| 6 முதல் 8 | மாணவர்கள் | 7.90 | 6.21 | 5.19 | — | 19.30 |
| | மாணவிகள் | 6.06 | 5.43 | 5.15 | — | 16.64 |
| | **மொத்தம்** | **13.96** | **11.64** | **10.34** | — | **35.94** |
| 9 மற்றும் 10 | மாணவர்கள் | 5.32 | 3.52 | — | — | 8.84 |
| | மாணவிகள் | 3.35 | 2.83 | — | — | 6.18 |
| | **மொத்தம்** | **8.67** | **6.35** | — | — | **15.02** |
| 11 மற்றும் 12 | மாணவர்கள் | 4.25 | — | — | — | 4.25 |
| | மாணவிகள் | 2.89 | — | — | — | 2.89 |
| | **மொத்தம்** | **7.14** | — | — | — | **7.14** |
| 1 முதல் 12 | மாணவர்கள் | 19.20 | 11.27 | 13.15 | 23.96 | 67.58 |
| | மாணவிகள் | 13.99 | 9.59 | 12.57 | 22.51 | 58.66 |
| | **மொத்தம்** | **33.19** | **20.86** | **25.72** | **46.47** | **126.24** |

### (9) தொழிற்கல்விப் பாடங்கள் 1997-98

| வ.எண் | பாடப் பிரிவு | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வேளாண்மை | 6427 | 698 | 7125 |
| 2. | மனை இயல் | 139 | 4526 | 4665 |
| 3. | வணிகவியல் மற்றும் வாணிபம் | 29812 | 27854 | 57666 |
| 4. | பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் | 21369 | 2789 | 24158 |
| 5. | சுகாதாரம் | 3640 | 17891 | 21531 |
| 6. | இதரப் பிரிவுகள் | 55 | 41 | 96 |
| | மொத்தம் | **61442** | **53799** | **115241** |

### (10) பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

[1998 ஏப்ரல் 15

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1987-88 | 19.44 | 24.45 | 21.78 | 44.08 | 53.14 | 48.22 | 69.72 | 77.32 | 73.24 | 87.13 | 88.84 | 87.91 |
| 1988-89 | 19.17 | 24.01 | 21.42 | 41.33 | 51.35 | 45.97 | 66.75 | 76.45 | 71.26 | 86.52 | 88.58 | 87.45 |
| 1989-90 | 18.78 | 23.64 | 21.05 | 40.87 | 50.65 | 45.43 | 66.11 | 73.85 | 69.64 | 86.11 | 87.98 | 86.44 |
| 1990-91 | 18.27 | 22.68 | 20.32 | 40.17 | 49.43 | 44.48 | 64.91 | 72.38 | 68.32 | 84.23 | 86.60 | 85.31 |
| 1991-92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 | 64.45 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.09 |
| 1992-93 | 17.11 | 19.62 | 18.27 | 34.75 | 43.54 | 38.85 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.85 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 15.58 | 17.65 | 16.54 | 30.75 | 39.36 | 34.74 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |
| 1995-96 | 14.88 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996-97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.48 |
| 1997-98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |



1998 ஏப்ரல் 15]

### (11) உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)

| ஆண்டு | மாநிலப் பள்ளிகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி மாநகராட்சி | உதவி பெறுவது | உதவி பெறாதது | மொத்தம் | மெட்ரிக் குலேஷன் பள்ளிகள் | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
| 1982-83 | 1590 | 71 | 397 | 13 | 2071 | 78 | 18 | 93 | 189 | 2260 |
| 1983-84 | 1621 | 72 | 441 | 7 | 2141 | 93 | 18 | 99 | 210 | 2351 |
| 1984-85 | 1685 | 73 | 465 | 5 | 2229 | 144 | 14 | 89 | 247 | 2476 |
| 1985-86 | 1723 | 80 | 450 | 5 | 2258 | 212 | 13 | 86 | 311 | 2569 |
| 1986-87 | 1765 | 80 | 445 | 2 | 2292 | 289 | 11 | 96 | 396 | 2688 |
| 1987-88 | 1762 | 80 | 450 | 2 | 2294 | 406 | 13 | 106 | 525 | 2819 |
| 1988-89 | 1795 | 80 | 416 | 2 | 2293 | 515 | 13 | 101 | 629 | 2922 |
| 1989-90 | 1839 | 78 | 387 | 23 | 2327 | 606 | 12 | 89 | 707 | 3034 |
| 1990-91 | 1864 | 83 | 370 | 44 | 2361 | 684 | 13 | 93 | 790 | 3151 |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 974 | 3419 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |

## (12) மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (1997-98)

| ஆண்டு | மாநிலப்பள்ளிகள் அரசு | நகராட்சி மாநகராட்சி | உதவி பெறுவது | உதவி பெறாதது | மொத்தம் | மெட்ரி குலேஷன் பள்ளிகள் | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1982-83 | 654 | 60 | 576 | 2 | 1292 | 41 | 26 | 57 | 124 | 1416 |
| 1983-84 | 654 | 60 | 576 | 2 | 1292 | 52 | 26 | 57 | 135 | 1427 |
| 1984-85 | 66 | 60 | 584 | 1 | 1331 | 59 | 27 | 57 | 143 | 1479 |
| 1985-86 | 690 | 62 | 624 | 1 | 1380 | 79 | 28 | 67 | 174 | 1554 |
| 1986-87 | 755 | 62 | 651 | 1 | 1469 | 100 | 30 | 79 | 209 | 1678 |
| 1987-88 | 765 | 62 | 653 | 1 | 1481 | 121 | 29 | 79 | 229 | 1710 |
| 1988-89 | 769 | 62 | 676 | 19 | 1526 | 155 | 29 | 77 | 261 | 1787 |
| 1989-90 | 809 | 68 | 677 | 53 | 1607 | 192 | 29 | 87 | 308 | 1915 |
| 1990-91 | 848 | 68 | 674 | 70 | 1660 | 276 | 28 | 81 | 385 | 2045 |
| 1991-92 | 869 | 68 | 674 | 88 | 1699 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |



## (13) உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)

### (1982-83 முதல் 1997-98)
### (1 முதல் 10 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுவது | | | தனியார் பள்ளிகள் உதவி பெறாதது | | | மொத்தம் மாநிலப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1982-83 | 329058 | 193915 | 522971 | 19048 | 20051 | 39099 | 109797 | 07295 | 197002 | 199 | 1332 | 3321 | 459892 | 302590 | 762483 |
| 1983-84 | 372062 | 230676 | 602738 | 19546 | 22757 | 42303 | 138041 | 112481 | 250522 | 600 | 363 | 963 | 530249 | 366277 | 896526 |
| 1984-85 | 396375 | 259454 | 655829 | 19123 | 22781 | 41904 | 140344 | 113410 | 253763 | 607 | 434 | 1121 | 556529 | 396088 | 957617 |
| 1985-86 | 411032 | 271770 | 682802 | 22056 | 23136 | 45192 | 153907 | 126533 | 200440 | 1130 | 376 | 1506 | 588125 | 421815 | 1009940 |
| 1986-87 | 439308 | 307396 | 746704 | 22989 | 23365 | 46352 | 150876 | 127990 | 278866 | 1260 | 391 | 1651 | 614431 | 459142 | 1073573 |
| 1987-88 | 450268 | 317398 | 767666 | 23978 | 28794 | 52772 | 165332 | 153661 | 318993 | 1378 | 416 | 1794 | 640956 | 500269 | 1141225 |
| 1988-89 | 481562 | 329688 | 811250 | 26269 | 28203 | 54472 | 191676 | 170163 | 361819 | 1410 | 431 | 1840 | 700917 | 528485 | 1229402 |
| 1989-90 | 505175 | 349658 | 854833 | 24949 | 29160 | 54118 | 199741 | 188212 | 387955 | 7431 | 3712 | 11143 | 737296 | 570571 | 1308047 |
| 1990-91 | 541843 | 369505 | 911348 | 31132 | 31569 | 62701 | 170949 | 180766 | 351715 | 11117 | 5131 | 16248 | 755041 | 586971 | 1342012 |
| 1991-92 | 570948 | 402332 | 977280 | 32421 | 32423 | 64844 | 157824 | 168298 | 326122 | 22248 | 20945 | 43193 | 783441 | 623998 | 1407439 |
| 1992-93 | 601613 | 438733 | 1040346 | 34552 | 33940 | 68501 | 155939 | 165003 | 320942 | 274491 | 25248 | 52697 | 819553 | 663933 | 1482486 |
| 1993-94 | 588002 | 403111 | 1018113 | 36770 | 35884 | 72654 | 171359 | 178938 | 350297 | 29572 | 27596 | 57168 | 825703 | 672529 | 1498232 |
| 1994-95 | 609052 | 465799 | 1074851 | 39121 | 37985 | 77106 | 169295 | 176489 | 345784 | 42023 | 36941 | 78964 | 859491 | 717214 | 1576705 |
| 1995-96 | 628566 | 485186 | 1113752 | 39960 | 39033 | 78993 | 162853 | 168975 | 331828 | 46558 | 42809 | 89367 | 877937 | 737003 | 1614940 |
| 1996-97 | 642667 | 498359 | 1141026 | 40856 | 40116 | 80972 | 166506 | 174428 | 340934 | 47602 | 43953 | 91555 | 897631 | 756856 | 1654487 |
| 1997-98 | 634069 | 494382 | 1128351 | 40309 | 39788 | 80097 | 164278 | 173001 | 337279 | 46966 | 43593 | 90559 | 885622 | 750664 | 1609646 |

## (13) உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை (தொடர்ச்சி)

| ஆண்டு | மெட்ரிக்குலேஷன் | | | ஆங்கிலோ இந்தியன் | | | மைய அரசு | | | பெருமொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1982-83 | 13843 | 10514 | 24157 | 309 | 3484 | 12292 | 24638 | 14237 | 38875 | 502182 | 335826 | 83800 |
| 1983-84 | 22187 | 17585 | 39772 | 3934 | 8778 | 12712 | 31608 | 18041 | 49649 | 587973 | 410681 | 998659 |
| 1984-85 | 32265 | 32593 | 67858 | 3205 | 7614 | 10819 | 31963 | 18492 | 50460 | 626967 | 454787 | 1081754 |
| 1985-86 | 41868 | 33237 | 76105 | 3401 | 7923 | 11324 | 24663 | 16304 | 40927 | 658057 | 479279 | 1137366 |
| 1986-87 | 43928 | 32213 | 76141 | 3136 | 6830 | 9966 | 23728 | 147263 | 38491 | 685223 | 512948 | 1198171 |
| 1987-88 | 52308 | 38491 | 90799 | 2931 | 6617 | 9548 | 29098 | 20810 | 49908 | 725293 | 566187 | 1291480 |
| 1988-89 | 56271 | 48673 | 404944 | 3440 | 7171 | 10611 | 28443 | 20137 | 48580 | 789071 | 604466 | 1393537 |
| 1989-90 | 67058 | 60855 | 127913 | 3559 | 7333 | 10892 | 28239 | 20092 | 48331 | 836152 | 659031 | 1495183 |
| 1990-91 | 93763 | 75157 | 168920 | 3681 | 7367 | 11048 | 30153 | 23089 | 53242 | 882638 | 692584 | 1575222 |
| 1991-92 | 101501 | 77739 | 179240 | 4070 | 7837 | 11907 | 28214 | 21767 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 112007 | 83994 | 196001 | 4174 | 8774 | 12948 | 26150 | 19911 | 46061 | 961884 | 775612 | 1737496 |
| 1993-94 | 143512 | 114284 | 257796 | 4261 | 9203 | 13464 | 25874 | 19790 | 45664 | 999350 | 815806 | 1815156 |
| 1994-95 | 153269 | 117936 | 271205 | 4615 | 9418 | 14033 | 26225 | 19938 | 46163 | 1043600 | 864506 | 1908106 |
| 1995-96 | 184790 | 152260 | 337050 | 4297 | 9012 | 13309 | 27248 | 20890 | 48138 | 1094272 | 919165 | 2013437 |
| 1996-97 | 192446 | 159395 | 351841 | 4317 | 9057 | 11374 | 27064 | 21072 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 208334 | 177724 | 386058 | 4791 | 9119 | 13910 | 27591 | 21424 | 49015 | 1126338 | 958931 | 2085269 |



## (14) மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் 1982-83 முதல் 1997-98 (வகுப்பு 1 முதல் 12 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுவது | | | தனியார் பள்ளிகள் உதவி பெறாதது | | | மொத்தம் மாநிலப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1982-83 | 449442 | 203370 | 652820 | 48947 | 41518 | 90465 | 444100 | 286997 | 731097 | 768 | 367 | 1135 | 943257 | 532260 | 1475517 |
| 1983-84 | 454506 | 204542 | 659048 | 49573 | 42029 | 91602 | 448372 | 296857 | 745229 | 625 | 372 | 997 | 953076 | 543810 | 1496867 |
| 1984-85 | 482302 | 227533 | 709855 | 49760 | 45012 | 94772 | 457509 | 307156 | 764675 | 780 | 424 | 1204 | 990351 | 580155 | 1570507 |
| 1985-86 | 495158 | 250766 | 745924 | 64323 | 50119 | 114442 | 466350 | 326707 | 793057 | 543 | 252 | 795 | 1026374 | 627844 | 1654218 |
| 1986-87 | 541189 | 274414 | 815603 | 70191 | 51583 | 121724 | 479736 | 354197 | 834933 | 763 | 352 | 1115 | 1091879 | 679543 | 1771422 |
| 1987-88 | 559551 | 297530 | 857081 | 72287 | 52150 | 124437 | 511400 | 359332 | 879732 | 518 | 221 | 739 | 1143756 | 709233 | 1852989 |
| 1988-89 | 614432 | 338611 | 953043 | 78118 | 56089 | 134207 | 516815 | 359852 | 896667 | 7194 | 3811 | 11005 | 1216559 | 778363 | 1994922 |
| 1989-90 | 634181 | 352449 | 986550 | 88181 | 64675 | 152856 | 519816 | 394560 | 914376 | 18573 | 8548 | 27121 | 1260751 | 820252 | 2081003 |
| 1990-91 | 644590 | 368621 | 103291 | 95907 | 71735 | 167638 | 522202 | 410187 | 932390 | 23339 | 13531 | 39870 | 1309038 | 863771 | 2172809 |
| 1991-92 | 682068 | 387125 | 1071163 | 97211 | 72802 | 170017 | 533999 | 422609 | 956608 | 31892 | 16308 | 48200 | 1345144 | 898844 | 2243988 |
| 1992-93 | 704381 | 439836 | 1114217 | 98024 | 73398 | 171422 | 545340 | 421815 | 967155 | 35412 | 25119 | 60531 | 1383157 | 930168 | 2313325 |
| 1993-94 | 697304 | 409168 | 1106472 | 105853 | 79430 | 185283 | 562496 | 438240 | 1000736 | 37855 | 28300 | 66155 | 1403508 | 955138 | 2358640 |
| 1994-95 | 739013 | 452328 | 1191341 | 110511 | 83025 | 193536 | 576925 | 451425 | 1028350 | 47422 | 35358 | 82770 | 1473771 | 1022136 | 2495907 |
| 1995-96 | 760813 | 473059 | 1233872 | 110721 | 83211 | 193932 | 582049 | 455814 | 1037863 | 57843 | 43732 | 101575 | 1511426 | 1055816 | 2567242 |
| 1996-97 | 785765 | 491111 | 1276846 | 114348 | 86338 | 200686 | 601115 | 472895 | 1074010 | 59738 | 45375 | 105113 | 1560936 | 1095719 | 2636655 |
| 1997-98 | 810254 | 513892 | 1324146 | 117916 | 90343 | 208259 | 619873 | 494831 | 1114704 | 61603 | 47480 | 109083 | 1609646 | 1146546 | 2756192 |

53-51-13A

## (14) மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கை விவரம் (தொடர்ச்சி)

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் | | | ஆங்கிலோ இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் அனைத்து மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1982-83 | 15202 | 21537 | 36737 | 16929 | 11335 | 28264 | 43572 | 22098 | 65670 | 1018960 | 587230 | 1606190 |
| 1983-84 | 20054 | 30302 | 50356 | 18122 | 12096 | 30218 | 43692 | 22378 | 66070 | 1034944 | 608570 | 1643520 |
| 1984-85 | 30119 | 38398 | 68517 | 18160 | 14270 | 32380 | 48028 | 25586 | 73614 | 1086608 | 658409 | 1745017 |
| 1985-86 | 39689 | 43817 | 83506 | 20024 | 14970 | 34904 | 49500 | 27441 | 76641 | 1135587 | 713772 | 1849359 |
| 1986-87 | 42433 | 48374 | 90807 | 20195 | 16255 | 36447 | 51291 | 34809 | 86110 | 1216959 | 773823 | 1990782 |
| 1987-88 | 56411 | 48460 | 104871 | 20359 | 16407 | 36766 | 53644 | 38614 | 92258 | 1274170 | 812714 | 2086884 |
| 1988-89 | 58085 | 49068 | 107153 | 20498 | 16462 | 36960 | 52291 | 35606 | 87897 | 1347433 | 879499 | 2226932 |
| 1989-90 | 63706 | 53548 | 117254 | 20505 | 16592 | 37097 | 56492 | 36423 | 93915 | 1402454 | 926815 | 2329269 |
| 1990-91 | 71575 | 60311 | 131886 | 20809 | 16710 | 37519 | 57981 | 36815 | 94796 | 1459403 | 977607 | 2437010 |
| 1991-92 | 79667 | 65744 | 145411 | 21523 | 17111 | 38634 | 53569 | 34662 | 88231 | 1499903 | 1016301 | 2516264 |
| 1992-93 | 94759 | 74860 | 169619 | 23507 | 19922 | 43429 | 54946 | 36182 | 91128 | 1556369 | 1061132 | 26175401 |
| 1993-94 | 127317 | 103369 | 230386 | 23556 | 19983 | 43539 | 58138 | 38540 | 96678 | 1612519 | 1117030 | 2729549 |
| 1994-95 | 138252 | 109025 | 247277 | 23982 | 19867 | 43849 | 58922 | 38846 | 97768 | 1694927 | 1190474 | 2885401 |
| 1995-96 | 180094 | 150591 | 330685 | 24171 | 20041 | 44212 | 65267 | 44897 | 110164 | 1780958 | 1271345 | 3052303 |
| 1996-97 | 188143 | 157693 | 345836 | 25068 | 20972 | 46040 | 68159 | 47033 | 115192 | 1842306 | 1321417 | 3163723 |
| 1997-98 | 214692 | 183244 | 397936 | 25806 | 21164 | 46970 | 70135 | 48577 | 118712 | 1920279 | 1399531 | 3319810 |



## (15) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு - 1996-97

| வ.எண் | மாவட்டம் | உயர்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் | | | மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1. | சென்னை | 65.10 | 78.38 | 71.72 | 84.59 | 87.97 | 86.42 |
| 2. | காஞ்சிபுரம் | 56.60 | 65.31 | 60.51 | 76.04 | 82.75 | 79.28 |
| 3. | கடலூர் | 58.34 | 63.46 | 60.39 | 75.97 | 81.31 | 78.48 |
| 4. | விழுப்புரம் | 54.25 | 54.36 | 54.30 | 58.41 | 68.32 | 62.51 |
| 5. | தஞ்சாவூர், நாகை | 61.05 | 66.49 | 63.58 | 68.86 | 81.71 | 75.16 |
| 6. | மதுரை | 77.28 | 83.15 | 79.96 | 79.80 | 90.45 | 84.94 |
| 7. | திண்டுக்கல் | 71.07 | 78.17 | 74.45 | 73.11 | 84.66 | 78.87 |
| 8. | இராமநாதபுரம் | 62.56 | 62.71 | 62.62 | 73.62 | 82.91 | 77.64 |
| 9. | விருதுநகர் | 84.86 | 90.49 | 87.31 | 88.04 | 90.65 | 89.29 |
| 10. | சிவகங்கை | 70.48 | 74.80 | 72.48 | 72.80 | 84.50 | 78.93 |
| 11. | திருநெல்வேலி | 79.25 | 84.51 | 81.61 | 81.80 | 87.66 | 84.72 |
| 12. | தூத்துக்குடி | 82.42 | 89.43 | 85.86 | 84.56 | 90.56 | 87.80 |
| 13. | கன்னியாகுமரி | 72.93 | 77.07 | 75.12 | 64.51 | 77.77 | 72.00 |
| 14. | வேலூர் | 52.47 | 61.17 | 56.26 | 65.68 | 75.95 | 70.50 |
| 15. | திருவண்ணாமலை | 57.19 | 57.68 | 57.38 | 65.78 | 71.65 | 68.13 |
| 16. | சேலம் | 64.79 | 73.20 | 68.51 | 71.25 | 82.00 | 76.41 |
| 17. | தர்மபுரி | 54.91 | 57.15 | 55.86 | 63.24 | 69.36 | 65.90 |
| 18. | திருச்சி | 66.97 | 73.86 | 70.09 | 68.96 | 82.75 | 75.60 |
| 19. | புதுக்கோட்டை | 53.40 | 54.33 | 53.81 | 64.59 | 70.34 | 67.16 |
| 20. | கோயம்புத்தூர் | 76.34 | 82.12 | 79.24 | 83.56 | 89.22 | 86.80 |
| 21. | ஈரோடு | 76.64 | 83.44 | 79.93 | 76.98 | 86.60 | 81.87 |
| 22. | நீலகிரி | 51.63 | 62.67 | 57.28 | 63.11 | 74.22 | 68.82 |
| | மொத்தம் .. | 65.12 | 71.96 | 68.24 | 74.00 | 83.25 | 78.61 |

## (16) பெண்களின் கல்விநிலை - புள்ளி விவரம்

### (அ) பெண்களின் எழுத்தறிவு 1901 முதல் 1991

| ஆண்டு | பெண்கள் | விழுக்காடு<br>மொத்தம் |
|---|---|---|
| 1901 | 1.02 | 7.64 |
| 1911 | 1.53 | 9.18 |
| 1921 | 2.43 | 10.38 |
| 1931 | 2.94 | 11.34 |
| 1941 | 6.88 | 16.19 |
| 1951 | 10.06 | 20.82 |
| 1961 | 18.17 | 31.41 |
| 1971 | 28.86 | 39.46 |
| 1981 | 34.19 | 46.76 |
| 1991 | 52.29 | 63.72 |



### (ஆ) மாணவிகளின் சேர்க்கை விவரம் 1984-85 முதல் 1997-98 வரை

(1 முதல் 12 ஆம் வகுப்புவரை-அனைத்துப் பள்ளிகளும்)

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1984-85 | 45,99,525 | 1,05,46,019 | 43.61 |
| 1985-86 | 47,87,287 | 1,09,24,927 | 43.82 |
| 1986-87 | 49,47,126 | 1,12,75,998 | 43.87 |
| 1987-88 | 51,40,347 | 1,16,66,494 | 44.06 |
| 1988-89 | 52,79,573 | 1,19,63,482 | 44.13 |
| 1989-90 | 54,24,771 | 1,22,68,168 | 44.21 |
| 1990-91 | 55,73,833 | 1,25,58,707 | 44.38 |
| 1991-92 | 57,22,426 | 1,28,50,511 | 44.53 |
| 1992-93 | 58,73,234 | 1,31,44,999 | 44.68 |
| 1993-94 | 61,06,581 | 1,34,43,297 | 45.42 |
| 1994-95 | 61,79,499 | 1,37,38,759 | 44.98 |
| 1995-96 | 63,29,284 | 1,40,40,374 | 45.08 |
| 1996-97 | 57,35,009 | 1,23,89,725 | 46.29 |
| 1997-98 | 58,66,249 | 1,26,23,981 | 46.46 |

219396

(இ) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகள் எண்ணிக்கை 1984-85 முதல் 1997-98 வரை

| ஆண்டு. | ஆசிரியைகள். | மொத்தம். | விழுக்காடு. |
|---|---|---|---|
| 1984-85 | 1,16,166 | 2,84,414 | 40.80 |
| 1985-86 | 1,17,882 | 2,87,869 | 40.90 |
| 1986-87 | 1,19,598 | 2,90,723 | 41.14 |
| 1987-88 | 1,21,347 | 2,93,155 | 41.39 |
| 1988-89 | 1,21,823 | 2,94,339 | 41.39 |
| 1989-90 | 1,24,493 | 2,97,918 | 41.80 |
| 1990-91 | 1,27,841 | 3,00,857 | 42.50 |
| 1991-92 | 1,29,376 | 3,02,943 | 42.71 |
| 1992-93 | 1,29,926 | 3,04,264 | 42.71 |
| 1993-94 | 1,26,106 | 2,95,413 | 42.69 |
| 1994-95 | 1,27,352 | 2,95,710 | 43.06 |
| 1995-96 | 1,32,361 | 3,03,798 | 43.57 |
| 1996-97 | 1,34,239 | 3,07,971 | 43.59 |
| 1997-98 | 1,35,277 | 3,09,869 | 43.66 |



(ஈ) பள்ளியைவிட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு) (1984-85 முதல் 1997-98 வரை)*

| ஆண்டு | 1-5 | 1-8 | 1-10 | 1-12 |
|---|---|---|---|---|
| 1984-85 | 25.28 | 64.51 | 80.87 | 90.70 |
| 1985-86 | 25.20 | 62.23 | 79.71 | 90.00 |
| 1986-87 | 25.06 | 57.82 | 78.59 | 89.64 |
| 1987-88 | 24.46 | 53.14 | 77.32 | 85.84 |
| 1988-89 | 24.01 | 51.35 | 76.45 | 88.58 |
| 1989-90 | 23.64 | 50.65 | 73.85 | 87.98 |
| 1990-91 | 22.68 | 49.43 | 72.63 | 86.60 |
| 1991-92 | 21.16 | 46.50 | 71.93 | 86.07 |
| 1992-93 | 19.62 | 43.54 | 71.02 | 85.39 |
| 1993-94 | 18.35 | 41.20 | 69.85 | 84.28 |
| 1994-95 | 17.65 | 39.36 | 69.15 | 84.19 |
| 1995-96 | 16.97 | 37.11 | 68.20 | 83.65 |
| 1996-97 | 16.20 | 34.78 | 67.05 | 83.09 |
| 1997-98 | 16.18 | 34.64 | 65.74 | 82.54 |

* 6-வது அகில இந்திய கல்வி அளவையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

## இணைப்பு II

[368-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்: 17 – கல்வி

## 1998-99.

### தொடக்கவுரை

கல்வி மானியக் கோரிக்கை - 17 என்ற தலைப்பின்கீழ் மொத்த செலவினத் தொகை ரூ. 3601-07 கோடியாகும். இதில் உயர்கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ.464-31 கோடியாகும். இத்தொகை மொத்தச் செலவினத்தில் 12.89 விழுக்காடாகும்.

2. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம், திட்ட விரிவாக்கப்பணிகளை மேற்கொள்கிற காலமாகும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம், அனைத்துத் திட்டப்பணி வசதிகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய காலமாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்கையில் தற்போதுள்ள அடிப்படை வசதிகளை உரிய அளவுக்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்கக் கூடாது. இந் நோக்கத்தை மனதில் இருத்தி, நாம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம்.

3. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுக் கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 900 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகக் கல்விக்கென ரூ. 55 கோடியும் கல்லூரிக் கல்விக்கென ரூ. 53.29 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தையும் சேர்த்து தொழில் நுட்பக் கல்விக்கென ரூ. 138.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கலையும், பண்பாடும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்துக்கென ரூ. 4.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 20.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நம் நாட்டில் தற்போதுள்ள அடிப்படை வசதிப் பிரச்சினைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள போதிலும் வளர்ந்துவரும் நாடுகளில் நம்முடைய உயர் கல்வித் திட்டம் இன்றும் சிறந்த முறையாக இருப்பதை நாம் உணர வேண்டியுள்ளது. உயர் கல்விக்கான அடிப்படை வசதிகளிலிருந்து கிடைக்கின்ற பயன்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதும், உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்கு நம்முடைய தொழில் நுட்பக் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டு முன்னேற்றம் அடைவதும் நாட்டின் தேவையாகும்.

5. தற்பொழுதுள்ள நிறுவனக் கூட்டமைப்பின் வாயிலாகவும், நிலவும் பல்கலைக்கழக கல்வி முறை திறந்த வெளிப் பல்கலைக்கழகக் கல்வி முறை வாயிலாகவும் உயர் கல்வி திட்டம் இல்லாத பகுதிகளின் தேவையை நிறைவு செய்யுமாறு விரிவாக்கப் பணியை வரையறுத்தும், தற்போதுள்ள அடிப்படை வசதியினை ஒருங்கிணைத்து உரிய அளவுக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டகாலம் அதிக முக்கியத்துவம் அளிக்கும். கல்வித் திட்டப்பணிகளின் தரத்தினை மேம்படுத்த சாதனை வரையறை அடிப்படையில் உதவி மானியங்கள் வழங்கப்படும். முதல் பட்டப்படிப்பு, தொழில் அடிப்படை பட்ட மேற்படிப்புக் கல்வி, செயல் முறை ஆராய்ச்சிப் பணி ஆகிய கல்விகளில் வாழ்க்கைத் தொழில் கல்வி வாய்ப்பினை மேம்படுத்தி திட்டச் சாதனை எய்தப்படும். கல்விச் செலவு, பயனடைவோரின் செலுத்தும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டணங்கள் மாற்றி அமைக்கப்படும். தொழில் துறை, வணிகத் துறை ஆகிய துறைகளை ஈடுபடுத்துவதன் மூலமும் சமுதாயப் பங்களிப்பின் மூலமும் கூடுதல் நிதி ஆதாரங்கள் திரட்டப்படும்.

6. அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய வருடத்திற்கு நாலரை இலட்சம் மாணவர்கள் பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளை முடித்து வருவார்கள். அவர்களில் நாற்பது விழுக்காடு கலைப் பிரிவையும் (Arts), இருபது விழுக்காடு அறிவியல் (Science) பிரிவையும், இருபது விழுக்காடு வணிகப் பிரிவையும், (Commerce), ஒன்பது விழுக்காடு பொறியியல் பிரிவையும், (Engineering), மூன்று விழுக்காடு மருத்துவப் பிரிவையும், (Medical), இரண்டு விழுக்காடு கால்நடை மருத்துவப் பிரிவையும் (Veterinary), இரண்டு விழுக்காடு





சட்டப் பிரிவையும் (Law) தெரிவு செய்யலாம். பயன்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டங்களை (Application Oriented Courses) தொடங்குவதில் தமிழகம் முதல்நிலை வகிக்கிறது. புதிய அரசு மற்றும் உதவி பெறும் கல்லூரிகளைத் தொடங்குவதன் தேவையை மதிப்பீடு செய்து, அதனடிப்படையில் அரசின் உதவி செய்யும் அளவை கணக்கெடுத்த பின்னர், புதிய பொறியியல் கல்லூரிகள், கலைக்கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள் போன்றவற்றைத் தொடங்குவது குறித்து முடிவு செய்யப்படும். இது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

7. கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் முறையில் தங்களுடைய கல்வியைத் தொடர இயலாமல் போகின்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்கள் நடத்துகின்ற அஞ்சல்வழி வாயிலான தொலை தூரக் கல்வியைத் தேர்ந்தெடுத்துப் பயில்கின்றனர். வேலைக்குச் சென்று கொண்டே கல்வி கற்க விரும்புகின்றவர்களுக்கும் அவர்களுடைய அறிவுப் பசியைப் போக்குவதற்கென்று தொலை தூரக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டு அவர்தம் அவா நிறைவேற்றப்படுகின்றது.

8. கல்லூரி/பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர் நியமனத்திற்கு பார்வையற்ற நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் குறிப்பிட்ட வருடத்தில் நிறைவு செய்யப்படவில்லை எனில், அதனை அதற்கடுத்துவரும் வருடங்களில் நிறைவு செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கல்வித் தரத்தினை உயர்த்த, அனைத்து நிலைகளிலும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதே உயர்கல்வித் துறையில் முன்னுரிமைப் பகுதியாகும். 1996-97ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 311 விரிவுரையாளர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டில் 498 விரிவுரையாளர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட உள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான முன்னர் எஞ்சிய காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

9. தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு புதிய ஒற்றைச் சாளர முறை நடப்பாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் நன்கு வரவேற்றுப் பாராட்டியுள்ளனர். இதன்படி

தகுதியின் அடிப்படையிலும் அவர்கள் தெரிவிக்கும் விருப்பத்தின் அடிப்படையிலும் அவர்கள் சேர்ந்து படிக்க விரும்பும் கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள அனுமதி வழங்கப்படுவதுடன் முதலாண்டிலேயே அவர்களுக்கான பாடப்பிரிவுகளும் ஒதுக்கப்படுகின்றன. சுயநிதி பொறியியற் கல்லூரிகள் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் பாடப்பிரிவு ஒதுக்குவதை வணிகமாக்கியிருந்ததை இந்தப் புதிய முறை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. ஒற்றைச் சாளர முறை வரும் ஆண்டிலிருந்து தொழில் நுட்பப் பயிலகங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.

10. அனைத்திந்தியக் கல்வி நிலை அடிப்படையில் நமது மாநிலம் தொழில்நுட்பக் கல்வியில் முன்னணியில் உள்ளது. அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின்படி மாநிலங்களைப் பொறுத்தவரை நமது மாநிலம் பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் தேசிய அளவில் இரண்டாவது இடத்தையும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும் மக்கள் தொகை மற்றும் மாநிலத்தின் பரப்பளவை கணக்கில் கொண்டால், நமது மாநிலம் உண்மையிலேயே தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம், நம்நாட்டில் உயர்ந்த தேர்ச்சி வழங்கும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 6078 ஆகும். இதில் 1,041 பேர் பெண்களாவர். நாட்டில் இப்பல்கலைக்கழகம் ஒன்றில்தான், பொறியியல் தொழில்நுட்பக் கல்வியில் அதிக எண்ணிக்கையில் மாணவியர் கல்வி கற்கின்றனர். உயிரி தொழில்நுட்பவியல், படிக வளர்ச்சி, தொலை உணர்வு தொழில்நுட்பம், சுற்றுச் சூழல், கடல் ஆய்வு, மேலாண்மை மின்னணுவியல், தொலை தகவல் தொடர்புப் பொறியியல், எரிசக்தி ஆதாரங்கள் முதலான துறைகளில் இப்பல்கலைக்கழகம் முன்னோடிக் கல்வித் திட்டப்பணியை ஆற்றிவருகிறது.

11. கல்வி நிறுவனங்களில் 'ராகிங்' கொடுமையை அறவே ஒழித்திடும் நோக்கத்துடன் "கேலிவதைத் தடுப்புச் சட்டம்" இயற்றியதிலும் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது.

12. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 'விருப்ப அடிப்படைக் கல்வித் திட்டம்' அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'படிக வளர்ச்சி' மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'உயிரி தொழில் நுட்பவியல்' அண்ணா பல்கலைக்கழகத்தின் 'தொலை உணர்வுத் தொழில்



நுட்பம்' பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 'மேலாண்மை நிருவாகம்' ஆகியன நம்முடைய உயர் கல்விக்குச் சிறப்புச் சேர்க்கின்ற திட்டங்களாகும்.

13. சேலம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம் 17-09-1997 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது.

14. சுயநிதி அடிப்படையில் பொறியியற் கல்லூரிகள், பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் கலை-அறிவியல் கல்லூரிகள் ஆகியவை தொடங்க அரசு திடமான கொள்கை முடிவு எடுத்ததினால் தமிழ்நாட்டில் உயர் கல்வி செழிப்பாக விரிவடைந்துள்ளது. அரசு விதிமுறைகளுக்கேற்ப சேர்க்கப்படும் மொத்த மாணவர் எண்ணிக்கையுடன் 50 விழுக்காடு இடங்கள் இத்தகைய கல்வி நிலையங்களில் கூடுதலாகச் சேர்க்கப்படுகின்றன.

15. சுயநிதி பொறியியற் கல்லூரிகள், சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடர்பாக டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தனது இறுதி அறிக்கையை அரசுக்கு தந்துள்ளது. அதன் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

16. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் கீழ்க்காணும் மூன்று குறிக்கோள்களுடன் தொடங்கப்பட்டுள்ளது:-

(அ) பி.டெக், எம்.டெக், பி.எஸ்ஸி. முதலிய தகவல் தொழில் நுட்பப் பாட வகுப்புகள் மூலம் தகவல் தொழில் நுட்பாளர்களை உருவாக்குதல்;

(ஆ) பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்ப அறிவினைத் தோற்றுவித்தல். மேலும், பல்கலைக்கழகம் முதல் தொடக்கப்பள்ளி வரையிலான அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் உள்ள தகவல் தொழில்நுட்ப வசதிகளை வலுப்படுத்துதல்;

(இ) அரசு நிர்வாகத்தில் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பத் திறன் வாய்ந்த மாநிலமாக மாற்றுதல்.

மேற்சொன்ன குறிக்கோள்களை அடையும் முறையில் கம்பெனிகளின் விதி 25-ன் கீழ் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் பதிவு

[1998 ஏப்ரல் 15

## அட்டவணை-1

| கணக்குத்தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 அரசுக் கல்லூரிகள், கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 715.50 | 715.50 |
| 2202 பொதுக்கல்வி | | | |
| 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் | 1238.42 | 31275.33 | 32513.75 |
| 2203 தொழில் நுட்பக்கல்வி | 2296.05 | 8659.22 | 10955.27 |
| 2204 போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் 102 தேசிய மாணவர் படை மற்றும் தேசிய பணித்திட்டம் | 198.00 | 1194.95 | 1392.95 |
| 2205 கலையும் பண்பாடும் 104 ஆவணக்காப்பகங்கள் | 21.74 | 264.12 | 285.86 |
| 2235 சமூகப் பாதுகாப்பு நலனும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் | — | 4.81 | 4.81 |
| 2551 மலைப்பிரதேச மேம்பாடு | 0.03 | — | 0.03 |
| 3425 அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 194.23 | — | 194.23 |
| 3454 மக்கள் தொகை கணக்கெடுப்பும் ஆய்வுப் புள்ளியியல் விவரம் | 27.84 | — | 27.84 |
| | 3976.31 | 42113.93 | 46090.24 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | 2.50 | 339.05 | 341.55 |
| மொத்தம் | **3978.81** | **42452.98** | **46431.79** |



1998 ஏப்ரல் 15]

## 1998-99 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு

## அட்டவணை-2

| கணக்குத்தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| **மானியக் கோரிக்கை எண் 36** | — | — | — |
| பொதுப்பணிகள், அரசினர் கல்லூரிக்கான கட்டிடங்கள் | | | |
| **மானியக் கோரிக்கை எண் 55** | | | |
| 4202 கல்வி, விளையாட்டு, கலை பண்பாடு குறித்து மூலதனச் செலவு | 1305.07 | 0.01 | 1305.08 |
| **மானியக் கோரிக்கை எண் 62** | | | |
| 6202 கல்வி, விளையாட்டு, கலை பண்பாடு குறித்த கடன் | 55.00 | 0.01 | 55.01 |
| மொத்தம் | **1360.07** | **0.02** | **1360.09** |

## பகுதி 11 திட்டம் 1998-99

| வ.எண் (1) | திட்டப்பணிகளின் விவரம் (2) | இறுதிநிலைச் செலவு (3) | 1998-99-ல் செலவு (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **கல்லூரிக் கல்வி** | | |
| 1. | அரசுக் கல்லூரிகளில் 35 விரிவுரையாளர்கள் பதவிகளையும் 10 ஆய்வுக்கூட உதவியாளர் பதவிகளையும் ஏற்படுத்துதல் | 48.59 | 40.49 |
| 2. | 10 அரசுக் கல்லூரிகளில் பி.எஸ்சி, கணினி அறிவியல் பாடவகுப்புகளைத் தொடங்குதல் | 162.00 | 140.00 |

செய்யப்படுகிறது. 1998-99-ம் கல்வியாண்டு முதல் முதுகலைப் பட்டயப்படிப்பு தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*17.* ஆராய்ச்சியாளர்களின் பயனுக்காக அச்சில் கைவசம் இல்லாத பழமையான அரிய புத்தகங்களை மறுபதிப்பு மூலம் வெளியிடும் பயனுடைய திட்டத்தை ஆவணக்காப்பகத் துறை செயல்படுத்தியுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள தேசிய மாணவர் படை வீரர்களின் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. சிறப்பு வாய்ந்த மாணவ வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

*18.* பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் கலை அறிவியல் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தியதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. அத்துடன் கல்லூரிகளுக்கு *1978*-க்கு முன்னரே தன்னாட்சி தகுதி வழங்குவதிலும் நமது மாநிலம் முன்னோடியாகத் திகழ்கிறது.

*19.* மகளிர் கல்விக்கென இதுவரை *113* கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. மகளிருக்கென்று தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் உள்ள கல்லூரிகளில் *30* விழுக்காட்டிற்கு மிகாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் *1,71,578* மாணவியர்கள் பயில்கின்றனர். தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் ஒன்பது மகளிர் பல்தொழில் நுட்பப் பயிலகங்களும், இரண்டு மகளிர் பொறியியல் கல்லூரிகளும் உள்ளன. பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் *9323* மாணவியர்கள் பயின்று வருகின்றனர். பல்கலைகழகக் கல்வியைப் பொறுத்தவரையில், ஆய்வு மற்றும் உயர் கல்வி மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கான சிறப்பான பொறுப்பினை மேற்கொண்டு கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற தகுதியுடைய அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர் கல்வி நிறுவனம் மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான நிறுவனமாக இயங்கி வருகிறது. பல்கலைக்கழகங்களில் *49,088* மாணவியர்கள் பயின்று வருகின்றனர். தமிழ்நாடு, மகளிருக்குரிய பங்கையும் அவர்களுக்குச் சரியான இடத்தையும் அளித்துள்ளது என்பதனை மேற்கூறிய விவரங்கள்



காட்டுகின்றன. சமுதாயத்தில் மகளிரின் பங்களிப்பு உரிய முறையில் அங்கீகரிக்கப்படுவதோடு அரசு கொள்கைகளால் ஆதரிக்கப்படுகின்றன.

*20.* 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியினைப் பெறுவதற்கான முயற்சிகள் *1998* ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் பல்கலைக்கழக மானியக் குழு ரூ. *27.24* கோடி நிதி உதவியினை பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிப் பணிக்கு அளித்துள்ளது.

*21.* சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் மற்றும் பொது மேலாண்மைத் துறையில் தமிழ் வழியில் பொது நிர்வாகம் என்ற பகுதி நேர முதுகலைப் பாட வகுப்பினைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அதிவேக முறைக்கான (National Centre for Ultra Fast Process) தேசிய மையத்தில் விடுதி மற்றும் ஆய்வக வசதிகள் ஏற்படுத்துவதற்காக அரசு ரூ. *80* இலட்சம் அளித்துள்ளது.

*22.* திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் (Periyar Research Centre) 'பெரியாரியல் மையம்' ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அம்மையத்திற்கான பேராசிரியர் ஒருவர் மற்றும் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் பதவிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அம்மையத்தின் நூலகத்திற்காக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படவுள்ளது.

*23.* பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஊதியத்திற்கெனவும் மற்றும் இதர சில்லரைச் செலவினங்களுக்காகவும் பல்கலைக்கழகங்களுக்குத் தொகுப்பு மானியம் அரசால் வழங்கப்படுகிறது. இம்மானியத்தை மாற்றியமைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

***1998-99* மாநில வரவு-செலவுத் திட்டத்தில் உயர் கல்வித் துறை குறித்த நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை *17*-கல்வி என்ற தலைப்பின் கீழ் உயர் கல்வித் துறைக்கான மொத்தச் செலவினத் தொகை ரூ. *464.31* கோடி ஆகும். இதில் *39.78* கோடி திட்டப்பணிகளுக்கானதாகும். மாநில வருவாய்க் கணக்கின் பேரிலான மொத்தச் செலவான ரூ. *18048.04* கோடியில் கல்விக்கான செலவு *2.57* விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது.

[1998 ஏப்ரல் 15

**பகுதி II திட்டம் 1998-99—தொடர்ச்சி**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் | இலட்சத்தில்) |
| 3. | அரசுக் கல்லூரிகளில் கணினி வசதிகளை மேம்படுத்துதல் | 40.95 | 40.95 |
| 4. | 5 அரசு மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு பேக்ஸ் வசதிகளை செய்து கொடுத்தல் | 1.75 | 1.75 |
| 5. | இயக்ககத்தில் கணினி பயிற்சியளித்தலும் (கணினி மையத்தை தரம் உயர்த்தலும்) | 2.50 | 2.50 |
| 6. | சென்னை மாநிலக் கல்லூரிக்கு இன்டர்நெட் வசதிகள் செய்து கொடுத்தல் | 0.50 | 0.50 |
| 7. | இயக்ககத்திற்கும் 6 வட்டார அலுவலகங்களுக்கும் 'மோடம்' வசதிகள் செய்து கொடுத்தல் | 1.05 | 1.05 |
| 8. | அரசுக் கல்லூரிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் | 18.60 | 18.60 |
| 9. | அலுவலக பயனுக்கான கார் ஒன்று வாங்குதல் | 4.00 | 4.00 |
| 10 | வரலாற்று மற்றும் மேம்பாட்டுப் பணிகள் | | |
| | (அ) ஆராய்ச்சி மாணவர்கள் 20 பேருக்கு படிப்புதவித் தொகை வழங்குதல் - வெளியீடுகளுக்கு கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் கலந்து கொள்ளுதலுக்கும் நிதியுதவி அளித்தல். | 7.20 | 7.20 |
| | (ஆ) 100 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான 5 கல்லூரிகளுக்குச் சிறப்பு மானியம் வழங்குதல் | 12.50 | 12.50 |
| 11. | சேலம் அரசு கலைக் கல்லூரியில் (ஆண்கள்) நூற்றாண்டு விழாக் கட்டடம் கட்டுதல் | 59.65 | 61.35 |
| 12. | சேலம் அரசு மகளிர் கல்லூரி மாணவியர் இல்லம் கட்டுதல் | 205.00 | 50.00 |



1998 ஏப்ரல் 15]

**பகுதி II திட்டம் 1998-99—தொடர்ச்சி**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 13. | சேலம் அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 42.00 | 18.00 |
| | மொத்தம் | **606.29** | **398.89** |
| | **தமிழ்நாடு ஆவணக்காப்பகம் :** | | |
| 14. | ஒரு மாவட்டத்தில் மாவட்ட ஆவண மையம் தொடங்குதல் | 5.00 | 5.00 |
| 15. | தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் புகைப்படக் காப்பகங்களை ஏற்படுத்துதல் | 2.50 | 2.50 |
| 16. | அட்டவணை மற்றும் பொருள் பட்டியல் தயாரிப்புப் பிரிவை ஏற்படுத்துதல் | 2.50 | 2.50 |
| 17. | தமிழ்நாடு ஆவணக்காப்பக வளாகத்தில் உணவுக்கூடம் கட்டுதல் | 4.00 | 4.00 |
| 18. | தமிழ்நாடு ஆவணக்காப்பகக் கட்டடங்களில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள் | 16.00 | 16.00 |
| | மொத்தம் | **30.00** | **30.00** |
| | **தொழில்நுட்பக் கல்வி :** | | |
| 19. | கோயம்புத்தூர் அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் ஒருங்கிணைந்த கணினி தயாரிப்பு ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் | 15.00 | 15.00 |
| 20. | சேலம், அரசு பொறியியல் கல்லூரிக்குப் புதிதாகப் பேருந்து வாங்குதல் | 7.00 | 7.00 |
| 21. | காரைக்குடி, அழகப்பச் செட்டியார் பொறியியல் தொழில் நுட்பவியல் கல்லூரியில் புதிதாக எடையளவு ஆய்வகம் ஏற்படுத்துதல் | 79.00 | 52.00 |
| 22. | வேலூர் தந்தை பெரியார் அரசு தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் அனல்மின் பொறியியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் | 22.15 | 12.15 |

குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. கலை பாடத்திட்டத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 3 லட்சம் என்ற அளவிலும், அறிவியல் பாடத்திட்டத்திற்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 9 இலட்சம் என்ற அளவிலும், பல்கலைக்கழக மானியக் குழு உதவி செய்யும். பாடத்திட்டங்கள் தயாரிக்கவும் உள்ளமைப்புகளை (Infrastructure) ஏற்படுத்தவும் கல்லூரிகள் இந்த நிதி உதவியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும் உள்ளூரில் இருக்கும் தொழிற்கூடங்கள், நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## கல்லூரிகளில் குறியீட்டாளர்களை அரசுப் பணிக்கு கொணர்தல்:

தற்போது அரசுக் கல்லூரிகளில் 63 குறியீட்டாளர்களும், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 142 குறியீட்டாளர்களும், 4-12-1997 முதல் அரசுப் பணியாளர்களாக மாற்றப்பட்டு தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான ஊதிய விகிதங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அரசாணையை நடைமுறைப்படுத்துமாறு அரசுக் கல்லூரி முதல்வர்களுக்கும், அரசு உதவி பெறும் கல்லூரிச் செயலாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தன்னாட்சி வழங்குதல்:

கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. தற்சமயம் நான்கு அரசுக் கல்லூரிகளை உள்ளடக்கி, 38 கல்லூரிகளுக்குத் தன்னாட்சி தகுதி வழங்கப்பட்டுள்ளது. 1978-79 முதல் தமிழகத்தில் தன்னாட்சிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மானிய க்குழு தன்னாட்சிக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதற்குத் தனி நிதி உதவி அளிக்கிறது. தேசியக் கல்விக் கொள்கையிலும் தன்னாட்சி வழங்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 1997-98ஆம் கல்வியாண்டில் ஐந்து அரசுக் கலைக் கல்லூரிகளுக்கும், ஆறு உதவி பெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான நிதியுதவி திட்டம்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் வழக்கமாகப் பெறும் உதவித் தொகை அல்லாமல் இத்திட்டத்தின் கீழும் நிதியுதவி வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 4000 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் வழங்கப்பட்டது.





ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் மதம் மாறிய கிருஸ்துவர்கள் உள்பட மேல்நிலைக் கல்வியில் மொத்தம் அறுபது விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு ரூ.300 பெறும் தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தில் பெற்றோர்கள் வருமான அளவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறையின் இயக்குநரால் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் கல்லூரிக் கல்வி இயக்குநரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## தமிழ்வழி மாணவர்களுக்கான ஊக்க உதவித்திட்டம்:

கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.400-வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 1997-98-ல் இத்திட்டத்தின் கீழ் 24298 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.97 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக அளவில் தமிழ் வழிப் பாடப்பிரிவு நடத்திட கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## மாணவிகளுக்கான ஊக்கத் உதவித்தொகை:

சாதி, இன, மத வேறுபாடின்றி அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவிகளும் பயன்பெறும் வகையில் 'பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசக் கல்வித்திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டு வருமானம் 24000/- மிகாதவர்களின் பெண்களுக்கு பட்டவகுப்பிற்கான படிப்புக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இத்திடடத்தில் 1997-98-ல் 4000 மாணவியர்களுக்கு ரூ.65 லட்சம் வழங்கப்படுகிறது.

## நாட்டு நலப்பணித்திட்டம்:

தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் முறையே பகிர்ந்து கொள்கின்றன. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் 965 அலகுகளில் 96500 மாணவர்களும், மேல்நிலைப் பள்ளிகளில் 1052 அலகுகளில் 53500 மாணவர்களும் இத்திட்டத்தில் தன்னார்வலர்களாக ஈடுபட்டுள்ளனர்.

இதுகாறும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இருந்து வந்த நாட்டு நலப்பணித்திட்டம், இப்போது கல்லூரிக் கல்வி இயக்கக

[1998 ஏப்ரல் 15

**பகுதி 11 திட்டம் 1998-99**–தொடர்ச்சி

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 23. | தமிழ்நாடு தொழில் புரட்சியை உருவாக்கும் வகையில் தொழிலகப் பொறியியல் உயர்நிலைச் சிறப்புப் பயிற்சி அளித்தல் | 5.00 | 5.00 |
| | மொத்தம் | **128.15** | **91.15** |
| | *அண்ணா பல்கலைக்கழகம் :* | | |
| 24. | வளர்ச்சி பணிகளுக்காக அண்ணா பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி | 75.00 | 75.00 |
| | *தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பவியல் மையங்கள் :* | | |
| 25. | திருச்சி, வட்டார அறிவியல் மையத்தில் அறிவியல் கூடம் ஒன்று கட்டுதல் | [illegible] | 10.00 |
| 26. | வேலூர் மற்றும் கோயம்புத்தூர் வட்டார அறிவியல் மையங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல் | 10.00 | 10.00 |
| | *தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்:* | | |
| 27. | ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் அறிவியல் தொழில் நுட்பவியல் திட்டங்களுக்காகவும் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றத்திற்கு மானியங்கள் | 20.00 | 20.00 |
| | மொத்தம் | **130.00** | **115.00** |
| | நிகர மொத்தம் | **894.44** | **635.04** |

## 2. கல்லூரிக் கல்வி

தமிழகத்தில் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்கத்தின் கீழ் 304 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 22 கல்வியியல் கல்லூரிகளும், 15 கீழ்த்திசைக் கல்லூரிகளும், 4 உடற்கல்வி கல்லூரிகளும், 2 நிதியுதவி பெறும் சமுதாயப் பணிப்



1998 ஏப்ரல் 15]

பள்ளிகளும் இயங்கி வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் மேலும் 36 புதிய சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதியளித்துள்ளது.

மொத்தமுள்ள 383 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 113 கல்லூரிகள் மகளிருக்கானவை. மகளிருக்கென்று தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அங்குள்ள கல்லூரிகளில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர்.

1997-98 ஆம் ஆண்டில் 65 கல்லூரிகளின் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவைகளுக்காக ரூ. 5.15 கோடி வழங்கப்பட்டது. அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மாணவிகள் மற்றும் ஆசிரியைகளுக்கான காத்திருப்பு அறை போன்றவைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதே அரசின் குறிக்கோள்.

அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்தினை ஒரு பாட வகுப்பாகத் தொடங்குவதற்குத் திட்டமிட்டு படிப்படியாகச் செயல்படுத்தப்பட உள்ளது. தற்சமயம் 25 அரசுக் கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறிப் பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டு கூடுதலாக 10 கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடவகுப்பு தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தொழிற் கல்வி :

மாணவர்கள் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் பல்கலைக்கழக மானியக் குழு 1994-95 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வியினை முதலாம் பட்டப்படிப்புகளில் கற்பிக்கும் பாடத்திட்டத்தினை தொடங்கியது. இதற்கான முப்பத்தாறு பாடத்திட்டங்களை பல்கலைக்கழக மானியக் குழு தேர்ந்தெடுத்துள்ளது. இதுவரை அந்தந்தப் பகுதிகளின் தேவையைக் கருத்திற்கொண்டு தமிழகத்தில் 41 கல்லூரிகளில் பலவிதத் தொழிற்கல்வி பாடத்திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 4, அரசுக் கல்லூரிகளாகும்.

மேலும் பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் தொழிற்கல்வி சார்ந்த பாடப்பிரிவுகள் அனைத்துக் கல்லூரிகளிலும் தொடங்குவதற்கு வேண்டிய உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. 24 அரசுக் கல்லூரிகளில் 1998-99 ஆம் ஆண்டில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை பல்கலைக்கழக மானியக்

ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், வழக்கமான செயல்பாடுகள் மற்றும் சிறப்பு முகாம் நிகழ்வுகளுக்கென 1997-98-ல் ரூ.95.67 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாநில ஆங்கில மொழி நிறுவனம் :**

ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கீழ் இருந்த ஆங்கிலக் கற்பிப்புப் பயிற்சி மையங்களையும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இருந்த ஆங்கில கற்பிப்புப் பயிற்சி நிலையத்தையும் ஒருங்கிணைத்து மாநில ஆங்கில மொழி நிறுவனம் உருவாக்கப்பட்டது. தொடக்கக் கல்வி நிலையிலிருந்து கல்லூரிக்கல்வி வரையிலான ஆங்கிலமொழி பயிற்றும் ஆசிரியர்களுக்குக் கற்பிப்பு முறையை மேம்படுத்தும் வகையில் இம்மையங்களும், நிறுவனமும் செயல்பட்டு வந்தன. இப்போது இந்நிறுவனத்திலிருந்து ஆங்கிலக் கற்பிப்பு மையங்களைப் பிரித்து மீண்டும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்துடன் இணைக்க அரசு ஆணையிட்டுள்ளது. ஆயினும் கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்சி அளிக்கின்ற ஒரு தன்னாட்சி அமைப்பாக, மாநில ஆங்கில மொழி நிறுவனம் தொடர்ந்து செயல்படும்.

**சுயநிதி கல்லூரிகளில் பயிற்றுக் கட்டணம் :**

பயிற்றுக் கட்டணம் தொடர்பாக சுயநிதி மற்றும் தனியார் கல்லூரிகளின் நிர்வாகங்களின் கருத்தினைக் கேட்பதற்காக, மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. ஆளுடையப் பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநிலக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களில் தனது அறிக்கையைத் தருமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**பி.எட். பாடவகுப்பு தொடங்குவதற்கு தடை :**

பி.எட். பாடவகுப்புகள் மற்றும் கல்லூரிகள் தொடங்குவதற்கான அனுமதியை 1997-98-ம் ஆண்டு முதல் தடைசெய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தடை 1998-99-ம் ஆண்டுக்கும் நடைமுறையிலிருக்கும்.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் :**

1996-97-ம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாகவிருந்த 311 விரிவுரையாளர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. 1997-98-ம் ஆண்டில்





498 விரிவுரையாளர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட உள்ளன. இதற்கான எழுத்துத் தேர்வுகள் முடிவுற்று, நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பணியிடங்களில் இதுவரை பூர்த்தி செய்யப்படாத பழைய காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பார்வையற்றோருக்கான சலுகைகள் :**

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர் நியமனத்திற்கு பார்வையற்ற நபர்களுக்கு செய்யப்பட்ட பணியிடங்கள் குறிப்பிட்ட அந்த வருடத்தில் நிறைவு செய்யப்படவில்லை எனில் அதனை அதற்கடுத்த வருடத்தில் நிரப்புமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது. சிவில் சர்வீஸ் பணிக்கு தேர்வு எழுதும் பார்வையற்ற மாணவர்களுக்கு முன் பயிற்சித் தேர்வு மையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை :**

அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான வழிகாட்டி நெறிமுறைகள் 1996-ம் ஆண்டில் அரசால் அனுமதிக்கப்பட்டன. புதிய பாடவகுப்புகள் கடந்த சில ஆண்டுகளாக தொடங்கப்பட்டதன் காரணமாக, இந்த வழிகாட்டி நெறிமுறைகளில் நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது தொடர்பாக அரசால் உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளின் முதல்வர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அந்த குழுவினது ஆலோசனையின் பேரில், 1998-99-ம் ஆண்டுமுதல் அனைத்து அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள பல்வேறுபட்ட பாடப்பிரிவுகளுக்கு மாணவர் சேர்க்கையின்போது பின்பற்றப்படவேண்டிய திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

மாணவர் சேர்க்கைக்கு ஆங்கிலம் மற்றும் தமிழில் பொதுவான விண்ணப்பம் பயன்படுத்தப்படுதல்; தமிழ்வழியில் பயில்வதற்கு விருப்பம் தெரிவித்த மாணவர்களுக்கு சேர்க்கையில் முன்னுரிமை; இடஒதுக்கீடு விதியினுக்குட்பட்டு முழுவதும் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுதல்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக

ஒதுக்கப்பட்ட 19 விழுக்காடு இடஒதுக்கீட்டில் அதே இனத்தைச் சேர்ந்த ஊனமுற்றோருக்கு இடஒதுக்கீடு; அந்தந்த வருவாய் மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு சேர்க்கையில் சலுகை; பொதுஇட ஒதுக்கீட்டான 31 விழுக்காடு இடத்திலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு சேர்க்கையில் சலுகை ஆகியவை இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் சிறப்பு அம்சங்களாகும்.

### 3. தேசிய மாணவர் படை

11.75 இலட்சம் மாணவர்களைக் கொண்ட தேசிய மாணவர் படை இந்திய இளைஞர்களுக்கான இயக்கங்களின் சிறப்புடையதாகும்.

சென்னையிலுள்ள தலைமை இயக்ககம் மற்றும் 5 கிளை இயக்ககங்களின் கீழ் தேசிய மாணவர் படை இயங்கி வருகிறது. தேசிய மாணவர் படையின் கிளை தலைமை அலுவலகங்கள் சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றும் உள்ளன. தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககத்தின்கீழ் 57 கிளை அலுவலகங்கள் பணிபுரிகின்றன.

**தேசிய மாணவர் படையினரை ஊக்குவித்தல் :**

(அ) தேசிய மாணவர் படையில் சிறந்தவர்களுக்கு உதவித்தொகை தேசிய மாணவர் படையில் முதுநிலை பிரிவில் 80 மாணவர்களுக்கும் இளநிலை பிரிவில் 90 மாணவர்களுக்கும் முறையே ரூ.1200/- மற்றும் 600/- மாதந்தோறும் தமிழ்நாடு அரசு அனுமதித்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு பொறியியற் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இ) தேசிய மாணவர்படை சான்று உள்ளவர்களுக்கு இந்திய வான்படை, காவல் துறை, மத்திய காவல்படை ஆகியவற்றில் சேர முன்னுரிமை வழங்கப்படுகிறது.

(ஈ) தேசிய மாணவர் படை இயங்குகின்ற கல்லூரிகளில் இதன் சான்றிதழ் கொண்டவருக்கு ஓர் இடம் ஒதுக்கப்படுகிறது.

(உ) தேசிய மாணவர் படை மண்டல இயக்ககங்களில் சிறந்த வீரர்களுக்கும், போட்டிகளில் வென்றவருக்கும் மற்றும் பங்கு பெற்ற அனைத்து வீரர்களுக்கும் ரொக்கத் தொகை வழங்கும் வகையில் ஆண்டுக்கு ரூ.2,20,000/- தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.





**சாதனை :**

(அ) ஏற்கெனவே உள்ள மையங்கள் தவிர்த்து சென்னை, கோவை மற்றும் திருநெல்வேலியில் கூடுதலாக மூன்று ஊக்குவிப்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

(ஆ) உயர்வாழ்க்கைக்கு உதவும் அனைத்துத் தகவல்களையும் இம்மையங்கள் மாணவர்களுக்கு தெரிவித்து வருகின்றன.

பல்வேறு நாடுகள் பங்கேற்கும் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தேசிய மாணவர் படையைச் சார்ந்த 16 மாணவர்கள் 1997-ல் தேர்ந்தெடுக்கப்பட்டமை அரியதொரு சாதனையாகும்.

(இ) தேசிய மாணவர் படை வெள்ளிவிழா தொடர்பாக புதுதில்லியில் ஆகஸ்டு 1997-ல் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு தேசிய மாணவர் படையினர் மிக உற்சாகமாகப் பங்கேற்றனர். இதற்கென தமிழ்நாடு அரசு ரூ.5,50,000 அனுமதித்தது.

**குடியரசு தினவிழா கொண்டாட்டம் 1998-ல் தில்லியில் நடைபெற்ற இந்தியப் பிரதமரின் ஊர்வலம் :**

அனைத்திந்திய அளவில் 11.75 இலட்சம் தேசிய மாணவர் படை வீரர்களின் மேற்காண் விழாவில் பங்கேற்பதற்கென மிகச்சிறந்த பயிற்சிக்குப்பின் தெரிவு செய்யப்பட்டனர். நமது மாநில இயக்ககத்தில் 103 மாணவர்கள் மிகச் சிறந்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் 15 மாநிலங்களுக்கிடையேயான மிகக் கடுமையான போட்டிகளில் பங்கேற்ற நமது மாநில இயக்ககம் இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளது. இவ்வகையில் நமது வீரர்கள் கீழ்க்காணும் பரிசுகளை வென்றுள்ளனர் :

| | | |
|---|---|---|
| விருதுகள் | - | 6 |
| தங்கப் பதக்கம் | - | 7 |
| வெள்ளிப் பதக்கம் | - | 3 |
| வெண்கலப் பதக்கம் | - | 4 |

இந்தியப் பிரதமர் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பற்பல சான்றோர்களால் நமது மாணவர்கள் புகழப்பட்டனர். இச்சிறப்பினைக் கொண்டாடும் வகையில் சென்னையில் 2-2-98-ல் மிகச்சிறந்த விழா ஒன்று நடத்தப்பட்டது. தமிழ்நாடு தேசிய மாணவர் படை

[1998 ஏப்ரல் 15

வரலாற்றிலேயே முதல் முறையாக, பரிசு பெற்ற மாணவர்களுக்கு, அவர்களை ஊக்கம் மற்றும் உற்சாகப்படுத்தும் விதமாக பல்வேறு நிறுவனங்கள் (sponsors) பரிசு மழைகளைப் பொழிந்தன.

### 4. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களின் மேம்பாட்டிற்கும், ஒருங்கிணைப்பிற்கும், மாநிலத்திட்டங்களுக்கும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பிற்கும் உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் இம்மாநில கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு 1992-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

1992-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பெற்ற மாநில உயர்கல்வி மன்றம் மேலும் செம்மையாகச் செயல்படும் வகையில் 1996-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் திருத்தியமைக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு இம்மன்றம் திட்டங்களைத் தீட்டுகிறது.

உயர்கல்வி தொடர்பாக நிகழ்வுகளின் மீதான கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவிக்க மன்றத்திற்கு உதவும் முறையில் மாநிலத்தின் அனைத்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட துணைவேந்தர் ஆலோசனைக் குழு ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி மன்றம் மூன்று திங்களுக்கொருமுறை கூடும். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்தாய்வு செய்ய எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வுகளின் மீதான தம் சீரிய கருத்துகளையும், பரிந்துரைகளையும் தெரிவிக்கும் வண்ணம் துணைவேந்தர்களின் ஆலோசனைக்குழு அதற்கு முன்னர் கூடும்.

**மன்றத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு :**

(1) பல்கலைக்கழக மானியக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கு இணங்க உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை நிர்ணயித்து அவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

(2) உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினையும் ஒருங்கிணைப்பினையும் மேம்படுத்தி அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.



1998 ஏப்ரல் 15]

(3) பல்கலைக்கழக மற்றும் அரசு விதிமுறைகளுக்கிணங்க புதிய உயர்கல்வி நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வகுத்துரைத்தல்.

(4) பல்கலைக்கழக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் மூலமாக, பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் தரமுள்ள பாடநூல்களின் வெளியீட்டினை வளப்படுத்துதல்.

(5) புதிய பல்கலைக்கழகங்களைத் தோற்றுவிப்பதற்கும் ஏற்கெனவே அமலில் உள்ள பல்கலைக்கழக விதிமுறைகளை மேம்படுத்துவதற்கும் ஏற்ற கருத்துகளை அரசுக்குத் தெரிவித்தல். அத்துடன் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பகுதி நிதி உதவி பெறும் திட்டங்களுக்கு ஈடான அரசு நல்கையினை வழங்கும் முகமையாக மன்றம் செயல்பட்டு வருகிறது.

உயர்கல்வியை தமிழில் பயிற்றுவதற்குத் தேவையான பாடநூல்களை தயாரிக்க பல்கலைக்கழகங்களுக்கு ரூ. 64 இலட்சம் அரசு வழங்கியது. இதுவரையில் 60 தமிழ்பாட நூல்கள் வெளியிடப்பட்டன. அடுத்து வரும் நிதியாண்டில் கூடுதலாக தமிழ் பாட நூல்கள் தயாரித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக ஆசிரியர் பணி மேம்பாட்டுக்கான திட்டம் மாநிலக் கல்லூரிகளில் இரு பருவ முறை படிப்புத் திட்டத்திற்கான நாட்காட்டி வெளியிடல் தொடர்பாக இம்மன்ற பரிந்துரைகளை ஏற்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலும், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி நுழைவுத் தேர்வுக்கு 11 ஆம் வகுப்பு பாடத்திட்டத்தினையும் சேர்க்க வேண்டும் என்ற இம்மன்ற பரிந்துரையினை ஏற்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அடுத்து வரும் கல்வியாண்டில் அரசின் முடிவு நடைமுறைக்குக் கொண்டு வருவதென முடிவு செய்யப்பெற்றது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு குறிப்பிட்ட பிரிவு துறையைத் தேர்ந்தெடுத்து (உயர்நிலைமையங்கள்) அதனை மேம்படுத்தி, சிறப்பு நிலைக்குக் கொணர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு துறைகளுக்கான மாதிரி பாடத்திட்டம் குறித்து தொடர் கருத்தரங்கங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக 'அடுத்து பத்தாண்டுகளில் மொழிக்கல்வி' என்னும் பொருள்பற்றி

[1998 ஏப்ரல் 15

கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு பரிந்துரைகளை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருகின்ற ஆண்டில் இதுபோன்று பல்வேறு துறைகளுக்கான கருத்தரங்கங்கள் நடத்தப்பட உள்ளன.

### 5. பல்கலைக்கழகக் கல்வி

கீழே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் உயர்கல்வித் துறையின் கீழ் வருகின்றன:-

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. அண்ணாமலை பல்கலைக்கழகம்
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. அண்ணா பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம்

மேலே குறிப்பிடப்பெற்ற பல்கலைக்கழகங்கள் பின்வரும் மூன்று பிரிவுகளைச் சார்ந்ததாகும்.

**இணைப்பு வகை:-**

அ) சென்னைப் பல்கலைக்கழகம்

ஆ) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

இ) பாரதியார் பல்கலைக்கழகம்

ஈ). பாரதிதாசன் பல்கலைக்கழகம்

உ) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

ஊ) பெரியார் பல்கலைக்கழகம்



1998 ஏப்ரல் 15]

**ஒருமை வகை:-**

அ) அண்ணாமலை பல்கலைக்கழகம்

ஆ) அண்ணா பல்கலைக்கழகம்

இ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

ஈ) அழகப்பா பல்கலைக்கழகம்

**நிகர்நிலை வகை:-**

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம்.

மேலே குறிப்பிடப்பெற்ற பல்கலைக்கழகங்கள் (அண்ணா பல்கலைக்கழகம் நீங்கலாக) ஆற்றிவரும் பணிகளின் விவரம் பின்வருமாறு:-

### (i) சென்னைப் பல்கலைக்கழகம்:

சென்னைப் பல்கலைக்கழகம், 1857 ஆம் ஆண்டில் சட்டப்படி நிறுவப்பட்டு, பின் 1904 ஆம் ஆண்டிலும், 1923 ஆம் ஆண்டிலும் அந்தச் சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம் கூடுமானவரை இலண்டன் பல்கலைக்கழகத்தை ஒத்த அமைப்புடையதாகும்.

பல்கலைக்கழகம் இப்போது கற்பித்தலும், ஆய்வும் மேற்கொள்கின்ற துறைகளையும், 115 கலை அறிவியல் கல்லூரிகளையும், 59 தொழிற் கல்லூரிகளையும் (பொறியியல், சட்டம், கல்வியியல், நிர்வாகம்) 7 கீழைக்கலையியல் பட்டமளிக்கும் நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வேலூரில், பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம் உள்ளது. 14 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாகச் செயல்படுகின்றன. குறிப்பிட்ட பாடங்களில், நான்கில் மூன்று பங்கு கல்லூரிகள், மாலைநேரக் கல்லூரிகளாகவும் செயல்படுகின்றன. மொத்தத்தில் 225 பாடங்கள் (பல்வேறுபட்ட மேற்பட்டப்படிப்புகள்) உள்ளன. பல்கலைக்கழகத்தில் பல துறைகளில் படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,500 ஆகும்.

பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 1,38,305 ஆகும். இது இளங்கலை, முதுகலை, நான்காண்டுகாலப் பொறியியல் படிப்பின்கீழ் படிக்கும் மாணவர்களின் தொகையாகும்.

329 முழுநேர, 665 பகுதிநேர எம்ஃபில் மாணவர்கள் உள்ளனர். ஆராய்ச்சித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 118 ஆகும். ஆராய்ச்சித் திட்டங்களுக்கான செலவின் மொத்த மதிப்பு ரூ.5 கோடி ஆகும். 1,028 முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களும் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் பல்வேறு துறைகளிலும் ஆய்வுத் திட்டங்களில் பங்கேற்கின்றனர்.

கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களிலும் 566 முழுநேர மாணவர்களும், 824 பகுதி நேர மாணவர்களும் முனைவர்பட்ட ஆய்வு செய்கின்றனர்.

மேலும் இப்பல்கலைக்கழகத்தில் 77 பாடக்கல்விக் குழுக்களும், ஓர் ஆய்வுக்குழுவும் செயல்படுகின்றது.

இக்குழுக்கள், பாடத்திட்டம், பாடத்திட்டங்களின் விதிமுறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றன. சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி ஆகிய பல்கலைக்கழக வளாகங்களில் 69 ஆய்வுத்துறைகள் உள்ளன.

எதிர்காலத்தில் ஏற்படும் விரிவாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் அதனுடைய கட்டடப்பணிகளை விரிவாக்கும் வகையில், பல்கலைக்கழகத்திற்கு தகுந்த நிலம் கிடைக்கப் பெறாமை வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

சேப்பாக்கம், மெரினா வளாகங்களில் திறந்தவெளி இடங்கள் இல்லாமையால் நீளவாக்கிலும் அரசுத் திட்ட தடைகளினால் உயர வாக்கிலும் கட்டடங்கள் அமைக்க இயலவில்லை.

## (ii) அண்ணாமலை பல்கலைக்கழகம் :

உயர்கல்வியினையும், ஆராய்ச்சியினையும் ஊக்குவிக்கும் வகையில் உடனுறை பல்கலைக்கழகம் உருவாக்கவேண்டும் என்ற செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் சீரிய நோக்கத்தினால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சுமார் 823 ஏக்கர் நிலப்பரப்பில் 45 பல்வேறு கல்வித் துறைகளுடன் பணியாற்றி வருகிறது. முறைசார் துறைகளில், ஆங்கிலத்துறையில் முதுகலை அமெரிக்கக் கல்வியறிவு, வணிகவியல் துறையில் முதுகலை வணிகக் கல்வியறிவு, நிதிபற்றிய கல்வியறிவு போன்ற புதிய பாடங்களும் வேலைவாய்ப்புப் பட்டய வகுப்புகள் பலவும் தொடங்கப்பட்டுள்ளன.





உயர்கல்வியில் ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது. பல்கலைக்கழகத்தில் ஏறக்குறைய அனைத்துத் துறைகளிலும், பிராந்திய, தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில ஆராய்ச்சித் திட்டங்கள் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களின் கூட்டு முயற்சியுடன் நடைபெற்று வருகிறது. நடப்பாண்டு பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டம் 56-ம் 72 எம்ஃபில் பட்டங்களும் வழங்க இருப்பதும் இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலருக்கு உலக சுகாதார நிறுவனங்களும், பொதுநல அரசுக்குழாம், டானிடா பன்னாட்டு சுழற்சங்கம் ஆகிய பிரிவுகளிலிருந்து ஆராய்ச்சி உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. தொலைதூரக்கல்வி இயக்ககம், உயர்கல்வியில் சிறந்த முன்னேற்றத்துடன் விரிவாக்கப்பட்டுள்ளது. 1996-97-ம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 1.78 இலட்சம். நடப்பு ஆண்டில் 2 இலட்சம் இலக்கினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 24 துறைகளில் புதிதாக இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்களுடன் 97 பாடத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடல்வாழ் உயிரியல் உயர் ஆய்வு மையம் பல்கலைக்கழக நிதிக்குழுவின் 'கோஸிஸ்ட்' (cosist-committee on strengthening of infrastructure in the science and technology) திட்டத்தின் கீழ் ஆராய்ச்சியினை மேம்படுத்தவும் நாட்டிடை அளவிலான விஞ்ஞான மேம்பாட்டுக்கு இணையாக உயர்த்தவும் சிறப்பு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

## (iii) மதுரை காமராசர் பல்கலைக்கழகம் :

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1.6 இலட்சம் மாணவர் எண்ணிக்கைக் கொண்ட பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம் 1966-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டது. ஆரம்பநாள் தொட்டே, இப்பல்கலைக்கழகம், தரம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு பெயர் பெற்றதாகவும், கல்விச் சீரமைப்பு மற்றும் சமுதாய உணர்ச்சி நடவடிக்கைகளின் ஆராய்ச்சிகள் நடத்துவதிலும், பங்குபெறும் பாங்கிலும் மிகவேகமாகவும் முன்னேறியுள்ளது. இப்பல்கலைக்கழகம், உயர்கல்விக் கோட்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தரம்வாய்ந்த நிறுவனமாக செயலாற்றும்

செயல்திறனை பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது. அது, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்ட இணைப்பு மற்றும் பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகமாக 27 துறைகளையும் 30 கல்வி மற்றும் தகவல்தொடர்பு மையங்களையும் கொண்டு விளங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 315 ஆசிரியர்கள் உள்ளடக்கிய 89 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணைப்பு செய்யப்பட்ட கல்லூரிகளும், 5 மாலைநேரக் கல்லூரிகளும், 10 சிறந்த பள்ளிகளும், 73 துறைகளும், 7 தகவல் மையங்களும் உள்ளன.

எட்டாவது திட்டக்காலத்தில் சுற்றுச்சூழல் தொலைநுகர்வு மற்றும் வரைகலைக் (Environmental Remote Sensing and Gartography) துறை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையில் 22 மாணவர் எண்ணிக்கையில் அறிவியல் முதுகலைப் பாடத்திட்டம் பயிற்றுவிக்கப்படுகிறது. இவையெல்லாம் இப்பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த இனங்களாகும்.

இப்பல்கலைக்கழகம், கடந்த பத்தாண்டுகளில் அடிப்படை பிரச்சினைகள் குறித்த தரம் மிக்க ஆய்வுகளை மேற்கொள்ள ஏதுவாக போதுமான அளவில் நல்ல தளவாட வசதிகளைப் பெற்றுள்ளது. தற்போது இயங்கிவரும் அறிவியல் பள்ளிகளில் ஆய்வு நடவடிக்கைகள், பிஎச்டி. திட்டங்களோடு நின்றுவிடுவதில்லை. கடந்த சில ஆண்டுகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட ஆய்வுத்திட்டங்களுக்கென அறிவியல் ஆய்வுப் புலங்கள் ஒப்பந்த மானியம் பெற்றுள்ளன. தற்போது பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான மற்றும் சர்வதேச ஆய்வுத்திட்டங்கள் பல விஞ்ஞானிகளின் தீவிர ஒத்துழைப்புடன் நடந்து வருகின்றன.

அதேபோல, தரமிக்க ஆய்வுத்திட்டங்கள், கலை மற்றும் மானுடவியல் பள்ளிகளிலும் நடந்தேறி வருகின்றன. தற்போது 9 தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவி செய்யப்பட்ட 80 ஆய்வுத்திட்டங்கள் நடத்தப்பெற்று அவைகளில் சில திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப் பெறும் நிலையை எட்டியுள்ளன.

1987 ஆம் ஆண்டு மத்திய அரசின் உயிரியல் தொழில் துறை, இப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பிரிவினை ஓர் உயர் தொழில் நுட்ப ஆராய்ச்சி மையமாக ஏற்பு அளித்துள்ளது. இன்று



இந்தியாவிலேயே உள்ள ஐந்து உயர்தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்களில் இது முக்கியமானதாகத் திகழ்கிறது. உயிரியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான பயிற்சி மற்றும் முன்னோடித்திட்டங்களான, மரபியல் நுட்பம், மரபியல் சார்ந்த பூச்சிக்கட்டுப்பாடு ஆகியவற்றில் இத்துறையின் சாதனை குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் ஏற்பளிக்கப்பட்ட பிரிதொரு உயர்தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமான நுண்ணுயிரியல் நுட்பத்துறை, இயற்கை உரமான நீலப்பச்சைப்பாசி என்னும் உயிரி உரம் தயாரிப்பது பற்றி ஆய்வு செய்து அந்தப் பணியில் வெற்றி பெற்றுள்ளது. இத்துறை விவசாயிகளுக்கு இந்த உரத்தை எவ்வகையில் பயன்படுத்துவது என்பது குறித்த கருத்தரங்குகள் நடத்தி, பயிற்சியும் அளித்துப் பயனும் கண்டுள்ளது.

பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு, கல்வித் தரத்தை மேம்படுத்துதல், உணவகம், மதிப்பீட்டு முறை, சுற்றுச் சூழல் கல்வி, செய்தி மற்றும் நூலக முறை, முதியோர் மற்றும் தொலை தொடர்புக் கல்வி, வேலைவாய்ப்புடன் கூடிய அதிநவீன தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்துதல், மனித உரிமை, பெண்கல்வி மற்றும் மேலாண்மைக்கல்வி ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாகும்.

## (iv) பாரதியார் பல்கலைக்கழகம்

தேசியக் கவியான சுப்பிரமணிய பாரதியார் பெயரில் 1982ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பாரதியின் குறிக்கோள்களில் ஒன்றாகிய 'பயிற்சி பல கல்வி தந்து இந்தப்பாரை உயர்த்திடல் வேண்டும்' என்ற கொள்கையினைக் கற்பிக்கும் கோயிலாக இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது. இப்பல்கலைக்கழகம் அறிவியல் தொழில்நுட்பம், சமூகம் மற்றும் பொருளாதாரம், மனிதவளம் மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத்திறன் போன்றவற்றை நமது நாட்டின் சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை போன்ற கூறுகளைத் தேசிய வளர்ச்சிக்கு மேம்படுத்தும் வகையில் பங்களித்து வருகிறது.

இப்பல்கலைக்கழகம் பல்வேறு வகையான கல்வித்திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக சமகாலச் சிக்கல்களை மையமாகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆய்வுகள் போன்றவற்றை கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள் வாயிலாக வழங்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 15

பட்ட மேற்படிப்பு, எம்.பில், பி.எச்டி. (முனைவர் பட்டம்) போன்ற கல்வித்திட்டங்கள் மற்றும் ஒருமைப்பாட்டுணர்வு போன்றவற்றையும் பொதுவாக நாட்டினுடைய தேவையையும் பொறுத்து உருவாக்கப்பட்டுள்ளன. வரும் ஐந்தாண்டுகளில் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கும் கல்வி மற்றும் ஆய்வுத்திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) கல்வித்துறைகளின் தரத்தையும் ஆற்றலையும் மேம்படுத்துதல்.

ஆ) அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்.

இ) நவீன முறையில் கற்பித்தலை மேம்படுத்துதல்.

இப்பல்கலைக்கழகம் கணிதவியல்துறை, புள்ளியியல்துறை போன்ற இருபது துறைகளைக் கொண்டுள்ளது.

### குறுகிய கால நோக்கம்:

சமூகத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மனிதவள வளர்ச்சியில் சில செயல் திட்டங்களை உருவாக்குவது பல்கலைக்கழகத்தின் குறுகிய கால நோக்கமாகும். அதனை செயல்படுத்துவதற்கு உயிர் திரள் சக்தி, மரபியல் ஆய்வு, மென்படலங்கள், அதிவேக கடத்தி, நீர் ஈர்த்தல், மருந்து வகை வேதியியல், வனப்பொருள் வேதியியல், அனங்கக உயிர் வேதியியல், செல்மரபியல், திசு வளர்ப்பு, வேதியியல், தொழிற்துறைப் பொருளாதாரம், பொது நிதியியல் பொருளாதாரம், மக்கட் தொகையியல், பாய்ம இயற்பியல், வானியல் அலைகள், அறிவியல் தமிழ், புள்ளியியல், தரக்கட்டுப்பாடு, கல்வி நுட்பவியல், செயற்கை கணினி அறிவுத்திறன், மென்பொருள் நுட்பவியல், கணினி துணைகொண்டு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தல் போன்ற புதிய துறை பாடங்களை உருவாக்கிட இப்பல்கலைக்கழகம் கருதியுள்ளது.

### (v) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் பெயர் கொண்ட இப்பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத் துறைகளும், சிறப்புத் தகுதி பெற்ற உயர் ஆய்வுப் பள்ளிகளும், இப்பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்ற கல்லூரிகளும் கல்வி கற்பித்தலோடு ஆய்வுப் பணிகளையும் விரிவாக்கப் பணிகளையும் செய்து வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தோடு 67 கல்லூரிகளும்,



1998 ஏப்ரல் 15]

பல்கலைக்கழக ஒப்புறுதி பெற்ற 10 கல்வி நிறுவனங்களும் (தன்னாட்சித் தகுதி பெற்ற ஏழு கல்லூரிகளும் இவற்றுள் அடங்கும்) இணைவு பெற்றுள்ளன. இவற்றுள் 8 பொறியியற் கல்லூரிகளும், இரு கல்வியியல் கல்லூரிகளும், 52 அறிவியல் கல்லூரிகளும் அடங்கும். இக்கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பினை 84,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இதைத் தவிர, திருவெறும்பூரிலுள்ள பாரத மிகுமின் நிறுவனத்தோடு ஒருங்கிணைந்த பாரதிதாசன் மேலாண்மைப்பள்ளி அந்நிறுவன வளாகத்தில் அமைந்துள்ளது. கல்விப் பணிகளில் மதிப்பாண்மையுடைய 108 ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட 22 துறைகள், பள்ளிகள், மையங்களில் பணியாற்றி வருகின்றனர். குறைந்த அளவில் ஆசிரியர்கள் இருப்பின் இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளும் பட்டமேற்படிப்புக் கல்வியை அளிக்கும் சிறப்பைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் முதுகலை/முதுஅறிவியல், முது தொழில்நுட்பவியல் பயிலும் மாணவர்களும், ஆய்வியல் நிறைஞர், முனைவர் - பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணவர்களும் அறுநூற்றுக்கும் மேற்பட்டவர்களாவர்.

மிகக் குறுகிய காலகட்டத்திற்குள் கல்வியில் பல்வேறு புதிய மாற்றங்களை கொண்டு வந்துள்ள சிறப்பு இப்பல்கலைக்கழகத்திற்கு உரியது.

### அவற்றுள் சில வருமாறு:-

பிற நிறுவனங்கள் பின்பற்றத்தக்கதாகத் திகழ்கின்ற தனித்துவம் வாய்ந்த பள்ளிகளான பாரதிதாசன் எரியாற்றல் பள்ளியும், பாரதிதாசன் மேலாண்மை நிறுவனமும் கல்வியளித்தல், நிர்வாகம், நிதி ஆகிய அனைத்திலும் தன்னாட்சி பெற்று விளங்குகின்றன.

இப்பல்கலைக்கழகத் துறைகளால் வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டங்கள் வாயிலாக வழங்கப்படும் கல்வி தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும், புதுச்சிந்தனையைத் தூண்டுவதாகவும் விளங்குகிறது. இதனால் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தை நாடி வருகின்றனர். தமிழ், இயற்பியல், வேதியியல், உயிர் அறிவியல் ஆகிய துறைகளுக்குப் பாடத்திட்டத்தை வகுப்பதிலும், கல்வி முறையைப் புகுத்துவதிலும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 15

இப்பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் பள்ளி, தனிச்சிறப்புமிக்க ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுஉயிர் அறிவியல் கல்வியை வழங்குகிறது. இக்கல்வியில் முதல் மூன்றாண்டுகள் பல்துறைசார் கல்விக்கான அடிப்படையாக அமைகிறது. இறுதி இரு ஆண்டுகள் விளங்கறிவியல், பயிர் அறிவியல், உயிர் நுட்பவியல், நுண்ணுயிரியியல் ஆகியவற்றில் சிறப்பறிவு பெறுவதற்கான கல்வி வழங்கப்படுகிறது.

இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புமிக்க ஆசிரியர்கள், தேசிய அளவிலான குழுக்களும் அமைப்புகளும் வழங்குகின்ற பல்வேறு ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய அரசின் உயிர்நுட்பவியல் துறையினர் வழங்கிய ரூ.2.5 கோடிக்கும் மேற்பட்ட நிதியுதவியைக் கொண்டு தேசியக் கடல்சார் நீலநிற நுண்ணுயிரி ஆய்வு வசதி மையம் ஒன்று இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இஃது இத்துறையில் ஒரு முன்னோடி நிறுவனமாகத் திகழ்கிறது.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள "நிரலற்ற விசையியக்கவியல் மையம்" இந்திய அரசின் அறிவியல்-தொழில் நுட்பத்துறையின் உதவியோடு உருவாக்கப்பட்டுள்ளது. (இத்துறையில் முதல் நிலையாளரும், பட்நாகர் விருது பெற்றவருமான பேராசிரியர் எம். இலட்சுமணன் தலைமையில் இஃது இயங்குகிறது)

அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் உதவியோடு இப்பல்கலைக்கழகத்தின் செய்மையுணர்வு மையம் முது தொழில் நுட்பவியல் கல்வியை அளித்து வருகிறது.

வகுப்பறைகளில் நிகழ்த்தப்படும் விரிவுரைகளை ஒளிநாடாக்களில் பதிவு செய்து ஆசிரியர்களுக்கு வகுப்பறைப் பயிற்சி அளிப்பதற்கான ஆசிரியரை ஆற்றுப்படுத்தும் தொலைக்காட்சி முறைக்கல்வி வசதி பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்கள் வழக்கமாகத் தாங்கள் கற்கும் கல்வியோடு, வேலைவாய்ப்புடன் கூடிய ஏதேனும் ஒரு சான்றிதழ், பட்டயப் படிப்பையும் ஒரே சமயத்தில் இரண்டு கல்வியையும் பெறுவதற்குரிய தனிச்சிறப்பு வாய்ப்பினை இப்பல்கலைக்கழகம் மாணவர்கட்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.



1998 ஏப்ரல் 15]

அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதைக் காட்டிலும் தரமான கல்வியை அளிப்பதில் உறுதிபூண்டு சிறந்த குறிக்கோளோடு செயல்பட்டு வருகின்ற இப்பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி மையம் வழக்கமான பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்புக் கல்வியோடு கணினிப் பயன்பாட்டிலும், வணிக மேலாண்மையிலும் முதுநிலைக் கல்வியை வழங்கி வருகிறது. கல்லூரிகளில் வழக்கமாகப் பின்பற்றப்படும் அதே பாடத்திட்டங்களும் அகமதிப்பீட்டுமுறை உள்ளிட்ட தேர்வு முறைகளும் தொடர்கல்வி மையத்தில் வழங்கப்படும் இக்கல்விகளுக்கும் பின்பற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கல்விக்கழகக் கல்லூரி, கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கு ஆற்றுப்படுத்தும் பயிற்சியையும் புத்தொளிப் பயிற்சியையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும் அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆதரவோடு பொறியியல் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது. கல்லூரி நிர்வாகத்தில் கணினியைப் பயன்படுத்துவது குறித்து தென் மாநிலங்களிலுள்ள கல்லூரி முதல்வர்கட்குப் பயிற்சியையும் அளித்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் மீது அரசு கொண்டுள்ள நம்பிக்கையைச் சுட்டுவதற்கு இரு எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். (1) தேசிய அளவில் நடத்தப்பெறும் தகுதிகாண் தேர்வுகளைப் போன்று மாநில அளவிலான கல்வித்தேர்வினை நடத்தும் பொறுப்பை மாநில அரசும், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவும், இப்பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளன. (2) கல்லூரி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தமிழக அரசின் சார்பில் பொறுக்குத் தேர்வினை இப்பல்கலைக்கழகம் செம்மையாகவும் திறம்படவும் அண்மையில் நடத்திக்காட்டியது.

## (vi) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984-ல் தமிழக அரசுச் சட்டம் 15-ன்கீழ் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் கல்வியை மேம்படுத்துதல், மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் சட்டத்தில் குறிப்பிட்டிருந்தபடி பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் முத்துமொழி, 'சமன்மையை நோக்கி' என்பது. வாழ்வின் எல்லாத்

தளங்களிலும், நிலைகளிலும், ஆணும், பெண்ணும் சரிநிகர் சமமானமாகப் பங்கேற்று, முழுமையான வாழ்வினை வாழ்வதற்கு ஆவன செய்தலைக் குறிக்கும். பல்கலைக்கழகம் இணைக்கல்லூரிகள் இல்லாது தனி ஒருமை நிலைப் பெற்றது.

பல்கலைக்கழக மானியக் குழு வடிவமைத்து தந்தபடி உயர்கல்வித் துறையில் புகுத்துவதற்கான 14 பாடப்பிரிவுகளை ஆராய்ச்சி மட்டத்திலும், 19 பாடப்பிரிவுகளை முதுகலை மட்டத்திலும், 19 பாடப்பிரிவுகளை இளங்கலை மட்டத்திலும், 9 பாடப்பிரிவுகளை பட்டய மட்டத்திலும் மற்றும் 7 பாடப்பிரிவுகளை புதியதாக சான்றிதழ் மட்டத்திலும் இப்பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் தொடங்க உத்தேசித்துள்ளது.

### (vii) அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகம் பல்துறை வித்தகரும், பெருங்கொடையாளியுமான டாக்டர் ஆர்.எம். அழகப்பா (செட்டியார்) அவர்களால் உருவாக்கப்பட்டது.

1985-ல் தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம், மனிதவள ஆற்றலான கலை, அறிவியல், தொழில்நுட்பக்கல்வி ஆராய்ச்சி மேம்பாடு, உயர்கல்விப் பயிற்சி போன்ற பல துறைகளில் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

### கல்வி மேம்பாடு

தமிழ், கணிதவியல், இயற்பியல், கணிப்பான் தொழில்நுட்பவியல், தொழில் வேதியியல், கல்வியியல், உடற்கல்வி மற்றும் உடல்நல அறிவியல், மகளிரியல், பன்னாட்டு வணிகவியல், வங்கி மேலாண்மையியல், அழகப்பா மேலாண்மை நிறுவனம், படிகவியல் ஆராய்ச்சி மையம் போன்ற நிலைகளில் 13 துறைகளைக் கொண்டு இப்பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்கி வருகிறது.

முதுகலைப் பட்டப்படிப்புகளும் எம்ஃபில், பிஎச்டி போன்ற உயராய்விற்கான கல்வி வாய்ப்புகளும் மேற்குறித்த துறைகளின் வழியாக வழங்கப் பெறுகின்றன. கல்வியியல் கல்லூரியும், உடற்கல்வியியல் கல்லூரியும், இப்பல்கலைக்கழகத்துடன் உள்ளடங்கியுள்ளன. பி.எட்., எம்.எட்., எம்.பி.எட், போன்ற வகுப்புகள் அக்கல்லூரிகளின் வழியாக நிகழ்த்தப் பெறுகின்றன.

முதுகலைப் பட்டப்படிப்புகளைத் தவிர, பட்டய வகுப்புகளும் மேற்குறித்த துறைகளின் வழியாக நடத்தப் பெறுகின்றன. படிகத்





தொழில்நுட்பம், யோகா, பொருள் பாதுகாப்பு மற்றும் அரிமானத் தொழில்நுட்பவியல், விளையாட்டு உடற்குறை நீக்கவியல், பாக்கரித் தொழில்நுட்பம் போன்ற பட்டய வகுப்புகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

பன்னாட்டு வணிகவியல் துறை வழங்கும் முதுநிலைப் பட்டம் தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு முன்னோடியும் முன்மாதிரியுமாகும். இந்தியாவிலுள்ள ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், இந்தியாவில் விரைந்து நுழையும் பன்னாட்டு வணிக நிறுவனங்கள் போன்றவைகளின் மேலாண்மைத் தேவையினைக் கருத்தில்கொண்டு, திறமையான சிறந்த நிர்வாகிகளை உருவாக்குவது இத்துறையின் அடிப்படை நோக்கமாகும்.

தொழில் வேதியியல், ஆடைத்தொழில்நுட்ப வேதியியல், கரிம வேதியியல், மின் வேதியியல், பொருள் கூறு அறிவியல், மின்னணுவியல், கோயில் கலைகள், கருவிப் பயன்பாட்டியல் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பு முன்னுரிமைப் பகுதிகளாகும். மேலும், இப்பல்கலைக்கழகம், கோட்டையூர், விஸ்வேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து மருத்துவமனை மேலாண்மை மற்றும் விளையாட்டு உடற்குறை தீர்பயிற்சி இயலில் முதுநிலைப் பட்டயப்படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

### (viii) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்டது. இவ்விளம் பல்கலைக்கழகம், பல புது வழிகள் கண்டு உயர்கல்வி அரங்கத்தில் ஒரு முத்திரை பதித்துள்ளது.

பல்கலைக்கழகத்திலுள்ள பன்னிரெண்டு துறைகளும் முதுநிலைப் பட்டப்படிப்பு கல்வியினைத் தெரிவு சார்ந்த தேர்ச்சு முறைத் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் கல்வியாண்டு முதல் அளிக்கின்றன. விரும்பியதைக் கேட்டுப் பெறுதல் என்னும் இத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் பாடத்தை ஒவ்வொரு பருவத்திற்குத் தேர்ந்தெடுத்துப்பயில வாய்ப்பளிக்கப்படுகிறது.

இப்பல்கலைக் கழகம் கற்பித்தலுக்கும், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளவும், சிறந்த வாய்ப்புகளை பல்வேறு புலன்களில் இருக்கும் கருப்பகுதியிலிருந்து பெற்றிருக்கிறது.

[1998 ஏப்ரல் 15

பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறச்சூழல் அறிவியல் மையம் தென்னிந்தியாவிலேயே, சுற்றுப்புறச்சூழல் கல்வியின் முக்கியமான மையமாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த மையம் கழிவுச் சுழற்சி, தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சுத்தன்மை, கழிவு நீர் மற்றும் பயனற்ற வெற்று நிலப்பகுதியின் உயிரினங்கள், ஆகிய பாடங்களை கருமூலப்பகுதியாகக் கொண்டு கற்பிக்கிறது. சமூகவியல் துறை குழந்தைத் தொழிலாளர் மற்றும் பெண்களின் நிலை போன்ற பாடங்களை சிறப்பு முன்னுரிமைப் பகுதியாக கற்பித்து வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் கடற்புறப் பகுதிகளைப் பற்றி பயிற்றுவிக்கும் பயிற்றகம் கடற்பகுதிகளை நிர்வாகம் செய்யும் கல்வியையும் கடல் உயிர் உற்பத்தி விளைவுகளையும் கடல்வாழ் உயிரின நுட்பவியல் கல்வியையும் சிறப்பு முன்னுரிமைப் பகுதியாகக் கொண்டுள்ளது. கேட்கும் மாணவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய விடைத்தாளின் ஜெராக்ஸ் நகலினை வழங்குவதில் இப்பல்கலைக்கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

### (ix) பெரியார் பல்கலைக் கழகம்

சேலம் நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பகுத்தறிவுப் பகலவன் பெரியார் அவர்களது பெயரால் பல்கலைக்கழகம் 17-9-97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்திற்கு முதல் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 27 துறைகள் அடங்கிய 8 பள்ளிகளையும் அதற்கான பணியிடங்களையும் அரசு தோற்றுவித்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்த போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தவாறு இப்பல்கலைக்கழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 10 கோடி வழங்குவதற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட தொகை ரூ. 10 கோடியில், 7000 சதுரமீட்டரில் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.3.15 கோடி முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. சேலம் அரசு பொறியியல் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில், 58.83.0 ஹெக்டேர் நிலம் இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்குவதென முடிவு செய்யப்பட்டு உள்ளது.



1998 ஏப்ரல் 15]

### (x) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் 1988-ல் நிகர் நிலைப் பல்கலைக்கழகம் என்ற தகுதியை அடைந்தது.

இந்நிறுவனத்தின் மனையியல், அறிவியல், மனிதவியல், கல்வியியல் மற்றும் பொறியியல் ஆகிய 5 துறைகள் தனித்தனி முதல்வரின்கீழ் செயல்பட்டு வருகின்றன. 1989-90 முதல் இளநிலைப் பட்டப்பிரிவில் இரண்டு முக்கிய பாடங்களும் இரண்டு துணைப்பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கு ஒரு கல்வியாண்டு இரண்டாகப் பகுக்கப்பட்டு 100 நாட்கள் கொண்ட பருவ முறைகளில் இயங்கி வருகின்றன. இப்பருவமுறைத் திட்டத்தில் மாணவர்களின் முறையான வருகை மிக அவசியமானதாகும். மாணவர்களின் பளுவினைக் குறைக்கும் வண்ணம் பருவமுறை தேர்வுகள் அனைத்தும் அந்தந்த பருவ காலத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

### முதுகலை எம்.எஸ்ஸி (மனையியல்)

முதுகலை நிலையில், முதுகலை மனை அறிவியல், எம்.பில் மற்றும் பி.எச்.டி. நிலையில் குடும்பநிர்வாகம், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து, மனித மேம்பாடு, மனை அறிவியல் விரிவாக்கப் பிரிவுகள் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாகும். நுகர்வோர் கல்வி, கிராமப்புற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பழங்குடியினர் ஊட்டச்சத்து, மருத்துவ தாவரங்கள் பற்றிய படிப்பு ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முன்னுரிமைப் பகுதிகளாகும்.

### பெருந்தலைவர்கள் பெயர்களில் பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்ட அறக்கட்டளைகள்

அரசு உயர்கல்வித்துறையின் ஆளுகையின் கீழ்வரும் 10 பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு அறக்கட்டளையும் ரூ.25 இலட்சங்களில் 21 அறக்கட்டளைகளை மொத்தம் ரூ.525 இலட்ச மூலதனத்தில் பெருந்தலைவர்களின் பெயர்களில் உருவாக்கியுள்ளது. அதிலிருந்து வரும் வட்டித் தொகையில், பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் ஆதிக்கத்தின் கீழ்வரும் கல்லூரிகளில் பயிலும் சிறந்த

மாணவர்களுக்கு உதவித்தொகையாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கான நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது.

## தொகுப்பு மானியத்தை மாற்றியமைத்தல்

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஊதியத்திற்கெனவும் மற்றும் இதர சில்லரைச் செலவினங்களுக்காகவும் பல்கலைக்கழகங்களுக்கு தொகுப்பு மானியம் அரசால் வழங்கப்படுகிறது. 1-4-91 முதற்கொண்டு ஐந்தாண்டு காலத்துக்கு பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவதற்கான தொகுப்பு மானியம் 1992-ம் ஆண்டு கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்டது. 1996-97-ம் ஆண்டு முதல் தொகுப்பு மானியம் மாற்றி நிர்ணயம் செய்யவேண்டி உள்ளது. இதன் தொடர்பாக அரசு ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6. தொழில்நுட்பக் கல்வி

மனிதவள மேம்பாட்டுத் துறையின்கீழ் இயங்கி வரும் ஒரு பகுதியான தொழில்நுட்பக் கல்வியானது, மாணவர்களின் திறமையை உயர்த்துவதிலும் நாட்டின் பொருளாதாரத்தை பெருக்குவதிலும் முக்கியமான பங்களிக்கிறது. இந்நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு, தொழில் நுட்பக் கல்வி மேம்பாட்டிற்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. 1997-98 ஆம் ஆண்டில் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு 15 புதிய பொறியியற் கல்லூரிகள் மற்றும் 13 தொழில்நுட்பப் பயிலகங்களை தொடங்க அனுமதியளித்துள்ளது. அவைகளை 1998-99 ஆம் ஆண்டு முதல் சுயநிதி அடிப்படையில் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சியின் ஒரு பகுதியாக புதிய பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் ஏற்கனவே இயங்கிவரும் கல்லூரிகளின் புதிய பாடப்பிரிவு தொடங்குவதில் உண்டான கூடுதல் மாணவர் சேர்க்கை ஆகியவற்றால் பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை சென்ற ஆண்டைவிட 890 மாணவர்கள் அதிகமாகி, 4 விழுக்காடு அதிகரித்துள்ளது. இதேபோல் பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கை ஒரு விழுக்காடு உயர்ந்து 360 மாணவர்கள் சேர்க்கை கூடுதலாகியுள்ளது.





1997-98-ம் ஆண்டில் மொத்த மாணவர்கள் சேர்க்கையில் 15 விழுக்காடு இடத்தை கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் இரண்டாண்டுகள் மேல்நிலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு ஒதுக்க அரசு ஆணையிட்டது. மேற்படி ஆணை 1997-98 கல்வியாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 50 விழுக்காடு சலுகைக் கட்டண ஒதுக்கீடு சேர்க்கை, இயக்ககத்தால் முறைப்படுத்தப்பட்டதால், பள்ளி இறுதியாண்டு முடித்த மாணவர்கள் சுயநிதி பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் அவர்களது மதிப்பெண் அடிப்படையில் விருப்பப்பட்ட பயிலகம் மற்றும் பாடப்பிரிவினை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மிகவும் பயன் பெற்றுள்ளனர்.

## பட்டதாரிகள் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி பயில நிதியுதவி:

பட்டதாரிகள் இல்லாத குடும்பத்தைச் சார்ந்த, மொத்த மதிப்பெண் 300-ல் மாநிலத்தில் முதல் பத்து நிலையிலுள்ள, தொழிற்கல்வியில் சேர்ந்து பயிலும் 10 மாணவர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஆகும் செலவுகள் முழுவதையும் ஒவ்வொரு ஆண்டும் அரசே ஏற்றுக்கொள்ளுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பைத் தொடர்ந்து, தொழில்நுட்பக் கல்வித்துறையிலும் இத்திட்டத்தை செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டது. 20-10-97 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு நேரிடையாக 1996-97-ம் ஆண்டிற்கு 10 மாணவர்களுக்கும், 1997-98-ம் ஆண்டிற்கு 10 மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்கி இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆண்டொன்றுக்கு தொழிற்கல்வி பயிலும் பட்டதாரி இல்லாத குடும்பத்தைச் சார்ந்த 10 மாணவர்கள் பயன் அடைவர்.

## கனடா-இந்தியப் பயிலகக் கூட்டுறவுத் திட்டம்

தமிழகத்தில் தொழிற்கல்வியை நவீனமயமாக்குவதற்காக உலக வங்கித்திட்டம் தவிர, 'கனடா-இந்தியப் பயிலகக் கூட்டுறவுத் திட்டம்' என்றழைக்கப்படும் கனடா திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிலகங்களில செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கு 'கனடா-பன்னாட்டு மேம்பாட்டுக்குழு' நிதி உதவி செய்கிறது.

இத்திட்டம் 1993.ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு முதற் கட்டம் மூன்று ஆண்டுக்காலம் என்ற அளவில் செயல்பட்டபின் முதற்கட்டம் நிறைவு பெற்று, இரண்டாவது கட்டம் தொடர்கிறது. தொழில்நுட்பப் பயிலகக் கல்வியில் நிறுவனத்திறனை வலுப்படுத்துதல், நிலையான வழிமுறைகளின் வளர்ச்சி போன்றவையும் இத்திட்டத்தின் நோக்கங்களுள் அடங்கும். நிர்வாக வளர்ச்சி, முறைசாராக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக்கல்வி, தொலைதூரக்கல்வி, மகளிர் முன்னேற்றம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்மேம்பாடு ஆகியவை இத்திட்டத்தின் ஐந்து பகுதிகளாகும். தமிழ்நாட்டில் ஐந்து தொழில்நுட்பப் பயிலகங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

## சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகத் திட்டம்

கிராமச் சமுதாயத்தில் பெரிய அளவில் ஒருங்கிணைப்பினை உயர்த்துவதில் ஊக்கம் காட்டுவதும், ஊரக வளர்ச்சிப் பணியினை மேற்கொள்ளக்கூடிய திறனுடன் தொழில் நுட்பத் திறனை ஊரகப் பகுதிகளில் மேம்படுத்துவதன் மூலம் அப்பகுதியின் முன்னேற்றத்திற்குத் தன் பங்கினை அளிக்கக்கூடியதுமான குவிமையமாகச் செயல்படுத்துவதும் ஆகிய நோக்கங்களைக் கொண்ட தொழில்நுட்பப் பயிலகம் சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகம் ஆகும். 1995-96 ஆம் ஆண்டு முதல் சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகத் திட்டத்தினை மைய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் நான்கு மகளிர் தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்பட 34 பயிலகங்களில் செயல்பட்டு வருகிறது.

## ஆபரணச் செயல்முறை பாடம்

மும்பையில் இயங்கிவரும் உலகத்தங்க குழுவின் ஒத்துழைப்புடன் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் தொழில்நுட்பப் பயிலகத்தில் 'ஆபரணச் செயல்முறை' தொடர்பாக சில புதிய பாட வகுப்புகளைத் தொடங்க அரசு 97-98-ம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. அவை தங்க நகை செய்தல், கல் பதித்தல், உற்பத்தி நிர்வாகம், சுத்திகரிப்பு செய்தல், மெருகேற்றுதல் மற்றும் தரக்கட்டுப்பாடு



என்பது குறித்த பாடங்களாகும். வேலைவாய்ப்பினை பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் இப்பாட வகுப்பில் சேர மாணவர்களிடையே அதிக ஆர்வம் உள்ளது.

## காலிப்பணியிடம்

அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயில்கங்களில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. ஆரம்ப நிலையில் உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை 1998-99-ம் ஆண்டில் தேர்வு வாரியம் மூலம் நிரப்புவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான முன்னர் எஞ்சிய காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## உயர்நிலைக் குழு

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி பொறியியற் கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் போதுமான அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு, நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் கொண்ட போதுமான ஆசிரியர்கள் உள்ளனரா மற்றும் அக்கல்வி நிறுவனங்கள் போதுமான நிதி வசதி கொண்டுள்ளதா என்பது போன்ற விவரங்களை ஆராய்ந்தறிவதற்காக 1996 ஆகஸ்ட் திங்களில் அரசு டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைத்தது. அக்குழு தனது முடிவான அறிக்கையை அரசிடம் வழங்கியுள்ளது. அவ்வறிக்கையில் கண்ட அனைத்து முக்கிய பரிந்துரைகளின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சுயநிதி பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றில் பயிற்றுக் கட்டணம் சீரமைப்பு

சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் 50 விழுக்காடு அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு ஆண்டிற்கு ரூ.9000-ம் நிர்வாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஆண்டிற்கு ரூ.34,000-ம் மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 50 விழுக்காடு அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு ஆண்டிற்கு ரூ.2500-ம் நிர்வாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஆண்டிற்கு ரூ.9000/-ம் மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 15

## புதிய சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க ஊக்கம் அளித்தல்

ஆண்டாண்டு காலமாக, கல்வித் துறை வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் கணிசமான அளவிற்கு அதிகரித்து வந்த போதிலும், உயர் கல்வித் துறையில் புதிய பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், கலை மற்றும் அறிவியற் கல்லூரிகள் தொடங்குவதற்குத் தேவை அதிகரித்துள்ள போதிலும், அரசின் நிதிநிலை காரணமாக, அரசு மேற்கண்ட கல்லூரிகளைத் தொடங்க இயலாத சூழ்நிலை உள்ளதால், சுயநிதி அடிப்படையில் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்க முன் வரும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய தனியார் சுயநிதி நிறுவனங்கள் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக தொடங்கப்பட்டுள்ளதால், ஊரகப் பகுதி மக்களும் எளிதில் உயர்கல்வி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனங்களால் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. தொழில்நுட்பக் கல்வித் துறையில் தனியார் சுயநிதி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, தற்போது முழுத் தேவையும் பூர்த்தி செய்யப்படும் உச்சநிலையை அடையப்பட்டுள்ளது.

### ஒற்றைச் சாளர முறை

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் பற்றி ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக் குழு, தனது அறிக்கையில் பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கைக் குறித்த பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது. முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையில், மாணவர் சேர்க்கையில் காலதாமதமும், மாணவர்களிடையே தமக்கு எந்த பொறியியற் கல்லூரியில் எந்தப் பாடப் பிரிவு ஒதுக்கப்படும் என்பதுபற்றி ஒரு நிலையற்ற தன்மையும் மாணவர் மனங்களில் இருந்து வந்தன. மேலும் அந்நடைமுறையில் உள்ள முறைகேடுகள் குறித்து பெற்றோர் மற்றும் மாணவர்களிடமிருந்து ஏராளமான புகார்கள் வரப்பெற்றன. பொறியியற் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டில் பாடப் பிரிவு ஒதுக்கீடு செய்வதற்குப் பெருந்தொகை நன்கொடையாகக் கோரப்பட்டதுடன் பாடப் பிரிவு ஒதுக்கீடு மதிப்பெண் அடிப்படையில் அல்லாமல் நன்கொடை அடிப்படையில் செய்யப்பட்டு வந்தது.

எனவே பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின்போது நடைபெற்ற குறைகளைக் களையவும், பாடப் பிரிவு ஒதுக்கீடு செய்வதற்கு



1998 ஏப்ரல் 15]

நன்கொடை கோரப்படுவது போன்ற விரும்பத்தகாத முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டு வரவும் தமிழ்நாடு அரசு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்தி பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கையை எளிமைப்படுத்தி சீரமைத்தது. தற்போது பொறியியற் கல்விக்கு முதல் ஆண்டு மாணவர் சேர்க்கை அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறும்போதே பாடப் பிரிவு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

பொறியியற் கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்கு இம்மாநிலத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர முறை, அதாவது பொறியியற் கல்லூரிகளில் சேருவதற்கான அனைத்து நடைமுறைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் முறையானது, மிகவும் பயனுள்ளதாகவும், வெளிப்படையாகவும், பிரச்சினையற்றதாகவும், ஏனைய மாநிலங்களும் பின்பற்றும் வகையிலும் அமைந்துள்ளது என்று அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

கல்லூரிகள், பயிற்றுவிக்கப்படும் பாடப் பிரிவுகள், அவற்றில் உள்ள காலி இடங்களின் நிலை, போன்ற விவரங்கள் அனைத்தும் மாணவர் சேர்க்கை அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறும்போது, எலக்ட்ரானிக் தகவல் பலகையில் அவ்வப்போது தெரிவிக்கப்படுகிறது. ஏறத்தாழ 30 நிமிடங்களில் பெற்றோரும், மாணவர்களும், அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்க ஏதுவாகிறது. இக்கூட்டத்திற்கு முன்னதாகவே பொறியியற் கல்லூரிகள் பாடப் பிரிவுகள், காலி இடங்களின் நிலை போன்ற விவரங்கள் சிறு கையேடுகள் வாயிலாக மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதால், இவ்விவரங்களுடன் மாணவர்களும் பெற்றோரும் கூட்ட அரங்கிற்கு வந்து, உடனே கல்லூரி பாடப் பிரிவு மற்றும் ஒதுக்கீடுகள் ஆகியவற்றைத் தேர்வு செய்து விடுகின்றனர். ஒரு முறை தேர்வு செய்துவிட்டால் அதுவே இறுதியானதாக இருக்கும். இந்த முறை நேர்மையான, வெளிப்படையான பொதுமக்களால் வரவேற்கப்படும் முறையாக இருக்கிறது.

## 7. தொழில்நுட்பக் கல்விக்கான உலக வங்கி உதவித் திட்டம்

### தமிழகத்தில் இத்திட்டத்தின் நோக்கம்

தமிழகத்தில் உள்ள 21 அரசு தொழில்நுட்பப் பயிலகங்கள் 31 அரசு உதவி பெறும் தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவற்றில் செயலாக்கத் திறனை 1991 முதல் 1998 வரையிலான காலத்தில் விரிவாக்கி, தரத்தை

[1998 ஏப்ரல் 15

மேம்படுத்தி மற்றும் அறிவுத் திறனைச் சீரமைத்து மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### விரிவாக்கம்

வேலைவாய்ப்புக்குகந்த புதிய பட்டய வகுப்புகள், பட்டமுறி வகுப்புகளைத் தொடங்குதல், தொடர் கல்வி வசதிகள் ஏற்படுத்துதல், பணியாளர்களுக்குக் குடியிருப்புகளை உருவாக்குதல், மாணவிகள் தங்கிப் படிக்க விடுதி வசதி செய்தல், பன்முறை நுழைவுக்கு பலவழிகளிலும் உதவி (multilit point entry and credit system) வாய்ப்பளித்தல் இத்திட்டத்தின்கீழ் அடங்கும். கிராமப்புறங்களில் பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### தரமேம்பாடு

பயிலகங்களை நவீனமாக்குதல், ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளித்தல், கல்வி கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்துதல், பாட திட்டத்தைச் செழுமைப்படுத்துதல், கணிப் பொறி வசதி செய்தல், தொழிற்சாலை மற்றும் பயிலக ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல், பயிலகங்களுக்குத் தன்னாட்சி வழங்குதல், பன்முறை நுழைவு வாய்ப்பு ஏற்படுத்துதல் இத்திட்டத்தில் அடங்கும்.

### அறிவுத்திறன் விரிவாக்கம்

தொழில்நுட்பக் கல்வி மாநில வாரியம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தை பலப்படுத்துதல் மாநில செயற்பாட்டு மையங்களை தோற்றுவித்தல்.

### விரிவாக்கத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை

### (அ) அரசினர் தொழில்நுட்பப் பயிலகங்களில் கட்டுமானப் பணிகள்

உதகை அரசு தொழில்நுட்பப் பயிலகம் தவிர்த்து, அனைத்து அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் கட்டுமானப் பணிகள் (பயிலகக் கட்டிடங்கள், ஆசிரியர் அறை, பணியாளர் குடியிருப்பு மற்றும் மகளிர் விடுதிகள்) 1996-97-ல் செவ்வனே முடிக்கப்பெற்றன. உதகமண்டலம் அரசு தொழில்நுட்பப் பயிலகத்தின் பயிலகக் கட்டிடங்கள், ஆசிரியர் அறை வகுப்பறைகள் மற்றும் மகளிர் விடுதி ஆகியவற்றிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



1998 ஏப்ரல் 15]

### (ஆ) அரசு உதவி பெறும் தொழில்நுட்பப் பயிலகங்களில் கட்டுமானப் பணிகள்

சேஷசாயி தொழில்நுட்பப் பயிலகம், திருச்சி சக்தி தொழில்நுட்பப் பயிலகம், சக்திநகர் ராஜகோபால் தொழில்நுட்பப் பயிலகம், குடியாத்தம் எஸ்.எஸ்.எம். நெசவுத் தொழில்நுட்பப் பயிலகம், குமாரபாளையம், சி.எம். கோத்தாரி தொழில்நுட்பப் பயிலகம், சென்னை, நாச்சிமுத்து தொழில்நுட்பப் பயிலகம், பொள்ளாச்சி, ஏ.டி.ஜே. தர்மாம்பாள் மகளிர் தொழில்நுட்பப் பயிலகம், நாகப்பட்டினம் ஆகிய அரசு உதவி பெறும் தொழில்நுட்பப் பயிலகங்களின் கட்டுமானப் பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. அரசு உதவிபெறும் இதர தொழில்நுட்பப் பயிலகங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகின்ற ஜூன் 1998-க்குள் அவை முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### (இ) புதிய பாடப் பிரிவு தொடங்குதல்

மதுரை தமிழ்நாடு அரசு தொழில்நுட்பப் பயிலகத்தில் பாலிமர் தொழில்நுட்பம் மற்றும் பிளாஸ்டிக் தொழில்நுட்பம் என்ற இரண்டு புதிய பாடப் பிரிவுகள் ஒவ்வொன்றும் 40 மாணவர்களுடன் தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. திருச்சி அரசு தொழில்நுட்பப் பயிலகத்தின் சர்க்கரை தொழில் நுட்பப் பாடப் பிரிவு 30 மாணவர்களுடன் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

### தரமேம்பாட்டின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை

ஒவ்வொருவருக்கும் ரூ.4.38 லட்சம் என்ற செலவில் நான்கு ஆசிரியர்கள் நெசவுத் தொழில்நுட்பத்திற்கான மூன்று மாத அயல்நாட்டுப் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்று பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

அச்சுத் தொழில்நுட்பத்திற்கென அயல்நாட்டுப் பயிற்சிக்கு ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டு பயின்று வருகிறார். மேலும் இதுபோன்ற அயல்நாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்க 13 ஆசிரியர்கள் 1998 மார்ச் மாதத்தில் அனுப்பப்பட உள்ளனர். திட்டப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியப் பணியாளர்கள் நாளுக்குநாள் வளர்ந்துவரும் அறிவியல் நுணுக்கங்களை அறிந்துகொள்ளும் வகையில் 174 ஆசிரியர்களுக்கு 1997-98ஆம் ஆண்டில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. தற்போது தொழிற் சாலைகளில் நவீனமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் தொழில்நுட்பத்தை அறிந்துகொண்டு மாணவர்களுக்கு அதனைக் கற்பிப்பதற்கென

[1998 ஏப்ரல் 15

நடத்தப்பட்ட உள்நாட்டு தொழிற்பயிற்சி வகுப்புகளுக்கு சுமார் 75 ஆசிரியப் பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

## வசதி மேம்பாட்டின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை

மாநில தொழில்நுட்பக் கல்வி தேர்வு வாரியத்திற்காக ரூ.2.82 லட்சம் செலவில் ஒரு டீசல் சிற்றுந்தும் (மஹிந்திரா & மஹிந்திரா) மாநிலத் திட்ட அமுலாக்க மையத்திற்காக ரூ.3.33 லட்சம் செலவில் ஒரு டீசல் மகிழ்வுந்தும் (டாடா சுமோ) வாங்கப்பட்டுள்ளன.

## 8. அண்ணா பல்கலைக்கழகம்

அண்ணா பல்கலைக்கழகம் இந்த நாட்டிலேயே மிகப்பெரிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து வருகிறது. இங்கு பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6078 ஆகும். இதில் 1041 பேர் பெண்களாவர். இவ்வளவு அதிகமாகப் பெண்கள் பொறியியல், தொழில்நுட்பக் கல்வி பயிலும் இடங்கள் அமைந்து இந்தியாவிலும் இதைத்தவிர வேறு எதுவும் இல்லை. இங்கு 33 பட்டப் படிப்பு திட்டங்கள், 47 பட்ட மேற்படிப்பு திட்டங்கள், 4 பட்ட மேற்படிப்பு பட்டய திட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களில் பெரும்பான்மையானவை பொதுவாக இந்திய நாட்டு, குறிப்பாகத் தமிழக அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையவை.

உயிரி தொழில்நுட்பம், படிக வளர்ச்சி, தொலைநுட்பவியல், சுற்றுப்புறப் பொறியியல், நீர் ஆதாரங்கள், கடல் மேலாண்மை, மின்னணுச் செய்திப் போக்குவரத்துப் பொறியியல், உற்பத்தி மூலகங்கள் ஆகிய துறைகளில் அண்ணா பல்கலைக்கழகம் பாராட்டத்தக்க பணிகளைச் செய்து வருகிறது. கற்பித்தலும் ஆய்வும் அதன் விரிவாக்கமும் இன்ன பிறவும் நாளுக்குநாள் வளர்ந்து வரும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு நாளும் வளர்ந்து வருகிறது. அதோடு மட்டுமின்றித் தொழில்நுட்பத் திறன்களையும் மிகுதிப்படுத்தி வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமொன்றைத் தீட்டி உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பல்வேறு அமைப்பு களிடமிருந்தும் நிதி உதவிகளைப் பெற்று உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கும், பல்வேறு வகைப்பட்ட துறை வளர்ச்சிகளுக்கும் புதிய பாடப் பிரிவுகளுக்கும் பயன்படுத்தி வருகிறது. பழைய கருவிகளை மாற்றியமைப்பதற்கும், ஆய்வுக் கூடங்களைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்துவதற்கான திட்டமொன்று தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.



1998 ஏப்ரல் 15]

அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் பாடப்பிரிவுகள் சுரங்கப் பொறியியல், இரப்பர் தொழில்நுட்பம், மட்பாண்டத் தொழில், காலணித் தயாரிப்பு, கட்டடப் பொறியியலும் அதன் மேலாண்மையும் உயிரினத் தொழில் நுட்பம், பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோலியப் பொருள்கள், போர் விமானங்கள், சர்க்கரைத் தொழில், நிலவியல் செய்திகள், அச்சுத் தொழில்நுட்பம், உற்பத்தி மூலங்கள் ஆகிய துறைகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப அறிவுரைகளையும், தேவைப்படும் வேலையாட்களின் எண்ணிக்கை முதலான செய்திகளையும் தருவதில் முன் நிற்கிறது.

தமிழக அரசின் வீட்டு வசதித் திட்டங்களோடு தொடர்புடைய நகர்ப்புற, நாட்டுப்புற வீட்டுவசதி, நகர்ப்புற நாட்டுப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் வலுவான துறையமைப்பை அண்ணா பல்கலைக்கழகம் கொண்டிருக்கிறது. அத்தகைய திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை நீர்நிலைப் பயன்பாட்டு மேம்பாட்டுத் திட்டம், நகரமைப்பில் மனித சக்தியைப் பயன்படுத்துவதற்கான புள்ளி விவரத் திட்டம், நிலத்தடி நீர் முன்னேற்றத் திட்டம், நிலவியல், வேளாண்மை, வனப் பாதுகாப்பு, மீன்வளர்ப்பு ஆகியவற்றில் முன்னேற்றத் திட்டங்கள் ஆகும். மேற்கு தொடர்ச்சி மலைகளின் வளங்களைப் பயன்படுத்துவதற்கான திட்ட ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. மைய அரசின் நிதி உதவியில் தமிழ்நாட்டில் உள்ள ஏழு மாவட்ட தரிசு நில மேம்பாட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் இராமானுசம் கணிப்பொறி மையம் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய உதவிகளைத் தந்து வருகிறது, பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அண்ணா ஜெம் அறிவியற் பள்ளி ஒன்றையும், அண்ணா பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பப் பூங்கா பொழுதுபோக்கு மையத்தையும் நடத்தி வருகிறது.

செர்மன் அரசாங்க உதவியுடன் கணிப் பொறி தொடர்பான "ஏ.யு.எம்.ஆர்.ஜி." நிறுவனம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

அனைத்திந்தியத் தொழில்நுட்பக் குழுமத்தினரின் ஆணைப்படி 65 பட்டப் படிப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே அனைத்திந்தியத் தொழில் நுட்பக் குழுவினர் 1996 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஐந்து திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வந்து சென்றுள்ளனர்.

[1998 மார்ச் 15

மின்னியல், இயந்திரவியல், கணிப் பொறி அறிவியல் ஆகியவற்றில் பி.இ. பட்டப் படிப்புத் திட்டங்களும், வேதியற் பொறியியல் பி.டெக். படிப்புத் திட்டங்களும் தேசிய ஒப்பளிப்புக் குழுவினரால் முதல் தரமுடையதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மறுபடியும் தேசிய ஒப்பளிப்புக் குழுவினர் மும்முறை, முறையே 1, 6, 18 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க 22-10-1997 முதல் 24-10-1997 வரையிலும், 5-11-1997 முதல் 7-11-1997 வரையிலும், 19-11-1997 முதல் 21-11-1997 முடிய உள்ள காலங்களில் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வந்து சென்றுள்ளனர்.

வருகின்ற 1998-99 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்தகாலச் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு மேலும் முன்னேற்றம் காணத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கூட்டு முயற்சிகளில் ஆய்வுத் துறையிலும் அதன் மேம்பாட்டு நிலைகளிலும் குறிப்பிட்ட சில தொழில்களில் தனி அக்கறை காட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1996-97 ஆம் ஆண்டு முதல் சென்னைத் தொழில் நுட்ப நிறுவனத்தின் பி.டெக். பட்டப்படிப்புத் திட்டம் நான்காண்டுப் படிப்புத் திட்டமாக மாற்றப்பட்டு மேல்நிலைப் படிப்பு முடித்தவர்கள் சேரும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பி.எஸ்சி. முடித்தவர்கள் பின்னர் சேர்ந்துகொள்ளும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

1996-97 முதல் மட்பாண்டத் தொழில் பற்றிய பி.டெக். படிப்புத் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது.

## 9. திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி

சங்கச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களது தலைமையிலான 16 உறுப்பினர்கள் கொண்ட ஆளுகைக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. தமிழக அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 777.77 ஏக்கர் நிலத்தில் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது.

கட்டடம், உபகரணங்கள் போன்றவற்றிற்கான தொடராச் செலவினங்களுக்காக மத்திய அரசின் நூறு சதவீத மானியத்தை இக்கல்லூரி பெறுகிறது. மேலும் ஒப்புதலளிக்கப்பட்ட முதுகலைப் பாடத் திட்டங்களுக்கான தொடர்ச் செலவினங்களுக்காக மத்திய அரசின் நூறு சதவீத மானியத்தையும் பெறுகிறது. இளங்கலை பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில், இக்கல்லூரி 50:50 என்ற விழுக்காட்டில் மத்திய மாநில அரசின் மானியங்களை பெறுகிறது.



1998 மார்ச் 15]

இளங்கலை நிலையில் பத்து பொறியியல் பிரிவுகளில் அமைப்பியல், இயந்திரவியல், மின் மற்றும் மின்னணுவியல் போன்ற பாடத் திட்டங்களை இக்கல்லூரி வழங்குகிறது. முதுகலை நிலையில் பதின்மூன்று துறைகளின் மூலம் இருபது முதுகலைப் பாடத் திட்டங்களை இக்கல்லூரி வழங்குகிறது.

அனைத்துப் பேராசிரியர்களும் டாக்டர் படிப்பிற்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அனைத்துத் துறைகளும் டாக்டர் படிப்பிற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முதல் மூன்று மாணவர்கள் டாக்டர் படிப்பிற்காகச் சேர்கின்றனர். இக்கல்லூரி மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறை தரமேம்பாட்டுத் திட்டமையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் அனைத்து இளங்கலை, முதுகலைப் பாடத் திட்டங்களுக்கும் அனைத்திந்திய தொழில் நுட்பக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இக்கல்லூரி கணிப் பொறி மையம் ஒரே நேரத்தில் 300 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இம்மையம் இரவும் பகலும் செயல்பட்டு வருகிறது. நவீனமான வசதிகள் கொண்ட இம்மையத்தில் ஒரு நூலகமும் உள்ளது. இங்கு பயன்படுத்தப்படும் அனைத்து கம்ப்யூட்டர்களும் இம்மையத்தின் கம்ப்யூட்டர் ஆதரவு குழுவால் தயாரிக்கப்பட்டவை. அத்துடன் அக்குழுவே அவற்றைப் பராமரித்தும் வருகின்றது. இம்மையம் கல்லூரியின் அனைத்துப் பணியாளர்களுக்கும் மற்றும் திருச்சி நகரைச் சுற்றியுள்ள கல்லூரிகள், நிறுவனங்கள் தொழிலகங்களின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பயிற்சி அளித்து வருகிறது. இதைத் தவிர பொது மற்றும் தனியார் தொழிற்சாலைகள், நிறுவனங்கள், தனிநபர்கள் அனைவருக்கும் ஆலோசனை வழங்குவதற்கென ஒரு பொறியியல் ஆலோசனை மையமும் இக்கல்லூரியில் இயங்கி வருகிறது.

மண்டலப் பொறியியல் கல்லூரி முதுகலைப் பாடத் திட்டங்களுக்கு 1978 ஆம் ஆண்டிலும், இளங்கலைப் பாடத் திட்டங்களுக்கு 1986 ஆம் ஆண்டிலும் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டது. கடந்த முப்பது வருடங்களில் இக்கல்லூரி ஒரு முதன்மையான தொழிற்கல்வி நிறுவனமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அத்துடன் நாட்டிலுள்ள மண்டலப் பொறியியல்

[1998 மார்ச் 15

கல்லூரிகளுள் சிறந்த கல்லூரி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்னர் தன்னாட்சி வழங்கப்பட்ட இக்கல்லூரி நிலையான உயர்கல்வித் தரத்துடன் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.

இக்கல்லூரி மேலும் வளர்ச்சி பெறுவதற்காக இக்கல்லூரிக்கு 'நிகர்நிலை பல்கலைக்கழகம்' என்ற தகுதியை வழங்குவதற்கான கருத்துரு தமிழக அரசின் பரிந்துரையுடன் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்

நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் முக்கியத்துவத்தை உணர்ந்து அண்மைக்காலமாக பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அரசின் அறிவியல் கொள்கையை உருவாக்கவும், அறிவியல் உணர்வை வளர்ப்பதற்கென தனி நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பவியல் மன்றத்தை 1984-ல் அமைத்துள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் விவசாயம், சுகாதாரம், கல்வி, சக்தி, மனித குடியேற்றம் போன்ற துறைகளில் அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுள்ளது. இந்த மன்றம் மத்திய மாநில அரசுகளின் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறது. மாநில அரசின் ஆண்டு மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களின் வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில் நுட்பப் பகுதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கவும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் தலைவர் ஆவார். முதலமைச்சர் அவர்கள் தனக்குப் பதிலாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை இம்மன்றத்தின் தலைவராக நியமத்துள்ளார்.

இதுவரை 60 அறிவியல் தொழில்நுட்பவியல் திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் பல்வேறு ஆய்வுத் துறைகளில் 30 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நுட்ப ஆய்வுகளில் கண்ட தெரிவுகள் சிபாரிசுகள் ஆகியவற்றின் தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு உள்ளது. மாணவர் ஆய்வுத் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 185 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 1997-98 ஆம் ஆண்டில் 135 திட்டங்கள் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அறிவியல் கண்காட்சிகள், அறிவியல் தலைப்புகளில் விரிவுரைகள், அறிவியல் போட்டிகள், கணிப் பொறி பயிற்சிகள், நடுத்தர, மேனிலைப்பள்ளி



1998 மார்ச் 15]

ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சிகள் நடத்துவதற்கு கல்வி நிறுவனங்களுக்கும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும் நிதி வழங்கப்படுகிறது. இளம் விஞ்ஞானிகள் தங்களது ஆராய்ச்சிக் கட்டுரைகள் தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் கருத்தரங்குகளில் சமர்ப்பிப்பதற்கு பயணத் தொகை வழங்கப்படுகிறது. இளம் விஞ்ஞானிகள் தேசிய அளவில் சிறந்து விளங்கும் ஆராய்ச்சி மையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் இரண்டு முதல் ஆறு மாதங்கள் வரை சிறப்புப் பயிற்சி பெற உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையானது மத்திய அரசுடன் பகிர்ந்து செலவிடப்படுகிறது. கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனங்களிலும், மையங்களிலும் நடக்கும் அறிவியல் மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. தமிழில் வெளியாகும் அறிவியல் நூல்களுக்கும் சிறந்த தமிழாக்கத்திற்கும் உதவியளிக்கப்படுகிறது. முக்கிய அறிவியல் குழு விவாதங்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. அல்லது மன்றத்தால் நடத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக, இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் தொழிற்பயிற்சியளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் அரசுத் துறைகள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படவகை செய்தல். பத்து துறைகளில் தலைசிறந்த ஆய்வுக்கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து பத்து அறிவியலறிஞர்களுக்கு தலா பத்தாயிரமும், ஒரு தாமிரக் கேடயமும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. நடப்பிலிருக்கும் பல திட்டங்களுடன் கிராமப்புறங்களிலிருந்து இளம் மாணவ விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டம் மற்றும் கிராமப்புறங்களில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துதல் ஆகிய இரு திட்டங்களை புதிய மற்றும் உறுதியான திறன்களை வெளிக்கொணரும் பொருட்டும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மாணவ சமுதாயத்தினரிடையேயும், பாமர மக்களிடையேயும் பிரபலப்படுத்தும் நோக்குடனும், இம்மன்றம் செயல்படுத்தவுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் இம்மன்றம் வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில்நுட்பவியலின் முக்கியத்துவத்தை கோடிட்டுக்காட்டும் நோக்கோடு மேற்கண்ட செயல்திட்டங்களைத் தொடரவுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள், மேற்காண் திட்டங்களைத் தொடர்வதுடன், புதிய அறிவியல் தொழில்நுட்பவியல் திட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.15.00 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. ரூ.5.00 இலட்சங்கள் மன்றத்தின் புதிய இருப்பிடத்தின் அமைச்சுப் பணிகளுக்காக செலவிடப்பட உள்ளது.

[1998 ஏப்ரல் 15

## அறிவியல் நகரம் 2000

அறிவியல் நகரம் 2000 என்ற நிறுவனத்தை கம்பெனிகளின் சட்டத்தின் கீழ், கீழ்க்காணும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு கருதியுள்ளது.

(அ) பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி ஆதாரங்களைத் தோற்றுவித்தல்.

(ஆ) தொலைஉணர்வு, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, மருத்துவத் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கு ஏற்ற வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

(இ) அறிவியல் நகரத்தின் ஆய்வுக்கூடங்களின் கண்டுபிடிப்புகளை வணிகத் துறை பயன்பாட்டுக்கு அளித்தல்.

(ஈ) தகுதியும் திறமையும் வாய்ந்த இளம் விஞ்ஞானிகளை ஊக்குவித்தல். இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அறிவியல் தொழில்நுட்பவியல், பொறியியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வோர் இவ்வறிவியல நிறுவனத்தால் நேரடியாகப் பயனடைவார்கள்.

### 11. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் 1983ம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இம்மையத்தின் தலைவராவார். இம்மையம் ரூ.401.25 இலட்சங்கள் செலவில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை 1990-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள் நிறுவியது. திரு. சி. கே. பிர்லா அவர்கள் வழங்கிய ரூ.200 இலட்சம் நன்கொடையில் ஒரு கோளரங்கம் 1988 மே திங்கள் 11ஆம் நாள் தொடங்கி செயல்பட்டு வருகிறது.

இதுவரை, சூரியகுடும்பம், நமது எழில்மிகு பேரண்டம், வானமும் பருவகாலமும், நாம் மட்டுமா இப்பேரண்டத்தில் இருக்கிறோம்? வால் நட்சத்திரங்கள், வேறு உலகங்களைத் தேடி என 20 வகை நிகழ்ச்சிகள் கோளரங்கினுள் அரங்கேறியுள்ளன.



1998 ஏப்ரல் 15]

சுதந்திர பொன் விழாவின்பொருட்டு "விண்ணில் ஒரு வால் நட்சத்திரம், ஹேல்பாப் மற்றும் இந்தியப் பேரண்டம் பயணம்" ஆகிய இரு நிகழ்ச்சிகள் 1997-98-ல் அமைக்கப்பட்டு அனைவரும் கண்டு களித்து வருகின்றனர்.

எட்டு நிரந்தர காட்சிக்கூடங்களும், ஐந்து பூங்காக்களும் அமைக்கப்பட்டு சுமார் 500-க்கும் மேற்பட்ட காட்சிப் பொருட்களும் காட்சிக்கு உள்ளன. இவை தவிர பள்ளி மாணவர்களிடையே காட்சிப்பொருள் வடிவமைக்கும் போட்டிகள், ஓவியப் போட்டிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், வினாடி வினா நிகழ்ச்சிகள் போன்றவைகள் மாணவர் சமுதாயம் பயன்பெறும் வகையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 24 காட்சிப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட நடமாடும் காட்சிக்கூட ஊர்தி ஒன்று எல்லா மாவட்டங்களிலும் தனது பயணத்தை மேற்கொண்டு அடிப்படை அறிவியல் கருத்துக்களைப் பாமர மக்களிடையேயும், மாணவர் சமுதாயத்தினரிடையேயும் பரப்பி வருகின்றது.

திருச்சிராப்பள்ளியில் மண்டல அறிவியல் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் கொட்டப்பட்டுக்குளம் என்னுமிடத்தில் ஐந்து ஏக்கர் இடத்தினையும் அரசு ஒதுக்கியுள்ளது.

கோளரங்கம் கட்டுவதற்கு கல்கத்தாவினைச் சார்ந்த கோத்தாரி நிறுவனத்தினர் கட்டிட வடிவமைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் கட்டுமானப் பிரிவினரிடம் கட்டுமானப் பணி ஒப்படைக்கப்பட்டு வருகிறது. ஜப்பானிய அரசு கோளரங்க கருவிகளையும், துணைப் பொருட்களையும் கலாச்சார மானியத்தின்கீழ் வழங்குகிறது. இக்கருவிகள் விரைவில் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகின்றன.

கோளரங்க கட்டுமானப்பணிகள் 1998ஆம் ஆண்டு ஜுலை மாதம் முடிவடையும்.

கோயம்புத்தூரில், மண்டல அறிவியல் மையத்தில் ஒரு கோளரங்கம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் கோவையில் வில்லாங்குறிச்சி கிராமத்தில் கோவை (வடக்கு) தாலுக்காவில் ஐந்து ஏக்கர் நிலம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிலத்தை கையகப்படுத்த மற்றும் மேம்படுத்திட, அரசு ரூ.5 இலட்சமும் வழங்கியுள்ளது.

வேலூரில் மண்டல அறிவியல் மையம் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மையம் சுயமாகச் செயல்பட நிரந்தர நிதியாக ரூ.3.00 கோடி திரட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக ரூ.1.93 இலட்சம் திரட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவைகளை உறுப்பினர்களாகச் சேர்த்து, நிரந்தர நிதியினை முழுமையான அளவில் நிதி திரட்டிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 12. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய அரசு அலுவலகமாகும். மாநிலத்தில் அமைந்துள்ள இவ்வாவணக் காப்பகம் இந்தியாவிலேயே முதன்மையானதும், சிறப்பு வாய்ந்த தனிப்பெரும் ஆவணக் காப்பகமுமாகும். தென்கிழக்கு ஆசியாவில் ஆவணக் காப்பகத் துறையில் முன்னணியில் நிற்கும் நிறுவனங்களுள் தமிழ்நாடு ஆவணக் காப்பகமும் ஒன்று எனலாம். தனிச்சிறப்பு வாய்ந்த இவ்வாவணக் காப்பகம் 1909-ல் நிறுவப்பட்டது. 1670-ம் ஆண்டு முதல் தலைமைச் செயலக ஆவணங்கள் இவ்வாவணக் காப்பகத்தில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு 5 ஆண்டுகளுக்கான அரசாணைகள் தலைமைச் செயலகத்திலேயே வைக்கப்பட்டு அதற்குப் பின்னர் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுடன் வருவாய் வாரிய ஆவணங்கள், நில அளவை அலுவலக ஆவணங்கள், வனத் துறை அலுவலகம் போன்ற மிக முக்கியமான அலுவலக ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டு இவ்வாவணக் காப்பகத்தில் வைத்து நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### பயிற்சித் திட்டம்

ஆவண அறை பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஆவணக் காப்பகம் பயிற்சி அளிக்கிறது. இதுவரை 2663 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பதிவுரு எழுத்தர் மட்டுமல்லாத கண்காணிப்புப் பணியாளர்களுக்கும் 1997-ம் ஆண்டு முதல் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

### மாவட்ட விவரச்சுவடிப் பிரிவு

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களைப் பற்றிய விவரங்கள் புத்தகமாக இப்பிரிவின் மூலம் வெளியிடப்படுகின்றன. இவ்விவரச்சுவடிகள் நிர்வாகத்தினருக்கு சிறந்த வழிகாட்டி நூலாகவும், ஆராய்ச்சியாளர்களுக்குப் பார்வைப் புத்தகமாகவும், மாணவர்களுக்குப் பாடநூலகவும், சாதாரண மக்களுக்குப் படிப்பதற்கான பொது நூலாகவும் விளங்கி வருகிறது. அந்தந்த மாவட்டத்தின் முழுவாழ்க்கையும் இந்த விவரச்சுவடிகள் உருவாக்கம் செய்து வெளிக்கொணர்கின்றன. இதுவரை தஞ்சாவூர், மதுரை, கோயமுத்தூர், தென்னாற்காடு, சேலம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. திருச்சி மாவட்ட விவரச்சுவடி அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றதும் வெளியிடப்படும். ஆங்கில மொழியில் வெளியான இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடிகள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.





### வட்டார வரலாற்று ஆவண ஆய்வுக் குழு

மாநிலத்தில் உள்ள தனியார்வசமுள்ள வரலாற்று ஆவணங்களைக் கண்டறிந்து, அவற்றைச் சேகரித்து வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கும் முக்கியமான தென்னிந்திய வரலாற்றை எழுதுவதற்கும், உதவிடும் நோக்கில் இப்பிரிவு பணியாற்றி வருகிறது. இம்மாநிலத்தில் நான்கு வட்டார வரலாற்று ஆய்வுக் குழு செயல்பட்டு வருகின்றன.

### மாவட்ட ஆவணக்காப்பகம்

மாவட்டங்களில் அரசு அலுவலகங்களிலுள்ள வரலாற்று மற்றும் நிர்வாகச் சிறப்பு வாய்ந்த ஆவணங்களை சீரிய முறையில் செயல்பட்டு நன்முறையில் பாதுகாத்து, மாவட்டங்களின் வரலாற்றைப் பாதுகாத்திடவும், மாவட்ட நிர்வாகம் செம்மையாகச் செயல்படவும் மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதுவரை மதுரை, கோவை, கடலூர், திருச்சி, சேலம் மற்றும் தஞ்சை ஆகிய ஆறு மாவட்டங்களில் அலுவலகங்கள் துவக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு மாவட்ட ஆவணக்காப்பகங்களிலும் 4,59,421 ஆவணங்களும், 5,500 புத்தகங்களும் மற்றும் 88,469 எண்ணிக்கை மோடி ஆவணங்களும் மையப்படுத்தப்பட்டு உள்ளன.

## 13. தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத்திற்கான அடிப்படையை உருவாக்கும் வகையிலும் 21-ம் நூற்றாண்டுக்கு ஏற்ற தகவல் துறை தொழில் நுட்பத் துறையில் உலகத்தின் முன்னோடியாக இருக்கும் விதத்திலும் TANITEC எனப்படும் தகவல் தொழில்நுட்பத் துறையை ஏற்படுத்துவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இம்மையம் கம்பெனி விதி 25-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. 1998-99 கல்வியாண்டு முதல் பி.எஸ்சி. (தகவல் தொழில் நுட்பம்) மற்றும் முதுகலைப் பட்டயம் (தகவல் தொழில்நுட்பம்)

[1998 ஏப்ரல் 15

ஆகிய வகுப்புகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் பி.டெக்., மற்றும் எம்.டெக்., ஆகிய வகுப்புகளும் தொடங்கப்படவுள்ளன. இதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## 14. புள்ளி விவரம்

### கல்லூரிக் கல்வித் துறை

### I. கல்லூரிக் கல்வி விவரங்கள் 1997-98 (இனவாரியாக)

| | |
|---|---|
| அரசுக் கலைக் கல்லூரிகள் எண்ணிக்கை | 58 |
| அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகள் எண்ணிக்கை | 132 |
| சுயநிதி (உதவி பெறாதவை) கலைக் கல்லூரிகள் எண்ணிக்கை | 150 |
| அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் எண்ணிக்கை | 7 |
| அரசு உதவிபெறும் ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் எண்ணிக்கை | 14 |
| சுயநிதி ஆசிரியர் கல்வியியல் கல்லூரி எண்ணிக்கை | 1 |
| அரசு உதவி பெறும் கீழ்த்திசை (ஓரியண்டல்) கல்லூரிகள் எண்ணிக்கை | 9 |
| அரசு நிதி உதவி பெறாத கீழ்த்திசை கல்லூரிகள் எண்ணிக்கை | 6 |
| அரசு உதவி பெறும் உடற்பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை | 3 |
| சுயநிதி (உதவி பெறாதவை) உடற்பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை | 1 |
| அரசு உதவி பெறும் சமுதாயப் பணி பள்ளிகளின் எண்ணிக்கை | 2 |
| **மொத்தம்** | **383** |

### II. மாணவர்களின் எண்ணிக்கை

| விவரம் (1) | 1993-94 (2) | 1994-95 (3) | 1995-96 (4) | 1996-97 (5) | 1997-98 (6) |
|---|---|---|---|---|---|
| பி.ஏ. | 83368 | 90586 | 93332 | 89381 | 86364 |
| பி.எஸ்.சி. | 115431 | 126543 | 130649 | 132179 | 133586 |
| பி.காம். | 50576 | 50769 | 53623 | 54877 | 56797 |
| முதுகலைப் பட்டதாரிகள் | 23015 | 23108 | 23597 | 23327 | 32645 |
| பிற | 8268 | 13195 | 25071 | 25857 | 6907 |
| **மொத்தம்** | **280658** | **304201** | **326272** | **325621** | **316299** |



1998 ஏப்ரல் 15]

### III. அரசுக் கல்லூரிகள்/உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஆடவர்/மகளிர் மாணவர்களின் எண்ணிக்கை (இளங்கலை/முதுகலை/எம்.பில்/பி.எச்டி./பட்டயம்/இதர பிரிவுகள்)

| பாடப்பிரிவின் பெயர் | அரசுக் கல்லூரி | | அரசு மானியம் பெறுபவை | | சுயநிதிக்கல்லூரி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| இளங்கலைப் பிரிவுகள் | | | | | | |
| பி.ஏ. | 13989 | 14979 | 22612 | 28415 | 1524 | 1845 |
| பி.எஸ்.சி. | 16334 | 17585 | 35395 | 35074 | 12209 | 16989 |
| பி.காம். | 5869 | 4369 | 18769 | 14114 | 4843 | 8833 |
| பி.பி.ஏ. | 182 | 27 | 1501 | 666 | 2024 | 1886 |
| பி.பி.எம். | - | - | 835 | 1013 | 2000 | 1396 |
| பி.ஏ. | - | - | 6 | - | - | - |
| பி.லிட். | - | - | 18 | 108 | - | - |
| முதுகலைப் பிரிவுகள் | | | | | | |
| எம்.ஏ. | 914 | 1017 | 3164 | 3308 | 27 | 114 |
| எம்.எஸ்.சி. | 672 | 1168 | 4070 | 4474 | 715 | 642 |
| எம்.காம். | 265 | 113 | 1775 | 1063 | 57 | 180 |
| எம்.ஏ.(கலை) | - | - | 4 | 12 | - | - |
| எம்.சி.ஏ. | 33 | 28 | 1900 | 1054 | 1353 | 1151 |
| எம்.பி.ஏ. | - | - | 301 | 203 | 746 | 483 |

[1998 ஏப்ரல் 15

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| ஆராய்ச்சிப் படிப்பு | | | | | | |
| எம்.ஃபில். | 88 | 125 | 706 | 508 | - | 3 |
| பி.எச்.டி. | 59 | 34 | 76 | 40 | - | - |
| டிப்ளமா | - | 20 | 503 | 275 | 21 | 133 |
| இதர பிரிவுகள் | 549 | 669 | 2814 | 4137 | 1350 | 288 |

### IV. ஆசிரியர்/ஆசிரியரல்லாத பணியாளர் எண்ணிக்கை அரசு/நிதியுதவி/சுயநிதிக் கல்லூரிகள்

| கல்லூரிவகை | கல்லூரிகள் எண்ணிக்கை | ஆசிரியர் பணி | | ஆசிரியரல்லாத பணி | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அரசுக் கல்லூரிகள் | 65 | 3055 | 1455 | 1800 | 399 |
| அரசு மானியம் பெறும் கல்லூரி | 160 | 7312 | 3778 | 4068 | 1040 |
| சுயநிதிக் கல்லூரி | 158 | 2025 | 2508 | 1323 | 838 |
| **மொத்தம்** | **383** | **12392** | **7741** | **7191** | **2277** |

### V. மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை மாவட்டவாரியாக

### 1997-98

| மாவட்டத்தின் பெயர் | அரசு | | அரசுமானியம் | | சுயநிதி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. சென்னை | 8 | 4 | 20 | 9 | 9 | 8 | 37 | 21 |
| 2. காஞ்சிபுரம் | 1 | - | 8 | 2 | 12 | 2 | 21 | 4 |
| 3. திருவள்ளூர் | 2 | - | 1 | - | 12 | 1 | 17 | 1 |
| 4. வேலூர் | 4 | 1 | 8 | 2 | 3 | 2 | 15 | 5 |



1998 ஏப்ரல் 15]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5. திருவண்ணாமலை | 2 | - | - | - | 6 | 2 | 8 | 2 |
| 6. விழுப்புரம் | 2 | - | 1 | 1 | 3 | - | 7 | 2 |
| 7. கடலூர் | 3 | - | 1 | 1 | 3 | - | 7 | 1 |
| 8. சேலம் | 3 | 1 | 5 | 3 | 4 | 1 | 12 | 5 |
| 9. நாமக்கல் | 4 | 1 | 1 | 1 | 5 | 1 | 10 | 3 |
| 10. தர்மபுரி | 4 | 2 | - | - | 4 | - | 8 | 2 |
| 11. கோயம்புத்தூர் | 5 | 2 | 11 | 3 | 26 | 3 | 42 | 8 |
| 12. ஈரோடு | - | - | 5 | 1 | 10 | 4 | 15 | 5 |
| 13. நீலகிரி | 1 | - | 2 | 2 | - | - | 3 | 2 |
| 14. பெரம்பலூர் | 1 | - | - | - | 2 | 1 | 3 | 1 |
| 15. திருச்சி | 3 | - | 8 | 2 | 8 | 3 | 19 | 5 |
| 16. கரூர் | 1 | - | - | - | 2 | 1 | 3 | 1 |
| 17. மதுரை | 2 | 1 | 20 | 4 | 7 | 3 | 29 | 8 |
| 18. திண்டுக்கல் | 1 | 1 | 4 | 1 | 2 | - | 7 | 2 |
| 19. தேனி | - | - | 3 | 1 | 3 | 1 | 6 | 2 |
| 20. தஞ்சாவூர் | 5 | 2 | 5 | - | 5 | 2 | 15 | 4 |
| 21. நாகப்பட்டினம் | 1 | 1 | 5 | 1 | 1 | - | 7 | 2 |
| 22. திருவாரூர் | 2 | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 23. புதுக்கோட்டை | 3 | 1 | 1 | - | 2 | - | 6 | 1 |
| 24. இராமநாதபுரம் | 3 | 1 | 1 | - | 2 | 2 | 6 | 3 |
| 25. சிவகங்கை | 3 | - | 5 | 1 | 3 | 1 | 11 | 2 |
| 26. விருதுநகர் | - | - | 8 | 2 | 3 | 1 | 11 | 3 |
| 27. திருநெல்வேலி | 1 | 1 | 13 | 3 | 3 | 1 | 17 | 5 |
| 28. தூத்துக்குடி | - | - | 11 | 3 | 6 | 1 | 17 | 4 |
| 29. கன்னியாகுமரி | - | - | 13 | 4 | 4 | - | 17 | 4 |
| **மொத்தம்** | **65** | **19** | **160** | **46** | **152** | **44** | **377** | **109** |

[1998 ஏப்ரல் 15

## VI. ஓரியண்டல் கல்லூரி உதவி பெறாதது

### 1997-98

| மாவட்டத்தின் பெயர் | அரசு | | அரசு மானியம் | | சுயநிதி | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் | மொத்தம் | பெண் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. சென்னை | - | - | - | - | 2 | - | 2 | - |
| 2. காஞ்சிபுரம் | - | - | - | - | 1 | - | 1 | - |
| 3. வேலூர் | - | - | - | - | 2 | - | 2 | - |
| 4. சேலம் | - | - | - | - | 1 | - | 1 | - |
| மொத்தம் | - | - | - | - | 6 | - | 6 | - |
| | 65 | 19 | 160 | 46 | 152 | 44 | 377 | 109 |
| மொத்தம் | 65 | 19 | 160 | 46 | 158 | 44 | 383 | 109 |

## VII. பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகள்

### 1997-98

| எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம் | 115 |
| 02. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 70 |
| 03. | பாரதியார் பல்கலைக்கழகம் | 60 |
| 04. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 56 |
| 05. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 51 |
| 06. | பெரியார் பல்கலைக்கழகம் | 31 |
| | மொத்தம் | 383 |



1998 ஏப்ரல் 15]

## VIII. கல்லூரி புள்ளியியல் விவரம்

| கல்லூரியின் பெயர் | 1997-98 | | | |
|---|---|---|---|---|
| | அரசு | மானியம் | மானியம் பெறாதவை | மொத்தம் |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 58 | 132 | 150 | 340 |
| இதர கல்லூரிகள் | | | | |
| 01. உடற்கல்வி | - | 3 | 1 | 4 |
| 02. ஓரியண்டல் | - | 9 | 6 | 15 |
| 03. சமுதாயப் பணிப் பள்ளி | - | 2 | - | 2 |
| 04. கல்வியியல் கல்வி | 7 | 14 | 1 | 22 |
| மொத்தம் | 65 | 160 | 158 | 383 |

## IX. 1982-83 முதல் 1997-98 வரையிலான கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை

| வரிசை எண் | வருடம் | பெண் | ஆண் | மொத்தம் | விழுக்காடு (பெண்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1982-83 | 4463 | 9513 | 13976 | 31.93 |
| 2 | 1983-84 | 4582 | 9706 | 14288 | 32.06 |
| 3 | 1984-85 | 4636 | 9800 | 14436 | 32.11 |
| 4. | 1985-86 | 4902 | 9958 | 14860 | 32.98 |
| 5. | 1986-87 | 4986 | 10120 | 15102 | 32.98 |
| 6 | 1987-88 | 5048 | 10164 | 15212 | 33.18 |
| 7 | 1988-89 | 5133 | 10236 | 15369 | 33.39 |
| 8. | 1989-90 | 5400 | 10390 | 15790 | 34.19 |
| 9. | 1990-91 | 5638 | 10578 | 16216 | 34.76 |
| 10. | 1991-92 | 5729 | 10785 | 16514 | 34.69 |
| 11. | 1992-93 | 6071 | 11123 | 17194 | 35.30 |
| 12. | 1993-94 | 6096 | 11148 | 17244 | 35.35 |
| 13. | 1994-95 | 6468 | 11393 | 17861 | 36.21 |
| 14. | 1995-96 | 6468 | 11393 | 17681 | 36.21 |
| 15. | 1996-97 | 7005 | 11622 | 18627 | 37.62 |
| 16. | 1997-98 | 7741 | 12392 | 20133 | 38.44 |

### X. தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் மாணவிகள் எண்ணிக்கை

| வரிசை எண் | வருடம் | மொத்தம் | மாணவிகள் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | 1980-81 | 203710 | 64183 | 31.50 |
| 2. | 1981-82 | 214773 | 69264 | 32.20 |
| 3. | 1982-83 | 230682 | 75988 | 33.00 |
| 4. | 1983-84 | 234753 | 80575 | 34.30 |
| 5. | 1984-85 | 217406 | 83445 | 34.40 |
| 6. | 1985-86 | 197990 | 77545 | 36.16 |
| 7. | 1986-87 | 200007 | 78397 | 39.15 |
| 8. | 1987-88 | [illegible]9881 | 79397 | 39.72 |
| 9. | 1988-89 | 208792 | 81300 | 38.93 |
| 10. | 1989-90 | 208792 | 81300 | 38.93 |
| 11. | 1990-91 | 207042 | 83298 | 40.23 |
| 12. | 1991-92 | 219032 | 91913 | 41.96 |
| 13. | 1992-93 | 259683 | 113905 | 43.86 |
| 14. | 1993-94 | 280658 | 120367 | 42.88 |
| 15. | 1994-95 | 304201 | 138417 | 45.50 |
| 16. | 1995-96 | 326272 | 149342 | 45.77 |
| 17. | 1996-97 | 325621 | 162100 | 49.78 |
| 18. | 1997-98 | 331900 | 171578 | 51.69 |



## தொழில் நுட்பக் கல்வி

### XI. மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பயிலகங்கள் எண்ணிக்கை

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1996-97 | 21 | 35 | 98 | 154 |
| 1997-98 | 21 | 35 | 100 | 156 |

### XII. மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1996-97 | 7* | 3 | 69 | 79 |
| 1997-98 | 7* | 3 | 74 | 84 |

(* திருச்சி மண்டல பொறியியற் கல்லூரி உள்ளடக்கியது)

### XIII. பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் மாணவர்களின் எண்ணிக்கை

| பயிலகங்கள் | 1997-98 | | |
|---|---|---|---|
| | ஏற்பளிக்கப்பட்ட சேர்க்கை | சேர்ந்தவர்கள் | காலியிடம் |
| பல்[illegible]ப் பயிலகங்கள் | 33314 | 28991 | 4323 |
| பொறியியல் கல்லூரிகள் | 22192 | 22594 | கூடுதல் |

### XIV. மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள தொழில்நுட்பப் பயிலகங்கள்

### 1997-98

| வ. எண். | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சென்னை | 7 | 2 | 1 | 10 |
| 2. | திருவள்ளூர் | - | 2 | 9 | 11 |
| 3. | காஞ்சிபுரம் | - | 1 | 12 | 13 |

[1998 ஏப்ரல் 15

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4. | கடலூர் | - | 1 | 2 | 3 |
| 5. | விழுப்புரம் | - | - | 1 | 1 |
| 6. | வேலூர் | 1 | 1 | 5 | 7 |
| 7. | திருவண்ணாமலை | - | - | 5 | 5 |
| 8. | தர்மபுரி | 1 | - | 5 | 6 |
| 9. | சேலம் | - | 1 | 5 | 6 |
| 10. | நாமக்கல் | - | 1 | 3 | 4 |
| 11. | ஈரோடு | - | 2 | 6 | 8 |
| 12. | கோயம்புத்தூர் | 2 | 6 | 8 | 16 |
| 13. | நீலகிரி | 1 | 1 | - | 2 |
| 14. | திருச்சிராப்பள்ளி | 1 | 2 | 1 | 4 |
| 15. | கரூர் | - | - | 1 | 1 |
| 16. | பெரம்பலூர் | - | - | 2 | 2 |
| 17. | தஞ்சாவூர் | - | 2 | 2 | 4 |
| 18. | நாகப்பட்டினம் | 1 | 2 | 1 | 4 |
| 19. | திருவாரூர் | - | - | - | - |
| 20. | புதுக்கோட்டை | 1 | - | 3 | 4 |
| 21. | திண்டுக்கல் | - | 2 | 2 | 4 |
| 22. | மதுரை | 2 | 1 | 5 | 8 |
| 23. | தேனி | - | - | 1 | 1 |
| 24. | சிவகங்கை | 1 | 1 | 2 | 4 |
| 25. | இராமநாதபுரம் | - | 1 | - | 1 |
| 26. | விருதுநகர் | - | 4 | 4 | 8 |
| 27. | திருநெல்வேலி | - | 1 | 6 | 7 |
| 28. | தூத்துக்குடி | 2 | - | 3 | 5 |
| 29. | கன்னியாகுமரி | 1 | 1 | 5 | 7 |
| | மொத்தம் | **21** | **35** | **100** | **156** |



1998 ஏப்ரல் 15]

**XV. மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகள் 1997-98**

| வ. எண் | மாவட்டம் | அரசு | ஆர்.இ.சி. | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | - | - | - | - | - |
| 2. | திருவள்ளூர் | - | - | - | 9 | 9 |
| 3. | காஞ்சிபுரம் | - | - | - | 16 | 16 |
| 4. | கடலூர் | - | - | - | 1 | 1 |
| 5. | விழுப்புரம் | - | - | - | 1 | 1 |
| 6. | வேலூர் | 1 | - | - | 3 | 4 |
| 7. | திருவண்ணாமலை | - | - | - | 2 | 2 |
| 8. | தர்மபுரி | 1 | - | - | 2 | 3 |
| 9. | சேலம் | 1 | - | - | 2 | 3 |
| 10. | நாமக்கல் | - | - | - | 3 | 3 |
| 11. | ஈரோடு | - | - | - | 4 | 4 |
| 12. | கோயம்புத்தூர் | 1 | - | 2 | 8 | 11 |
| 13. | நீலகிரி | - | - | - | - | - |
| 14. | திருச்சிராப்பள்ளி | - | 1 | - | 3 | 4 |
| 15. | கரூர் | - | - | - | - | - |
| 16. | பெரம்பலூர் | - | - | - | - | - |
| 17. | தஞ்சாவூர் | - | - | - | 2 | 2 |
| 18. | நாகப்பட்டினம் | - | - | - | 2 | 2 |
| 19. | திருவாரூர் | - | - | - | 1 | 1 |
| 20. | புதுக்கோட்டை | - | - | - | 1 | 1 |
| 21. | திண்டுக்கல் | - | - | - | 2 | 2 |
| 22. | மதுரை | - | - | 1 | 1 | 2 |
| 23. | தேனி | - | - | - | - | - |
| 24. | சிவகங்கை | 1 | - | - | 1 | 2 |
| 25. | இராமநாதபுரம் | - | - | - | 1 | 1 |
| 26. | விருதுநகர் | - | - | - | 3 | 3 |
| 27. | திருநெல்வேலி | 1 | - | - | 1 | 2 |
| 28. | தூத்துக்குடி | - | - | - | 2 | 2 |
| 29. | கன்னியாகுமரி | - | - | - | 3 | 3 |
| | மொத்தம் | **6** | **1** | **3** | **74** | **84** |

[1998 ஏப்ரல் 15

## XVI. மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் தொழில்நுட்பப் பயிலகங்கள் 1997-98

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | சென்னை | 1 | - | - | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 1 | 1 | - | 2 |
| 3. | திருச்சிராப்பள்ளி | - | 1 | - | 1 |
| 4. | தஞ்சாவூர் | - | 1 | - | 1 |
| 5. | நாகப்பட்டினம் | - | 1 | - | 1 |
| 6. | திண்டுக்கல் | - | 1 | - | 1 |
| 7. | மதுரை | 1 | - | - | 1 |
| 8. | விருதுநகர் | - | 1 | 1 | 2 |
| 9. | தூத்துக்குடி | 1 | - | - | 1 |
| | மொத்தம் | **4** | **6** | **1** | **11** |

## XVII. மாவட்டவாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பொறியியற் கல்லூரிகள்

## 1997-98

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | - | - | 1 | 1 |
| 2. | தஞ்சாவூர் | - | - | 1 | 1 |
| | மொத்தம் | - | - | **2** | **2** |



1998 ஏப்ரல் 15]

## XVIII. மாணவர்களின் எண்ணிக்கை 1997-98

## பொறியியற் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்

| வ. எண் | கல்லூரிகள்/ பயிலகங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| **I.** | **பொறியியற் கல்லூரிகள்** | | | |
| 1. | அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியற் கல்லூரிகள் | 2180 | 610 | 2790 |
| 2. | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் | 14400 | 4484 | 18884 |
| | மொத்தம் | **16580** | **5094** | **21674** |
| **II.** | **பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்** | | | |
| 1. | அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | 2300 | 1017 | 3317 |
| 2. | அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | 6613 | 2105 | 8718 |
| 3. | சுயநிதி பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 1107 | 15849 | 16956 |
| | மொத்தம் | **10020** | **18971** | **28991** |

## XIX. 1997-98ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களின் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

| வ. எண் (1) | பல்கலைக்கழகத்தின் பெயர் (2) | இளங்கலைப் பிரிவு ஆண் (3) | இளங்கலைப் பிரிவு பெண் (4) | இளங்கலைப் பிரிவு மொத்தம் (5) | முதுகலைப் பிரிவு ஆண் (6) | முதுகலைப் பிரிவு பெண் (7) | முதுகலைப் பிரிவு மொத்தம் (8) | எம்.ஃபில். பிரிவு ஆண் (9) | எம்.ஃபில். பிரிவு பெண் (10) | எம்.ஃபில். பிரிவு மொத்தம் (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னைப் பல்கலைக்கழகம் | - | - | - | - | - | 1213 | - | - | - |
| 2. | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 1600 | 832 | 2432 | 751 | 301 | 1052 | 97 | 60 | 157 |
| 3. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 25257 | 24931 | 50188 | 2014 | 1717 | 3731 | 98 | 55 | 153 |
| 4. | அண்ணா பல்கலைக்கழகம் | 3527 | 672 | 4199 | 1049 | 229 | 1278 | 8 | 11 | 19 |
| 5. | பாரதியார் பல்கலைகழகம் | - | - | - | - | - | 291 | - | - | 67 |
| 6. | பாரதிதாசன் பல்கலைக்கழம் | - | - | - | 247 | 170 | 417 | 32 | 16 | 48 |
| 7. | அழகப்பா பல்கலைக்கழகம் | 77 | 85 | 162 | 565 | 312 | 877 | 135 | 79 | 214 |
| 8. | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் | - | 291 | 291 | - | 157 | 157 | - | 72 | 72 |
| 9. | அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் | - | 2810 | 2810 | - | 506 | 506 | - | 77 | 77 |
| 10. | வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 439 | 422 | 861 | 144 | 80 | 224 | - | - | - |
| 11. | டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் | 13009 | 12078 | 25087 | 840 | 389 | 1229 | - | - | - |
| 12. | காந்திகிராம் கிராமப்புற நிறுவனம் | 318 | 312 | 630 | 260 | 229 | 489 | 10 | 7 | 17 |
| 13. | தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் | 931 | 333 | 1264 | 55 | 110 | 165 | - | - | - |
| 14. | ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலய பல்கலைக்கழகம் | 210 | 200 | 410 | 155 | 25 | 180 | - | - | - |
| | மொத்தம் | 45368 | 42966 | 88334 | 6080 | 4225 | 11809 | 380 | 377 | 824 |



## 1997-98ம் ஆண்டில் பல்கலைக்கழகங்களின் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

| வ. எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் (1) | பிஎச்.டி. பிரிவு ஆண் (2) | பிஎச்.டி. பிரிவு பெண் (3) | பிஎச்.டி. பிரிவு மொத்தம் (4) | பட்டயம் மற்றும் இதர பிரிவுகள் ஆண் (5) | பட்டயம் மற்றும் இதர பிரிவுகள் பெண் (6) | பட்டயம் மற்றும் இதர பிரிவுகள் மொத்தம் (7) | மொத்தம் ஆண் (8) | மொத்தம் பெண் (9) | மொத்தம் மொத்தம் (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னைப் பல்கலைக்கழகம் | - | - | - | - | - | - | - | - | 1213 |
| 2. | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | - | - | - | 102 | 55 | 1577 | 2550 | 1248 | 3798 |
| 3. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 48 | 58 | 106 | 440 | 213 | 653 | 27857 | 26974 | 54831 |
| 4. | அண்ணா பல்கலைக்கழகம் | 399 | 109 | 508 | 54 | 20 | 74 | 5037 | 1041 | 6078 |
| 5. | பாரதியார் பல்கலைகழகம் | - | - | 49 | - | - | - | - | - | 407 |
| 6. | பாரதிதாசன் பல்கலைக்கழம் | 206 | 62 | 268 | 28 | 8 | 36 | 513 | 256 | 769 |
| 7. | அழகப்பா பல்கலைக்கழகம் | 182 | 53 | 235 | 86 | 48 | 134 | 1045 | 577 | 1622 |
| 8. | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் | - | 51 | 51 | - | 18 | 18 | - | 589 | 589 |
| 9. | அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் | - | 85 | 85 | - | 301 | 301 | - | 3779 | 3779 |
| 10. | வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 42 | 31 | 73 | - | - | - | 6225 | 533 | 1158 |
| 11. | டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் | 136 | 111 | 247 | 342 | 211 | 553 | 14327 | 12789 | 27116 |
| 12. | காந்திகிராம் கிராமப்புற நிறுவனம் | 105 | 37 | 142 | 229 | 46 | 275 | 922 | 631 | 1553 |
| 13. | தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் | 106 | 3 | 109 | 8 | - | 8 | 1100 | 446 | 1546 |
| 14. | ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலய பல்கலைக்கழகம் | 4 | - | 4 | 36 | - | 36 | 405 | 225 | 630 |
| | மொத்தம் | 1228 | 600 | 1877 | 1325 | 920 | 2245 | 54381 | 49088 | 105089 |

219396

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.